நாகப்பட்டினம் மாவட்டம்
தொல்லியல் வரலாற்றுக் கையேடு

பதிப்பாசிரியர்
முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர்
கோ. முத்துசாமி, எம்.ஏ., பி.எட்.,
காப்பாட்சியர்
டேனிஷ்கோட்டை, தரங்கம்பாடி

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை–600 008

அச்சிட்டோர் விவரம்

முதற்பதிப்பு : 2012

வெளியீடு எண் : 247

நூலின் பெயர் : நாகப்பட்டினம் மாவட்டம் தொல்லியல் வரலாற்றுக் கையேடு

பதிப்புரிமை : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பதிப்பாசிரியர் : முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர் : **கோ. முத்துசாமி**
காப்பாட்சியர், டேனிஷ்கோட்டை-தரங்கம்பாடி

மொழி : தமிழ்

எழுத்தின் அளவு: 11 புள்ளிகள்

தாள் அளவு : 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ

பிரதிகள் : 500

பக்கங்கள் : 248

விலை : ரூ. 50.00

அச்சிட்டோர் : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008

முன் அட்டை: சொன்னவாறு அறிவார் திருக்கோயில் - குத்தாலம்
வேளாங்கண்ணி - நாகப்பட்டினம்
நாகூர் ஆண்டவர் தர்கா - நாகூர்

பின் அட்டை : வடக்காலத்தூர் கல்யாணசுந்தரர் - நாகப்பட்டினம்
தீர்த்தங்கரர் - நாகப்பட்டினம்

பொருளடக்கம்

1. அமைவிடம் - பெயர்க்காரணம் ... 1

2. தொன்மை வரலாறு ... 6

3. நீர் ஆதாரங்கள் ... 13

4. சைவ சமயம் ... 14

(i) தேவாரத் திருமுறைத்தலங்கள்

(ii) வரலாற்றுச் சிறப்புடைய சிவத்தலங்கள் ... 70

(iii) நவகிரகத் தலங்கள் ... 79

(iv) அட்டவீரட்டத் தலங்கள் ... 89

(v) சப்தவிடங்கத் தலங்கள் ... 92

(vi) வைணவத்தலங்கள் ... 100

(vii) புகழ்பெற்ற அம்மன் தலங்கள் ... 112

(viii) முருகப்பெருமானின் தனித்தலங்கள் ... 118

(ix) கிராம தேவதைகள் ... 129

5. நாகையும் பௌத்தமும் ... 133

6. சமண சமயம் ... 142

7. நில அகழாய்வுகள் ... 144

8. பூம்புகார் ஆழ்கடலாய்வு ... 146

9. செப்பேடுகள் - நூலகங்கள் ... 147

10. திருமடங்கள் ... 151

(i) தருமபுரம் (ii) திருவாவடுதுறை

11. சத்திரங்கள்-சாவடிகள் ... 156

12. சித்தர்கள்-மகான்கள் ... 158

13. இயல்-இசை-நாடகம்-வளர்ச்சி ... 171

14. உப்பு சத்யாகிரகம்-சுதந்திரப் போராட்டம் ... 177

15. ஊர்ப்பெயர்கள் ஆய்வு ... 182

16. முக்கியமான சுற்றுலாத் தலங்கள் ... 203

17. மும்மதங்களின் சங்கமம் ... 211

(i) சைவ சமயம் (ii) இசுலாம் (iii) கிருஸ்துவம்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.
நாள் : 9-1-13

அணிந்துரை


"சோழவளநாடு சோறுடைத்து
தொண்டைநாடு சான்றோர் உடைத்து"

என்பது ஆன்றோர் வாக்கு.

சோழநாட்டின் இத்தகைய பெருமைக்குக் காரணம் இம்மண்டலத்தில் காவிரி ஆறு பாய்ந்து நன்செய் நிலங்களைச் செழிப்படைய செய்ததுதான். இதனால் சோழநாட்டில் புலவர்களும், திருக்கோயில்களும், அரண்மனைகளும் வானளாவ உயர்ந்து இலக்கிய வளமும், கலை வளமும் மேலோங்கி நிற்கின்றன. சோழமண்டலத்தின் தலைநகராக விளங்கியது தஞ்சைத் தரணியாகும். முன்னாளில் தஞ்சை மாவட்டம் என்று வழங்கப்பட்ட மண்டலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது. அதில் திருவாரூர் மாவட்டமும் அதன்பிறகு நாகை மாவட்டமும் உருவானது. முன்பு கீழத்தஞ்சை என்று வழங்கப்பட்ட பகுதியே தற்போது நாகை மாவட்டமாக உருவாகியுள்ளது. இம்மாவட்டம் வரலாற்றுக்கும், இலக்கியங்களுக்கும், தொன்மைச் சான்றுகளுக்கும் அடிப்படை ஆதாரங்களை மிகவும் கொண்டு விளங்குகிறது.

இந்நாகை மாவட்டத்தில் பெருமைக்குரிய திருக்கோயில்கள் பற்றியும் தொன்மை வரலாறு பற்றியும் மற்றும் முக்கியமான சுற்றுலாத் தலங்கள் பற்றியும் நாகை மாவட்ட வரலாற்றுக் கையேடு தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றது. அரிய பல நிழற்படங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலினை எழுதிய எம் துறை நண்பர் திரு. கோ. முத்துசாமி அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்து கொள்கிறேன். மேலும் இந்நூல் வெளிவர உதவியாக இருந்த தொல்லியல் துறை அலுவலர்களுக்கும், ஆய்வுக்கு சென்ற இடங்களில் உதவி புரிந்தவர்களுக்கும், பாராட்டுகளைத் தெரிவித்து கொள்கிறேன். இந்நூலை நல்ல முறையில் வடிவமைத்து கணினி ஒளி அச்சு முறையில் ஏடுகளையும், நிழற்படங்களையும் உருவாக்கி பதிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள திருமதி. ச. சரஸ்வதி, அச்சுக்கோர்ப்பாளர் அவர்களுக்கும், ஏனைய அச்சுப்பிரிவு நண்பர்களுக்கும் எனது பாராட்டுக்களை உரித்தாக்குகிறேன். தமிழக வரலாற்றில் ஆர்வமுடைய ஒவ்வொருவரும் இந்த நூலையும் வாங்கிப் படித்து மகிழ்வார்கள் என்று நம்புகிறேன்.



நூல் ஆசிரியர் உரை

நாகப்பட்டினம் மாவட்டம் வங்கக் கடலோரம் இரண்டு பகுதிகளாகத் தெற்கு, வடக்காக அமைந்துள்ளது. இதன் தெற்கு எல்லையாகக் கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. காவிரி ஆற்றின் கரையில் 1) மயிலாடுதுறை கோட்டம் அமைந்துள்ளது. வடக்கே அரசலாற்றின் தென்கரையில் 2) நாகப்பட்டினம் கோட்டம் அமைந்துள்ளது. இந்த இரு கோட்டங்களுக்கிடையில் காரைக்கால் எனும் யூனியன் பிரதேசம் அமைந்துள்ளது.

நாகை மாவட்டத்தில் பெருங்கற்காலம் தொடங்கி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையிலான வரலாற்றுச் சுவடுகள், நமக்கு பெரிதும் கிடைத்துள்ளன. தொன்மைச் சிறப்புடைய பூம்புகார்ப் பகுதி சங்ககாலத்தின் பெருமைகளை நமக்கு எடுத்துரைக்கின்றன. மேலும் காவிரி ஆறும், அதன் கிளை நதிகளும் இம்மாவட்டத்தில் பாய்ந்து செழிப்பூட்டுகின்றன.

எனவே நாகை மாவட்டத்தில் சைவ சமயம், பௌத்த சமயம், சமண சமயம் போன்றவை முற்காலத்திலேயே சிறந்து விளங்கி வந்துள்ளன. இம்மாவட்டத்து பெருமைகளைத் திருக்கோயில்களின் கல்வெட்டுகள் வாயிலாகவும், நில அகழாய்வு, பூம்புகார் கடலாய்வு, புதையலில் கிடைத்த செப்பேடுகள் போன்ற தொல்லியல் சான்றுகள் மூலம் பதினேழு தலைப்புக்களில் ஆய்வு செய்து இந்நூலில் எழுதி சேர்க்கப்பட்டுள்ளன.

இருப்பினும் நாகை மாவட்டத்தைப் பற்றி முழுமையாகக் கூறுவதற்குக் கால அவகாசம் கிடைக்கவில்லை. எனவே சுமார் அறுபது விழுக்காடு அளவுக்குத்தான் தொகுத்து அளித்துள்ளேன். இந்த நூல் பத்தாம் வகுப்பு மாணவன் முதல் பல்கலைக்கழக முனைவர் பட்டம் ஆய்வு மாணவர் வரை தெரிந்துகொள்ளும்படி எளிதாகக் கூறியுள்ளேன்.

இந்நூல் வெளிவர அனுமதியும், ஆர்வமும் அளித்துவரும் முனைவர் திருமதி சீ. வசந்தி, ஆணையர் (பொறுப்பு) அவர்களுக்கு எனது நன்றியை என்றும் தெரியப்படுத்தக் கடமைப்பெற்றுள்ளேன். இந்நூல் வெளிவர இந்த மாவட்டத்தில் அடிக்கடி அலுவலக பணியின் காரணமாக வெளியூர் சென்று களப்பணியில் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அடியேன் இந்த நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் நூல் எழுதும் பணி ஆர்வமாகவும், தொடர்ச்சியாகவும் இரண்டு ஆண்டு காலமாக நடைபெற்றுள்ளது. மேலும் இப்பணியில் என்னை ஈடுபாடு கொள்ள செய்த பெருமை முன்னாள் இத்துறை முதன்மைச்செயலர் (ம) ஆணையர் திருமிகு அசோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. அவர்களைச் சேரும். முன்னாள் நாகை மாவட்ட ஆட்சியர் முனைவர் திரு. க. அருள்மொழி, இ.ஆ.ப. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர அட்டைப்படம் வடிவமைத்து, செய்தி கட்டுரைகளையும், நிழற்படங்களையும் உரிய முறையில் பதிப்பித்து உதவிய அச்சுப்பிரிவு திருமதி. ச. சரஸ்வதி அவர்களுக்கும், ஏனைய அச்சுப்பிரிவு நண்பர்களுக்கும் பாராட்டுதலையும் நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

நாள் : 9-1-13

அன்பன்

கோ. முத்துசாமி

பதிவு அலுவலர்

1. அமைவிடம் - பெயர்க்காரணம்

தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து 1991–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18–ஆம் நாளில் பிரிக்கப்பட்டது நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம். அது தற்சமயம் நாகப்பட்டினம் மாவட்டம் என்று அழைக்கப்படுகிறது. இம்மாவட்டத்தின் வடக்கில் கடலூர் மாவட்டமும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும் மேற்கில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களும், தெற்கில் வங்கக்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் தலைநகர் நாகப்பட்டினம். நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி, வேதாரண்யம், திருக்குவளை, கீழ்வேளூர், குத்தாலம் ஆகிய எட்டு வட்டங்களை உள்ளடக்கியது.

நீர்ப்பெயற்று, பதரிதிபடா, நிகமா, நாகர்னம் என்னும் பல்வேறு பெயர்களைப் பெற்ற நாகப்பட்டினம் தற்போது நாகப்பட்டினம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

சங்க காலத்தில் நாகை

பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப் படை, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியங்கள் பூம்புகார் பற்றி விரிவாகக் கூறுகின்றன. பட்டினம் எனும் சொல் காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கும். நாகைக் காரோணம் என்பது பாடல் பெற்ற தலமாகும். இன்றைய பூம்புகார் நாகை மாவட்டத்தில் உள்ளதால் நாகப்பட்டினத்திற்கும் சங்ககாலப் பெருமைகள் உண்டு. ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் 1845–1862 வரை தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாகவும் தரங்கம்பாடி விளங்கி வந்துள்ளது. டேனிஷ் ஆட்சிக்காலத்தில் 1620–இல் முக்கிய துறைமுகமாக தரங்கம்பாடி விளங்கியது. அதன் பின்புதான் நாகைப்பட்டினம் துறைமுகம் சிறப்புற்றது.

1. அமைவிடம்

இந்தியாவில் உள்ள மாநிலங்களில், சுற்றுலாச் சிறப்பில் தமிழ்நாடு மாநிலமும் தன்னிகரில்லா பெருமைகளைப் பெற்று விளங்குகிறது. இங்கு ஆயிரக்கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள்,

உயர்ந்து நிற்கும் கம்பீரமான கோபுரங்கள், கலையெழில் மிக்க மண்டபங்கள், நீண்ட நெடும் பிரகாரங்கள், அழகுமிகு சிற்பங்கள், இங்கு நடக்கும் வண்ணமிகு திருவிழாக்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் கலாச்சாரப் பெருமைகள் ஆகும்.

நாகப்பட்டினம் மாவட்டம்

தமிழ்நாட்டில் தென்கிழக்குப் பகுதியில் வங்கக் கடற்கரையோரம் அமைந்துள்ள நாகப்பட்டினம் மாவட்டம், மத நல்லிணக்கம், வரலாற்றுச் சிறப்பு, கலாச்சாரப் பெருமை, இயற்கையெழில், வேளண்மை, துறைமுகம் ஆகிய சிறப்புகளைக் கொண்ட மாவட்டமாகத் திகழ்கிறது.

நாகையில் நாகூர், வேளாங்கண்ணி, சிக்கல் , பூம்புகார், வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடையூர், திருவெண்காடு, சீர்காழி, தரங்கம்பாடி, திருமுல்லைவாசல், கீழப்பெரும்பள்ளம், மயிலாடுதுறை, திருமணஞ்சேரி, எட்டுக்குடி, வேதாரண்யம், திருநாங்கூர் ஆகிய பெருமைமிகு திருத்தலங்கள் அமைந்துள்ளன.

இந்த மாவட்டத்திலுள்ள கடற்கரையின் மொத்த நீளம் 188 கி.மீ. ஆகும். இங்கு இந்தியாவின் முக்கியமானதொரு நாகப்பட்டினம் துறைமுகம் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் புகழ் பெற்ற தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை, பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம், சப்தவிடங்கர் தலங்கள்; நீலாயதாட்சி அம்மன் உடனுறை காயாரோகன சுவாமி கோயில், திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயில், சிக்கல் நவநீதேஸ்வரர் கோயில், சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில், நாகை நெல்லுக்கடை மாரியம்மன் திருக்கோயில் , புகழ்பெற்ற வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை பேராலயம், நாகூர் ஆண்டவர் தர்கா என்ற மும்மதங்களின் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம், அரசு அருங்காட்சியகம், அழகிய கடற்கரைப் பகுதி மற்றும் கலங்கரை விளக்கம் ஆகிய சுற்றுலாச் சிறப்பிடங்கள் நாகை மாவட்டத்தில் அமைந்துள்ளன.

நாகப்பட்டினத்தில் உள்ள துறைமுகம் 1951–ம் ஆண்டு வரை பயணிகள் மற்றும் சரக்குகளைக் கையாளும் துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது, தற்போது சரக்குகளை மட்டும் கையாளும் துறைமுகமாகச் செயல்பட்டு வருகிறது.

தேக்கு, மூங்கில், கூபாபுல், யூக்லிப்டஸ், முந்திரி போன்ற மரங்களும் இங்கு வளர்கின்றன, கோடியக்கரையில் அதிக அளவில் காடுகள் உள்ளன, மக்கள்; முக்கியமாக நெல் பயிர்த் தொழில் செய்கின்றனர். அரிசி, கோதுமை, கேழ்வரகு போன்றன மக்களின் உணவாகும். இங்கு படிவுப்பாறைகள் அதிகம் காணப்படுகிறது. வேதராண்யம் தாலுகாவில் வண்டுவாஞ்சேரி, வடமழை ஆகிய இடங்களில் சிலிக்கா கிடைக்கிறது, இம்மாவட்டத்தில் மலைபகுதி இல்லை. நரிமணத்தில் இயற்கை எரிவாயு கிடைக்கிறது.

கடற்கரை நகரமான நாகப்பட்டினம் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் ஒரு கூற்றத்தின் தலைநகரமாக விளங்கியது. இராஜராஜசோழன் தனது பட்டப்பெயர்களில் அழைத்த சத்திரயசிகாமணி வளநாட்டில் இப்பட்டினக் கூற்றம் இருந்தது, இவ்வூருக்கு நாகப்பட்டினம் என்ற பெயரோடு 'சோழ குலவல்லிப்பட்டினம்' என்ற சிறப்புப் பெயரும் இருந்தது, இந்நகரின் தொன்மை பற்றிய குறிப்புகள் கி.மு. 3–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பர்மா நாட்டு விவரச்சுவடி ஒன்றின் இறுதிப் பகுதியில் காணப் படுகின்றது. இங்கு அசோகப் பெருமன்னன் எழுப்பிய புத்தவிகாரம் (புத்தர் கோயில்) ஒன்று இருந்தது என்ற குறிப்பும் அச்சுவடியிலேயே குறிக்கப் பெற்றுள்ளது. இந்த புத்தர் கோயிலைப் பற்றி சீனநாட்டுப் பயண எழுத்தாளர் யுவான்சுவாங் குறிப்பிடுகிறார். நாகப்பட்டினத்தின் முற்காலப் பெயரான 'படரிதித்த' என்பது தொன்மையான புத்த நூல்களில் குறிக்கப் பெற்றுள்ளன. இன்று நாகையில் உள்ள 'அவுரித்திடல்' எனும் இடப்பெயர் 'படரிதித்த' என்பதின் திரிபாகலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர், பாலிமொழியில் படரி என்பது இலந்தை மரத்தைக் குறிக்கும். இலந்தை மரங்கள் அடர்ந்த பகுதியாகவும் இக்கடற்றுறை இருந்திருக்கலாம்.

நாகப்பட்டினம் மாவட்டம் அறிமுக விபரங்கள்

பரப்பளவு :. 2417 ச.கி.மீட்டர்

மக்கள் தொகை: 16,14069

2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி
ஆண்கள் : 7,47,214, பெண்கள் : 8,16,855

கோட்டங்கள் : 2

1. நாகப்பட்டினம், 2. மயிலாடுதுறை

ஊராட்சி ஒன்றியங்கள் : 11

மயிலாடுதுறைக் கோட்டம்–கொள்ளிடம், சீர்காழி, மயிலாடு துறை, செம்பனார் கோயில், குத்தாலம்
நாகைக் கோட்டம்–திருமருகல், நாகப்பட்டினம், கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு, வேதாரண்யம்

நகராட்சிகள் : 4

1. நாகை 2. வேதாரண்யம், 3. மயிலாடுதுறை, 4. சீர்காழி

வட்டங்கள் : 8

நாகை, வேதாரண்யம், கீவளூர், திருக்குவளை, மயிலாடுதுறை, குத்தாலம், தரங்கம்பாடி, சீர்காழி

பேரூராட்சிகள் : 8

வைத்தீஸ்வரன் கோயில், தரங்கம்பாடி, குத்தாலம், மணல்மேடு, திட்டச்சேரி, கீழ்வேளூர், வேளாங்கன்னி, தலைஞாயிறு

வருவாய்க் கிராமங்கள் :519 பஞ்சாயத்துகள் : 434

நான்கு எல்லைகள் : கிழக்கு – வங்காள விரிகுடாக்கடல்
மேற்கு – தஞ்சை, திருவாரூர்
தெற்கு – வங்கக்கடல்
வடக்கு – கொள்ளிடம் ஆறு, கடலூர் மாவட்டம்

பழைய கோட்டைகள்

கொள்ளிடம் – 1. மகேந்திரப்பள்ளி கொட்டாய்மேடு (கோட்டை மேடு) இராபர்ட்கிளைவ் – மராட்டிய பிரதாப்பை விரட்டியடித்து முதலில் கைப்பற்றிய கோட்டை ஆகும்.
2. தரங்கம்பாடி–டேனிஷ்கோட்டை

பழமையான சிற்பங்கள் உள்ள இடங்கள்

1. வடக்காலத்தூர் – கல்யாணசுந்தரர், கீவளூர் வட்டம்
2. திருவெண்காடு – ரிஷபாந்தகர், தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ளது.

3. சீர்காழி வட்டம் வட ரங்கம் சிவன் கோயில் அருகில் சிங்கம் மேல் அமர்ந்த ஜேஷ்டா சிற்பம் உள்ளது. இது பல்லவர் காலத்தைச் சேர்ந்தது.

4. மயிலாடுதுறை வட்டம் ரெட்டிக்கடலங்குடி எனும் ஊரில் இருந்து வடக்காக செல்லும் வாய்க்காலில் ஒரு மதகின் அருகில் மூத்த தேவி எனும் ஜேஷ்டா சிற்பம் நேர்த்தியாக பலகைக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. தனிச் சன்னதியில் உள்ளது ஒரே கல்லில் நடுவில் தாயும் அதன் வலது பக்கம் மகன் மாந்தனும், இடது பக்கம் மகள் மாந்தியும் அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றனர். இதுவும் பல்லவர்காலச் சிற்பமாகும். மகப்பேறு விரும்பும் மகளிர் தற்போதும் இத்தேவியை வேண்டி வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

நாகை மாவட்டத்தில்
வெளிநாட்டவர்களின் வாணிகம்

1. ஹாலந்து நாட்டினர்–டச்சுக்காரர்கள்
2. பிரான்ஸ் நாட்டினர்–பிரஞ்சுக்காரர்கள்
3. டென்மார்க் நாட்டினர்–டேனிஷ்காரர்கள்
4. இங்கிலாந்து நாட்டினர்–ஆங்கிலேயர்கள்

வணிகம் செய்யவந்த வெளிநாட்டவர்கள், தமிழ்நாட்டில் அப்போது ஆண்டுவந்த மன்னர்களிடம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வியாபாரம் செய்து கொள்ளவே அனுமதி பெற்றனர். நாளடைவில் நம் நாட்டில் வேரூன்றிவிட்டனர். சூழ்ச்சித்திறன், நவீன படைபலம் கொண்டு ஆங்கிலேயர் மற்ற நாட்டவர்களை விரட்டியடித்துவிட்டு இந்தியாவையே கைப்பற்றிக்கொண்டனர்; என்ற வரலாறு தமிழகத்திலும் ஏற்பட்டது.

2. தொன்மை வரலாறு

சங்ககாலம்

நாகை மாவட்டம் சங்ககாலத்தில் பெரும்புகழ் பெற்று இருந்தமை தெரிகிறது. குறிப்பாக இம்மாவட்டத்தில் அமைந்த பூம்புகார் சங்ககாலத்தில் முற்காலச் சோழ மன்னர்களின் தலைநகரமாகவும் பெரும் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியுள்ளது. இதனால் சங்ககாலத்திலேயே பல்வேறு வெளிநாடுகளுடன் பூம்புகாருக்குத் தொடர்பு இருந்தமை தெரிகிறது,

சங்ககாலத்தில் பல புலவர்கள் பூம்புகாரிலும் அதனை ஒட்டிய வெளியூர்களிலும் வாழ்ந்துள்ளனர். பூம்புகாரும், நாகை மாவட்டமும் அரசியல் நாகரிகம், வாணிபம் போன்ற துறைகளில் மிகச் சிறந்த நிலையில் விளங்கிவந்தமையும் சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை முதலிய நூல்களாலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களாலும் அறியமுடிகிறது.

தமிழகத்து மாவட்டங்கள் அனைத்தும் தொகுத்து நோக்கும் போது, நாகப்பட்டினம் மாவட்டத்தின் பெருமைகளுக்கும், வரலாற்றுச் சிறப்புகளுக்கும் ஈடாக மற்றொரு மாவட்டத்தைக் கூறுதல் இயலாது. சோழ நாடு அல்லது சோழ மண்டலம் எனும் பரந்த நிலப்பரப்பு திருச்சி, தஞ்சை, நாகை, தென்னார்க்காடு, மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆகும்.

'நாகநாடு' 'நாகத்தீபம்' என்றெல்லாம் பழங்காலத்தில் கூறப்பட்ட தீவு இலங்கைத் தீவாகும். அங்கிருந்ததாக கூறப்படும் பௌத்த துறவிகளுக்கும் இந்நகரத்திற்கும் மிகுந்த தொடர்பு இருந்தது. கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் கரிசபதேரர் எனும் பௌத்த துறவி நாகை நகரில் பழுது பட்டிருந்த புத்த கோயிலினை நாகர்கள் (நாகநாட்டு பௌத்தர்கள்) உதவியோடு புதுப்பித்ததை முதலாம் இராசராச சோழன் காலத்து ஆனைமங்கலம் செப்பேடு குறிக்கின்றது. அதன்பிறகு இவ்விகாரம் அன்னவிகாரை நாகானைவிகாரை எனப் பெயர் பெற்றது. பல்லவப் பேரரசன் இராஜசிம்மன் ஆட்சியாண்டில் (கி.பி. 690–728) சீனமன்னன் ஒருவனுக்கு நாகப்பட்டினத்தில்

சீனர்களால் கட்டப்பட்ட பௌத்தப் பள்ளி ஒன்று அமைந்திருந்தது. விசயம் எனும் நாட்டு அரசனான விஜயோத்துங்கவர்மன் நட்புறவுக்காக இராஜராஜசோழன் பெயரில் கடாரத்து அரசனால் கி.பி.1090–இல் எடுக்கப் பெற்ற 'இராஜேந்திர சோழப் பெரும்பள்ளி' எனும் பெயர்களில் திகழ்ந்தன என்பதை ஆனைமங்கலம் செப்பேடுகள் வாயிலாக அறிகிறோம். இப்புத்தர் கோயில் 'சூடாமணி பந்ம விகாரம்' என்றும் அழைக்கப்பட்டது. இப்பள்ளிகள் இருந்து அழிந்த இடமான வெளிப்பாளையத்தில் 300–க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் புதைந்திருந்ததை அகழாய்வு மூலம் கண்டுபிடித்து சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். அங்கிருந்த பௌத்தப் பள்ளியின் இடிபாடுற்ற கோபுரத்தை 200 ஆண்டுகளுக்கு முன்பு இடித்து விட்டனர். நாகர்கள் மிகுந்து வாழ்ந்த ஊர் என்பதால் நாகூர் (நாகர் – ஊர்) எனவும் அழைக்கலாயினர். நாகப்பட்டினத்திலுள்ள காயாரோகணம் எனும் சிவாலயம் கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலேயே புகழ்பெற்று திகழ்ந்ததாகும். இது அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரது தேவாரப்பாடல் வரலாற்றோடு தொடர்புடைய திருக்கோயிலாகும். காயாரோகணம் என்பதை லகுளிச பாசுபத சமய நெறியின் அடிப்படையில், தோன்றிய கோயிலென்பர். அதே போன்று சௌந்தரராஜபெருமாள் கோயிலும் திவ்ய தேசப்பதியாக இவ்வூரில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் சிறப்பிடம் பெற்ற இந்நகரம்; விஜயநகரப் பேரரசர்களாலும் போற்றி மதிக்கப் பெற்றது. தஞ்சை நாயக்க மன்னர் செவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர் ஆகியவர்கள் காலத்தில் இங்கு போர்த்துக்கீசியர்கள் வணிக மையம் தொடங்கினர். கி.பி.1554–இல் இவ்வணிகமையம் உதயமாயிற்று. அப்போது முதல் இங்கு கிருத்துவமும் வேரூன்றியது. இவ்வணிக மையம் துவங்கும்போது 10 கிராமங்கள் அவர்களது மேற்பார்வையில் வணிக ஒப்பந்தப்படி அளிக்கப் பெற்றது. போர்த்துக்கீசியர்கள் வரவால் தோன்றியது வேளாங்கன்னி தேவாலயமாகும்.

கி.பி.1658–இல் டச்சுக்காரர்கள் நாகப்பட்டினத்திலிருந்து போர்த்துக்கீசியர்களை விரட்டிவிட்டு தாங்கள் வணிகமையம் ஏற்படுத்துவதில் முனைந்தனர். தஞ்சை நாயக்க மன்னர் விஜயராகவநாயக்கருடன் 05.01.1662–இல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி முன்னர் போர்த்துக்கீசியர் வசம் இருந்த

நாகப்பட்டினக் கோட்டையும், புத்தூர், முட்டம், பொருவலஞ்சேரி, அந்தணப்பேட்டை, கருவேப்பங்காடு, அழிஞ்சமங்கலம், சங்க மங்கலம், திருத்தினமங்கலம், மஞ்சங்கொல்லை, நறியங்குடி ஆகிய 10 கிராமங்களும் டச்சுக்காரர்கள் கீழ் இருந்தன.

டச்சுக்காரர்கள் நாகபட்டினத்தில் இருந்தபொழுது 10 சிறிய கிருத்துவ தேவாலயங்களும் ஒரு மருத்துவமனையும் ஏற்படுத்தினர். நாகப்பட்டினம் என்ற தமிழ் எழுத்தோடு காசுகளும் வெளியிட்டனர்.

தஞ்சையில் முதல் மராட்டிய மன்னரான ஏகோஜி டச்சுக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நாகப்பட்டினத்தையும் சுற்றியுள்ள ஊர்களையும் 30.12.1676–இல் வழங்கினார். இதன்பின்னர் கி.பி.1781–இல் நாகப்பட்டினம் பல போராட்டங்களுக்கு பின்பு ஆங்கிலேயர் வசமாயிற்று. 1779–இல் கம்பெனியாருக்கு நாகூரை தலைமை இடமாகக் கொண்ட 277 கிராமங்கள் கிடைத்தன. தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் 'நாகப்பட்டினம் வராகம்', நாகப்பட்டினம் ஹோன்னம்' என்ற பெயரில் தங்கக்காசுகள் புழக்கத்தில் இருந்தன. நாகப்பட்டினம் இந்த மாவட்டத்தின் தலைநகரமாக தற்காலத்தில் பெரும் புகழுடன் திகழ்ந்து வருகிறது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அகழாய்வு

நாகையில் நீதிமன்ற வளாகத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் திருமிகு ம. ராஜேந்திரன் அவர்கள் மேற்பார்வையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு செய்தனர். 4 அடி நீளம், 4 அடி அகலத்தில் 3 மீ. ஆழத்தில் அகழ்வாராய்ச்சிக்காக குழி தோண்டப்பட்டு 7 மண்ணடுக்குகள் காணப்பட்டன. இதில் ஐரோப்பியர் முதல் சங்ககாலம் வரையிலான தொல்லியல் சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சோழர்கால ஓடுகள்

முதல் 2 அடுக்குகள் தற்கால படிவுகள். 3 முதல் 5–ஆவது மண்ணடுக்குகள் ஆலந்து மற்றும் இங்கிலாந்துக்காரர்கள் வாழ்ந்ததற்கான கட்டடங்கள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் காணப்படுகின்றன. கி.பி. 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம், சீனக் களிமண் ஓடுகள் கிடைத்துள்ளன. அதிலிருந்து கி.பி. 16 முதல்

19–ஆம் நூற்றாண்டு வரை இங்கு ஐரோப்பியர்கள் வாழ்ந்துள்ளது தெரியவந்துள்ளது. 6–ஆவது மண்ணடுக்கு சோழர் காலத்தை சேர்ந்தது. இதில் ஸ்ரீராஜராஜா என எழுதப்பட்டுள்ள செப்பு நாணயம் கிடைத்துள்ளது. சோழர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மட்கலங்களின் சில்லுகள், கூரை ஓடுகள் கிடைத்துள்ளன. ஒரு ஓட்டில் 'கா' என்ற தமிழ் எழுத்து காணப்படுகிறது. 7–ஆவது அடுக்கில் பல்லவர் கால பானை ஓடுகள் மற்றும் விலங்குகளின் எலும்புகளும் கிடைத்துள்ளன.

நாகை மாவட்டத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்

1. அகரம் ஓரத்தூர்

அகரம் ஓரத்தூர் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினத்தில் இருந்து சிக்கல் சென்றடைந்து சிக்கலில் இருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு வேற்குடி என அழைக்கப்படும் பகுதியில் உள்ளது. இலுப்பைத் திடல். இப்பகுதி சிக்கல் கோயிலுக்குரியது என தெரிவித்தனர். வேற்குடிப் பகுதியில் அமைந்த இலுப்பைத் திடலில் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் சுமார் 20–க்கும் மேற்பட்டவை புதைக்கப்பட்டுள்ளன. அவை தற்பொழுது சிதைக்கப்பட்டு திறந்த நிலையில் மேற்பரப்பிலே காண முடிகின்றது.

பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் அமைப்பு

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பெருங்கற்கால வகையைச் சார்ந்தவை இவை. இவற்றில் இறந்தவர்களைப் புதைக்கும் பொழுது பெரிய பெரிய கற்களைக் கொண்டு அறைபோல அமைத்து புதைப்பது வழக்கம். எனவேதான் அக்காலத்தைப் பெருங்கற்காலம் என்று அழைப்பர். கற்கள் கிடைக்காத பகுதிகளில் மண்ணால் ஆன பெரிய பானைகளை வனைந்து, அதற்குள் இறந்தவர்களையும், அவர்கள் பயன்படுத்தி வந்த பானை, குவளை, தட்டு, கிண்ணங்கள், அகல் விளக்கு தாங்கி மற்றும் பிற பொருட்களையும் உடன் வைத்து பூமிக்கு அடியில் புதைத்து விடுவார்கள். இதனை முதுமக்கட்தாழி என்று அழைப்பர். இது ஒரு வகைப் பெருங்கற்காலப் பண்பாடு ஆகும். இந்த வகைப் பண்பாட்டுச் சின்னங்கள் இப்பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல இடங்களில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் பெரும்பான்மையான பண்பாட்டுச் சின்னமாக முதுமக்கள் தாழிகள் ஆங்காங்கே காணக் கிடக்கின்றன. தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிக்கல் ராஜேந்திரம், கீழப்பெரும்பள்ளம், கீழ்வேளூர், உத்திரங்குடி, கொந்தகை, மணிக்கிராமம், வானகிரி, ஆக்கூர், அகரம், ஓரத்தூர், செம்பியன்கண்டியூர், முருகமங்கலம், சோழம்பேட்டை, வானாதிராஜபுரம், மல்லியம், மேலப்பெரும்பள்ளம், திருஇந்தளூர்–தோப்புத்தெரு, காரைமேடு–மணல்மேடு, தலச்சங்காடு, வேற்குடி, தில்லையாடி, திருமங்கலம் போன்ற இடங்களில் இந்த பெருங்கற்காலப் பண்பாட்டு வகையைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

வேற்குடி

இங்கு உடைந்த நிலையில் முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. இந்த முதுமக்கள் தாழியில் குவளை, கலயம், தட்டு, பானை போன்றவைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கருப்பு, சிவப்பு வண்ணத்தில் அமைந்த பானை வகையைச் சார்ந்தவை ஆகும். இது காலத்தால் மிகவும் முற்பட்டது. இந்த வகைப் பானை ஓடுகள் சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்டவை ஆகும். இவற்றுடன் சொரசொரப்பான சிவப்பு நிறப் பானைகள், முழுமையும் கறுப்புநிறப் பானைகள், குறியீடு பொறித்த பானைகள் போன்றவை சேகரித்து அருகில் உள்ள பள்ளியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள்

அகரம் ஓரத்தூர் – வேற்குடியில் காணப்பட்ட முதுமக்கள் தாழியில் இருந்து எடுக்கப்பட்ட குறியீடு பொறித்த பானை ஓடுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இங்கு ஆறு வகையான குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் பல்வேறு குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவற்றில் குவளை, தட்டு, பானை போன்றவற்றில் சில முழுமையாகவும், உடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இந்த குறியீடுகள் தமிழகத்தில் பிற இடங்களில் கிடைத்துள்ள குறியீடுகளுடன் பொருந்துபவையாக உள்ளன.

இந்த குறியீடுகள் தங்கள் இருப்பிடங்களைக் குறிப்பவையாகவும், அந்தக் குறியீடுகள் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்து வருவதையும் அறியலாம். இதனை தமிழகத்தில்

அழகன்குளம், மாங்குளம், கொடுமணல், மோதூர் போன்ற பிற அகழாய்வுகளில் கிடைத்துள்ள குறியீடுகள் தெளிவுபடுத்துகின்றன. இக்குறியீடுகள் பற்றிய ஆய்வை தொல்லியல் மூத்த அறிஞர் திரு, ஐராவதம் மகாதேவன் செய்துவருகிறார்.

இரும்புப் பொருட்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த மக்கள் இரும்பின் பயனை அறிந்து இரும்புப் பொருட்களைத் தயாரித்து பயன்படுத்தியுள்ளனர். எனவே இக்காலத்தை இரும்புக் காலம் என்றும் அழைப்பர். அதற்கேற்ப பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் இரும்பினாலான கத்தி, குறுவாள், நெடுவாள், கோடரி, ஈட்டி முனை போன்ற வேட்டைக்குப் பயன்படுத்தும் பொருட்கள் பல கிடைத்துள்ளன. அதே போன்று அகரம் ஓரத்தூர் பகுதியிலும் குறுவாள் ஒன்று 5 துண்டுகளாக உடைந்த நிலையில் சேகரிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 20.5 செ.மீ. நீளமும், 6.5 செ.மீ. அகலமும் உள்ளது. இது பெருங்கற்காலப் பண்பாட்டில் இரும்பின் பயன்பாடு இருந்தது என்பதை வலியுறுத்த உதவுகின்றது. மேலும் காரைமேடு–மணல்மேடு, திலலையாடி, திருமங்கலம் போன்ற இடங்களில் மக்கிய நிலையில் இரும்பு நெடுவாள் கிடைத்துள்ளன.

மேலும், நாகப்பட்டினம் வட்டத்தில் காணப்படும் முதுமக்கள் தாழிகள் காலத்தால் சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதையும் இம்மாவட்டம் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு கொண்டது என்பதையும் இங்கு கிடைத்த தொல்பொருள் சான்றுகளால் அறிகிறோம்.

2. காரைமேடு–மணல்மேடு

சீர்காழி வட்டத்தில் உப்பணாற்றின் தென்கரையில் காரைமேடு மணல்மேடு பஞ்சாயத்து உள்ளது. இவ்வூரில் உப்பணாற்றின் கரையில் மணல் திடலில் இரண்டு கி.மீ. தூரத்திற்கு வரிசையாகப் பல அடுக்குகள் முதுமக்கட்தாழிகளின் தலைப்பகுதிகள் காணப்படு கின்றன. இவ்வூர் பண்டைய பூம்புகார் நாட்டின் வடக்கு எல்லையாகக் கருதப்படுகிறது.

சங்ககாலத்தில் இந்தப் பகுதியில் மன்னர்கள், படைத்தளபதிகள், போன்ற முக்கியமானவர்கள் இறந்த பின்பு எடுத்து வந்து அடக்கம் செய்துள்ளனர் என்பது ஆய்வில் புலனாகிறது.

பொதுவாக நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் சங்ககாலத்தில் சமுதாயத்தில் முக்கிய பங்கு வகித்தவர்களை இறந்த பின் அடக்கம் செய்வதற்குப் பெரிய சுடுமண் சால்களையே (முதுமக்கட்தாழிகள்) பயன்படுத்தியுள்ளனர்.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், வடஆற்காடு மாவட்டங்களில் கற்திட்டைகள் (பலகைக்கற்களைக் கொண்டு அமைக்கும் ஈமச்சின்னம்) பயன்படுத்தியுள்ளனர் என்பதும் தெரிகிறது.

காரைமேடு–மணல்மேட்டுப் பகுதியில் சுமார் 5 அடி உயரமுடையதும், நடுப்பகுதி சுமார் 3 அடி விட்டம் உடையதும், மேல்வாய் சுமார் 2 அடி விட்டம் உடையதும் ஆக செய்து சுடப்பட்டுள்ளது. மேலே சில இடங்களில் காற்றுப் புக சிறு சிறு ஓட்டைகள் உள்ளன. உள்ளே கருமையான குடிநீர் கலையம், கருப்பு சிவப்பு கிண்ணங்கள், எலும்புத்துண்டுகள், அகல் விளக்குகள், தாங்கியில் வைக்கப்பட்டிருந்தன. தாழியின் வெளியே நெடுவாள் ஒன்றும் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பகுதியில் பெரும்பான்மை இவ்வாறு உள்ளதால் இவ்விடமும் பெருங்கற்கால சின்னமாகும்.

3. நீர் ஆதாரங்கள்

இயற்கை வளம்

இம்மாவட்டத்தை காவிரி ஆறு பாய்ந்து வளமாக்குகிறது. அடப்பாறு, வெண்ணாறு, கடுவையாறு, வெட்டாறு, மஞ்சள் ஆறு, கொள்ளிடம், உப்பணாறு, அரிச்சந்திர ஆறு, வீரசோழனாறு, ஓடம்போக்கி ஆறு, விக்கிரமனாறு, நண்டலாறு, முள்ளியாறு, குதிரை கேசவனாறு, ஓடையாறு மண்ணியாறு, பழவாறு, ஆகியவை காவிரியின் கிளை நதிகளாகும்.

இந்த ஆறுகள் நாகை மாவட்டத்தில் பெரும்பகுதி நன்செய் நிலங்களில் பாய்ந்து வளம் கொழிக்கச் செய்கின்றன. சில ஆறுகள் கடை மடை நிலங்கள் வரை பாய்ந்து முடிவில் கடலில் சென்று கலக்கின்றன. முக்கியமாக காவிரியாறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையில் உருவானாலும், கடைசியில் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் சிறு வாய்க்கால் போலாகி வங்கக்கடலில் சென்று கலக்கிறது. காவிரி கடலோடு சங்கமம் ஆகும் துறையே பூம்புகார் என்று வழங்கப்படுகிறது. காவிரி நதியால் நாகை மாவட்டமும் மண்வளம் பெற்றது. மக்கள் செழிப்புடன் காணப்பட்டனர். மன்னர்களும் வான் உயர்ந்த கோயில்களைக் கட்டியுள்ளனர் எனத் தெரிகிறது.

4. சைவ சமயம்

நாகை மாவட்டத்தில் சைவ சமயம் மிகவும் மேலோங்கிய வளர்ச்சி நிலையில் இருந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சமயக்குரவர் நால்வர்களில் ஞான குழந்தையான திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் பிறந்து தமது தேவாரப் பாடல்களால் சிவபெருமானைப் போற்றி சைவத்தை சிறப்போடு வளர்த்ததே ஆகும்.

இம்மாவட்டத்தில் காரி நாயனார், மானக்கஞ்சாரர், குங்கிலியக் கலையர் போன்ற நாயன்மார்களும் பிறந்து சைவத்தையும், தமிழையும் பெருமைப்படுத்தியுள்ளனர். "சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்யும் அடியவர்கள் பின்பற்றுவதே சைவ சமயம்" என்று சான்றோர்கள்ால் வழங்கப்பட்டு வருகிறது. இந்து சமயம் என்பது பிற்காலத்தில் வைத்துக்கொண்ட ஒரு மரபாகும்.

திருமாலை வணங்கும் வைணவர்கள், அம்மனை வணங்குபவர்கள், முருகப்பெருமானை வணங்குபவர்கள், கிராம தேவதைகளை வணங்குபவர்கள் அனைவருமே பொதுவாகச் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர்.

(i) தேவாரத் திருமுறைத்தலங்கள்

பொதுவாக மூவர் தேவாரமும் மற்ற அருளாளர்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும் சைவ சமயத்தைத் தூண்களாகத் தாங்கி நிற்கின்றன. மொத்தத்தில் தேவார திருமுறைத்தலங்கள் என 297 திருத்தலங்களைச் சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் நாகை மாவட்டத்தில் மட்டும் 63 பாடல் பெற்ற தலங்கள் அமைந்துள்ளன. இதில் காவிரியின் வடகரைத் தலங்களாக 28–ம், தென்கரைத் தலங்களாக 35–ம் அமைந்து பக்தர்களின் வழிபாட்டில் இன்றும் உள்ளன.

இதுமட்டுமின்றி பக்தர்களின் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்று, கல்வெட்டுச் சான்றுகளுடன் சோழர் கலையையும் வெளிப்படுத்தும் வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவத்தலங்களும் இம்மாவட்டத்தில் ஆங்காங்கே அமைந்துள்ளன.

ஆச்சாள்புரம்

நாகை மாவட்டம் சீர்காழி வட்டத்தில் ஆச்சாள்புரம் அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து வடகிழக்கே 13 கி.மீ. தொலைவிலும், சிதம்பரத்திலிருந்து தென்கிழக்கே 12 கி.மீ. தொலைவிலும் நல்லூர்ப்பெறுமணம் எனும் ஆச்சாள்புரம் உள்ளது.

தனது திருமணத்துக்கு வருகை தந்தவர்களுக்கெல்லாம் முக்தியைத் தந்து 'கயிலை' பதவியை அளித்தவர் திருஞானசம்பந்தர். அப்படிப்பட்ட வைபவம் நடந்த திருத்தலமாகத் திகழ்வது நாகை மாவட்டத்தில் அமைந்துள்ள ஆச்சாள்புரமாகும். இத்தலத்தின் பெருமைகள் எண்ணிலடங்காதவை.

தலப்பெயர்கள்

இந்த தலம் சிவலோகம், முக்திபுரம், அணைவைநல்லூர், திருநல்லூர்ப் பெருமணம், ஆச்சாள்புரம், ஆச்சார்யாள்புரம், ஆயாள்புரம் என்னும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இறைவன் பெயர் சிவலோகத் தியாகேசர். சிவலோகநாதர், திருப்பெருமணமுடைய மகாதேவர் ஆகியன. அம்பிகையின் பெயர் திருவெண்ணீற்றுமை, நங்கை உமை நாயகி, விபூதி கல்யாணி, விபூதி நாயகி என்பனவாகும்.

ஆதியில் பிரம்மன் பல தலங்களை வணங்கியவாறு சீர்காழிக்குச் செல்லும் வழியில் இத்தலத்தில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்புகளையும் வளங்களையும் கண்டார். இது ஒரு நல்லூர் ஆகும் என்று புகழ்ந்தார். அதனால் 'நல்லூர்' எனும் பெயரும் இத்தலத்துக்கு ஏற்பட்டது. இங்குள்ள சிவலோகத் தியாகேசரை முருகப்பெருமான் வழிபட்டுள்ளார்.

ஆலய அமைப்பு

இவ்வாலயம் கிழக்கு நோக்கியவாறு ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் கம்பீரமாக காட்சித் தருகின்றது. எதிரே பஞ்சாட்சரத் திருக்குளம் பிரம்மாண்டமாய் அமைந்துள்ளது. ராஜகோபுரத்தை அடுத்து முற்றத்தில் நந்தி மண்டபமும் நூற்றுக்கால் மண்டபமும் அமைந்துள்ளன. நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞான சம்பந்தர், தோத்திர பூர்ணாம்பிகையோடு மணக்கோலத்தில் தனி சந்நிதியில் அருள் வழங்குகின்றார். அவரை தரிசித்து உள்ளே நுழைந்ததும், கிழக்கு நோக்கியவாறு சிவலோகத் தியாகராஜர்

சந்நிதியும், திருவெண்ணீற்று உமையம்மையின் சந்நிதியும் அமைந்துள்ளன. அம்பிகை சந்நிதியிலும் இத்தலத்தில் திருநீறு மட்டுமே பிரசாதமாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இத்தலத்தின் மற்றொரு சிறப்பு சுவாமி சந்நிதியின் பின்புறம் அமைந்துள்ள 'ருண விமோசனர்' சந்நிதியாகும். இவரை வழிபடுவோரின் கடன் தொல்லைகள் நீங்குவதாக மக்கள் நம்புகின்றனர். நல்லூர் ஆலயத்தைச் சுற்றி கிழக்குத் திசையில் பிருகு முனிவர் தென்கிழக்குத் திசையில் ஆங்கீரச முனிவர், தெற்குத் திசையில் வசிட்ட முனிவர், மேற்கில் வியாச முனிவர், வடமேற்கில் மிருகண்டு முனிவர், வடக்கில் அகத்தியர், ஈசான மூலையில் ஜமதக்கினி மற்றும் கன்னி மூலையில் மந்திரங்கள் அமைந்த தீர்த்தங்கள் உள்ளன. இங்கு தலமரமாக இருப்பது மாமரமாகும்.

கல்வெட்டுகள்

இவ்வாலயத்தின் கி.பி.1918–ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கைபடி 17 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் பழமையானது கி.பி. 1121–ஆம் ஆண்டு விக்கிரம சோழனின் கல்வெட்டாகும். இது தவிர இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133, 1143), இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி.1163, 1177), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1195, 1202, 1211, 1214), மூன்றாம் இராஜராஜன் (கி.பி.1218, 1233, 1234), திருபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டியன், கோனேரின்மை கொண்டான் எனப் பல்வேறு மன்னர்களின் கல்வெட்டுகள் ஆலயத்தில் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட கொடைகள், திருவிழாக்கள், நிர்வாகம் பற்றி விரிவாக அறிய முடிகிறது.

கல்வெட்டுகளில் இறைவன் பெயர் 'திருப்பெருமணமுடைய நாயனார்' என்றும், 'திருப்பெருமணமுடையார்' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வூர் வெண்ணையூர் நாட்டில் உள்ள நல்லூர் என்றும் அழைக்கப்பட்டுள்ளதை கல்வெட்டு வாயிலாக அறிகின்றோம்.

தேரழுந்தூர்

மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் 7 கி.மீ. மேற்கே சேத்திரபாலபுரம் எனும் ஊர் உள்ளது. இச்சாலையில் தெற்கே திரும்பிச் சென்றால் 5 கி.மீட்டரில் தேரழுந்தூர் வரும்.

தேர் எழுந்தூர், தேர் இழந்தூர், திருஅழுந்தூர், அழுந்தை என்றெல்லாம் பலவாறாக அழைக்கப்படுகிற இந்த திருத்தலத்தில் பிரபல வைணவத் திருக்கோயிலான ஆமருவியப்பன் ஆலயம் உள்ளது. ராமகதையைத் தமிழில் இயற்றிக் கொடுத்த கவிச் சக்கரவர்த்தி கம்பர் பிறந்த ஊர் இது. வேதங்கள் நேரில் இறைவனை பூஜித்த புண்ணிய திருத்தலம்.

கம்பன் பிறந்த ஊர் காவிரி தாங்கும் ஊர்
கும்பமுனி சாபம் குலைந்த ஊர்– செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தந்தையும் தேடிக் காணா
ஓதகத்தார் வாழும் அழுந்தூர்

என்றொரு தனிப்பாடல் உண்டு.

கம்பர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிற இடம் கம்பர்மேடு என்று வழங்கப்படுகிறது. இவ்விடம் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கண்காணிப்பில் உள்ளது. தமிழ்ச் சான்றோரான இரும்பிடர்த் தலையார் வாழ்ந்த தலம். வேதங்கள், தேவர்கள், திசைப்பாலகர்கள் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. 'சந்தனவனம்' என்றும் இதற்குப் பெயர்.

மழவ அரசனான வரதன், காவிரிக்கரையில் செய்த தவத்திற்கு பரிசாக பிரம்மா தேரைக் கொடுத்தார். பொதிய மலை நோக்கிப்போகலாம் என்று புறப்பட்டிருந்த ஊர்த்துவரதன், மேலே செல்லமுடியாமல் தேர் கீழிறங்குவதைக் கண்டான், வலப்புறத் தூணில் இருந்த பொறியை வேக வேகமாக அழுத்தினான். எந்தப் பயனும்இல்லை. விரைந்து கீழிறங்கிய தேர், இன்னும் விரைவாக தரையைத் தொட்டது மட்டுமல்லாமல் வெகு ஆழமாக மண்ணில் அழுந்தி நின்றது.

அடி மீது அடி வைத்து நகர யத்தனித்தபோது, அகத்திய பெருமான் அஞ்சலி தாங்கி, லிங்க பூஜை செய்து கொண்டிருந்தார். குறுமுனியைக் கண்டவுடன், ஊர்த்துவரதனுக்குத் தனது தேர் நின்றதற்கான காரணம் புரிந்தது. இறைவனாரைத் தம் உள்ளத்தில் தரிசித்த அந்த உத்தமரைத் தாண்டி பிரம்ம ரதமேயானாலும் பாய்ந்து விட முடியுமா என்ன ? தனது தேருக்கு நன்றி செலுத்திக் கொண்டே ஊர்த்துவரதன் கைகூப்ப, அதுபோது, சிவ சிந்தனையில் ஆழ்ந்திருந்த

அகத்திய மாமுனி தமது அருள் பார்வையைத் திருப்ப, உத்தமப்பார்வை ஊர்த்துவரதன் மீது படிய இந்த பேரானந்தத்தைப் பக்கத்தில் இருந்து பார்க்கவில்லையாயினும், எட்டியிருந்தபடியே தனது மணிகளை ஒலித்துக்காட்டித் தேரும் ஆமோதித்தது. ஊர்த்துவரதனின் தேர் அழுந்தியதால், தேர் அழுந்தூர் என்ற பெயர் பெற்றது என்பர்.

அகத்தியர், காவிரித்தாய், வேதங்கள், பிரம்மா, இந்திரன், பரிகலாதன் என்று பல்லோரும் வணங்கி வாழ்த்தியுள்ள இந்தத் திருத்தலம் சைவ–வைணவ ஒற்றுமையின் மிகப் பெரும் அத்தாட்சியாகத் திகழ்கிறது. திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள வைணவ திவ்வியதேசம். ஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பட்டுள்ள சைவப் பெருந்தலம் தேரழுந்தூர். இது கரிகால் பெருவளத்தான் தலைநகரமாக விளங்கியதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த அற்புதத் திருத்தலத்தின் வேதபுரீஸ்வரர் திருக்கோயிலின் ஐந்து நிலை மேற்கு ராஜ கோபுரம் உள்ளது. சுதை பொம்மைகள் நுட்பமான வேலைப்பாடுகள் கொண்டது. கோபுரவாயிலை அடுத்து உள்ளே சென்றால் விசாலமான இடம். தென்மேற்குப் பகுதியில் (அதாவது கோபுர வாயிலில் உள்நுழையும் போது, நமக்கு வலப் பக்கமாக) அம்பாள் சந்நிதி தனி சன்னதியாக உள்ளது. உள்வாயிலின் அருகே, கொடிமரம், கொடிமர மாடத்தில் விநாயகர், உள்வாயில் கடந்து சென்றால், உள் பிரகாரம், திருச்சுற்றைக் காணலாம். முதலில், ஆதிசிவனார். அடுத்து கஜலட்சுமி, வடமேற்கு மூலையில் வள்ளி–தெய்வானை சமேத முருகன்.

கோஷ்ட மூர்த்தங்களான ஸ்ரீதுர்க்கை, ஸ்ரீலிங்கோத்பவர் மற்றும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, தனி மண்டபத்தில் ஸ்ரீ சண்டிகேஸ்வரர் தட்சிணாமூர்த்திக்கு அருகில், சுவர் மாடத்திலேயே அகத்தியர், பக்கத்து மாடத்தில் ஒரு பெண் வடிவம் (காவிரித் தாய்) போன்றவை காணப்படுகின்றன.

அழகிய மங்கையாக அம்பாள் தம்மைத் தாமே ஆவிர்பவித்துக் கொண்ட திருத்தலம் தேரழுந்தூர். அம்பாள் சந்நிதி அமைப்பே, இங்கு சற்று வித்தியாசமானது. சாதாரணமாக; சுவாமி கிழக்குத்திசை பார்த்தோ, மேற்குத்திசை பார்த்தோ இருந்தாலும், அம்பாள் தெற்குத் திசை பார்த்தவராக இருப்பார். இங்கு எல்லாவற்றிலும் வேறுபட்டு சுவாமியும் அம்பாளும் எதிரும் புதிருமாக காட்சி தருகின்றனர்.

இங்கு மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் இத்தலம் 'ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர்' என்றும்; இறைவனின் திருப்பெயர் 'திருவழுந்தூர் உடையார்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலிருந்து சுவாமிக்கு நாடொறும் காவிரியிலிருந்து திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு வருவதற்குக் கட்டளை வைத்துள்ள செய்தி தெரிய வருகின்றது.

வைகல் மாடக்கோயில்

கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் பழியஞ்சியநல்லூர் கூட்டுரோட்டில் வலப்புறமாக நாட்டார் வாய்க்காலைக் கடந்து பழியஞ்சியநல்லூரை அடைந்து, மேலும் 2 கி.மீ சென்றால் சம்பந்தரால் பாடப் பெற்ற வைகல் மாடக்கோயிலை அடையலாம்.

இறைவன் – சண்பகாரண்யேஸ்வரர், வைகல்நாதர். இறைவி கோமளவல்லி, கொம்பியல் கோதை, வைகலாம்பிகை. தலமரம் – சண்பகம். இத்திருக்கோயில் இலக்குமியால் வழிபடப்பட்டது. சண்பகாரண்யம், நித்யவாசபுரம் முதலியன இத்தலத்தின் வேறு பெயர்கள் ஆகும்.

முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் பிரகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், சனீஸ்வரன், சூரியன் சந்நிதிகள் உள்ளன. மாடத்தின் படிகளேறிச் சென்றால் நேரே மூலவர் தரிசனம். சுயம்புமூர்த்தி அழகான பாணம். பக்கத்தில் கீழே தனியே அம்பாள் கோயில் உள்ளது. நாடொறும் ஒருகால வழிபாடு சிவாச்சாரியாரின் ஆர்வத்தால் நடைபெறுகிறது. கோயில் தரைமட்டத்திலிருந்து சுமார் 20 அடி உயரம் மேடை அமைப்புடன் உயர்ந்துள்ளதால் இது மாடக்கோயில் எனும் கட்டட அமைப்பைச் சேர்ந்தது.

திருத்துருத்தி

இறைவன் – உக்தவேதீஸ்வரர்–சொன்னவாறு அறிவார், இறைவி அமிர்த முகிழாம்பிகை, மிருது முகிழாம்பிகை, பரிமள சுகந்த நாயகி அரும்பன்னவன முலையாள் (மருதமுகுளகுஜாம்பிகை), தலவிநாயகர் – துணை வந்த விநாயகர். தீர்த்தம் – காவிரி, சுந்தரர் தீர்த்தம், வடகுளம் (பத்மதீர்த்தம்).

இறைவனைப் பூசித்த அம்மைக்குக் காட்சி தந்த இறைவனை, தன் பெற்றோர் மகிழ விதிமுறைப்படி மணங்கொள்ளுமாறு அம்பிகை வேண்டினார். இறைவனும் அதற்கிசைந்து 'நாமே விதித்த விதியின்படி நடந்து உம்மை மணங்கொள்வோம்' என்று அருள் புரிந்தார். இதனால் இறைவனுக்கு; 'சொன்னவாறு அறிவார்' என்று பெயர் வந்தது. உமை வழிபட்டதும்; வருணன் வழிபட்டுச் 'சவோதரம்' என்னும் பிணி நீங்கியதும்; காளி வழிபட்டுப் பேறு பெற்றதும்; சுந்தரர் தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப்பெற்றதும் தலச்சிறப்பாகும். தனிச்சன்னதியும் கோயிலுக்குள் உள்ளது. மற்றும் காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டேயர், வசிஷ்டர், புலஸ்தியர், அகஸ்தியர் ஆகிய சப்தரிஷிகளும் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர்.

கல்வெட்டில் இத்தலத்து இறைவன் 'விங்குநீர் திருத்துருத்தியுடைய மகாதேவர்', 'உடையார் சொன்னவாறறிவார்', 'திருக்கற்றளி மகாதேவர்' என்று குறிக்கப்படுகிறார். இத்தலத்தைப்பற்றி மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் – திருத்துருத்திப் புராணம் என்ற தம் நூலில் சிறப்புடன் பாடியுள்ளார்.

மயிலாடுதுறை

இத்தலத்தின் ஒரு பகுதியாகிய தருமபுரத்தில் தான் தருமையாதீனம் உள்ளது. காசிக்குச் சமமான ஆறு தலங்களுள் இதுவுமொன்று. அம்பாள் மயில் வடிவில் வழிபட்ட தலம். அம்மை மயில் வடிவங் கொண்டு ஆடிய தாண்டவம் கௌரி தாண்டவம் எனப்படும். இதனால் இத்தலம் கௌரி மாயூரம் என்றும் பெயர் பெற்றது. சூதவனம், சிகண்டிபுரம், பிரமபுரம், தென்மயிலை என்பன இத்தலத்தின் வேறு பெயர்களாகும். இந்திரன், பிரமன், வியாழ பகவான். அகத்தியர், சப்த மாதாக்கள், உமாதேவியர் ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் – மயூரநாதர், இறைவி – அபயாம்பிகை, தலமரம் – மா, வன்னி. தீர்த்தம் – பிரமதீர்த்தம், காவிரி, ரிஷப தீர்த்தம். ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. ஆவடுதுறையில் உலவாக்கிழி பெற்ற ஞானசம்பந்தர் திருத்துருத்தி வழிபட்டுப் பின்பு இங்கு வந்து தொழுது திருவிளநகர் சென்றார். கோலக்கா வரை வந்து ஞானசம்பந்தர் வழியனுப்ப அப்பர் சோழ நாட்டுத் தலயாத்திரையைத் தொடங்கியபோது திருச்செம்பொன்பள்ளி தொழுது பின்பு இங்கு வந்தார்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குரியது. இங்கு உள்ள முருகன் சந்நிதி – குமரக்கட்டளை மட்டும் தருமையாதீனத்திற்குரியது. மிகப்பெரிய கோயில். ராஜகோபுரம் ஒன்பது நிலைகளுடனும், அழகான சிற்பங்களுடனும் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. உட்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. ராஜ கோபுரத்துள் நுழைந்ததும் இடப்பால் திருக்குளம். வலப்பால் குமரக் கட்டளை அலுவலகம் உள்ளன.

இங்கு காசி விசுவநாதர், விசாலாட்சிக்கு எட்டு கோயில்களுள்ளது. உத்தரமாயூரம் எனப்படும் வள்ளலார் கோயில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. கடைமுழுக்கு நாளன்று, ஐப்பசி இறுதி நாள், இங்குள்ள எல்லாக் கோயில்களிலுள்ள மூர்த்திகளும் உலாவாக எழுந்தருளி காவிரிக்கு வந்து மயூரநாதரோடு சேர்ந்து தீர்த்தம் கொடுக்கும் சிறப்பு, மிகவும் அரிய திருவிழாவாக நடைபெறுகிறது. ஐப்பசிப் பெருவிழாவில் மயிலம்மை வழிபாட்டு ஐதீகமும் வைகாசியில் சஷ்டி விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. கார்த்திகை விடியலில் காவிரியில் முடவன் முழுக்கு என்ற புனித நீராடுதலும் இவ்வூரின் முக்கிய விழாவாகும்.

கந்தபுராணத்தில் வழிநடைப் படலத்தில் இத்தலம் பற்றிய குறிப்பு வந்துள்ளது. மகாவித்மான மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தலபுராணமும், அபாயம்பிகை மாலையும் , அபயாம்பிகை அந்தாதியும் பாடியுள்ளார். நல்லத்துக்குடி கிருஷ்ணய்யர் என்பவரும் அபயாம்பிகை சதகம் பாடியுள்ளார். மயிலாடுதுறையில் உள்ள கோயில்களில் இதுவே பெரியது. எனவே பெரிய கோயில் என்றும் வழங்கப்படுகிறது, இக்கோயிலில் 86 சோழர் மற்றும் விஜயநகரர், நாயக்கர்கால கல்வெட்டுகள் இருந்துள்ளன. முன்பு நடைபெற்ற திருப்பணியின் போது, அவற்றின் வரலாற்றுப் பெருமை அறியாமல் அவைகளை செதுக்கி இல்லாமல் செய்து விட்டனர் என்பதும் புலப்படுகிறது. கல்வெட்டில் இத்தலத்திறைவன் 'மயிலாடுதுறை உடையார்' என்று குறிக்கப் பெறுகின்றார். இக்கோயிலில் கோட்ட தேவதைகள் முற்கால சோழர் கலைப்பாணியில் வடிக்கப்பட்டு எழிலுடன் காட்சி தருகிறது. தென்முகக்கடவுளின் கோட்டத்திற்கு எதிரில் குதம்பைச்சித்தர் சிற்பம் காட்சி தருகிறது. திருக்குளம், தலத்தரு, ஆதிமயூரநாதர் கோயில், காவல் தெய்வம் முனீஸ்வரர் சன்னதி ஆகியன கோயில் திருச்சுற்றுக்குள்ளேயே அமைந்துள்ளன.

திருவிளநகர்

மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் பொறையாறு சாலையில் 6 கி.மீ. தொலையில் திருவிளநகர் உள்ளது. அருள்வித்தன் என்னும் அந்தணன் நாடொறும் இறைவனுக்கு மாலை கட்டிக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வந்தான். இவனுக்கு அருள விரும்பிய இறைவன், ஒருநாள் அவன் தன் தொண்டில் நின்று ஆற்றைக் கடக்கும்போது, வெள்ளம் பெருகி, வாயளவாய் பெருகிட, அப்போதும் அவ்வந்தணன் தன் இருகைகளால் மலர்க் கூடையை விடாமலும், நீந்த முடியாமலும் விரைந்து வந்து கொண்டிருந்தான். அவனுடைய உறுதியையும், அன்பையும் கண்ட இறைவன் அவனுக்கு அருள் சொரிந்து துறைகாட்டி அவனைக் கரையேறச் செய்தார். பின்னர், திருஞானசம்பந்தர் 'திருக்கடைமுடி' வணங்கி, மயிலாடுதுறை வந்து மயூரநாதரை வணங்க விரும்பி, ஆற்றுவெள்ளங்கண்டு அஞ்சி, கடக்க முடியாது வருந்தி நின்று, 'துறை காட்டுவார் எவரேனும் உளரோ' என்று உள்ளத்து உன்னினார். அப்போது இறைவனே வேடனாக வந்து அழைத்துச் சென்றான். காவிரி வெள்ளமும் ஞானசம்பந்தரின் பாதத்து அளவே ஆயிற்று. கரையேறிய ஞானசம்பந்தர், தன்னை அழைத்து வந்த வேடன் மறைந்தது கண்டு அதிசயித்து, வந்தவர் இறைவனே என்றுணர்ந்து, 'துறைகாட்டும் வள்ளலோ' என்று வணங்கிப் போற்றினார். இவ்வரலாற்றை ஞானசம்பந்தரின் தேவாரம் நன்கு விளக்கும்.

இறைவன் – துறைகாட்டும் வள்ளல், உசிரவனேஸ்வரர் இறைவி – வேயுறுதோளியம்மை. தீர்த்தம் – மெய்ஞ்ஞானதீர்த்தம். சம்பந்தர் பாடல் பெற்றது. இக்கோயில் தலத்தருவிற்கு 'விழல்' என்று பெயர். இதுவே பின்னர் (விழல் நகர்) விளநகர் என்றாயிற்று. (உசிரம் – விழல்). கபித்தன் என்னும் மன்னன் வழிபட்டுப் பிரமகத்திதோஷம் நீங்கப் பெற்ற தலம்.

இக்கோயிலில் மயூரநாத வள்ளல் மயிலாடுதுறையில் நடுவில் வீற்றிருக்க, கிழக்கே திருவிள நகரில் துறைகாட்டும் வள்ளல், தெற்கே பெருஞ்சேரியில் மொழிகாட்டும் வள்ளல், மேற்கே மூவலூரில் வழிகாட்டும் வள்ளல், வடக்கே உத்தர மயிலாடுதுறையில் கைகாட்டும் வள்ளல் (தட்சிணாமூர்த்தி) என நான்கு பக்கங்களில் இறைவன் வீற்றிருக்கிறார் என்பதாகத் தல புராணம் கூறுகிறது.

தஞ்சை நாயக்க மன்னர் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. கல்வெட்டில் இறைவன் 'துறைகாட்டும் தம்பிரானார், துறைநாட்டுவான்' என்னும் பெயர்களால் குறிக்கப்படுகின்றார். உத்தமச்சோழன் மனைவி இக்கோயிலின் அர்த்தசாமக் கட்டளைக்கு நிவந்தம் வைத்த செய்தியைக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. இக்கோயிலில் முதலாம் இராசராச சோழனின் சிற்பம் ஒன்றும் உள்ளது.

திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோயில்)

மயிலாடுதுறை தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் மயிலாடுதுறையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. 'சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் இத்தலம் 42–ஆவது தலமாகும். காவிரியின் கரையிலேயே அமைந்த சிறப்புடையதாகும். திருஞானசம்பந்தர் சுவாமிகளின் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் சுவாமிகளின் பதிகங்கள் இரண்டும் இத்தலத்து இறைவனைப் போற்றுகின்றன. இத்தலத்திற்கு இலக்குமிபுரி என்றும் பெயருண்டு. இந்திரன் நீராடி வழிபட்டு விருந்திராசுரனைக் கொல்ல வச்சிராயுதம் பெற்ற தலம். இதனால் இந்திரபுரி என்றும் கந்தபுரி என்றும் பெயர்களுள்ளது.

இறைவன் – சொர்ணபுரீஸ்வரர், தேவப்பிரியர், சுவர்ண லட்சுமீசர், செம்பொன்பள்ளியார் என்றும், இறைவி – மருவார்குழலி, புஷ்பாளகி, தாக்ஷாயணி, சுகுந்தகுந்தாளம்பிகை, சுகந்தவனநாயகி எனும் நாமங்களால் அழைக்கப்பெறுகின்றனர், தீர்த்தம் –சூரிய தீர்த்தம், காவிரி, தலமரம் – வன்னி, வில்வம். சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது. வசிட்டர், அகத்தியர், பிரமன், இந்திரன், குபேரன் வழிபட்ட தலமாகும். கோயிலுக்குப் பக்கத்தில் தீர்த்தம் உள்ளது. இத்தலம் தாக்ஷாயணிக்கு அருள் புரிந்ததும், வீரபத்திரர் தோன்றியதுமாகிய சிறப்பினையுடையது. இத்தலத்திற்கு தென்மேற்கே சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்பறியலூரில் தம் தந்தையான தக்கன் செய்த முறையற்ற வேள்வியைத் தடுக்கச் செல்லும் கோலத்தில் தல இறைவி மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார்.

இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியும், இறைவி சந்நிதி மேற்கு நோக்கியும் இருப்பதால் இறைவன் இறைவிக்கு ஞான உபதேசம் செய்யும் தலம் இது. நவக்கிரக தோஷத்திற்கு இத்தல வழிபாடு சிறந்த பரிகாரமாக இன்றும் சொல்லப்படுகிறது.

மற்ற கோயில்களில் சில நாட்கள் மட்டுமே சூரிய பூசை நடைபெறும். இங்கு ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் 7–ஆம் நாள் முதல் 18–ஆம் நாள் முடிய சூரிய ஒளி சுவாமி மீது படுகிறது. மொத்தம் 12 நாட்கள் விடியற்காலை சூரிய உதயத்தின்போது சூரிய பூஜை நடைபெறுகிறது. காலைக் கதிரவன் பொன்னிறக் கதிர்கள் மூலத்தான இறைவனின் திருமேனியில் பட்டுஒளிர்வது கண் கொள்ளா ஓர் அற்புதக்காட்சியாகும்.

இத்தலத்து இறைவியைப் போற்றி இவ்வூர்க் கவிஞர் தென்னவன் அவர்கள் 'அன்னை மருவாய் குழலி விருத்தமணி மாலை' என்னும் பெயரில் நூறு பாடல்கள் கொண்ட நூலையும், முடிகண்டநல்லூர் கவிஞர் ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் 'மருவார் குழலியம்மைப் பதிகம்' 'திரு இரட்டைமணி மாலை' ஆகிய நூல்களையும் இயற்றி வெளியிட்டுள்ளார்.

இக்கோயிலின் அமைப்பு முறை ஜேஷ்டாதேவியின் பிரதிஷ்டை முதலியவைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இக்கோயில் கி.பி. 879 – 907 வரை அரசாண்ட முதலாம் ஆதித்த சோழன் செய்த திருப்பணியாகக் கருத இடமுண்டு என்னும் செய்தி இவ்வாலய தல வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் சோழர் காலத்திய ஆறு கல்வெட்டுகள் உள்ளன. இவை மூன்றாம் குலோத்துங்க சோழன், ராஜாதிராஜ சோழ தேவர், தஞ்சை சரபோஜி மன்னர் காலத்தியவை. பாண்டிய மன்னன் வீரபாண்டியன் இக்கோயிலில் விநாயகர் சன்னதியை நிறுவியுள்ளான். அவனது புடைப்புச் சிற்பம் கல்வெட்டுடன் உள்ளது. சோழ மன்னனின் புடைப்புச் சிற்பம் முன்மண்டபத்தின் தெற்குச் சுவரில் இடம் பெற்றுள்ளது. முன்கோபுரம் மொட்டைக் கோபுரமாகவே உள்ளது. மூலவர் விமானம் பெரியதாகக் காட்சி தருகிறது. இக்கோயிலுக்கும் திருவிடைக்கழி கோயிலுக்கும் உள்ள தொடர்பு ஒரு கல்வெட்டில் உள்ளது.

ஆக்கூர்

ஆக்கம் + ஊர் = ஆக்கூர் என்று ஆகியுள்ளது, சோழர் காலத்துக்கு முன்பே இவ்வூர் உருவாக்கம் பெற்று விளங்கியுள்ளது. பல்லவர் கால மூத்த தேவி இங்கு கிராம தேவதையாக உள்ளது. முற்காலச் சோழர் கலையில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் உள்ளன.

அப்பரடிகள் தமது தேவாரத்தில் 'ஆக்கூர் தான்தோன்றி மாடமே' என்று போற்றிப் பதிகம் செய்துள்ளார். இவ்வூர் மயிலாடுதுறை – தரங்கம்பாடி பேருந்து சாலையில் உள்ளது. கோச்செங்கட்சோழனின் திருப்பணி பெற்ற தான்தோன்றி மாடக்கோயில் இதுவாகும். சிறப்புலிநாயனார் அவதரித்த பதி. கபிலதேவநாயனார் 11–ஆம் திருமுறையில் இத்தலத்தைப் பாடியுள்ளார், இறைவன் – தான்தோன்றீஸ்வரர், சுயம்புநாதர். இறைவி – கடகநேத்ரி, வாள் நெடுங்கண்ணி. தீர்த்தம் – குமுத தீர்த்தம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கிழக்கு ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுர வாயிலில் விநாயகர் காட்சி தருகிறார்.

மன்னன் ஒருவன் இறைவன் கட்டளைப்படி நாடொறும் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவளித்து வந்தான். இறைவனும் அவர்களுள் ஒருவராக வந்து உணவுண்டு அம்மன்னனுக்கு அருள் புரிந்தார். ஆகவே, இம்மூர்த்தி ஆயிரத்துள் ஒருவர் என்றும் போற்றப்படுவதாக கூறப்படுகின்றது.

இக்கோயிலில் சில கல்வெட்டுகள் உள்ளன. சோழ மன்னர்களில் மாடக்கோயில்கள் 78–னை கட்டித் தந்த கோப்பெருஞ் சிங்கனின் புடைப்புச் சிற்பம் மற்றும் கல்வெட்டுகள், விசயநகர பரம்பரையில் வீரகிருட்டின தேவராயர் காலத்திய கல்வெட்டுகளுமாக மொத்தம் ஆறு கல்வெட்டுகள் தெளிவாக உள்ளன. கல்வெட்டுகளில் இறைவன் திருத்தான்தோன்றி மாடமுடையான் என்னும் பெயரால் வழங்கப்படுகிறார். ஆக்கூர் சிவன் கோயில் மிகப்பழமை வாய்ந்தது. செங்கற் கோயிலாக இருந்ததை முழுவதும் கருங்கல் தளியாக மாற்றி அமைத்தவன் சோழன் கோப்பெருஞ்சிங்கன் ஆவான். தரைமட்டத்திலிருந்து நான்கு அடி உயரமுடைய கருங்கல் பதித்த பெரிய மேடை அமைத்து அதன்மேல் 50 அடி உயரமுடைய மூலவர் விமானம் கலைநயத்துடன் அமைத்துத் தந்துள்ளார். இக்கோயிலில் மட்டுமே இவ்வரசனது புடைப்புச் சிற்பம் நேர்த்தியாகக் காட்சியளிக்கிறது. இராசேந்திரசோழச் சதுர்வேதி மங்கலத்திற்கு உட்பட்ட ஊராக ஆக்கூர் இருந்துள்ளது. ஊர் அலுவல்களைப் பெருங்கி மக்கள் கவனித்து வந்தனர். இவர்கள் கூட்டப் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். திரிபுவன சக்கரவர்த்தி இராசதேவரின் பதினெட்டாம் ஆண்டு கல்வெட்டு இதனை தெளிவுறக் காட்டுகிறது.

இத்திருக்கோயிலின் பெருவிழா வைகாசி மாதத்தில் நடந்து வந்துள்ளது. விழாவின் முடிவில் பெருமான் திருநீராடுவதற்கு காவிரிக்கு எழுந்தருள்வது உண்டு. ஒரு சமயம் இறைவன் நீராடுவதற்குப் பெருவழி இன்மையால் புதிதாகப் பெருவழி அமைக்க கும்பஞாயிறு முதல் ஊர்க்காரியங்களைக் கவனிக்கும் கூட்டப் பெருமக்கள் ஏற்பாடு செய்ததை கல்வெட்டு வாயிலாக அறியமுடிகிறது.

அழகிய பல்லவ அரையராகிய வீரப்பிரதாபர், ஹொய்சாளர் களைச் சிறையில் அடைத்தும் பாண்டிய மன்னரிடம் கப்பம் வாங்கியும் காவிரித் தென்கரை வழியாகக் கிழக்கே சென்று பாடல் பெற்ற தலங்களை வணங்கியும், அவைகளுக்குப் பூசை செய்ய இறையிலி நிலங்கள் அளித்தும், பழுதுபட்ட திருக்கோயில்களைப் புதுப்பொலிவு பெறவும் செய்தார், இவ்வரசர் ஜெயங்கொண்ட சோழ வளநாட்டில் ஓர் ஊரில் தங்கி இருந்த போது, ஆக்கூர் மற்றும் சுற்றி உள்ள ஊர்களிலும் அதிக வரிச்சுமையால் குடிமக்கள் நிலத்தைப் பயிரிடாமல் இருந்தனர். பலர் ஊரை விட்டே வெளியேறிவிட்டனர் என்ற செய்தியை அறிந்து உடன் ஆக்கூர் முதலான ஊர் பெருமக்களையெல்லாம் அழைத்து வரிகளைக் குறைத்து நிலத்தைப் பயிரிடச் செய்தார். இச்செய்தி ஓர் கல்வெட்டில் தெரிய வருகிறது.

இவ்வூரின் கிழக்கில் ஸ்ரீராஜகோபாலசுவாமி கோயில் உள்ளது. இதுவும் சோழர் கலைப்பாணியில் நான்கு கல்வெட்டுகளுடன் காணப்படுகிறது. மற்றொரு பெருமாள் கோயில் சிற்பங்களும் முன்மண்டப மேடையில் காட்சி தருகின்றன.

திருக்கடவூர் மயானம் (திருமெய்ஞ்ஞானம்)

திருகடவூருக்கு நேர்கிழக்கில் 2 கி.மீ தொலைவில் 'திருமெய்ஞ்ஞானம்', 'திருமயானம்' எனும் ஊரும், தேவாரப் பாடல் பெற்ற பெரிய சிவன் கோயிலும் உள்ளது. சிவபெருமான் காலனை அழித்து, மீண்டும் உயிர்ப்பித்து, அவருக்குப் மீண்டும் அவர் தொழிலை அருளிய தலம். பிரமன் வழிபட்ட தலம். இறைவன் – பிரமபுரீசுவரர். இறைவி– மலர்க்குழல் மின்னம்மை, அம்மலக்குஜநாயகி, பழைய நூலில் 'அமலக்குய மின்னம்மை' என்று குறிக்கப்பட்டுள்ளது. தீர்த்தம் – காசி தீர்த்தம்.

இத்தீர்த்தத்திலிருந்துதான் நாடொறும் திருக்கடவூர் பெருமானுக்கு திருமஞ்சனத்திற்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகின்றது. 'கடவூர் தீர்த்தக் கிணறு' எனப்படும் 'காசி தீர்த்தம்' கோயிலுக்குத் தென்புறத்தில், சற்று தொலைவில் வயல்களின் மத்தியில் நாற்புறச் சுவர்கள் சூழ நடுவில் கிணறு வடிவில் உள்ளது. மார்க்கண்டேயருக்காக, பங்குனி மாதம், அசுவினி நட்சத்திரத்தில் கங்கையானது, இத்தீர்த்தமாக வந்ததாகவும், ஆதலின் இத்தீர்த்தம் 'அசுவினி தீர்த்தம்' என வழங்கப்படுவதாகவும் வரலாறு. இத்தலப் பதிகம் சலவைக் கல்லிற் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது. கூற்றுவனாகிய எமனை அழித்த இடமாதலின் மயானம் எனப்பட்டது. பெரிய கற்றளிகளுள் இதுவும் ஒன்று. முழுதும் சோழர் கலையில் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்றது. சோழர்காலக் கல்வெட்டுகள் உள்ளன.

திருவேட்டக்குடி

இக்கோயில் காரைக்காலுக்கு பக்கத்தில் தரங்கம்பாடி – நாகப்பட்டினம் சாலையில் புதுவை எல்லையில் உள்ள வரிச்சிக்குடி கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அருச்சுனன் வந்து தவஞ்செய்ய, இறைவன் வேட வடிவத்தில் வெளிப்பட்டு அருள் செய்ததாகப் புராண வரலாறு சொல்கிறது. கோயில் அமைந்துள்ள பகுதி 'கோயில் மேடு' என்றழைக்கப்படுகிறது.

இறைவன் – சுந்தரேஸ்வரர், திருமேனியழகர். இறைவி – சௌந்தரநாயகி, சாந்த நாயகி. தீர்த்தம் – தேவதீர்த்தம். தலமரம் – புன்னை. சம்பந்தர் பாடல் பெற்ற பதி. கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் நம்மை வரவேற்கிறது. மூலவர் சிவலிங்கத் திருமேனி. கிழக்கு நோக்கிய சந்நிதி. சற்று உயரமான மூர்த்தி. வேடனாக வந்த தல மூர்த்தி, வேடுவச்சியாக வந்த அம்பாள் ஆகிய (வேடரூபர், வேடநாயகி) திருமேனிகள் சிறப்பானவை. மாசி மகத்தன்று திருமேனியழகரான சுவாமி வேடமூர்த்தியாக காட்சி தந்து கடல் நீராடுகிறார். இது கடலாடுவிழா என்று சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இத்தலத்தில் உமாதேவி மீனவர் குலத்தில் வந்து அவதரித்ததாகப் புராண வரலாறு கூறுவதால், இக்கடலாடு விழாவை கடலோர ஊர்களான அக்கரைப்பேட்டை, மண்டபத்தூர், காளிகுப்பம் ஆகிய ஊர்களில் வாழும் மீனவர்கள் ஏற்று நடத்துகிறார்கள்.

திருத்தெளிச்சேரி (காரைக் கோயில்பத்து)

காரைக்கால் நகரில் ஒரு பகுதியில் தற்போது கோவில் பத்து என்று வழங்கப்படும் சிறிய கோயில் உள்ளது. இதற்கு 'சமீவனம்' என்ற பெயர் உண்டு.

இறைவன் – பார்த்தீஸ்வரர், பார்ப்பதீஸ்வரர், சமீவனேஸ்வரர். இறைவி – பார்வதியம்மை, சத்தியம்மை, சுயம்வரதபஸ்வினி. தலமரம் – வில்வம், வன்னி. தலவிநாயகர் – சம்பந்த விநாயகர். சம்பந்தர் பாடல் பெற்றது. இதற்கு பிரமவனம், முத்திவனம் என்றும் பெயர்களுண்டு. பிரமன் வழிபட்ட தலம். இக்கோயில் அழகான கற்கோயில். ஐந்து நிலைகள் கொண்ட பெரிய ராஜகோபுரம். மேற்கு நோக்கிய வாயில்.

இங்குள்ள தீர்த்தங்கள் –சூரியபுஷ்கரணி, குகதீர்த்தம், தவத் தீர்த்தம். இங்குள்ள இலிங்க மூர்த்தி, பிரமன் வழிபட்டதால், மகாலிங்கம், பிரம்மலிங்கம் என்றும் அம்பரீஷனால் வழிபடப்பட்டதால் ராஜலிங்கம் என்றும், சூரியனும் வழிபட்டதாதலின் பாஸ்கரலிங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

தருமபுரம்

திருநள்ளாற்றிலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்து சாலையில் 2 கி.மீ. சென்று வலதுபுறம் மாதாகோயில் உள்ள இடத்தில், வலப்புறமாகப் பிரியும் பாதையில் சென்றால் கோயிலையடையலாம். தருமையாதீனக் கோயில், மார்க்கண்டேயரின் உயிரைப் பறித்த பிழை நீங்க எமன் (தருமன்) வழிபட்ட பதியாதலின் தருமபுரம் என்று பெயர் பெற்றது. திருஞானசம்பந்தரின் யாழ்முரிப் பதிகம் பாடப்பெற்ற சிறப்புடையது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரத் தலம். இத்தலத்தில்தான் திருஞானசம்பந்தரின் இசை, திருநீலகண்ட யாழ்பாணரின் யாழிசையில் அடங்காமையை இறைவன் வெளிப்படுத்தினார். யாழில் அமைத்துப் பாடமுடியாத இசையமைப்பாவாதலின் 'யாழ்முரி' என்ற பெயர் பெற்றது. நான்முகன் வழிபட்ட பதி. இதற்கு அண்மையில் 'தக்களூர்' என்னும் வைப்புத் தலம் உள்ளது.

இறைவன் – தருமபுரீஸ்வரர், யாழ்முரிநாதர். இறைவி – மதுரமின்னம்மை தேனமிர்தவல்லி. தலமரம் – வாழை. தீர்த்தம் – தரும தீர்த்தம், பிரம்ம தீர்த்தம். சம்பந்தர் பாடல் பெற்றது. யாழ்முரிநாதர், எமன் உற்சவமூர்த்திகள் சிறப்பானவை.

திருமருகல்

மயிலாடுதுறையிலிருந்து சன்னாநல்லூர் வழியாக நாகப்பட்டினம் செல்லும் வழியில் ஆற்றின் கரையில் திருமருகல் எனும் தலம் அமைந்துள்ளது. மருகல் என்பது ஒரு வகை வாழை. இது 'கல்வாழை' என்றும் சொல்லப்படுகிறது. தலமரமாக வாழை இருப்தால் திருமருகல் என்ற பெயர் பெற்றது. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. பாம்பு கடித்து இறந்த செட்டி மகனை, ஞானசம்பந்தர் 'சடையாய் எனுமால்' பதிகம் பாடி எழுப்பியருளிய தலம். இவ்வரலாற்றைச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில், ஞானசம்பந்தர் வரலாற்றில் சிறப்பாகப் பாடியுள்ளார். மேலும் இவை சுதைச் சிற்பமாக இராசகோபுரத்தில் வடிக்கப்பட்டுள்ளது.

இறைவன் மாணிக்கவண்ணர், ரத்னகிரீஸ்வரர். இறைவி வண்டுவார் குழலி, ஆமோதாளகநாயகி. தீர்த்தம் இலக்குமித் தீர்த்தம் அல்லது மாணிக்கத் தீர்த்தம். சம்பந்தர், அப்பரால் பாடப்பெற்றது. ஐந்து நிலைகளுடன் கோபுரம் திகழ்கின்றது. மூலவர் – சிவலிங்கத் திருமேனி சுயம்பு மூர்த்தி எனப்படுகிறது. கிழக்கு நோக்கியது. எடுப்பான தோற்றம் –சதுர ஆவுடையார் உள்ளது.

அம்பாள் சன்னிதிக்கு எதிரில் உள்ள தெற்கு வீதியின் கோடியில் 'விடந்தீர்த்த பிள்ளையார்' என்ற பெயருடன் விளங்குகிறார். இதனால் இன்றும் இவ்வீதியில் பாம்பைக் காண்பது அரிது என்றும், பாம்பு கடிப்பது இல்லை, கடித்து இறப்பதும் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. சித்திரைப் பெருவிழாவில் ஆறாம் நாள் திருவிழா விடந்தீர்த்த ஐதீகமாகவும், ஏழாம் நாள் விழா செட்டி மகன், செட்டிப் பெண் திருக்கல்யாணமாகவும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அகத்தியன் பள்ளி (அகஸ்தியம் பள்ளி)

வேதாரண்யத்தில் இருந்து கோடியக்கரை செல்லும் வழியில் 1½ கி.மீ. தொலைவில் அகஸ்தியம்பள்ளி உள்ளது. இத்திருக் கோயிலை இங்குள்ள மக்கள் அகஸ்தியர் கோயில் என்றே கூறுகின்றனர், அகஸ்தியர் இறைவனின் திருமணக் கோலங்காணத் தவஞ்செய்த பதி, எமன் வழிபட்ட சிறப்புடையது, கிழக்கு நோக்கிய கோயில் நகரத்தார் திருப்பணி. இறைவன் அகத்தீஸ்வரர், இறைவி மங்கைநாயகி. தலமரம்–வன்னி, தீர்த்தம்–அகத்திய தீர்த்தம், அக்னி தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது, சுவாமி சந்நிதியில் உள்ள

குளம் அக்னி புஷ்கரணி எனப்படுகிறது, ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. இராசராசன், மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

கோடிக்கரை– (கோடியக்கரை–குழகர்கோயில்)

வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரைக்குப் பேருந்து செல்கிறது. இறைவன்–அமுதகடேஸ்வரர். குழகேஸ்வரர். இறைவி–அஞ்சனாக்ஷீ மைத்தடங்கண்ணி, தலமரம் குராமரம். தீர்த்தம் அக்னி தீர்த்தம், அமுத கிணறு உள்ளன. சுந்தரர் பாடல் பெற்றது.

திருபாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமுதகலசத்தை வாயு, தேவருலகிற்கு எடுத்து சென்றபோது அமுதம் சிதறிக் கீழே விழ, அது சிவலிங்கமாயிற்று என்பது வரலாறு. அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற பதி, சுவேதமுனிவரின் மகன் பிரம்மன், சித்தர்கள், நாரதர், இந்திரன், குழகமுனிவர் ஆகியோர் வழிபட்ட தலம். உயர்ந்தோங்கிய ராஜகோபுரம். இத்தலம் கோளிலித் தலமாதலின் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன.

இங்கிருந்து 1 ½ கி.மீ. தொலைவில் ஆதிசேது எனப்படும் கோடியக்கரை உள்ளது. கடல் தீர்த்தம், தக்ஷிணாயன, உத்தராயண புண்ணிய காலங்களில் இங்கு நீராடுதல் விசேஷம், கடற்கரையில் உள்ள சித்தர் கோயில் சிறப்பான இடம். சித்தர்கள் இங்கு வாழ்வதாக இன்னமும் நம்புகின்றனர். குழகர் கோயில் உள்ள இடம் கோடியக்காடு, கடல் உள்ள இடம் கோடியக்கரை என்று சொல்லப்படுகிறது, சேரமான்பெருமாள் நாயனாருடன் வந்த சுந்தரர், கோயில் கடலருகே தனித்திருப்பதைக் கண்டு உள்ளம் வருந்தி பாடியதாக வரலாறு.

ஸ்ரீராமர் பாதம்

வேதாரண்யத்திற்கும் கோடியக்கரைக்கும் இடையில் சாலையோரம் – காடுகளுக்கு இடையில் பெரிய மேட்டுப்பகுதியும் அதில் தனி மேடையும் அதில் ஸ்ரீராமர் பாதமும் உள்ள தனிச்சன்னதி காணப்படுகிறது. இராமர் இலங்கை செல்லும் முன்பு இங்கு மேட்டுப்பகுதியில் ஏறி நின்று பார்த்ததாகக் கூறுகின்றனர்.

கிடாரங்கொண்டான் புஞ்சை

நாகை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள செம்பனார் கோயிலில் இருந்து திருவெண்காடு செல்லும் வழியில் 5 கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.

சீர்காழியில் உமாதேவியிடம் ஞானப்பால் அருந்தி, திருக்கோலக்காவில் ஈசனிடம் பொற்றாளம் பெற்ற திருஞானசம்பந்தர், திருநனிப்பள்ளி அடியார்களின் அழைப்பிற்கு இணங்கி, இறைவன் மீது பதிகம் பாடி பாலையாக இருந்த நிலத்தினை நெய்தல் நிலமாய் மாற்றி, மீண்டும் அந்த நிலத்தை வளமிகு மருத நிலமாக மாற்றினார் என்பது வரலாறு.

சமணர்களின் பள்ளிகள் இங்கு மிகுதியாகக் காணப்பட்டதால் நனிப்பள்ளி எனப் பெயர் பெற்ற இத்தலம் தற்போது கிடாரங் கொண்டான் கிராமத்தில் புஞ்சை என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தரது தாயார் பகவதியம்மை பிறந்த திருத்தலமாகும். திருஞானசம்பந்தர் மட்டுமல்லாது அப்பரும் சுந்தரரும் இத்தலத்து இறைவன் மீது தேவாரப் பதிகம் பாடிப் போற்றியுள்ளனர்.

சோழப் பேரரசரான ராஜேந்திரசோழன்; தந்தை ராஜராஜனின் ராஜராஜேச்சுரம் என்னும் தஞ்சை பிரகதீஸ்வரம் போன்று கங்கை கொண்ட சோழீச்சுரத்தை அரிய சிற்ப நுணுக்கங்களோடு படைத்தான். அதோடு இன்றைய மலேசிய நாட்டிலுள்ள பண்டைய கெடா என்ற நகரத்தை வென்றதன் நினைவாக கடாரம் கொண்ட சோழீச்சுரம் என்ற ஊரையும் சோழ நாட்டினில் உருவாக்கினான். இதனால் மாமன்னன் ராஜேந்திர சோழனுக்கு 'பூர்வதேசமும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கப்பெற்றது. கடாரங்கொண்டான் என்பதே மருவி கிடாரங்கொண்டான் என ஆகிவிட்டது.

அதியற்புத சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட பிரமிக்க வைக்கும் அகன்ற பிரமாண்ட விமானத்தைக் கொண்டு தனித்துவப் புகழுடன் விளங்குகின்றது இந்த நனிப்பள்ளி. நற்றுணை ஈசுவரர் சிவாலயமும் இங்கு காணப் பெறும் சிற்பங்கள் ஒவ்வொன்றும் சோழர்களின் கலைத்திறத்தை பறைசாற்றுகின்றன.

அக்காலத்தில் திருக்கோயில்களில் கட்டட வேலைக்கு ஒப்பந்தம் செய்பவர்களான ஸ்தபதிகள் (1) திருவலஞ்சுழி பலகணி, (2) ஆவுடையார் கோயில் கொடுங்கை, (3) திருவீழிமிழலை வெளவால் நெத்தி மண்டபம், 4) புஞ்சை நனிப்பள்ளி கோடிவட்டம் (விமானத்தை அகலப்படுத்தும் அமைப்பு) போலன்றிக் கட்டுவோம் என ஒப்பந்தம் செய்வார்களாம்.

ஊரின் நடுவே ஓங்கிய மதில்களுடன் ஒய்யாரமாய் ஒளிர்கின்றது நற்றுணையீசுவரர் திருக்கோயில். சாலையை ஒட்டி, திருக்குளமும், அடுத்தாற்போல் கோயிலும் அமைந்துள்ளது. ராஜகோபுரம் இல்லை. முதல் வாயிலின் மேல் பஞ்சமூர்த்திகளின் தரிசனம். முன்னர் கொடிமரம், நந்தி, பலிபீடம் ஆகியன உள்ளன.

கருவறையைச் சுற்றிலும் வெளியே அடித்தளத்தில் 64 புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிற்பங்களை திருப்பரசலூர், லால்குடி, புள்ளமங்கை, கண்டியூர், குடந்தை கும்பேஸ்வரர் கோயில்களிலும் காணலாம். இவை முதலாம் ராஜராஜன் காலத்திற்கு முற்பட்டவையாகும். இதனை இரண்டாம் பராந்தக சோழன் கட்டினான் என்பது தெரிகிறது.

நனிப்பள்ளி சிற்றுருவச் சிற்பங்களில் பாரதம், ராமாயணம், திருவிளையாடல் புராணம், தேவி பாகவதம் ஆகிய இதிகாச புராணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. துரும்பு நுழையும் அளவே உள்ள யாளியின் பல்லிடுக்கு அபார படைப்பு. மிக நுணுக்கமாக சிற்பிகள் இச்சிற்றுருவங்களை வடித்துள்ள அற்புதங்களைக் கண்டு மகிழலாம். இத்தலத்தின் விருட்சம் செண்பகம் மற்றும் புன்னை மரங்களாகும். தீர்த்தம் சொர்ண தீர்த்தம்.

முதலாம் ராஜேந்திரச் சோழனது வெற்றிகள் மற்றும் கிருஷ்ண தேவராயரின் மெய்கீர்த்திகள் அடங்கிய 18 கல்வெட்டுகள் இவ்வாலயத்தில் உள்ளன. அதில் இத்தல ஈசனது நாமம் 'திருநனிப்பள்ளி உடையார்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இக்கோயில் தெற்கு மதில் சுவரில் இரண்டாம் இராசராச சோழனது திருவுருவம் நின்ற நிலையில் உள்ளது. கோட்டத்தில் உள்ள இறை உருவங்கள் கலையழகும், நேர்த்தியும் மிக்கவை. வரலாற்று ஆர்வலர்களுக்கும், பக்தர்களுக்கும் இக்கோயில் காணவேண்டிய கருவூலமாகும்.

மேலைத் திருமணஞ்சேரி

கும்பகோணம் – மயிலாடுதுறை பேருந்து சாலையில் உள்ள குத்தாலத்திலிருந்து வடக்கே 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. ஈசன் குடிகொண்டு அருள்செய்யும் திருத்தலங்களுள் மேலைத் திருமணஞ்சேரி ஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. இங்கே இரண்டு திருமணஞ்சேரிகள் உண்டு. ஒன்று கீழைத் திருமணஞ்சேரி மற்றொன்று எதிர்கொள்பாடி என்னும் இந்த மேலைத் திருமணஞ்சேரி ஆகும்.

சுந்தரர் இத்தலத்தின் மீது ஒரு பதிகம் பாடிப் போற்றியுள்ளார். அவற்றுள் இவ்வுலக வாழ்க்கையின் மாயை நிலையை நன்கு எடுத்துக் கூறியுள்ளார். எதிர்கொள்பாடி ஈசன் எப்பொருளும் தருவார் எனச் சேக்கிழாரும், இத்தலத்துப் பெருமானைப் புகழ்ந்துள்ளார்.

ஐராவதம் பூஜித்ததால் இத்தலநாதன் ஐராவதேஸ்வரர் என்று போற்றப்படுகின்றார். கௌதுபந்தன் க்ஷேத்திரம் என்று போற்றப்படும் இந்த தலம் இரண்டாம் குலோத்துங்கச் சோழனால் கட்டப் பெற்றதாகும். அழகிய மூன்று நிலை ராஜகோபுரம், உள்ளே மூடுதளமாக அமையப் பெற்ற முக மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகிய அமைப்பினில் மேற்கு நோக்கிய சுவாமி சன்னதியும், மகாமண்டபத்தோடு ஒட்டிய தெற்கு நோக்கிய அம்பாள் சன்னதியும் அமையப் பெற்றுள்ளது. கருவறையுள் அற்புத லிங்கத் திருமேனி கொண்டு அருள்பாலிக்கின்றார் ஐராவதேஸ்வரர். அம்பிகையாக இங்கு மலர்குழல்மாது என்னும் சுகந்த குந்தலாம்பாள் கருணை பொழிகின்றாள். இத்தலப் பெருமானை ஐராவதம் எனும் யானை பூஜிக்கும் ஓவியத்தையும் இங்கே காணலாம். இத்தலத்தின் தீர்த்தமாக ஐராவத தீர்த்தமும், தல விருட்சமாக வில்வமும் விளங்குகிறது.

திருமயேந்திரப்பள்ளி (மகேந்திரப்பள்ளி)

பண்டைநாளில் இருந்த பெயர் கோயிலடிப் பாளையம் என்பது. இன்று மக்கள் வழக்கில் மகேந்திரப்பள்ளி என்று வழங்குகிறது. ஞானசம்பந்தரின் பாடலில் மயேந்திரப் பள்ளி என்றே வருகிறது, இத்தலத்திற்கு 2 கி.மீ. தொலைவில் கடல் உள்ளது. சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. சிவன் கோயில் மற்றும் விஜயகோதண்டராமர் கோயில், அம்மன் கோயில்கள் உள்ள பேரூர் இதுவாகும்.

இறைவன் திருமேனி அழகர், சோமசுந்தரர், இறைவி– வடிவாம்பாள், வடிவாம்பிகை. வடிவம்மை. தலமரம்–கண்ட மரம், தாழை, ஆகியன. தீர்த்தம்– மயேந்திரதீர்த்தம் கோயில் எதிரில் உள்ளது, சம்பந்தரால் பாடல் பெற்றது. பழமையான கோயில். கிழக்கு நோக்கிய வாயில் மூன்று நிலைகளையுடைய சிறிய ராஜகோபுரம், வெளிப்பிரகாரத்தில் விநாயகர், காசிவிசுவநாதர், திருமால் தேவியருடன், சிவலிங்கம், பைரவர், சூரியன், சந்திரன் சந்நிதிகள் உள்ளன. வலப்புறம் அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம்.

ஆங்கிலேயர் ஆட்சியில், இராபர்ட் கிளைவ் என்பவர் இங்கு மன்னன் ஒருவன் ஆண்டு வந்த பகுதியை குண்டு வைத்து தகர்த்ததாகவும், அப்பகுதி இன்றும் தீவுக்கோட்டை என்று வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது, இவ்விடம் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒரு சில வீடுகள் உள்ள இங்குப் பழமையான கொடிக்கம்பம், கொடிமேடை முதலிய சின்னங்கள் உள்ளன, இங்கு மிக அழகான மூர்த்தத்தையுடைய விஜயகோதண்ட ராமசாமிப் பெருமாள் கோயில் உள்ளது, இத்தீவுக்கோட்டையில் கண்டெடுக்கப் பட்ட நடராசர் திருமேனிதான் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கும், தீவுக் கோட்டை நடராசருக்கும் தனித்தனியே அரசால் மோகினிப் பணம் தரப்பட்டு வருகின்றது. இவ்வூரில் வழிப்போக்கர்கள் தங்குவதற்கு எவ்வித வசதியும் இல்லை. ஆண்டுதோறும் இன்றும் பங்குனித் திங்களில் ஒரு வாரம் சூரிய ஒளி இறைவன்மீது படுகிறது, இதைச் சூரிய வழிபாடாகக் கொண்டாடுகின்றனர்.

தென்திருமுல்லை வாயில் (திருமுல்லைவாசல்)

சீர்காழியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் திருமுல்லைவாசல் உள்ளது. (திருமுல்லைவாயில் என்னும் பெயருடைய இருதலங்களுள் ஒன்று இஃது. மற்றது வடதிருமுல்லைவாயில் – சென்னைக்குப் பக்கத்தில் உள்ளது.)

சோழ மன்னனின் பிரமகத்தி தோஷம் நீங்கிய தலம், சோழ மன்னனின் குதிரையின் கால்களை முல்லைக் கொடி சுற்றிக் கொள்ள, அதை மன்னன் வெட்டியபோது ரத்தம் சிதற, தோண்டிப் பார்க்கையில் லிங்கம் வெளிப்பட்டது. மன்னன் தன்தவறுணர்ந்து தன் கழுத்தை அறுக்க முயல்கையில் இறைவன் ரிஷபாரூடராய்க் காட்சி தந்ததாகவும், இதனால் சிவலிங்கத்திருமேனியில் பாணத்தில் இரு வெட்டுத் தழும்புகள் இருப்பதாகவும் தல வரலாறு கூறுகிறது.

இறைவன் –யூதிகா பரமேஸ்வரர், முல்லைவனேஸ்வரர், முல்லைவனநாதர், இறைவி–சத்யானந்த சௌந்தரி, கோதையம்மை, தலமரம்–முல்லை, தீர்த்தம்–சக்கர தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது, தருமையாதீனத்திற்குட்பட்ட திருக்கோயில், கிழக்கு நோக்கிய சந்நிதி, ராஜகோபுரமில்லை. கற்பக விநாயகர், விஷ்ணு, ஷேத்ரலிங்கம், பாலசுப்பிரமணியர், இலக்குமி முதலிய சந்நிதிகள் உள்ளன, அம்பாள்–அழகான திருமேனி, அடுத்து நவக்கிரக சந்நிதி,

வலம் முடித்துப் படிகளேறினால் முல்லை வனநாதர் சந்நிதி–நேரே மூலவர் தரிசனம், மூர்த்தி சுயம்புத் திருமேனி. இத்தலத்திற்கு வடுகநாத தேசிகர் பாடியுள்ள தலபுராணம் உள்ளது.

திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)

திருவெண்காடு சீர்காழிச்சாலையில் உள்ள 'மங்கைமடம்' என்ற ஊரை அடைந்து, அங்கிருந்து திருநகரி போகும் சாலையில் சென்று, 'கோனையாம்பட்டினம்' என்று வழிகாட்டி உள்ள இடத்தில் அது காட்டும் பாதையில் (வலப்புறமாக) சென்றால் அன்னப்பன் பேட்டையை அடையலாம்.

பராசர முனிவர் வழிபட்ட தலம். இறைவன்–சுந்தரேஸ்வரர். இறைவி–சுந்தராம்பாள், அழகம்மை. தீர்த்தம்– சந்திர தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கோயிலுக்கு எதிரில் குளம் உள்ளது.

முகப்பு வாயிலைக் கடந்து உள் சென்றால் பிரகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வில்வநாதர், அகிலாண்டேசுவரி, மகாலட்சுமி, சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள இடத்தில் பைரவர், சனீஸ்வரர், விநாயகர், கைலாசநாதர், பராசரர், பத்திரகாளி முதலிய சிற்பங்கள் வரிசையாக காட்சி தருகின்றன.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியுடன் 1996–இல் மகா குடமுழுக்கு விழாவும் நடைபெற்றுள்ளது. இது குறித்த கல்வெட்டு கோயிலின் நுழைவு வாயிலில் பதிக்கப்பட்டுள்ளது. சங்ககால பூம்புகார் பெருநகரத்திற்குட்பட்டதும், தொன்மையானதும் கடற்கரையோரம் அமைந்துள்ள ஊர்தான் கலிக்காமூர் என்றழைக்கப்பட்டு வருகிறது.

கீழைத்திருக்காட்டுப் பள்ளி (ஆரண்யேசுரர் கோயில்)

திருவெண்காட்டிலிருந்து இளையமுதுகூடம் செல்லும் சாலையில் 1½ கி.மீ. தொலைவில் கீழைத்திருக்காட்டுப்பள்ளி உள்ளது. விருத்திராசுரனைக் கொன்ற பழிநீங்க இந்திரன் வழிபட்ட தலம்.

இறைவன் ஆரண்யசுந்தரேஸ்வரர். இறைவி அகிலாண்ட நாயகி, தீர்த்தம் – அமிர்த தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கோயிலுக்குள் நுழைந்ததும் பிரம்மேசர், முனியீசர் என்ற பெயரில் இரு சிவலிங்கங்கள் உள்ளன. அடுத்து, சுப்பிரமணியர், வைரவர், சூரியன்

சந்நிதிகள் உள்ளன. கருவறைச் சுவரில் வெளிப்புறத்தில் மன்னன் ஒருவன் சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற சிற்பமுள்ளது. விநாயகர் சந்நிதி நண்டு வழிபட்ட பெருமையுடையது.

வலம் முடிந்து வாயில் நுழைந்தால் மண்டபத்தின் தலப்பதிகக் கல்வெட்டுகள் உள்ளன. மேற்கு நோக்கிய சுவாமி சந்நிதியும் இடப்பால் அம்பாள் சந்நிதியும் ஒருசேரத் தரிசிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன.

திருக்குருகாவூர்

சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்ற சிறப்புடையது. சீர்காழியிலிருந்து பேருந்து வசதியுள்ளது. தலயாத்திரையின்போது பசியோடிருந்த சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும் நீரும் தந்தருள் செய்து பசிபோக்கிய தலம். சீர்காழியிலிருந்து தென் திருமுல்லைவாயில் செல்லும் சாலையில் 6 கி.மீ. தொலைவில் வடகால் என்னும் ஊரில் சாலையில் கருகாவூருக்குச் செல்லும் பாதை பிரிகின்றது. அப்பாதையில் சென்றால் 1 கி.மீ. தொலைவில் குருகாவூரை அடையலாம்.

இறைவன்–சுவேத ரிஷபேஸ்வரர், வெள்ளடையீஸ்வரர், வெள்ளடைநாதர், இறைவி–நீலோத்பல விசாலாட்சி, காவியங்கண்ணி. தீர்த்தம்–பால்கிணறு. கோயிலுக்கு வெளியே தனிச்சுற்று மதிலுடன் உள்ளது. மைதானத்தில் அமாவாசை நாளில் இறைவன் எழுந்தருளி இங்கு தீர்த்தம் கொடுப்பது சிறப்பானது.சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.கோபுரமில்லை. முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. வெளிச் சுற்றில், விநாயகர், முருகன், அகத்தியர், சூரியன்,மாரியம்மன் சந்நிதிகள் உள்ளன. முன்மண்டபத்தில் ஆறுமுகர் சந்நிதியும், நால்வர் சந்நிதிகளும் உள்ளன. உள் மண்டபத்தில் நடராச சபை. நேரே மூலவர் தரிசனம். சதுர ஆவுடையார்– சிறிய பாணம் கொண்ட சிவலிங்கத் திருமேனி உடையது.

சுந்தரருக்கு இறைவன் உணவும் நீரும் தந்து பசியைப் போக்கிய அற்புதம் நிகழ்ந்த இடம் 'வரிசைப்பற்று' என்றும் 'இடமணல்' என்றும் மக்களால் சொல்லப்படுகிறது. அவ்விடம் இங்கிருந்து தென் திருமுல்லைவாயிலுக்குப் போகும் வழியில் 1½ கி.மீ. தூரத்தில் உள்ளது. அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்றும் உள்ளது.

கட்டமுது தந்த விழா சித்திரைப் பௌர்ணமியில் நடைபெறுகிறது. தைப்பூச நாளில் பஞ்சமூர்த்தி புறப்பாடு சிறப்பாக நடக்கிறது. முதலாம் குலோத்துங்கன், முதலாம் இராசேந்திரன், விக்கிர சோழன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுகளில் இத்தலத்து இறைவன் பெயர் (1) வெள்ளடை மகாதேவர் (2) குருகாவூர் வெள்ளடையப்பன் எனக் குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டுகள் கோயிலுக்கு நிவந்தங்கள் ஏற்படுத்திய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

திருக்கோலக்கா

சீர்காழிக்குப் பக்கத்தில் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. பெரிய கோயில் திருத்தாளமுடையார் கோயில் என்றழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தரின் யாத்திரையில் இதுவே முதல் தலம். தனது இரு கரங்களால் கைகொட்டிப் பாடிய திருஞானசம்பந்தருக்கு இறைவன், திருவைந்தெழுந்து பொறித்த பொன் தாளத்தையருள, அதற்கு தெய்வீக ஓசையை இறைவி தந்து அருள் செய்த தலம்.

இறைவன்–சப்தபுரீஸ்வரர், தாளேஸ்வரர், திருத்தாள முடையார். இறைவி – கூஷ்தானிப்ரதாம்பாள், ஓசை கொடுத்த நாயகி. தல மரம் – கொன்றை, தீர்த்தம் – ஆனந்த தீர்த்தம். கோயிலின் எதிரில் உள்ளது. அகத்தியர், கண்வரிஷி முதலியோர் வழிபட்டது. திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

கோயில் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. எதிரில் திருக்குளம் ஆனந்த தீர்த்தம். முகப்பு வாயிலின் மேற்புறத்தில் வண்ணச் சுதையில் ரிஷபாரூடர் தரிசனம். உள் நுழைந்ததும் வலப்பால் வாகன மண்டபம். நால்வர், அதிகார நந்தி சந்நிதிகள் உள்ளன. பிரகாரத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, சனிபகவான், பைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன. மூலவர் தரிசனம் – கம்பீரமான இலிங்கத் திருமேனி, அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது. நின்ற திருமேனி, ஞானசம்பந்தர் பொன் தாளத்தை இரு கைகளிலும் ஏந்தி நிற்கும் உற்சவத் திருமேனி தரிசிக்கத்தக்கது. கோஷ்டமூர்த்தங் களாக வினாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

பிற்காலத்தில் இப்பகுதியில் தன் ஊமை மகன் பேசும் ஆற்றலைப் பெற வேண்டும் என்று, பிரார்த்தித்துக் கொண்ட தாய்

ஒருத்தி, அவ்வாறே இறையருளால் தன் மகன் பேசும் வல்லமை பெற, மகிழ்ந்து கோயிலுக்குத் தன் காணிக்கையாகச் செய்து தந்துள்ள பொற்றாளம் கோயிலில் உள்ளது.

திருக்கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)

சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களுள் இதுவும் ஒன்றாகும். வைத்தீஸ்வரன் கோயில் – மயிலாடுதுறை பேருந்துப் பாதையில் 'பாகசாலை' என்னும் இடத்தில் இடபக்கமாக 3 கி.மீ. சென்றால் கண்ணாயிரமுடையார் கோயில்' என்னும் திருக்கண்ணார் கோயிலை அடையலாம்.

இறைவன் கண்ணாயிரமுடையார், கண்ணாயிரநாதர், சஹஸ்ரநேத்ரேஸ்வரர். இறைவி முருகுளர்கோதை, சுகந்த குந்தளாம்பிகை. தலமரம்–சரக்கொன்றை. தீர்த்தம்–இந்திர தீர்த்தம். இத்தலம் திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. ராஜகோபுரமில்லை, கட்டைக்கோபுர வாயிலின் முகப்பின்மேல் ரிஷபாரூடர், விநாயகர், வள்ளி தெய்வானை உடனாகிய சுப்பிரமணியர் உருவங்கள் வண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது. சுயம்புத் திருமேனி மூலலிங்கம்– சற்று உயரமாக உள்ளது. பெயருக்கேற்பத் திருமேனி முழுவதிலும் கண்கள் போன்று பள்ளம் பள்ளமாக உள்ளன, இந்திரனின் சாபம் இங்கு நீங்கியதாக ஐதீகம்.

திருக்கடைமுடி (கீழையூர், கீழூர்)

கீழையூர் என்பது ஏழு ஊர்கள் சேர்ந்து மிகப்பெரிய ஊர். இதனால் இதற்கு ஏழூர் என்றும் பெயர் வழங்குகிறது. திருச்சென்னம்பூண்டி என்னும் ஊரே கல்வெட்டின்படி கடைமுடி என்பர் ஆய்வாளர்.

இறைவன்–கடைமுடிநாதர், அந்திசம்பரகூடிணீஸ்வரர், இறைவி அபிராமி. தலமரம் கிளுவை, தீர்த்தம் கருணாதீர்த்தம், பிரமன், கண்வ மகரிஷி ஆகியோர் வழிபட்ட தலம். காவிரி இங்கு வடக்கு முகமாக வந்து மேற்காக ஓடுவது சிறப்பாகச் சொல்லப்படுகிறது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. குளக்கரையில் விநாயகர் உள்ளார். மேற்கு நோக்கிய சந்நிதி. முகப்பு வாயிலைக் கடந்தால் பிரகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர் சந்நிதிகளும், முன்மண்டபத்தில் பைரவர், நால்வருள் மணிவாசகர் நீங்கலாக மூவர் சிற்பங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற கோலம். திருவாதிரை.

மாட்டு பொங்கலன்று சுவாமி புறப்பாடு. கார்த்திகை தீபம் முதலிய ஒரு சில சிறப்பு விழாக்களே நடத்தப் பெறுகின்றன. காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ள தேவாரத் தலங்களுள் ஒன்றாகும்.

திருஅன்னியூர் (பொன்னூர்)

மயிலாடுதுறையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் பொன்னூர் உள்ளது. வருணன், அக்கினி வழிபட்ட தலம். சூரியன், ரதிபாண்டவர் முதலியோரும் வழிபட்டுள்ளனர். இத்தலத்திற்கு லிகுசாரண்யம், பாஸ்கர கேஷத்திரம், பானுகேஷத்திரம் என்பன வேறு பெயர்கள்.

இறைவன்–ஆபத்சகாயேசுவரர், மலிகசாரண்யேஸ்வரர், அக்னீசுவரர், பாண்டதவேசுவரர், ரதீசுவரர், இறைவி–பிருகந்நாயகி, பெரிய நாயகி. தலமரம்– எலுமிச்சை. தீர்த்தம்–வருணதீர்த்தம்–அக்னிதீர்த்தம். திருஞானசம்பந்தர், அப்பர் தேவாரப் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய திருக்கோயில், எதிரில் தீர்த்தம், விசாலமான பிரகாரம். வாயிலைக் கடந்ததும் நந்தி பலிபீடம், பிரகாரத்தில் சித்தி விநாயகர், முருகன், மகாலட்சுமி, நவக்கிரக சந்நிதிகள் உள்ளன. மகாமண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இம்மண்டபத்தில் சனி, சூரியன், பைரவர் சந்நிதிகளும் உள்ளன. அம்பாளைத் தொழுது வரும்போது பிரகாரத்தில் ஆதிமூல லிங்கம் – அக்கினிக்குக் காட்சி தந்த மூர்த்தி உள்ளார். அர்த்தமண்டபத்தில் விநாயகர் தரிசனம், வாயிலைக் கடந்து உட்சென்றால் மூலமூர்த்தியைத் தரிசிக்கலாம்.

மிகப்பழமையான இத்திருக்கோயிலில் கோஷ்ட மூர்த்தங் களாக நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை உள்ளனர். நாடொறும் மூன்று கால பூஜைகள். இவை தவிர நடராசர் அபிஷேகங்கள், நவராத்திரி, ஐப்பசியில் அன்னாபிஷேகம், கார்த்திகை, தீபாவளி, தனுர்மாத வழிபாடுகள், சங்கராந்தி முதலிய சிறப்பு அபிசேகங்களும் பூசைகளும் நடைபெறுகின்றன. சமஸ்கிருதத்தில் 'லிகசாரண்ய மகாத்மியம்' என்ற பெயரில் தலபுராணமுள்ளது. இவ்வூரில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது.

திருவேள்விக்குடி

குத்தாலத்திற்கு வடக்கே 2 கி.மீ தூரத்தில் உள்ளது. சிவபெருமானின் திருமண வேள்வி நடந்த தலமாதலின் இப்பெயர்

பெற்றது என்பர். இறைவிக்குக் கங்கணதாரணம் செய்தபடியால் இதற்குக் 'கௌதுகாபந்தன க்ஷேத்திரம்' என்று பெயர், நீண்ட நாள் திருமணம் ஆகாதவர்கள் இங்கு வந்து கல்யாணசுந்தரரை வழிபட்டால் திருமணம் நடைபெறும் என்பது இத்தலச் சிறப்பு. மணவாளேஸ்வர சுவாமி திருமணக் கோலத்துடன் திகழ்கிறார்.

இறைவன்–கௌதகேஸ்வரர், கல்யாணசுந்தரேஸ்வரர், மணவாளேஸ்வரர். இறைவி–பரிமளசுகந்தநாயகி, கௌதகேசி, நறுஞ்சாந்து நாயகி. தீர்த்தம்–கௌதகாபந்தன தீர்த்தம். திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல் பெற்ற தலம். இத்தலம் (குத்தாலம்) திருத்துருத்தியோடு சேர்த்துப் பாடப்பட்டுள்ளது.

திருக்கோயில் ஊர் நடுவே உள்ளது. கோபுரம் கிழக்கு நோக்கியது. கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக இலிங்கோத்பவரும், அர்த்தநாரீஸ்வரரும், சந்திரசேகரரும், தட்சிணாமூர்த்தியும் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் அகத்தியர் சிலையும், நடராசர், பிள்ளையார் திருமேனிகளும் உள்ளன. முதல் பிரகாரத்தில் அம்பாள் கோயில் தெற்கு நோக்கி உள்ளது. இதன் பின்புறத்தில் ஈசானமூர்த்தி கோயில் உள்ளது. இக்கோயில் முதல் பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்டதென்பர். கல்வெட்டுகளில் இறைவன் பெயர் மணவாளநம்பி, மங்கலநக்கர், திருவேள்விக்குடி உடையார் என்னும் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. சோழப் பேரரசி செம்பியன் மாதேவியின் கணவர் கண்டராதித்தரின் நோய் தீர, சிவனுக்கு வேள்வி பூஜை செய்யும் காட்சி புடைப்புச் சிற்பமாக உள்ளது. காவிரியின் வடகரைத் தலங்களுள் இதுவும் ஒன்று. கோயில் கட்டடமும், சிற்பங்களும் முற்கால சோழர் கலைநயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளன. பூம்புகாரிலிருந்து கல்லணை செல்லும் பண்டைய சோழரின் பெருவழியில் உள்ளது. தற்போது திருல்லகுடி என்று மருவி வழங்குகிறது.

திருமணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி)

குத்தாலம் வட்டத்தில் காவிரியின் கிளை நதியான விக்கிரமன் ஆற்றங்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. திரு–மதிப்புச் சொல். மாணம்+சேரி – என்பதே மணஞ்சேரி ஆகியுள்ளது. அதாவது பெருஞ்சேரி என்பதே இதற்குப் பொருள் ஆகும். பெரிய ஊராக அமைந்ததால்தான் கீழைத்திருமணஞ்சேரி மேலைத் திருமணஞ்சேரி

என இரண்டாக அழைக்கப்படுகிறது. இரண்டு பெரிய கோயில்களும் உள்ளன. மேலைத்திருமணஞ்சேரி என்று ஒன்றிருப்பதால் இதை கீழைத் திருமணஞ்சேரி என்றனர். ஆனால் இன்று பலருக்கும் மேலைத் திருமணஞ்சேரி தெரியாததாலும், இத்தலமே மிகவும் புகழ் பெற்று இருப்பதாலும் மக்கள் இத்தலத்தை 'திருமணஞ்சேரி' என்றே அழைக்கின்றனர்.

இறைவன் கல்யாணசுந்தரர் வடிவங்கொண்டு கோகிலாம்பிகையைத் திருமணஞ் செய்து கொண்டதால் இத்தலம் திருமணஞ்சேரி ஆயிற்று என்பர். திருமணம் தடைபடுகிறவர்கள் இத்தலத்திற்கு வந்து கல்யாண சுந்தரருக்கு மாலைசார்த்தி அர்ச்சனை செய்து வழிபட்டால் நிச்சயம் திருமணம் கூடப் பெறுவர் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. மேலும் ராகு கிரக தோஷத்தால் பீடிக்கப்பட்டு மகப்பேறு வாய்க்காதவர்கள் இங்கு வந்து சப்தசாகர தீர்த்தத்தில் மூழ்கி, கோயிலில் உள்ள ராகு பகவானுக்குப் பாலாபிஷேகம் செய்து, பால் பொங்கல் நிவேதனம் செய்து அதைச் சாப்பிட்டால் தோஷம் நீங்கி புத்திரபேறு அடைவர் என்பது நம்பிக்கையாக உள்ளது.

இறைவன்–உத்வாகநாதசுவாமி, அருள்வள்ளல் நாதசுவாமி, கல்யாண சுந்தரேஸ்வரர், இறைவி– கோகிலாம்பாள், தீர்த்தம் – சப்த சாகர தீர்த்தம் இறைவனின் திருமணத்திற்கு மாலைகளாக மாறி வந்த சப்த சாகரங்களும் (ஏழு கடல்களும்) இங்கேயே தங்கித் தீர்த்தமானதாகச் சொல்லப்படுகிறது. திருஞானசம்பந்தர், அப்பரால் தேவாரப் பாடல் பாடப் பெற்றது. ராஜகோபுரம் பண்டைக் காலத்தில் மல்லப்ப நாயக்கரால் கட்டப்பட்டதென்பர். இன்று ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கி உள்ளது. உட்புகுந்தால் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன. அடுத்துள்ள முன் மண்டபத்தில் வலப்பக்கம் அம்பாள் சந்நிதி உள்ளது. சிறிய திருமேனி சுகாசனத்தில் அமர்ந்த திருக்கோலம். நேரே மூலவர் காட்சி தருகிறார்.சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் சுவாமிக்குக் திருக்கல்யாண பெருவிழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

திருக்குரக்கா (திருக்குரக்காவல்)

வைத்தீஸ்வரன் கோயில் – திருப்பனந்தாள் சாலையில், இளந்தோப்பு வந்து அங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளே சென்றால் திருக்குரக்காவல் கோயிலை அடையலாம். பழவாற்றின் கரையில் உள்ள தலம். அநுமன் வழிபட்ட தலமாகக் கூறப்படுகிறது.

இறைவன்–குந்தளேஸ்வரர், இறைவி–குந்தளாம்பிகை, தீர்த்தம்–கணபதிநதி. அப்பர் தேவாரப்பாடல் பெற்றது. ராஜகோபுரமில்லை. முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் பலிபீடம் நந்தி உள்ளன. கொடிமரமில்லை. பிரகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய ஆறுமுகர் மயில்வாகனராய் சந்நிதிகள் உள்ளன. முன்மண்டபத்தில் வலப்புறம் பைரவர், சூரியன், அநுமன் மூர்த்தங்கள் உள்ளன. அப்பர் மூலத்திருமேனி அழகாகவுள்ளது. சுவாமி சந்நிதி நேரே உள்ளது. வாயில் முகப்பில் அநுமன் சுவாமியைப் பூசிப்பதுபோல வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

சுவாமி கிழக்கு நோக்கிய சந்நிதி, வலப்புறம் அம்பாள் சந்நிதி. தெற்கு நோக்கியது. சிறிய அழகான திருமேனி. சுவாமி அம்பாள் விமானங்கள் ஏகதள உருண்டையமைப்பில் உள்ளன. நாடொறும் இருவேளை பூஜைகளே நடக்கிறது. அமாவாசை நாளில் அம்பாளுக்கு ஓமம் நடைபெறுகிறது.

திருவாழ்கொளிப்புத்தூர் (திருவாளப்புத்தூர்)

தேவாரத்தில் இத்தலம் வாழ்கொளிப்புத்தூர் என்றும், தலபுராணத்தில் வாளொளிப் புற்றூர் என்றும் மக்கள் வழக்கில் திருவாளப்புத்தூர் என்றும் வழங்கப் பெறுகிறது. மயிலாடுதுறை–மணல்மேடு பேருந்தில் சென்று இவ்வூரை அடையலாம்.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையில் இங்கு வந்தபோது நீர்வேட்கை மிகுந்தது. இறைவன் முதியவர் உருவில் வந்து ஒரு கதையைத் தந்து, வாகை மரம் ஒன்றினடியில் அதையூன்றி, வெளிப்படும் நீரைப் பருகுமாறு கூறினார். அர்ச்சுனன் தன்கையிலிருந்த வாளை அவரிடம் தந்து, தான் நீர்பருகிவிட்டு வரும்வரை பாதுகாத்துத் தருமாறு கூறிச் சென்றான். இறைவன் அவன் தந்த வாளை அம்மரப் புற்றில் ஒளித்து வைத்து மறைத்தார். நீர்பருகித் திரும்பிய அர்ச்சுனன், இறைவனிடம் முறையிட அவரும் அதை வெளிப்படுத்தி தந்து அருள்புரிந்தார் என்பது தலவரலாறு. இதனால் இத்தலம் வாள்ஒளி புற்றூர் ஆயிற்று என்பர். திருமால் மாணிக்க லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்ட தலமாதலின் இதற்கு அரதனபுரம் என்றும் பெயர்.

இறைவன்– மாணிக்கவண்ணர், ரத்னபுரீஸ்வரர். இறைவி – பிரமகுந்தாளம்பாள், வண்டமர்பூங்குழலி. தலமரம் – வாகை. தீர்த்தம்

– பிரமதீர்த்தம். திருஞானசம்பந்தர், சுந்தரர் தேவாரப் பாடல் பெற்ற தலம். கிழக்கு நோக்கிய ஆலயம். கோயிலின்முன் பிரமதீர்த்தம் தாமரைக் குளமாக காட்சி தருகின்றது. முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் பிரகாரத்தில் இடப்பக்கம் வாகை மரம் உள்ளது. வேறு முக்கிய சந்நிதிகள் இல்லை. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தலபுராணம் பாடியுள்ளார்.

பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்)

பூம்புகாருக்கு மேற்கே மூன்று கி.மீ. தொலைவில் காவிரியின் வடகரையில் பல்லவனீச்சுரம் எனும் திருக்கோயில் அமைந்துள்ளது. பல்லவனம் என்பது இப்பகுதிக்கு பெயர். சோழர் கலையில் கட்டடமும், சிற்பங்களும் காட்சி தருகின்றன. கோயிலுக்கு எதிரில் திருக்குளமும், முதல் கோபுரமும் கிழக்கில் அமைந்துள்ளன. வடக்கில் மத்திய அரசின் அகழாய்வுச் சின்னம் – புத்தவிகாரம் சாலை ஓரம் அமைந்துள்ளது.

இறைவன்–பல்லவனேஸ்வரர், இறைவி–செளந்திரநாயகி. தலமரம்– மல்லிகை, புன்னை தற்போதில்லை. தீர்த்தம்–காவிரி. கோயிலுக்கு எதிரில் அகத்தியர் உண்டாக்கிய ஜான்னவி தீர்த்தம்–திருக்குளம் உள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரப்பாடல் பெற்றது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளை உடையது. கோபுர வாயிலைக் கடக்கும் போது இடப்பக்கம் அதிகார நந்தி சந்நிதி உள்ளது. வாயிலை கடந்து வந்தால் வெளிச்சுற்றில் சூரியன், நான்கு சிவலிங்கத் திருமேனிகள், கைகூப்பி நின்ற நிலையில் பட்டினத்தார் சந்நிதி ஆகியவை உள்ளன. விநாயகரையடுத்துள்ள சுப்பிரமணியர் சந்நிதியில் பெருமாள் உருவம் பெரியதாகவுள்ளது. அடுத்து கஜலட்சுமி சந்நிதியும், ஒரே சந்நிதிக்குள் சனி பகவான், பைரவர், சந்திரன் ஆகிய திருமேனிகள் வைக்கப்பட்டும் உள்ளன.

வெளிமண்டபத்தில் தலத்தின் தேவாரப் பதிகக் கல்வெட்டு உள்ளது. வலப்பக்கம் அம்பாள் சந்நிதி, நேரே மூலவர் தரிசனம், பெரிய சிவலிங்க பாணத்துடன் கூடிய கம்பீரமாக பல்லவனேஸ்வரர் திகழ்கிறார். உள்மண்டபத்தில் தில்லையமைப்பில் அமைந்துள்ள சபாபதி மண்டபம் தரிசிக்கத்தக்கது.மணிமேகலை காலத்தில் கடற்கோளால் காவிரிப்பூம்பட்டினம் ஓரளவு அமிழ்ந்து போயினும் எஞ்சிய பெரும்பகுதி பல்லவர் காலத்தில் பெருநகரமாக விளங்கியுள்ளது. அந்நகரின் நடுநாயகமாக விளங்கிய திருக்கோயிலே

பல்லவனீச்சுரம். சிலப்பதிகாரம் ஊர்க்கோட்டம் என்று குறிப்பிடும் சிவன் கோயில் பல்லவனீச்சுரம் கோயிலாக இருக்கலாம். கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் இங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான் அன்றிருந்த பெருநகரையும் திருக்கோயிலையும் குறிப்பிட்டுள்ளார்.

ஏழாம் நூற்றாண்டில் அவர் தேவாரத்தில் குறிப்பிடும் மாடமாளிகைகள், புகார் முதலிய சோழ நாட்டு நகரங்கள் 13–ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் சோழ நாட்டை ஆண்டு வந்த மூன்றாம் இராஜராஜன் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பூம்புகாரில் அவனால் அழிக்கப்படாமல் எஞ்சி நின்றது பட்டினப்பாலை இயற்றியதற்காக புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் திருமாவளவனிடம் பரிசலாகப் பெற்ற பதினாறுகால் மண்டபம் மட்டும்தான் என்று திருவெள்ளறைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இது கி.பி. 9–ஆம் நூற்றாண்டினுடைய சோழர் கலைப்பணி யாகும், முதலாம் ஆதித்த சோழன் காலத்தியதாக (கி.பி. 881–907) இக்கோயில் திருமேனிகள் கருதப்படுகின்றன. இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுகளே உள்ளன. ஒன்று கருவறையின் மேற்கு சுவரிலும், இன்னொன்று கோயில் முற்றத்திலும் காணப்படுகிறது. மாறவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியனது 17–ஆம் ஆட்சியாண்டில் இராஜாதிராஜ வளநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக் கோயிலுக்கு நிலம் வழங்கியதை முதற் கல்வெட்டு கூறுகிறது. அடுத்த கல்வெட்டு சாலிவாகன சகம். கலி 4775 சகம் 1670 (கி.பி.1757) ஜயவருடம் ராயரவுத்த மிண்ட் நாயனார் முதலியோர் திருச்சாய்க்காட்டுச்சீமை, காவிரிப்பூம்பட்டினம் மாகாணம் பல்லவனீச்சுரக் கோயிலுக்குத் திருப்பணிக்கும் வழிபாட்டிற்கும் நிலம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

ஆடி மாதத்தில் நடைபெறும் பட்டினத்தார் திருவிழா இக்கோயிலின் தனிப்பெரும் விழா ஆகும். இதனை நாட்டுக் கோட்டை நகரத்தார் நாட்டின் பல பகுதிகளிலிருந்து இங்கு வந்திருந்து தங்கி சிறப்பாக நடத்துகின்றனர். குபேரன் பூம்புகாரின் வளங்கண்டு அங்கு சில காலம் வசிக்க விரும்பியதால், இங்கு வந்து தங்கினான் என்பர். மேலும் சிவநேசர், ஞானகலாம்பிகை என்னும் தம்பதியருக்கு மகவாகப் பிறந்தார் பட்டினத்தார் எனும் அருட்சித்தர். பெற்றோர் குழந்தைக்கு

திருவெண்காடரெனப் பெயரிட்டனர். இறைவன் கனவில் அருளியபடி திருவெண்காட்டிற்குச் சென்று, ஆச்சாரியரிடத்தில் உபதேசம் பெற்றார். திருவெண்காடர் சிவகலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். முப்பத்தைந்து வயதுவரை குழந்தைப் பேறின்மையால் திருவிடைமருதூருக்குச் சென்று இறைவனை வேண்டினார். இறைவன் குழந்தை வடிவாயினான். சிவசருமர், சுசீலை என்பார் இறைவன் கனவில் அருளியபடி அக்குழந்தையை எடுத்துச் சென்று திருவெண்காடரிடம் கொடுத்தனர். குழந்தைக்கு மருதவாணர் என்று பெயரிட்டனர். இவரே செல்வம் நிலையற்றது என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்திய அருட்சித்தர் ஆவார். காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர் ஆதலின் பட்டினத்தார் என்றழைக்கப்பட்டார். எனவே உலகெங்கிலும் உள்ள செட்டியார் இன மக்கள் இவருக்குப் பெருவிழா எடுத்துச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பல்லவனீச்சுரம் கோயிலுக்கு வடக்கே சாலையை ஒட்டி 1960–61–இல் மத்திய அரசால் நடத்தப்பட்ட அகழாய்வில் புத்த விகாரம் கிடைத்துள்ளது. பூம்புகாருக்கும் பௌத்த சமயத்திற்கும் கி.மு. 2–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. அகீர்த்தி என்பவர் புத்தரின் முந்தைய அவதாரங்களுள் ஒருவர் என்றும், இவர் காசியை விடுத்துக் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு வனத்தில் வாழ்ந்ததாகப் புத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. புத்த ஜாதகக் கதைகள் புத்தர் அவதரிக்கும் முன்னரே கி.மு. 5–ஆம் நூற்றாண்டிலேயே பிறந்துவிட்டன என்றும் கூறுவர்.

சிலப்பதிகாரம் சுடுகாட்டுக் கோட்டம் என்றும், மணிமேகலை சக்கரவாளக் கோட்டம் என்றும் குறிப்பிடும் ஈமப் புறங்காடு பல்லவனீச்சுரத்திற்கு மேற்கிலும், சாய்க்காட்டிற்குக் கிழக்கிலும், சாலைக்குத் தெற்கிலும் அமைந்துள்ள பகுதியாகும். இன்றும் இங்கே பழைய சுடுகாடு உள்ளது. மணிமேகலை, இச்சக்கரவாளக் கோட்டத்தின் மேற்றிசையில் இருப்பதாகக் கூறும் சம்பாபதி கோயில் இன்னும் அதே இடத்தில் (சிதைந்து) உள்ளது. ஆதலின் சக்கரவாளக் கோட்டத்தின் உள்ளே இருந்ததாக மணிமேகலை கூறும் 'காடு அமர் செல்வி கழிபெருங்கோட்டம்' இப்போது இருக்கும் காளிகோயில் எனக் கொள்ளலாம்.

சாய்க்காடு

சீர்காழி–பூம்புகார் சாலையில் திருவெண்காட்டிலிருந்து 3 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. சாயாவனம் என்றால் அழியா பெருங்காடு என்றும் பொருள் கொள்ள இடமுண்டு சாயாவனத்தைச் சுற்றி ஏழு வனங்கள் இருந்தன என்றும் கூறப்படுகிறது. பைஞ்சாய் என்னும் கோரை செழித்திருந்த இடமாதலின் சாய்க்காடு என்று அழைக்கப்படுகிறது. சாய்க்காட்டின் தலவிருட்சமாக கோரை இன்றளவும் உள்ளது.

சாயாவனம் என்று வழங்கப்படும் சாய்காடு சங்க இலக்கியத்தில் இடம் பெறும் தொன்மையான நகர். இந்நகரை 'நெடுங்கதிர் கழனித் தண்சாய்க்கானம்' என்ற அகநானூற்றில் மருதன் இளநாகனார் பாடுகிறார்.

இறைவன்–சாயாவனேஸ்வரர், இரத்தினச் சாயாவனேஸ்வரர், இறைவி–கோஷாம்பாள், குயிலினும் நன்மொழியம்மை, தலமரம்–பைஞ்சாய், தீர்த்தம் – காவிரி – ஐராவத தீர்த்தம் திருஞானசம்பந்தர், அப்பர் அடிகள் தேவாரப் பாடல் பெற்றது.

இங்கு தனியே வைக்கப்பட்டுள்ள வில்லேந்திய வேலவர் பஞ்சலோகத் திருமேனி மிகச் சிறப்புடையது. நான்கு திருக்கரங்களுடன் வில்லையேந்திக் கம்பீரமாக உயர்ந்த மயிலும் காண்போர் கண்களுக்கு பெருவிருந்தாகின்றன. அவை நெடுங்காலம் முன்பு கடலில் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. சோழர் கலையில் மிளிரும் திருமேனியாகும்.

இந்திரன் தன் தாயின் விருப்பத்திற்கிணங்க, தன் வெள்ளை யானையைக் கொண்டு இங்குள்ள சிவலிங்கத்தைப் பெயர்த்து இந்திரலோகத்திற்கு எடுத்துச் செல்ல முயன்றபோது, பூமியைத் தாங்கும் ஆதிசேடனது முடியிலுள்ள இரத்தினத்தின் சாயை (ஒளி) வீசிதால் இந்திரன் கண் அவிந்து தன் செயல் தவிர்த்தான். பின் இறைவனை வேண்டிக் கண் பெற்றான். ஆதிசேடனின் முடியிலுள்ள இரத்தினத்தின் சாயை பட்டதால் இவ்வூர் சாயவனம் என்னும் பெயர் பெற்றது என்பர். இறைவனுக்கும் சாயவனேச்சுவரர் என்னும் பெயருண்டாயிற்று என்று புராணம் கூறுகிறது.

மூர்த்தி–தலம்–தீர்த்தம் என்ற சிறப்புடையது சாய்க்காடு, இதனால் சாய்க்காட்டைக் காசிக்கு இணையான தலமென்பர். திருவெண்காடு, திருவையாறு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம் ஆகிய ஆறு தலங்களும் காசிக்கு இணையான தலங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் பூம்புகாரை, சம்பாபதி என அந்நகரின் காவல் தெய்வத்தின் பெயரால் அழைத்துள்ளனர். காந்தன் என்னும் சோழ மன்னனின் வேண்டுதலுக்கிணங்கி, காவிரி அந்நகருக்கு வர அவளைச் சம்பாபதி வரவேற்று, என்பெயர் கொண்ட இம்மூதூர் இனி உன் பெயரால் அழைக்கப்படும் என்று கூறினாள். அதுமுதல் சம்பாபதி, காவிரிப்பூம்பட்டினம் எனவும் அழைக்கப்பெற்றதாக மணிமேகலையின் பதிகம் கூறுகிறது.

சுவாமி சந்நிதி வாயிலில் இருபுறமும் தலப்பதிகக் கல்வெட்டுகள் உள்ளன. வாயிலில் மேற்புறம் இயற்பகை நாயனார்க்கு இறைவன் அருள் செய்த காட்சி சித்திரமாக எழுதப்பட்டது. இதனைக் கண்டு தொழுது உள்ளே சென்றால் நேரே மூலவர் ஸ்ரீசனம் சதுர ஆவுடையாரில் குட்டையான பாணத்துடன் கூடிய சிவலிங்கத் திருமேனி. உள் பிரகாரத்தில் வலம் வர வசதியுள்ளது. மூலவருக்கு வலப்புறம் நடராச சபை உள்ளது. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் திருமுறை விண்ணப்பத்திற்கான கட்டளை இக்கோயில் 1964–இல் ஏற்படுத்தப் பட்டிருப்பதாகக் கல்வெட்டொன்று பதிக்கப்பட்டுள்ளது.

திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம்)

கடைச் சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பகுதியாகவும், விக்கிரம சோழன் காலத்தில் இராசராச வளநாட்டு ஆக்கூர் நாட்டுத் தலச்சங்காட்டுத் திருவலம்புரமாக தலச்சங்காட்டைச் சேர்ந்த ஊராகவும் இருந்த இவ்வூர், இன்று தலச்சங்காட்டிற்கு கிழக்கில் தனி ஊராக உள்ளது. தாழ்நீர்வேலித் தலச்சங்காட்டிற்குக் கிழக்கே கடற்கரை வரை தாழ்வான, பள்ளமான பகுதியாதலின் பிற்காலத்தில் மேற்கே உள்ள பள்ளமான பகுதியை மேலப் பெரும்பள்ளம் என்றும் கிழக்கே உள்ள பள்ளமான பகுதியைக் கீழப் பெரும்பள்ளம் என்றும் அழைத்தனர்.

காவிரிக்கு வலப்புறமிருப்பதால் வலம்புரம் என்றாயிற்று, மயிலாடுதுறை பூம்புகார் சாலையில் காவிரி கடைமடை எனும் கழார்

முன்துறை அணையை அடைந்து, இத்தலத்தை அடையலாம். திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கினை பெற்ற தலம். காவிரி குடந்தைக்கு அருகிலுள்ள திருவலஞ்சுழியில் ஒரு நீர்த்துறையினுள் சென்று மறைந்து விட்டதால் மீட்டுக் கிழக்கே கொண்டு வர ஏரண்ட மகரிஷி அந்நீர்த்துறையில் மூழ்கி இங்கு வந்து கரையேறினார். அவர் வலமாக வந்ததனால் இத்தலம் திருவலம்புரம் என்று பெயர் பெற்றது என்பது தலபுராணம். இச்செய்தி திருவலஞ்சுழித் தலபுராணத்திலும் கீழக்கொட்டையூர் தலபுராணத்திலும் கூறப்பட்டுள்ளது. அம்முனிவருக் கென்று ஒரு தனிக்கோயில் இங்குள்ளது.

இறைவன் – வலம்புரநாதர். இறைவி – வடுவகிர்க்கண்ணி. தலமரம் – பனை, வன்னி மரமும் உள்ளது. தீர்த்தம் – பிரமதீர்த்தம், லட்சுமி தீர்த்தம். இக்கோயிலில் 'பட்டினத்தாரை மன்னன் வரவேற்கும் ஐதீக விழா' நடைபெறுகிறது.

தேவாரப்பாடல்களுள் இத்தலத்தைப் பற்றி திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் இரு பதிகங்களும், சுந்தரமூர்த்தி ஒரு பதிகமும் பாடியுள்ளனர். அருணகிரியின் திருப்புகழ்ப் பாடலொன்றும் இத்தலத்து முருகனைப் பாடுகிறது. திருவலம்புர மாலை என்றதொரு பிரபந்தம் பொன்முத்து வேலாயுதம் என்பவரால் இயற்றப் பெற்றுள்ளது.

இக்கோயிலின் உண்ணாழிச் சுவரில் உள்ள ஆறு கல்வெட்டுகளின் துணைகொண்டு இங்குள்ள படிமங்களை எழுந்தருளிவித்தவருடைய பெயர்களையும் 1305 ஆண்டுகள் பழமையுடையது என்பதையும் கொண்டு இதன் சிறப்பை உணரலாம். விக்கிரம சோழன் கல்வெட்டில் இத்தலம் 'இராசராச வளநாட்டு ஆக்கூர் நாட்டு தலச்சங்காட்டுத் திருவலம்புரம்' என்றும், சுவாமி 'வலம்புரி உடையார்' என்றும், அம்பாள் 'தடங்கண் நாச்சியார்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுச் செய்தி ஒன்று 'பண்டை நாளில் கோயில்களுக்கு ஆண்களை விற்கும் பழக்கம் இருந்ததாகத் தெரிவிக்கின்றது. சங்ககாலத்தில் பெரும்பள்ளம் என்றழைக்கப்பட்ட ஊர் சோழர்கள் காலத்தில் (9–ஆம் நூற்றாண்டு) திருவலம்புரம் என்று கூறப்பட்டுள்ளது. இக்கோயிலில் பிச்சாண்டவர் திருமேனி சோழர் கலைநயத்துடன் காட்சி தருகிறது. மான், குள்ளபூதம் வலத்திலும் இடத்திலும் உள்ளன. 1) தேவாரம், 2) கல்வெட்டு 3) திருமேனி இம்மூன்றும் ஒன்றாக இணைந்து சிலையின் நாயகரை 'வட்டணைப்பட நடந்த நாயகர்' என்று புகழ்வது தனிச்சிறப்பாகும்.

தலச்சங்காடு ஸ்ரீசங்காரண்யேஸ்வரர் மாடக்கோயில்

அமைவிடம்

நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் தலச்சங்காடு கிராமம் அமைந்துள்ளது, இவ்வூர் திருக்கடையூரிலிருந்து பூம்புகார் செல்லும் சாலையில் திருக்கடையூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் வடக்கில் அமைந்துள்ளது. காரைக்காலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்து வசதிகள் உள்ளன. தொன்மைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க இவ்வூர் சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாக விளங்கி வந்துள்ளது என்பது தொன்மைச் சான்றுகளால் புலப்படுகிறது. கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில், சங்குவனம், சங்காரண்யம், தலச்சங்காணம் என்பன வேறு பெயர்கள். திருமால் வழிபட்டுப் பாஞ்சசன்னிய சங்கைப் பெற்ற தலம்.

திருத்தலைச்சங்காடு, திருவெண்காடு, திருச்சாய்காடு, திருமறைக்காடு, திருவாலங்காடு என்ற வரிசையில் திருத்தலச்சங்காடும் சிறப்பு பெற்றது. சங்குவனம், சுவேதவனம், சாயாவனம், பல்லவனம், முல்லைவனம் என்ற ஐந்து வனங்களில் இந்த சங்குவனமும் மிகவும் சிறப்புடையது. சங்காரண்யம், சுவேதாரண்யம், வேதாரண்யம், வில்வாரண்யம், வடவாரண்யம் என்ற ஐந்து ஆரண்யங்களிலும் ஒன்றாக வைத்துப் போற்றப்படுகிறது.

தொன்மைச் சிறப்பு

தலச்சங்காட்டின் கிழக்கில் உள்ள புஞ்சை நிலங்களில் முற்காலத்தில் குடியிருப்புகள் இருந்தன என்பதை பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் சான்றுகள் நமக்கு மெய்ப்பிக்கின்றன. இங்குள்ள புஞ்சைத் திடல்களில் தொன்மையான பானை ஓடுகளும், முதுமக்கட்தாழிகளும், கெண்டியின் மூக்குப்பகுதிகளும், காதணி களும் குடிநீருக்காக பயன்பட்ட உறை கிணறுகளும் பூமிக்கடி யிலிருந்தும் மேற்பரப்பிலும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவ்வூர் நடுநிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடலில் ஒருமுறை மேடுபள்ளம் சரிசெய்தபோது பூமிக்கடியில் ஒரு கல்வெட்டு முற்காலச் சோழர் எழுத்தமைதியில் கிடைத்துள்ளது. மேலும் இவ்வூரில் வழிப்போக்கர்கள் வணிகர்கள் தங்கிச் செல்வதற்காக ஒரு சத்திரமும் இருநூறு ஆண்டுகளுக்கு

முன்பு செட்டியார்களால் கட்டித்தரப்பட்டு பரிபாலிக்கப்பட்டுள்ளது. அதற்குரியதாக பலகைக்கல்லில் ஒரு கல்வெட்டும் இவ்வூரில் கிடைக்கின்றன. தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளை வைத்து பார்க்கையில் இவ்வூர் 2500 ஆண்டுகள் தொன்மை வரலாறு மிக்கது என்பது புலனாகிறது.

ஊர்ப்பெயர்க்காரணம்

ஊருக்கு தலச்சங்காடு என்றும் இவ்வூர் இறைவனை வடமொழியில் சங்காரண்யேஸ்வரர் என்றும் அழைக்கின்றனர். வருவாய்த் துறையில் இவ்வூர் "தலையுடையார் கோயில் பத்து" பஞ்சாயத்து என்று உள்ளது. தலை என்பது மனித உருவின் மேற்பகுதி ஆகும். சங்கு என்பது கடல்வாழ் ஓட்டு உயிரினங்களுள் ஒன்று. சங்கு என்பதற்கு பூவின் மொட்டு என்ற பெயரும் நிலவுகிறது. காடு என்பது அடர்த்தியான தோட்டத்தைக் குறிக்கின்றது. சங்கு ஆரண்யம் எனும் போது சங்குகள் நிறைந்த காடு என்பது கடற்சங்குகளுக்கும், காடுகட்கும் பொருந்தாது. எனவே பூ மொட்டுகள் (சங்குகள்) கமழும் பூந்தோட்டம் நிறைந்த ஊர் என்பதே பொருத்தமாகிறது.

அம்மன் சந்நிதி அருள்மிகு சௌந்தரநாயகி அம்மன்

இறைவன் கோயிலின் முன்பாக தெற்கு பார்த்தபடி அம்மன் சந்நிதி பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. அம்மன் சந்நிதிக்கு முன்பாக உள்ள முன் மண்டபத்தை நாயக்கர் மன்னர் காலத்தில் அவரது அரசு அதிகாரியாகிய திருவலஞ்சுழியுடையார் என்பவர் கட்டி திருப்பணி செய்ததை குமுதப்பட்டியில் உள்ள கல்வெட்டால் அறிய முடிகிறது.இக்கோயிலில் அம்மன் சந்நிதியின் பின்புறம் கோயிலின் தலத்தருவான புரசமரம் அமைந்துள்ளது. திருக்கோயிலின் முன்பாக இத்தீர்த்தத்துக்கு சங்கு தீர்த்தக் குளம் அமைந்துள்ளது.

கல்வெட்டுச் செய்திகள்

இத்திருக்கோயிலில் கிழக்கு நோக்கிய மொட்டை கோபுரத்தின் மேற்கு மற்றும் வடக்கு பகுதி பட்டிகைகள், மூலவர் திருக்கோயிலின் தென்சுவர், மேற்குச் சுவர், வடக்குச்சுவர் அடிப்பகுதிகள், அம்மன் சந்நிதியின் அருகால், ஆடவல்லான் சந்நிதியின் அருகால், தூர்க்கை கோஷ்டத்திற்கு அருகில் உள்ள தூண், அம்மன் சந்நிதியில் படிக்கட்டு போன்ற இடங்களில் பத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவைகளில் சோழர்

கால கல்வெட்டுகளே மிகுதி. ஒரு சில நாயக்கர் காலத்தைச் சார்ந்தவை. சோழர் காலக் கல்வெட்டொன்று இக்கோயிலுக்குச் செம்பியன் மாதேவி வெள்ளிப் பாத்திரங்களை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டுகள் பிற்காலச் சோழர்கள் இக்கோயிலுக்கு நந்தவனம் அமைக்க நிலக்கொடை அளித்ததும், கோயிலுக்கு அணையா விளக்கு எரிக்க எண்ணெய்க்காக நிலங்களையும், பசுக்களையும் தானம் அளித்ததும், கோயிலில் திருவிழாக்கள் தவறாமல் நடைபெற பொற்காசுகள் தானமாக அளித்ததும், கோயிலில் இறைவனின் அடியார்க்கும், பக்தர்களுக்கும் அமுதுபடி, சாத்துபடி செய்வதற்கு நெல் தானமும், அதற்கு வரி நீக்கிய நிலங்களைத் தானம் அளித்ததும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்களுக்குரிய நான்கு எல்லைகளும் அந்நிலங்களின் வழியாகப் பாய்ந்து சென்ற வாய்க்கால்களும், அதனைப் பராமரிக்கும் அதிகாரிகள் பெயரும், கல்வெட்டு ஆவணங்களை கோயில்களில் எழுதி புதுப்பித்த அதிகாரிகள் பெயரும், இதற்கு சாட்சி கையொப்பமிட்ட ஊர்சபையின் முக்கியஸ்தர்கள் பெயரும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

கோயில் கட்டடங்களில் இவ்வூர்க் கோயில் மாடக்கோயில் வகையைச் சேர்ந்ததாகும். சோழன் கோச்செங்கணான் காலத்து கோயில் பின்னாளில் இடிபாடுற்று அழிந்தபோது பிற்கால சோழர்களால் கோயில் புதிதாக கட்டப்பட்டு அவர்கள் காலத்தில் சிற்பங்களும், கல்வெட்டுகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. சோழர்காலத் திருப்பணியும் பின்னாளில் அழிவுற்று அதனை நாயக்கர் காலத்தில் மீண்டும் புதுப்பித்துள்ளனர். இக்காலத்தில் கல்வெட்டுகள் தலைகீழாகவும், இடம் மாறியும் அமைக்கப்பட்டுள்ளன என்பது தற்காலத்தில் கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே தற்பொழுது நடைபெறும் திருப்பணி 7–ஆவது திருப்பணி என்பது தெரிகிறது. நில அளவையைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றும் குறியீடுடன் தெற்கு சுவரில் உள்ளது. இதுபோல நில அளவையைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று மாமாகுடி (தரங்கம்பாடி வட்டம்) எனும் ஊரிலுள்ள பெருமாள் கோயிலின் தெற்கு சுவரில் காணப்படுகிறது. அளவுகோலின் நீளம்+மார்க் குறியீடுகளுடன் உள்ளது. அதன் அருகில், 'திருமிகைச்சூர்' என்னும் அளவைக்காரர் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே பெயர் தலச்சங்காடு தெற்குச் சுவரிலும் காணப்படுகிறது.

திருமால் கோயில் சிற்பங்கள்

இவ்வூரில் மூன்று இடங்களில் பெருமாளுக்கு திருக்கோயில்கள் இருந்துள்ளன. இப்போது ஊரின் மேற்கே 1 கி.மீ தொலைவில் நாண்மதியப் பெருமாள் கோயில் ஒன்று மட்டும் உள்ளது. இந்த நாண்மதியப் பெருமாள் கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். இதனை திருமங்கையாழ்வார் பெருமையாகப் புகழ்ந்து பாடியுள்ளார். பெருமாள் கோயில்களுள் இதுவும் ஒரு மாடக்கோயிலாக விளங்குகிறது. கோபுரம் இல்லை. திருக்குளம் கிழக்கில் உள்ளது. மூலவர் உண்ணாழியைச் சுற்றிலும் மூன்று சோழர்காலக் கல்வெட்டுகள் மெய்க்கீர்த்தியுடன் உள்ளன. தரைமட்டத்திலிருந்து 10 அடி உயரத்தில் மேடை போல் உயர்த்திக் கட்டி அதன்மேல் விமானம் அமைக்கப் பட்டுள்ளது. சோழர் காலத்தில் செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளும் காட்சி தருகின்றன. முன்மண்டப மேடையில் சங்கு வடிவ பலகைக்கல்லில் பெருமாள் காட்சி தரும் சிற்பம் சோழர் கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. விஜயநகர அரசர் காலத்தில் அளிக்கப்பட்ட லெட்சுமி நரசிம்மர் சிற்பமும் தனியே உள்ளது. அழிந்த மற்றொரு கோயிலின் மூலவர் வெங்கடாஜலபதியை சாலையின் ஓரத்தில் புதிய கோயில் கட்டி புதுப்பித்து வைத்துள்ளனர். மேலும் இடிந்த ஒரு கோயிலில் இருந்த திருமால், திருமகள், பூமகள் போன்ற சோழர்கால சிற்பங்கள் சிவன்கோயிலுக்கு எடுத்து வந்து தனிச் சன்னதியும் அமைத்து குடமுழுக்கு செய்துள்ளனர்.

தலைஞாயிறு (திருக்கருப்பறியலூர்)

அமைவிடம்

மயிலாடுதுறை–மணல்மேடு கற்சாலையில் அமைந்துள்ள பட்டவிருத்தி என்ற சிற்றூரிலிருந்து வடகிழக்கில் 1.5 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. கருப்பறியலூர் என்பது ஊரின் பழைய பெயர். மதுரை–ஆலவாய், வெண்ணெய்நல்லூர் – அருட்டுறை போல அமைந்தது இப்பெயர் அமைப்பு. திருத்தருமையாதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீவைத்யநாத சுவாமி தேவஸ்தானம் அமைந்த வைத்தீஸ்வரன் கோயிலின் மேற்கே 8 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

ஊர்ப்பெயர்க் காரணம்

மக்கள் 'தலைஞாயிறு' என்று தற்போது வழங்குகின்றனர். இது கொகுடிக்கோயில். கொகுடி என்பது ஒரு வகை முல்லை. இதன்

வடிவில் அமைந்த கொகுடிக்கோயில், கருமூலத்தை அழித்து ஞானம் நல்கும் தலமாதலின் 'கருப்பறியலூர்' என்று பெயர் பெற்றது. முல்லைக்கொடி தலவிருட்சமாதலின் யூகிதாவனம், பிறவிக்கு ஏதுவாகிய சன்மம் கெடுதலால் கன்மநாசபுரம், சூரியன் வழிபட்டதால் ஆதித்தபுரி. பரஞானத்தை அருளிப் பிறவி வேரை அறுப்பதால் திருக்கருப்பறியலூர், இரத்தினகிரியில் சட்டைநாதர் வீற்றிருப்பதாலும், சீர்காழிக்கு மேற்கே இருப்பதாலும் மேலைக்காழி என்றும் பல பெயர்களை இத்தலம் பெற்றுள்ளது.

இறைவன்–அபராதசுஷமேஸ்வரர், இறைவி– விசித்ர பாலாம்பிகா, கோல்வளைநாயகி. தலமரம்–கொகுடிமுல்லை. தீர்த்தம்– இந்திர தீர்த்தம். திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல் பெற்றது. தேவர் தலைவன் இந்திரன் இறைவன் என்றறியாமல் சிவன் மீது வச்சிரம் எறிந்த குற்றத்தைப் பொறுத்தருள செய்தமையால் குற்றம் பொறுத்த நாதராயினார் என்பது வரலாறு. இத்தலத்தில் விநாயக தீர்த்தம், சூரிய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், அநும தீர்த்தம், நிம்பபுட்கரணி, சங்கபுட்கரணி, பொற்றாமரை, செங்கழுநீர்த்தடாகம் என எட்டு தீர்த்தங்கள் உள்ளன.

இலக்கியம்

இத்தகைய தெய்வீக இலக்கியச் சிறப்பு இத்திருக்கருப் பறியலூருக்கு இயல்பாக அமைந்துள்ளது. திருஞானசம்பந்தப் பெருமானின் 'சுற்றமொடு பற்றவை' என்று தொடங்கும் இந்தளப்பண்ணில் அமைந்த பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 'சிம்மாந்து' என்று தொடங்கும் நட்டப்பாடைப் பண்ணில் அமைந்த பதிகம் ஒன்றும் என இரு பாடல்கள் தேவாரத்தில் பொலிகின்றன. இத்தலத்தை அடுத்து ஈசானமூலையில் இலங்குகின்ற திருக்குரக்குக்கா என்ற திருக்கோயில் எம்பிரானைத் திருநாவுக்கரசுப் பெருமான் பாடிய பண் ஒன்றும் உள்ளது. அப்பர் பெருமான் பாடிய திருக்குறுந்தொகையில் 'மரக்கொக்காம் என வாய்விட்டலறி' எனத் தொடங்கும் திருப்பதிகமே இது.

கல்வெட்டுகளும் செய்திகளும்

இத்தலத்தில் பன்னிரெண்டு கல்வெட்டுகள் உள்ளன. இவை வரலாற்றுக்கு உறுதுணை புரிதலைக் காணலாம். மத்திய அரசின் கல்வெட்டு துறை இவற்றை 1927–இல் படி எடுத்துள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் 13–ஆம் ஆண்டு 280–ஆம் நாளிலும், 14–ஆம் ஆண்டு 35–ஆம் நாளிலும் எழுந்த கல்வெட்டுகள் இங்குள்ளன. கோநேரின்மை கொண்டானின் 7–ஆம் ஆண்டு 73–ஆம் நாளிலும், 10–ஆம் ஆண்டு 334–ஆம் நாளிலும் தோன்றிய கல்வெட்டுகளும் இலங்குகின்றன. திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் கல்வெட்டு மூன்றும் உள்ளன. இவை சோழ மன்னர்களோடு தொடர்பு உள்ளவை. விஜயநகர அரசர்களில் கிருஷ்ணதேவராயரின் சகம் 1499–இல் பொறிக்கப் பெற்ற கல்வெட்டும் உண்டு. அரசர் பெயர் இன்றிச் சில கல்வெட்டுகளும் அமைந்துள்ளன.

இவற்றிற் குறிப்பிடத்தகுந்த சில செய்திகள் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இத்தலம் தனிநாயகச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் பெற்றது என்றும், இப்பெயரே சிதைந்து தலைஞாயிறு என வழங்குகிறதென்றும் கல்வெட்டுப் புலவர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் கருதுவர். 'அகரம் தனிநாயகச் சதுர்வேதிமங்கலம்' என்று கல்வெட்டுகள் இவ்வூரைக் குறிப்பிடு கின்றன. அகரம் என்பது அந்தணர் வாழ்கின்ற இடமாகும். இப்படிக் கல்வெட்டுகள் கூறுவதற்கேற்ப இத்தலத்துப் பதிகமும் கூறுகின்றமை தெளியலாம். பார்வதி பாகர் என்று சிவபெருமான் குறிக்கப் பெறுகின்றார். ஊர்ச்சபை உறுப்பினராதற்குரிய சட்ட திட்டங்கள் இக்கோயில் வடபுறச் சுவரில் உள்ள கல்வெட்டில் காணப்படுகின்றன.

சீர்காழி சட்டநாதர் ஆலயம்

சீர்காழி நகரில் உள்ள திருக்கோயில் சட்டநாத சுவாமி தேவஸ்தானம் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பெரிய கோயில் மூலவர் விமானம் மூன்று நிலைகளாக இருக்கிறது.

சிவபெருமான் அருள் வடிவங்களை குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று நிலை என்பார்கள். அவர் குருவாக இருந்து உபதேசம் செய்வார். லிங்கமாக இருந்து அருள்பாலிப்பார். சங்கமம் மூர்த்தமாக வந்து அடியார்கள் வேண்டுவன அருளுவார்.

சீர்காழி சட்டநாதர் கோயிலில் முதல் நிலையில் இருப்பவர் பிரம்மபுரீஸ்வரர் எனப்படுகிறார். இவர் லிங்கத்திருமேனியாக மூலவராக இருக்கிறார். அடுத்த நிலையில் அதாவது இடைத்தளத்தில் இருப்பவர் பெரிய நாயகி உடனான தோணியப்பர் எனப்படுகிறார்.

இதற்கு அடுத்த நிலையில் மேலே இருப்பவர் சட்டநாதர். சட்டநாதரை தரிசிக்க குறுகலான வழி இருக்கிறது. மரப்படிகளின் மூலமாக மேலே ஏறிச் செல்லவேண்டும்.

சட்டநாதர் அங்கே தெற்கு நோக்கிக் காட்சி தருகிறார். இத்திருவுருவம் நல் அத்திமரத்தினால் ஆனது. சுமார் 5 அடி உயரம் உள்ளது. இரண்டு திருக்கரங்களுடன் காணப்படுகிறது. நின்ற நிலையில் காட்சி தருகிறார். சம்பாத ஸ்தானத்தில் ஒடிசல்கள் ஏதுமின்றி ஆடை காணப்படுகிறது. இத்திருமேனிக்கு நீராட்டு கிடையாது. வெள்ளிக்கிழமை தோறும் புனுகுச் சட்டம் சாத்துவது வழக்கம். சிவபெருமான் வீரச்செயல்களை நிகழ்த்துவதற்காக மேற்கொண்ட திருக்கோலங்களைப் பைரவத் திருக்கோலம் என்பார்கள். ஆகமங்கள் 64 விதமான பைரவ திருமேனிகளை பட்டியலிட்டுள்ளன. இவற்றுள் வடுகர் என்ற பெயரிலான பைரவர் சட்டநாதர் எனப்படுகிறார்.

ஒருமுறை வாமனரின் செருக்கை குறைக்க வேண்டும் என்று தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவர் வடுகநாதர் என்ற உருவம் எடுத்து விஷ்ணுவுடன் சண்டையிட்டார். இறுதியில் மகாவிஷ்ணு மயங்கி விழுந்தார். உடனே மகாலட்சுமி 'மகேஸ்வரா என் கணவர் மீண்டும் எழுந்து வர அருள் செய்ய வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தார். 'இறைவா என் தோலைத் தாங்கள் போர்த்திக்கொள்ள வேண்டும் எலும்பினை நீங்கள் ஆயுதமாக தாங்க வேண்டும்' என்று சிவனிடம் வேண்டினார் விஷ்ணு. வடுகநாதர் தோலைச் சட்டையாகத் தரித்தார். அதனால் சட்டநாதர் ஆனார். எலும்பை கதை எனும் தண்டாயுதமாக ஏற்று தண்டபாணி ஆனார். இதுவே பைரவக் கோலத்தில் ஒன்றான சட்டநாதர் வரலாறாகக் கூறப்படுகிறது.

திருத்தலப் பெருமைகள்

நாம் வாழ, புறச்சமய இருள் நீங்கிச் சைவவுலகு விளக்கம் பெறத் தெய்வத் திருமுறைகள் அருளிச்செய்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் அவதரிக்கவும், அருள்பெறவும் பேறு பெற்றது இப்புண்ணியத் தலமாதலின், இத்தலத்தை மிதிக்கலாகாது என்னும் பெருநோக்குடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நகர்புறத்தில் இருந்து கொண்டே "கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே" என்று திருப்பதிகம் பாடியுள்ளார்.

இத்தலம் கற்பகாலத்தில் அழியாது மூலாதார ஷேத்திரமாக விளங்கிக் கயிலாய தரிசனப் பேற்றைக் கொடுக்கவல்லது. பாரிஜாதத்தை ஸ்தல விருஷமாக உடையது. இது கொன்றையைப் போல் பூத்து, மாதுளையைப் போல் காய்த்து, மாவைப் போல் பழுத்து முறையே மந்திரம், மணி, மருந்தின் தன்மைகளைப் பெற்றுள்ளது. தன்னை அடைந்தோர்க்கு மும்மலப்பிணி, உயிர்ப்பிணி, உடற்பிணிகளைப் போக்கும் தன்மையது.

கல்வெட்டுகளில் சீர்காழி

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டவை நாற்பத்தாறும், எடுக்கப்படாதது ஒன்றும் ஆக 47 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இரண்டாங் குலோத்துங்கன் கல்வெட்டுகள் மூன்றும், இரண்டாம் இராஜராஜதேவனின் கல்வெட்டுகள் ஐந்தும், மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள் ஏழும், வீரராஜேந்திரன் கல்வெட்டுகள் மூன்றும், இராஜாதிராஜதேவர் கல்வெட்டு ஒன்றும், கோனேரின்மை கொண்டான் என்ற குறிப்பில் இரண்டு கல்வெட்டுகளும், மூன்றாம் இராஜராஜதேவர் கல்வெட்டுகள் நான்கும், பெயர் குறிக்கப்படாத பரகேசரிவர்மன் கல்வெட்டு ஒன்றும், இராஜகேசரி வர்மனது கல்வெட்டுகள் மூன்றும், வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டுகள் இரண்டும், ஆண்டு மட்டும் குறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மூன்றும், கிருஷ்ணதேவராயரது கல்வெட்டு ஒன்றும், வேங்கடதேவ மகாராயரது கல்வெட்டு ஒன்றும், பெயர் குறிக்கப்பெறாத கல்வெட்டுகள் எட்டும் ஆக நாற்பத்தாறு கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயிலின் ஆலய மணியிலும், அதனைத் தாங்கி நிற்கும் கருங்கல் உருண்டைத் தூண்களிலும் கல்வெட்டுகள் உள்ளன.

வரலாற்றுச் செய்திகள்

கல்வெட்டுகளால் பல வழக்கங்களும், அளவை முறைகளும், தலம், மூர்த்தி இவைகளின் அமைப்புகளும் பிறவும் அறியப்பெறும். இத்தலம் "இராஜராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. பிரமபுரீசுவரர் திருக்கழுமலமுடையார் என்றும், தோணியப்பர் திருத்தோணிபுரம் உடையார் என்றும், தோணியப்பர் பக்கத்திலுள்ள அம்மை பெரிய நாச்சியார் என்றும், திருஞானசம்பந்த பெருமான் ஆளுடைய பிள்ளையார் என்றும் குறிக்கப் பெறுகின்றனர்.

இங்குள்ள ஆளுடைய பிள்ளையார் கோயிலில் முதன் முதல் ஆளுடைய பிள்ளையார் திருவுருவத்தைத் தலத்திற்கு எழுந்தருளச் செய்தவள் இராஜவிச்சாதரி. எழுந்தருளிவித்த என்பதற்கு திருவீதி உலாச் செய்வித்த என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும். இவள் மூன்றாவது குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளிலே மூத்தவள் ஆவாள். இதனால் அக்காலத்தரசர்கள் பட்டத்தரசியாரை அன்றி அடுக்களைப் பெண்டிராகப் பலரையுடையராக இருந்தனர் என்பதும் அறியப் பெறும். அன்றி அடுக்களையில் உள்ள ஏவற்பெண்டிராகவும் இருக்கலாம். ஆனால் பெயர் இராஜவிச்சாதரி என்றிருப்பது அவள் குலவுயர்வைக் குறிப்பதாகலாம்.

குலோத்துங்கனுக்கு முந்தியவனாகிய இரண்டாம் இராஜராஜனது கல்வெட்டு கங்கைகொண்ட சோழபுரத்தானொருவன் ஆளுடைய பிள்ளையார் கோயில் முதற்பிரகாரம் திருமதில் எடுக்கப் பொன் கொடுத்ததையும், பொத்தப்பிசோழன் என்பவன் வீரபாண்டியனை வென்று அங்கிருந்த நடராஜமூர்த்தியைச் சீர்காழியில் கொண்டு வந்து வெள்ளிப் பரிசாக வழங்கியதையும் அறிவிக்கின்றது.

நில அளவை

நிலங்களை இப்போது இருப்பதைப் போலவே 100 குழி ஒரு மாவாகும். 20 மா ஒரு வேலியாகவும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் கணக்கிடப்பட்டிருந்தது. எனவே நில அளவை செய்து அதற்கேற்ப வரி வசூல் செய்தமையும் புலனாகிறது.

விலைக்கு விற்கின்றபோது அந்தக் காலத்திலுள்ள நிறைப் பொன்னையே குறிப்பிடுவது வழக்கம். வீரராஜேந்திரன் காலத்திய கல்வெட்டொன்று, "இராஜராஜப் பெருவிலை கொண்டு" என்று குறிப்பிடுகிறது.

"இராஜராஜன் மாடை'' என்ற நிறைகல் வழக்காற்றில் இருந்தது இங்கே நினைவூட்டத்தக்கது. நிலங்களுடைய பரிவர்த்தனை விற்பனை இவற்றில் புறவுவரி பார்ப்பாரும், கர்ணநாயகத்தாரும், பெருங்குறிச் சபையோரும் கையெழுத்திடுவது வழக்கம். நில விலையை ஆவணக்களரியின் முன்னிலையில் வாங்கிக் கொள்வது குறிப்பிடப்படுகிறது. கோயில்களுக்கு நிலம்

ஒதுக்குகின்ற காலத்து பசானம் (மசானம்) அந்தராளம் (இடைவெளி) இவற்றையும் இல்லிப்பூண்டும், இராவணன் தாடியும் முளைத்து இருக்கின்ற அலைவாயும் மணற்குன்றும், செம்படவர் குடியிருப்பும் இவற்றை விலக்கியே விற்பதும், இறையிலி செய்வதும் வழக்கம். நிலங்களை விற்கும்போது நிலத்தோடு நீராணிக்காரர்களையும் சேர்த்து விற்பதும் குறிப்பிடப்படுகிறது.

உருவ அமைப்பு

திருநட்டப்பெருமான் ஆளுடைய பிள்ளையாருக்கென்று வருவதால் ஞானசம்பந்தர் உருவம் ஒரு காலைத் தூக்கி ஒரு காலை ஊன்றி வலதுகைச் சுட்டுவிரலை நீட்டிக் கூத்தாடுகின்ற குழந்தையைக் காட்டும் திருவுருவ அமைப்பாக இருக்க வேண்டும்.

வீரராஜேந்திரன் (கி.பி.1055 1070)

இவன் இராஜமகேந்திரனுக்குப் பின் அரசை மேற்கொண்டவன். இவனுடைய ஆறாம் ஆண்டில் தொங்கு விளக்குகள் இரண்டு வைக்கவும், எரிக்கவும் செயங்கொண்ட சோழமண்டலத்துப் பழயனூரில் நிலம் விடுத்திருக்கிறான். அதேயாண்டில் குலோத்துங்க சோழவளநாட்டு திருநறையூர் நாட்டு வேளூர் வாசியான ஒருவரால் ஆளுடைய பிள்ளையார் கோயில் நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன.

இவனது ஆட்சியில் ஏழாம் ஆண்டில் திருத்தோணிபுர முடையார் பெரிய நாச்சியார் நிவேதனத்திற்காக ஸ்ரீபாததூளி சதுர்வேதி மங்கலத்து தென்பக்கத்துக் கிராமமான கிடாரங்கொண்ட சோழநல்லூரில் நிலம் வழங்கிய செய்தி அறிவிக்கப்படுகிறது. இன்னும் இராஜராஜ வளநாட்டு கருப்பூர் உதையஞ்செய்தான் தாழியான் சோழேந்திரசிங்க விழுப்பரையர் என்னும் அரசியல் அலுவலர் ஒருவர் பிரமதாயம் விதித்ததைக் குறிப்பிடுகிறது.

குலோத்துங்கன் II (கி.பி. 1133)

இவன் விக்கிரம சோழன் மகன். ஆசிரியரிடம் அன்பு நீங்காதவன். அநபாயன் என்று சிறப்பித்துப் பேசப் பெற்றவன். இவனுடைய மூன்றாம் ஆட்சியாண்டில் முதலாம் குலோத்துங்கன் தனது 18–ஆம் ஆட்சியாண்டில் கொடுத்த இறையிலி நிலம் தரிசாகக் கிடக்க அதனைத் திருத்தி வேறு ஒருவருக்கு அளித்தான்.

நான்காம் ஆண்டில் திருஞானசம்பந்த சுவாமிகள் கோயிலில் நெடுநாளாகவே தேவாரத் திருமுறைகள் எழுதி வைக்கப் பெற்றிருந்தன. அவற்றைப் பூசித்துக் கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப் பெற்றிருந்தார். திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளுதலும், பழுதடையின் அவற்றை எழுதிப் புதுப்பித்தலும், அவற்றைப் பூசிப்பதும் அவரது கடமையாகும். கிராமக் காரியம் பார்ப்பாரை இறையிலியாக நிலம் வேண்டிக் கொள்ள அவர் விருப்பப்படி நிலம் விடப்பட்டது. பத்தாம் ஆண்டில் ஜெயங் கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டு தலைச்செங்காட்டில் மும்முடிச் சோழன் பேரம்பலம் என்ற பொது மன்றத்தில் சபையார் கூடித் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாற்போனகத்துக்கு நிலம் விடப்பட்டது.

இராஜராஜன் II (கி.பி. 1176)

இவன் இரண்டாம் குலோத்துங்கன் மகன். இவனது இரண்டாம் ஆட்சியாண்டு நாள் இருநூற்றுப்பத்தொன்பதில் ஆளுடையப் பிள்ளையார் கோயில் திருப்பணிக்காகக் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள ஒருவரால் நிலம் விடப்பெற்றது. பதினோராம் ஆட்சியாண்டிலும் ஆளுடையப் பிள்ளையாருக்கு நிலம் விடப்பெற்றுள்ளது.

பன்னிரண்டாம் ஆட்சியாண்டில், ஆளுடைய பிள்ளையார் கோயிலில் எழுந்தருளுவித்திருந்த மங்கையர்க்கரசி நாச்சியாருக்கு நிவேதனத்திற்காக வீரசோழநல்லூரில் நிலம் விட்டமை குறிக்கப்பெறுகிறது. பதினெட்டாம் யாண்டில் நாலூரில் உள்ள ஒருவரால் திருநந்தவனப்புறமாக நிலம் அளிக்கப் பெற்றது. இருபத்து நான்காம் யாண்டு ஆநாங்கூரில் உள்ள ஒருவர் நந்தவனத்திற்கு நிலம் விட்டார் என்பதும் தெரிகிறது.

இராஜாதிராஜன் III (கி.பி. 1165)

இவன் 1162–இல் பட்டத்திற்கு வந்தாலும் நான்கு ஆண்டுகள் வரையில் இராஜராஜன் பெயராலே அரசாட்சி நடந்து வந்தது. இரண்டாம் இராஜராஜனுக்கு நேர் ஆண் மகவு இல்லாமையால், அமைச்சர்கள் அவன் ஆணையின் வண்ணம் தாயத்தானாகிய இவனைத் தேர்ந்தெடுத்தனர். இவன் மிகவும் வயதானவன். இவன்

பட்டமேற்ற பதினோராவது ஆண்டில் ஆளுடைய பிள்ளையார் கறியமுதுக்குப் பயிருக்கான வெண்மலைத் தலைவனான ஆட்கொண்ட நாயகன் நட்டபெருமான் என்பவனால் நிலம் விடப்பெற்றது.

குலோத்துங்கன் – III (கி.பி. 1176)

இவன் இரண்டாம் இராஜாதிராஜன் தம்பி, மதுரையில் நிகழ்ந்த கலகத்தை அடக்கி மதுரையைத் தமதாக்கித் திரும்பவும் விக்ரம பாண்டியனுக்கே கொடுத்து மீண்டான். இவனது மூன்றாம் ஆட்சியாண்டில் கும்ப ரவி பூர்வ பட்சத்துச் சப்தமி திங்கட்கிழமை கூடிய நாளில் தேவாரப் பண் இசைப்பார்க்கும், பயிற்றுவார்க்குத் தானமாக நிலம் விட்டான்.

9–ஆம் ஆண்டு 176–ஆம் நாளில், விளக்குக்காக நிலம் அளித்த செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் முதற் குலோத்துங்கனுடைய 15–ஆவது யாண்டில் நிலம் அளக்கப்பட்ட தென்றும், அதன்பிறகு அளக்கப்படவே இல்லை என்றும், மக்கள் கோயிலுக்கு வேண்டிய நிலங்களை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டே போனார்கள் என்றும், அறிவிக்கின்ற வாக்கியங்கள் அமைந்துள்ளன. முதற் குலோத்துங்கன் காலத்திலேயே நிலம் அளந்த செய்தியையே மேலும் ஒரு கல்வெட்டும் அறிவிக்கிறது.

11–ஆம் ஆட்சியாண்டில் பாண்டிய நாட்டிலே வீரபாண்டியன் விளைவித்த கலகங்களை அடக்கச் சென்றவர்களில் சீயகங்கன் மாமனரான பொத்தப்பிச் சோழனுமொருவன். இந்தச் சீயகங்கனே பவணந்தி முனிவரை நன்னூல் இயற்றச் செய்தவன் ஆவன். இப்பொத்தப்பிச் சோழன் தனது வெற்றிக்கு அறிகுறியாக மதுரையிலிருந்து நடராச மூர்த்தியைக் கொண்டு வந்தான். சீர்காழியில் அதைப் பிரதிட்டை செய்வித்தான். நித்திய பூசைக்காக வேண்டும் நிலங்களையும் தானமாக விட்டான். 12–ஆம் ஆண்டில் ஆளுடையபிள்ளையார் கோயில் தேவகன்மிகள் கேட்டுக் கொண்டபடி, எதிரிலிச் சோழச்சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிச் சபையார் நிலம் அளித்தார்கள்.

14–ஆம் ஆண்டில் இராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேயமான திருக்கழுமலத்து, இராஜராஜ வளநாட்டு நடுவில் நாட்டு ஆனாங்கூர் குன்றைக்கிழான் மகளும் பேத்தியுமான

இருபெண்களால், தங்களுக்கும் தங்கள் கணவருக்கும் நன்றாக நந்தவனப்புறமாக நிலம் அளிக்கப் பெற்றது. இந்நிலங்கள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மேல்மலை பழயனூர் நாட்டுப் பழயனூரும், சுற்றமலைவளநாட்டு மேட்டூர் நாட்டு ஒழுகரை என்கின்ற குலோத்துங்க சோழ நல்லூரும் அதேயாண்டில் அரசு சுற்றமான எதிரிலிப்பெருமான் என்பார் கோயிலுக்கு வைத்த நிவந்தத்தை நந்திமங்கலம் கிழான் சூரியதேவன் அபகரித்துக் கொள்ள முறைப்பாடு உண்டானபோது, கணக்கனும் சபையோரும் சேர்ந்து நிலத்தை மீட்டு அளித்தனர்.

17–ஆம் ஆண்டில் ஆளுடைய பிள்ளையாருக்குக் குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் நந்தவனத்திற்கும் அதன் பராமரிப்புக்குமாக நிலம் அளித்தார்கள். 27–ஆம் ஆண்டில் ஆளுடையபிள்ளையார் கோயிலுக்காக இராஜாதிராஜ வளநாட்டுத் திருவாலியான எதிரிலிச் சோழச் சதுர்வேதி மங்கலத்துத் திருமுல்லைவாயில் நிலங்களை இறையிலியாக அளித்ததும் தெரிகிறது.

இராஜராஜன் III (கி.பி. 1216)

இவன் மூன்றாங் குலோத்துங்கனின் மகன் தனது தகப்பனைப் போலச் சிறந்த நிர்வாகம் இல்லாததால் மதுரையிலிருந்து சுந்தரபாண்டியன் படையெடுத்து வந்தான். தன் மாமனான கோசளன் உதவியால் போரில் வென்றான். இவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டில் இராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமலத்தைப் பற்றியும் இராஜராஜேஸ்வரமுடைய திருக்கோயிலைப் பற்றியும், குலோத்துங்கன் 35–ஆம் ஆண்டு குறிப்பு மீண்டும் எழுதப் பெற்றுள்ளன.

8–ஆம் ஆண்டில் இராஜாதிராஜ வளநாட்டுத் திருவாலியான மும்முடிச் சோழ சதுர்வேதி மங்கலத்துப் பனங்குடியில் நிலம் விற்றமையும், திருத்தோணிபுரம் உடையார்க்கு நிலம் இறையிலியாக அளித்தமையும் குறிக்கப்பெறுகின்றன. இதில் நெறியுடைச் சோழ மூவேந்தவேளான் என்ற அதிகாரி குறிப்பிடப்பெறுகிறான்.

17–ஆம் ஆண்டு 258–ஆம் நாள் தோணிபுரத்துத் திருக்கோயிலுக்கு ஆளுடைய நாயனார் பருகப் பொன் வட்டில் அளிக்கப் பெற்றது என்ற செய்தியும் கல்வெட்டால் அறியலாம்.

கோப்பெருஞ்சிங்கன் III (கி.பி. 1243)

இவன் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்படுகிறான். மூன்றாம் இராஜராஜனிடம் சிற்றரசனாகத் தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தான். நேரம் பார்த்துத் தம்முடி மன்னனோடு சண்டையிடத் தலைப்பட்டான். கி.பி.1243–இல் 'சகல புவன சக்கரவர்த்திகள்' 'அவனியாளப் பிறந்தான்' முதலிய பல விருதுகளைச் சூடிக் கொண்டான். இவன் ஆட்சியாண்டு 19–இல் ஜயங்கொண்ட சோழவள நாட்டுக் கூடலூரான் ஒருவனால் வெண்ணியூர் நாட்டு ஓலையாமங்கலம் என்னும் கிராமம் வாங்கியளிக்கப் பெற்றது. தானும் திருத்தோணிபுரமுடைய நாயகர்க்கு நிலம் விட்டான். திருக்கைகோட்டித் திருப்பதிக மோதுவார்க்கு இறையிலியாக நிலம் அளித்தான்.

வீரவிருப்பண்ண உடையார்

கி.பி. 377–க்குப் பின் புக்கண அரசர் விஜயநகரம் என்ற பட்டினத்தை உண்டாக்கினார். அவருக்குப் பின் அவர் மகன் இரண்டாம் அரிகரன் பட்டம் ஏற்றான். தென்னாட்டுப் பிரதிநிதியாக வீரவிருப்பண்ண உடையாரை நியமித்திருந்தான். இவர் சகம் 1315–இல் தில்லைவிடங்கநல்லூரில் சில பட்டர்களுக்கும், சீர்காழியிலுள்ள திருநெறிமாளிகை மடத்துக்கும் மடப்புறமாக நிலம் விட்டார் என ஒரு கல்வெட்டு கூறுகிறது. சகம் 1319–இல் ஈசுவர வருஷம் பங்குனி மாதம் மண்டபத் திருப்பணிக்காகத் தனிப்பட்ட ஒருவன் நிலம் அளித்திருக்கிறான் என்ற செய்தியும் மற்றொரு கல்வெட்டால் அறியமுடிகிறது.

கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509)

இவர் விஜயநகரப் பேரரசின் பெருமன்னர். "வீரப்ரதாப கிருஷ்ணதேவ மகாராய" என்று சிறப்பிக்கப்படுகிறார். மனைப் பகுதிக்கு வரியாக ஆண்டுதோறும் பத்துப் பொன் கோயிலுக்குக் கட்டி வர உத்தரவிட்டிருக்கிறார்.

வேங்கடதேவராயர் (கி.பி. 1613)

இவர் சகம் 1520–இல் ஆபதுத்தாரணர் அபிஷேகத்திற்காக நிலம் அளித்திருக்கிறார்.

பிற கல்வெட்டுகள்

கோடல் வசவன நாயக்கன் மகன் இராமப்ப நாயக்கன் நிலம் விட்ட செய்தியை அறிவிப்பதும், இன்னாரது என்றறியமுடியாத கல்வெட்டுகள் பலவும் உள்ளன, அவற்றில் ஒன்று திருவாலி என்னும் மும்முடிச் சோழச் சதுர்வேதிமங்கலத்து நிலம் விட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. சகம் 1313–இல் பிரஜோத்பத்தி ஆண்டு மகர மாதம் திருதியை வெள்ளி சதய நாள் திருஞானசம்பந்தர் மடத்திற்கு நிலம் விட்ட செய்தியை அறிவிக்கிறது.

மேலும் ஒரு கல்வெட்டு சகம் 1300–இல் நிலம் விட்ட செய்தியையும், சித்தார்த்தி ஆண்டு துலா மாதம் செவ்வாய்கிழமை தேவதானமாக நிலம் விட்ட செய்தியையும் அறிவிக்கிறது.

ஆளுடையபிள்ளையார் பூசைக்காக நிலம் விட்டதையும், ஒரு கல்வெட்டு ஆரனூர் இணச்சியப்ப அகாவல்லபன் மூன்று தூண்களை அளித்த செய்தியையும், ஆளுடையபிள்ளையார் கோயில் திருப்பணிக்காகவும் நந்தவனப்புறமாகவும் நிலம் விட்ட செய்தியையும் அறிவிக்கின்றன.

சகம் 1410–இல் கோனேரி தேவ மகாராஜா என்பவர் சீர்காழி கோயிலுக்கு நிலம் விட்டார் என்பதை அறிவிக்கிறது ஒரு கல்வெட்டு. இவர் யார் என்பது அறியச் சான்று ஒன்றும் இல்லை.

ஒரு கல்வெட்டில் விட்டல தேவமகாராஜ பெற்ற விருதுகள் குறிக்கப்படுகின்றன. இவ்விருதுகள் மேலைச் சாளுக்கிய மன்னர்களது கவிகளிலும் காணப்படுமாதலால், சிதைந்த இக்கல்வெட்டு அவர்களுடையதாக இருக்கலாமோ என்று கருதலாம். இத்தலத்தில் பாண்டியரைப் பற்றியதான கல்வெட்டுகள் ஒன்றும் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவாவடுதுறை ஸ்ரீகோமுக்தீஸ்வரர் திருக்கோயில்

தலமும் இருப்பிடமும்

தமிழ்நாட்டில் உள்ள சிவாலயங்களுள் தேவாரப் பதிகங்கள் பெற்ற தலங்கள் மிகவும் சிறப்புடையனவாகப் போற்றப்படுகின்றன. அவற்றுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றினும் சிறந்து விளங்கும் திருவாவடுதுறையும் மிகுந்த சிறப்புடைத் தலமாகும்.

இத்தலம் மயிலாடுதுறை–கும்பகோணம் இருப்புப் பாதையில் உள்ள நரசிங்கன்பேட்டைப் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே 2 கி.மீ. தொலைவிலும் மயிலாடுதுறை–கும்பபோணம் கற்சாலையில் குத்தாலம் பேரூராட்சியை அடுத்து திருவாலங்காடு எனும் பேருந்து நிறுத்தத்திலிருந்து தெற்காக ஒரு கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது காவிரியின் தென்பால் 36–ஆவது தலமாகப் போற்றப்பட்டு வருகிறது.

திருக்கோயிலின் முன்னால் காணப்படும் திருக்குளம் முக்தி தீர்த்தம் எனப் போற்றப்படும் கோமுக்தி தீர்த்தமாகும். கைவல்ய தீர்த்தம்– இது காவிரித்துறையில் உள்ளது. பத்மதீர்த்தம் – இது கொங்கணேசுவரர் கோயிலின் வடபாகத்தில் உள்ளது. இத்தலத்தின் தலவிருட்சம் அரசமரமாகும். படரரசு எனவும், நிலவரசு எனவும் வழங்கப்படுகிறது. சபை போதியம்பலம் என்றும், அரசம்பலம் என்றும் வழங்கப்படுகிறது.

தலப்பெருமை

1) பசு வடிவாக இருந்த உமாதேவியார் இவ்விறைவனை வழிபட்டுப் பசுரூபம் நீங்க இறைவன் உமையை அணைத்தெழுந்து நின்று காட்சி கொடுத்தருளினார்.

2) தேவர்களும், முனிவர்களும் வேண்டியதற்கிணங்க இறைவன் இவ்வரச மரத்தின் நிழலில் அமர்ந்து அம்பலத்தில் தாண்டவம் புரிந்தருளினார்.

3) புத்திர பாக்கியமளித்து முசுகுந்த சக்கரவர்த்திக்குத் தியாகேசராகக் காட்சி கொடுத்தும், சுந்தர நடனம் நிகழ்த்தியும் அருள் செய்தார்.

4) தரும தேவதையை இடபமாகக் கொண்டதன்றித் தம் சந்நிதியில் இருக்கும்படி பணித்தார்.

5) திருமூலர்; ஆகமங்களின் சாரமான திருமந்திரம் எனும் நூலை இத்தலத்தில் அருளினார்.

6) திருஞானசம்பந்தருக்குப் பூத கணத்தின் மூலம் இத்தலத்துப் பெருமான் பொன் உலவாக் கிழியினை வழங்கியருளினார்.

7) முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும் சிவபெருமான் சிவஞான உபதேசம் செய்தது.

8) போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்கு அட்டமாசித்தி களை அருளியது.

9) திருமாளிகைத்தேவருக்கு அம்பிகையின் வேண்டுகோளுக் கிணங்கி சிவபெருமான் அருள்புரிந்தது.

10) சமயாச்சாரியார்கள் நால்வரால் பாடல் பெற்றமை.

11) இப்பெருமானின் அருளால் சித்தர் சிவப்பிரகாசர் ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகளை இவ்வாதீனப் பிரதம பரமாசாரியராக விளங்க வைத்துத் தொடர்ந்து செந்தமிழ்ப் பரிபாலனமும் சித்தாந்த சைவ பரிபாலனமும், செய்து வரச் செய்தார். காலம் 14–ஆம் நூற்றாண்டு.

12) இவ்வூரில் திருமடமும், திருக்கோயிலும் அருகிலேயே வரலாற்றுப் புகழுடன் நின்று நிலவுகின்றன.

கல்வெட்டுகள்

இத்திருக்கோயிலில் பிற்காலச் சோழ மன்னர்களாகிய முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், அவனது மகனாகிய விசயராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜதேவன் முதலானோரின் கல்வெட்டுகளும், பாண்டியர்களுள் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. இக்கோயிலில் முப்பது கல்வெட்டுகளுக்கு மேல் உள்ளன.

திருக்கோயில் எடுப்பித்த காலம்

இத்திருக்கோயிலில் தில்லைச் சிற்றம்பலத்தை பொன் வேய்ந்த முதற் பராந்தக சோழன் காலத்தில் பொறிக்கப் பெற்ற ஒன்பது கல்வெட்டுகள் இருக்கின்றன. இப்பராந்தக சோழன் கி.பி. 907 முதல் 948 வரை சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்தார். இவன் தனது முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி.945) 500 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். அப்பொன்னைக் கொண்டு இக்கோயில் குமுதப்படை பீடத்துக்கு மேல் திருப்பணி செய்யப்பட்டது. எனவே இத்திருப்பணி முடிவு பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டும். எனவே கி.பி. 947–இல் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தே இன்றைக்கு சுமார் 1053 ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயில் கற்றளியாக ஆக்கப் பெற்றதாகும் என்பதை அறியலாம்.

கற்றளியாக எழுப்பியவன்

முதல் பராந்தகன் காலத்தில் இக்கோயிலைக் கருங்கற் கோயிலாகக் கட்டியவன் கற்றளிப் பிச்சன் என்பவன். இவன் உருவம் கர்ப்பகிருகத்தின் தென்புற தேவகோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி திருவுருவத்திற்குக் கீழ்ப்புறத்தில் கைகளை மார்பிற்கு நேரே வைத்து குவித்து திருவாவடுதுறை உடையாரை வழிபடும் நிலையில் அமைந்துள்ளது. கற்றளிப் பிச்சன் என்று அவனது தலைக்கு மேல் செதுக்கப்பட்டுள்ளது. (பிச்சன் – பேரன்புள்ளவன் எனப் பொருள் படும்) 'நின்கோயில் வாயிலில் பெரிய பிச்சனாக்கினாய்' என்பது திருவாசகம்.

இக்கற்றளிப் பிச்சன் பிரதிமத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வழிபடும் மற்றொரு உருவம் இருக்கின்றது. இவன் கற்றளிப் பிச்சனார்க்கு இளையவன் திருநாவுக்கரைய தொண்டராவர். இவர்கள் இருவரும் சோழர் காலத்தில் கோயில் திருப்பணி செய்யும் தேர்ந்த கல்தச்சர் ஆவார்.

கற்றளிப் பிச்சனார் இக்கோயிலைக் கட்டினார் என்பதற்கு ஆதாரங்கள்

"ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேஸரி வன்மற்கு யாண்டு இருபத்தைந்தாவது தென்கரைத் திருவழுந்தூர் நாட்டுப்

பிரம்மதேயம் சிற்றானைக்கச்சூர்ச் சபையோம். இவ்வூர் கவிசங்கரன் மாறனிடைத் திரைமூர் நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை கற்றளி எடுத்த பித்தன் மஹாதேவருக்கு உவச்சப்புறமாக விலைகொண்ட நிலம் பதினொருமாச் செய்யும்'' என்னும் கல்வெட்டுப் பகுதி விளக்குகின்றது. இக்கல்வெட்டுப் பகுதி கோஷ்டத்தில் உள்ள அகத்தியர் திருவுருவத்திற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கிறது. உவச்சர் என்பார் சங்கு, காளம் இவைகளை ஊதுபவர். புரம்–நிவந்தம். உவச்சபுரம் என்பது சங்கு, காளம் இவைகளை ஊதுபவர்களுக்கு நிவந்தமாக அளிக்கப்பெற்றது எனப் பொருள்படும்.

கோயிலின் சில பகுதிகளைச் செய்வித்தவர்கள்

அர்த்தமண்டபத்தின் வலதுபக்கம், துர்க்கா தேவிக்குக் கிழக்குப் பக்கத்தில் திருவாவடுதுறை உடையாரைத் தொழுபவராக ஒரு ஆடவரின் உருவமும், அவ்வுருவத்திற்குப் பக்கத்தில் ஒரு அம்மையாரின் உருவமும் இருக்கின்றன. இவர்கள் இக்கோயிலில் ஒரு படை (கோயில் உறுப்பு) செய்வித்தவர் ஆவர். இவ்வுருவங்களுக்கு அருகில் ''இக்கோயிலில் ஒரு படை செய்விச்சு நின்றான் வாமபூசலுடையான் எழுவன் சந்திரசேகரன் இவன் பின்பே நின்றான் பெரிய வேளத்து வானல்லடிகள் நக்கன்'' என்று பொறிக்கப் பட்டுள்ளது.

அர்த்தமண்டபத்தின் தென்பாகத்தில் பிள்ளையார் திருமேனிக்குக் கிழக்குப் பக்கத்தில் ''கல்கட்டுவித்தார் பல்லவ மகா தேவியார் சிவகாமு'' என்று செதுக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வம்மையாரும் இப்பகுதியைக் கட்டுவதற்கு உதவி செய்தவர் ஆவர்.

கர்ப்பக்கிருகத் தெற்குப்புற தேவகோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தித் திருமேனிக்கு மேற்குப்பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கும் வண்ணம் ஒரு பிரதிமம் இருக்கிறது. அதன்கீழ் ''ஸ்ரீதிருவாவடுதுறை உடையார் அடியான் அம்பலவன் திருவிசலூரான் திருநாவுக்கரையன்'' என்று செதுக்கப்பட்டுள்ளது. இவனும் இத்திருப்பணிக்கு உதவியளித்திட்டவன் ஆவான்.

இத்தட்சிணாமூர்த்திக்கு மேற்குப்பக்கத்தில் இருக்கும் பிரதிமம் ''மிறைக் கூற்றத்து வீரமாங்குடி உடையானது'' ஆகும். அர்த்தமண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் வாசலுக்கு வடபக்கம்,

மார்பில் கைகளைக் குவித்துக் கொண்டு இறைவனை வழிபடும் நிலையில் செதுக்கப்பட்டு இருக்கும் பிரதிமம் திருநரையூர் நாட்டுச் சிற்றடியான் தாமன் அம்பலவனான நமசிவாயனுடையதாகும்.

கல்வெட்டுகளில் இறைவன் இறைவி திருப்பெயர்கள்

கோமுக்தீசுவரர், மாசிலாமணீசர், கோகழிநாதர், அணைத்தெழுந்த நாயகர், பூகயிலேசுவர், புத்திரத் தியாகர், போதிவன நாதர், போதியம்பலவாணர், மகா தாண்டவேசுரர், அர்த்தத்தியாகர், முக்தித் தியாகர், சிவலோக நாயகர், திருவாவடுதுறை உடையார் என்றும். திருவாவடுதுறைப் பரமசாமி, திருவாவடுதுறை ஆழ்வார் எனும் இப்பெயர்கள் கல்வெட்டுகளிலும் வழங்கப்படுகின்றன. அதுலகுச நாயகி, ஒப்பிலாமுலையம்மை, ஒப்பிலாள் என்று அம்மை இத்தலத்தில் போற்றப்படுகிறாள்.

மிகப் பழங்காலத்தில் இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனிகள்

'திருச்சிற்றம்பலத் திருமேனி முதல் ஆடி அருளும் உடையாரும், ஆட்டத்திற்கு வாசிக்கும் பூதம் உள்ள பீடமும் பிரபையும் (திருவாசி) உட்பட முழ உயரத்து ஒருவர். இவர் நம்பிராட்டியர் பீடமும் பிரபையுமுள்பட இருந்த ஒரு முழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர்' என கல்வெட்டில் வரக் காணலாம்.

இக்கோயில் முன்மண்டபத்தில் "தச்ச முழம்" என்ற அளவைக்கோல் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது. இது சோழர் கால நீட்டல் அளவைக் குறிக்கும் அளவுகோல் ஆகும். மேலும் திருமடத்தில் தஞ்சையை ஆண்டுவந்த மராட்டிய மன்னர்கள், அரசிகள் உருவங்களின் வண்ண ஓவியங்களும் சுவர்களில் எழிலாகத் தீட்டப்பட்டுள்ளன. எனவே பக்தியும், வரலாறும் இங்குள்ள திருக்கோயிலிலும் திருமடத்திலும் பழந்தமிழரின் புகழுக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. இங்குள்ள சரஸ்வதி பண்டாரம் எனும் நூலகம் தமிழகத்தின் பெரிய நூலகங்களுள் ஒன்றாகும்.

திருநீடூர்

மயிலாடுதுறை – வட்டத்தில் அமைந்துள்ள ஊர். மணல் மேட்டுக்கு செல்லும் சாலையில் உள்ளது. தெற்கு வடக்காக நெடிதாக நீண்டு அமைந்துள்ளதால் இதற்கு நீடூர் என்று பெயர் வந்தது.

மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் வடக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஊழிக் காலத்தும் இத்தலம் அழியாது நீடித்திருக்குமாதலின் இஃது 'நீடூர்' என்று பெயர் பெற்றதென்பர். தலமரம் மகிழம் ஆதலின் மகிழவனம், வகுளாரண்யம் எனவும் பெயர்களுண்டு. இசுலாமியர்கள் அதிகம் வசிக்கின்றனர். பெரிய பள்ளிவாசலும், அரபிக்கல்லூரியும் இங்கு உள்ளன.

இந்திரன் காவிரி மணலைப் பிடித்து வைத்துப் பூசித்த லிங்கம். இதுவே இறுகி வெள்ளையாக மாறியது. பின்னால் நண்டு பூசித்ததும் அதன் காற்சுவடு இலிங்கத்தில் பதிந்தது. இங்கு வழிபட்ட இந்திரனுக்கு அம்பாள் அருள்புரிந்ததாகத் தலவரலாறு சொல்லப் படுகிறது.

இறைவன் – அருள் சோமநாதேஸ்வரர், இறைவி–ஆதித்ய அபயப்ரதாம்பிகை, வேதநாயகி, வேயுறுதோளியம்மை, அப்பர், சுந்தரரின் தேவாரப் பாடல் பெற்றது. முகப்பு வாயிலைக் கடந்தவுடன் நேரே அம்பாள் சந்நிதி. துவார விநாயகராக சிவலோக கணபதி உள்ளார். அவரை வணங்கி வாயிலைக் கடந்து சென்றால் நேரே மூலவர் சந்நிதி. சோமநாதரின் சுந்தரத் தரிசனம் மனத்திற்குச் சாந்தியைத் தருகின்றது.

மூன்றாம் இராசாதிராசன் காலத்திய கல்வெட்டில் இவ்வூர் ராஜசிகாமணிச் சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டதாக தெரிகிறது. மேலும் கந்தமாதவன் என்பவரால் விமானம் கட்டப்பட்டதாகவும் தெரிகிறது. ஊர் சபை கூடிச் சட்டங்களைத் தொகுத்ததாகவும் செய்திகள் தெரியவருகின்றன. சோழர் கலைக்கு இக்கோயில் உதாரணமாகும்.

(ii) வரலாற்றுச் சிறப்புடைய சிவத்தலங்கள்

திருப்புன்கூர்

மயிலாடுதுறை வட்டத்தில், மணல்மேடு பேரூராட்சியிலிருந்து வைத்தீஸ்வரன் கோயில் செல்லும் சாலையில் தொன்மையான கோயில் உள்ள இவ்வூர் அமைந்துள்ளது. மயிலாடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய நகரங்களில் இருந்து இவ்வூருக்கு பேருந்துகள் செல்கின்றன. கி.பி. 5–ஆம் நூற்றாண்டிற்கு முன்பு நாகை மாவட்டத்தில் திருபுன்கூர் என்னும் இத்தலத்திற்கு மேற்கே சுமார் மூன்று மைல் தொலைவில் தற்போது மேல் ஆதனூர் என்றழைக்கப்படும் ஊரில், விவசாய குடும்பத்தில் (தாழ்த்தப்பட்ட பரம்பரையில்) நந்தனார் எனும் சிவனடியார் தோன்றினார்.

இளம்பருவத்திலேயே அந்த ஊரிலுள்ள பிராமணர்களுடைய பழக்க வழக்கங்களையும், ஆண்டவனுக்கு அவர்கள் செய்து வருகின்ற வழிபாட்டு முறைகளையும் கண்டு வியப்புற்று, தானும் அதே வழியை கடைப்பிடிக்க எண்ணினார். சிவாலயங்களை வணங்கி அவ்வாலயங்களின் மத்தளம் முதலியவைகளுக்கு வாரும், தோலும் சுவாமிக்கு கோரோசனையும் சேர்த்துக் கொடுத்து வந்தார்.

அவர் பல நாட்கள் திருப்புன்கூருக்கு திருசிவலோக நாதனை தரிசிக்கும் பொருட்டு வந்து, தான் பஞ்சம ஜாதியினராதலால் தேரடியில் நின்றார். ஆலயத்தில் இறைவனை மறைத்துக் கொண்டு மலைபோல் நந்தி ஒன்று இருக்கக் கண்டு இறைவனை தரிசிக்க முடியாமல் வருந்தி சிவலோகநாதரைப் பார்த்துப் பாடினார். இறைவனும் நந்தனார் மீதிரங்கி நந்தியை விலகச் சொன்னார்.

"சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம் நீ
நற்றம்புரிய நம்மிடதிரு நாளைப் போவார் வந்திருக்கின்றார்"

என்றார். நந்தியும் விலகியது. நந்தனார் சிவலோகநாதரைக் கண்டார்.

கல்வெட்டுகள்

பண்டைய மன்னர்களின் கல்வெட்டுகள் பல இங்கு இருந்துள்ளது. அவை கோயிலைப் புதுப்பிக்கும்போது மிகுதியானது

மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. முதல் பிரகாரத்தின் கிழக்குப்பக்கச் சுவரிலிருந்து ஐந்து கல்வெட்டுகளின் குறிப்பை தென்னிந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினர் பதிவு செய்து இருக்கின்றனர். இந்த கல்வெட்டுகளிலிருந்து பல்லவ மன்னர்களான சகல புவன சக்கரவர்த்திகள், கோப்பெருஞ்சிங்க தேவர் முதலியோர் இக்கோயிலோடு தொடர்பு கொண்டிருந்ததாகவும், பாண்டி குலாசனி வளநாட்டின் ஒரு பகுதியாக கிளியூர் நாட்டிலுள்ள குறிச்சி என்ற கிராமவாசி இங்குள்ள சுவாமிக்கு திருமஞ்சனத்துக்கும் பூமாலைக்கும் நிலங்கள் நன்கொடை கொடுத்ததாகவும் இறைவனை சிவலோக முடைய நாயனார் என்று அழைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. சோழ சாம்ராஜ்யத்தின் திரிபுவனச் சக்கரவர்த்தி, ராஜராஜன் முதலிய மன்னர்களின் காலங்களில் அதிக நிலங்கள் நன்கொடையாக சுவாமிக்குக் கொடுக்கப்பட்டதாகவும், இரண்டாவது தனிக்கோயில் இருந்ததாகவும் இதை விக்கிரம சோழன் கட்டியதாகவும் கல்வெட்டு களிலிருந்து தெரியவருகிறது.

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் கீழிருப்பு

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்காவில், பூம்புகார் சாலையில் மயிலாடுதுறையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் மணக்குடி என்ற ஊருக்கு கிழக்கே உள்ளது இக்கோயில். கோயிலுக்குரிய ராஜகோபுரம், முகப்பு மண்டபம், கொடிமரம், இறைவனுக்கு தனிச் சந்நிதி எதுவும் இல்லாமல் வெட்டவெளியில் ஒரு கீத்துக் கொட்டகையில் சுவாமி இருந்தார்.

சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் நடுநாயகமாக, பிரமாண்டமாக ஒரு சிவலிங்கத் திருமேனி. இவர்தான் சிதம்பரேஸ்வரர். நந்திதேவர், விநாயகர், பெருமாள், சிவகாமி அம்மை மற்றும் தண்டாயுதபாணி ஆகிய தெய்வ சிற்பங்களும் உண்டு. ஆனால், எதற்கும் முறையான சந்நதி இல்லை. ஒரு காலத்தில் இது மிகப்பெரிய ஆலயமாக திகழ்ந்திருக்கக் கூடும். பிரகாரங்களும், சந்நிதிகளும், மதில் சுவர்களும் இருந்ததற்கான தடயங்கள் இன்றும் இருக்கின்றன. இக்கோயில் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் கட்டப்பட்டதாகும்.

கல்வெட்டு ஆதாரப்படி சோழர்களை போரில் வென்ற சுந்தரபாண்டியன் காலத்தில் இந்தக் கோயில் பாதிக்கப்பட்டிருக்கலாம்

என்றும், அதன்பின் வந்த நாயக்க மன்னர்கள் இந்தக் கோயிலை பழைய நிலைக்கு கொண்டுவர முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் சோழ மன்னர்களின் நில தானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. செட்டிநாட்டுப் பிரமுகர்களும் ஒரு காலத்தில் இந்தக் கோயிலின் அறப்பணிகளுக்கு பெருமளவு உதவி செய்திருக்கிறார்கள். சங்க காலத்தில் இந்த ஆலயத்தில் நடந்த திருவிழாக்களில் நாட்டிய மகளிரின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் நடந்திருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது. சிதம்பரேஸ்வரரின் கருவறையைச் சுற்றி கருங்கல்லால் ஆன அடிபீடம் மட்டும் காணப்படுகிறது. இதன் அருகேதான் கல்வெட்டுகள் உள்ளன. இதன் மேலே கூரை போடப்பட்டிருக்கிறது. இவரது சன்னதியில் தீபம் ஒன்று தொங்குகிறது. ஒரு மணியும் உள்ளது. இவருக்கு எதிரே நான்கு கால்களையும் மடித்தபடி அமர்ந்துள்ளது சோழர்கால நந்தி.

பிரகாரம் வலம் வரும் வழியில், தலையில் ஜடாமகுடத்துடனும், காதுகளில் மகர குண்டலங்களுடன் காண்போர் வியக்கும் வண்ணம் விநாயகர் தரிசனம் தருகிறார். பிள்ளையாருக்கு அருகே அட்சர மாலை மற்றும் தாமரை மலரை பின்னிரு கரங்கள் ஏந்தியிருக்க, அபய வரத ஹஸ்தங்களாக முன்னிரு கரங்களுடன் அன்னை சிவகாமி அருள்கிறாள். சிதிலமடைந்த நிலையில் தண்டாயுதபாணி சிற்பம் ஒன்றும் உள்ளது.

இந்த சிதம்பரேஸ்வரர் கோயில் சென்னை திருப்பணி செம்மல் திருமதி. மகாலட்சுமி அம்மாள் மற்றும் உள்ளூர் பக்தர்களின் உதவியுடன் திருப்பணி வேலைகள் முடிவுற்று, திருக்குடமுழுக்கு சிறப்பாக நடந்துள்ளது. சோழர் கலையில் அமைந்த திருக்கோயில் களுள் இதுவும் ஒன்று. மேலும் இவர் நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பழமையான சிவன் மற்றும் பெருமாள் கோயில்களைப் புதுப்பித்து திருக்குடமுழுக்கு செய்து ஆன்மீகப்பணியில் மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருநின்றியூர்

திருநின்றியூர் என்றும், பேச்சுவழக்கில் திருநன்றியூர் என்றும் வழங்குகிறது. மன்னன் ஒருவன் கோயிலைக் கட்டும் விருப்புடன் இங்கு வந்து பூமியை இடித்தபோது குருதி பீறிட, தோண்டிப்

பார்க்கையில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டு, கோயிலைக் கட்டினான் என்பது தலவரலாறு. இடிபட்டமையால் இன்றும் சிவலிங்கத்தின் மீது உச்சியில் குழி இருப்பதைக் காணலாம். கோச்செங்கணான் கட்டிய மாடக்கோயில்களுள் இதுவும் ஒன்றாக விளங்கியது. நூறு ஆண்டுகளுக்கு முன் நகரத்தார் திருப்பணி செய்தபோது இதை இப்போதுள்ள அமைப்பில் மாற்றிக் கட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இறைவன்–லக்ஷ்மிபுரீஸ்வரர். இறைவி–லோகநாயகி, தலமரம்–விளாமரம். தீர்த்தம்–இலட்சுமி தீர்த்தம். மூவர் தேவாரப் பாடல் பெற்றது. பழைய கோயில், ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கொடிமரம் இல்லை. பலிபீடம் நந்தியும் கொடிமரத்து விநாயகரும் உளர்.

பிரகாரத்தில் செல்வப் பிள்ளையார் சந்நிதியுள்ளது. பரசுராமர் வழிபட்ட லிங்கமும். சுப்பிரமணியர், நால்வர், மகாலட்சுமி சிற்பங்கள் ஒரே சந்நிதியில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அடுத்து நவக்கிரக சந்நிதியும், பைரவர், சந்திரன் உருவங்கள் ஒரு சந்நிதியில் உள்ளன. வலம்முடித்து, துவார விநாயகரையும் தண்டபாணியையும் வழிபட்டு துவாரபாலகர்களைத் தொழுது, உட்சென்றால் நேரே சுவாமி சந்நிதியும் வலப்பால் அம்பாள் சந்நிதியும் உள்ளன. நாடொறும் இருகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆடி வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பழமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)

மயிலாடுதுறை வட்டத்தில் மணல்மேட்டிற்கு வடக்கே பழைய மண்ணியாற்றின் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. சோழ மன்னர்கள் காலத்தில் கற்றளியாக மாற்றம் பெற்றுள்ளது. சோழர்காலக் கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன. மக்கள் வழக்கில் இலுப்பைப் பட்டு என்று தற்போது வழங்குகிறது. இலுப்பை–தலமரம் ஆதலின் இப்பெயர் பெற்றது. இத்தலத்தருகே பண்டைக்காலத்தில் மண்ணியாறு ஓடியதால் 'பழமண்ணிப்படிக்கரை' ஆயிற்றென்பர். மதூகவனம் என்றும் பெயர் (மதூகம்–இலுப்பை; பற்று–ஊர்) இறைவன் விஷத்தைப் பருகியபோது உமாதேவி தன் கரத்தால் அவருடைய கழுத்தை ஸ்பரிசித்த தலம். பாண்டவர்கள் சித்திரைப் பௌர்ணமி நாளில் இங்கு வந்து பஞ்ச லிங்கங்களையும் வழிபட்டதாக புராண வரலாறு. பிரமனும், நளனும் இங்கு வந்து வழிபட்டதாக தலவரலாறு கூறுகிறது.

இறைவன் – நீலகண்டேஸ்வரர், முத்தீஸ்வரர், பரமேஸ்வரர், மகதீஸ்வரர், படிக்கரைநாதர். இறைவி – அமிர்தகரவல்லி, மங்களநாயகி, தலமரம்–இலுப்பை. தீர்த்தம்–பிரமதீர்த்தம், அமிர்த தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கிழக்கு நோக்கிய சந்நிதி. இத்தலத்திற்குரிய தலபுராணம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பட்டுள்ளது.

வரகடை சிவன் கோயில்

அமைவிடம்

நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா கொருக்கை வீரட்டேசுவரர் கோயில் அருகே வடக்கே 2 கி.மீ. தொலைவில் வரகடை கிராமத்தில் ஒரு பெரிய சிவன்கோயில் மண்டபங்களுடன் இடிந்து பூமியில் புதைந்து கிடக்கிறது. இந்த ஊரில் உள்ள திருப்பணி கமிட்டியினர் சார்பில் திரு. வாஞ்சிநாதன் அந்த கோயிலின் தல வரலாறு விவரம் குறித்து தொல்லியல் துறையினரிடம் கேட்டார். தொல்லியல் துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்பிட தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை காப்பாட்சியர் திரு. முத்துசாமிக்கு உத்தரவிட்டார். அதன் பேரில் காப்பாட்சியர் முத்துசாமி வரகடை கிராமத்திற்கு சென்று ஆய்வு செய்தார்.

பெயர்க் காரணம்

வரதன் என்றால் இளவரசன் என்று பொருள். கடை என்றால் அரண்மனை என்று பொருள். எனவே இளவரசர்களுக்கு சகல வித்தைகளும் இவ்வூரில் கற்றுத்தரும் இடம் இருந்ததால் வரகடை என்றழைக்கப்படுகிறது. வரகடை என்றால் முற்காலத்தில் சோழப்பேரரசின் இளவரசர்களுக்கு இங்கு இருந்த அரண்மனையில் போர் பயிற்சி, கல்வி பயிற்சி அளித்து, இந்த கோயிலில் இளவரசனாக முடிசூட்டும் திருவிழா நடக்கும் இடம் என்று பொருளாகும். இந்த ஊரில் அரண்மனையும் இருந்து அழிந்துவிட்டதற்கான தடயங்கள் காணப்படுகின்றன. அரசியர், இளவரசர்கள் நீராடும் இடம். இந்த பகுதியில் ஓடும் திருமண்ணி "அரண்மனைக் கோட்டை படித்துறை'' என்று அழைக்கப்படுகிறது.

தமிழ் வழிபாடு

இங்குள்ள சிவன் கோயில் முற்கால சோழர் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. மூலவர் உண்ணாழி, அம்மன் சன்னதி, வசந்த மண்டபம், திருச்சுற்று மாளிகை போன்றவை இடிந்து விட்டன. இங்கு முருகன் குமரப்பருவத்துடன் மயில் வாகனத்துடன் தனி சன்னதியில் காட்சி அளிப்பது சிறப்பு அம்சமாகும். சிவலிங்கத்தை தலவிருட்சமான கொன்றை மரத்தின் கீழ் உள்ள இடத்தில் பூசாரி மத்தளம் அடித்து, தேவாரம் பாடி வழிபாடு செய்து வைக்கும் காட்சியும், மூன்றாம் குலோத்துங்க சோழன் வழிபாடு செய்யும் அரிய காட்சியும் ஒரே பலகைக் கல்லில் புடைப்பு சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூலவர் மருந்தீசுவரரை மூன்றாம் குலோத்துங்க சோழன் தனது வயது முதிர்ந்த காலத்தில் (1178–1218) இங்கு வந்து தங்கி வழிபாடு செய்துள்ளது தெரியவந்துள்ளது.

எனவே கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் சிவன் கோயிலில் தேவாரம் பாடிய பிறகு பூசாரிகள் மன்னர்களுக்கு இறைவனின் காட்சி காட்டி திருநீறு அளித்துள்ளதும் புலப்படுகிறது. இடிபாடுகளில் சிக்கி மண்ணில் புதைந்திருந்த அரிய சிற்பங்கள், சிம்மத் தூண்கள், புராணக் காட்சி சிற்பங்கள் ஆகியன ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டன.

கல்வெட்டுகள் சிதைந்து போன நிலையில் உள்ளன. சோழர் கலைப்பாணியில் காணப்படும் இந்த திருக்கோயிலை அரசு உதவியுடன் கும்பாபிஷேகம் செய்ய திருப்பணிகள் நடைபெற உள்ளன.

கூறைநாடு அருள்மிகு சாந்தநாயகி சமேத புனுகீஸ்வரர் கோயில்

தனியூர்

மயிலாடுதுறை நகரின் மேற்குப் பகுதிக்கு கூறை நாடு என்று பெயர். கூறை சேலை என்பது திருமணத்தின்போது மணப்பெண்கள் அணிந்து கொள்வது. இது சங்ககாலம் முதல் தமிழர் வாழ்வில் இடம் பெற்றுள்ளது. விஜயநகர ஆட்சிக்காலத்தில் சாலியர் என்ற வகுப்பினர் உயர்ரக ஆடைகள் நெய்து அளித்தனர். அவர்கள் வந்து குடியேறிய பகுதியே தனியூர் என்றழைக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தம் குடும்பத்தோடு தங்கி துணி வணிகமும், கோயிலில் வழிபாடும் செய்து வருகின்றனர். இத்தலம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு

உறுதிப் பொருளையும் தரவல்லது. இத்தலத்தில் புனுகுப்பூனை இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றது என தல வரலாறு கூறுகிறது. இங்கமைந்துள்ள திருக்குளத் தீர்த்தம் பேரின்பங்களை அளிக்க வல்லது. இதில் நீராடுபவருக்கு மறுபிறவி கிடையாது என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

தலச்சிறப்புகள்

இக்கோயிலில் கருவறை பின்புறம் சுவரில் புனுகுப்பூனை சிவலிங்கத்தை வழிபாடு செய்யும் காட்சி புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

திருக்குளத்திற்கும் முன்மண்டபத்திற்கும் இடையே உள்ள இணைப்பு மண்டபத்தில் மராட்டியர் காலத்தில் தீட்டப்பட்ட 63 நாயன்மார்களின் ஓவியங்கள் காட்சி தருகின்றன. இங்கு நாயக்கர் கால கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. மேற்கு பார்த்த இராஜகோபுரம் நாயக்கர் கால கலைப்பாணியில் சுதைச் சிற்பங்களுடன் உள்ளது. கூறை நாடு என்பது சங்க காலத்தில் இருந்தே நெசவுத் தொழிலுக்கு பெயர் பெற்றது. பெண்கள் திருமணத்தின்போது அணியும் நூல்சேலையை தற்காலம் வரை 'கூரைச்சேலை' என்றுதான் வழங்கி வருகிறது. முன்காலத்தில் கூறைநாடு தனி ஊராக இருந்தது. இன்று வளர்ச்சி நிலையில் மயிலாடுதுறை நகரின் நடுமையப் பகுதியாக விளங்குகிறது.

அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை கைலாசநாதர் திருக்கோயில் – முருகமங்கலம்

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் குத்தாலம் பந்தநல்லூர் சாலையில் ஆலங்குடிக்குக் கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் முருகமங்கலம் எனும் வரலாற்றுப் புகழ்மிக்க ஊர் அமைந்துள்ளது. முருகமங்கலத்தில் கோயில் கொண்டு அருள்பாலித்து வரும் இறைவனின் திருநாமம் அருள்மிகு கைலாசநாதர் என்றும், இறைவி அருள்மிகு திரிபுரசுந்தரி என்ற திருநாமம் கொண்டு விளங்குகின்றனர். இக்கோயில் தலவிருட்சமாக வில்வ மரம் உள்ளது. சிவன் கோயிலின் எதிரில் உள்ள பெரிய குளம் கைலாசநாதர் திருக்குளம் என்றும், தீர்த்தம் 'அக்னி தீர்த்தம்' என்றழைக்கப்படுகிறது.

தலபுராணம்

சிவபெருமான் மணக்கோலத்தில் குத்தாலத்திலிருந்து தனது பரிவாரங்களுடன் புறப்பட்டுச் சென்று திருவெள்விக்குடி எனும் திருத்தலத்தில் வேள்விகள் பூர்த்தியானதும், மணவாளநாதராக அமர்ந்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு விக்கிரமன் ஆற்றின் கரையில் செல்லும்போது பெண்வீட்டார் எதிர்கொண்டழைத்த இடம் 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுகிறது. இதுவே தற்போது கொள்ளாப்படி என மருவிற்று. இறைவி கோகிலாம்பிகையைத் திருமணம் செய்து அருள்பாலித்த இடமே திருமணஞ்சேரி ஆகும். அன்னை உமாதேவியின் அம்சமான அம்பிகை மகப்பேறு உண்டானதால், அம்பிகைக்கு மலர் அலங்காரம் செய்து, வளையல் அணிவிப்பு நடந்த இடம் 'பூச்சூட்டி' என்ற உட்கிராமமாகும். இறைவன்–இறைவிக்கு மகப்பேறு வாய்த்த இடம் 'முருகவேல்மங்கலம்' என்றழைக்கப்பட்டது. இன்று வழக்கில் முருகமங்கலம் என வழங்கப்படுகிறது. கைலாசநாதர் திருக்கோயிலில் பாலமுருகனாகிய குழந்தைவேலனின் பஞ்சலோகத்திருமேனி இன்றும் மயில் வாகனத்துடன் காட்சியளிப்பது சிறப்பாகும். மேலும் இத்திருக்கோயிலில் உள்ள சிற்பங்கள், செப்புத்திருமேனிகள் சோழர்காலத்தின் கலைநயம்மிக்க எழிலுடன் காட்சியளிக்கிறது.

கல்வெட்டு

முருகமங்கலம் ஊரில் அமைந்துள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் மகாமண்டபத்தின் தெற்கு வாயில் நிலைக்கல்லில் சோழ மன்னரின் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் விநாயகர் சன்னதி, சுப்பிரமணியர் சன்னதி இவைகளின் நுழைவு வாயில் நிலைக்கற்களிலும் கிரந்த எழுத்தில் இரண்டு வரிகளில் விஜயநகரர்காலக் கல்வெட்டுகளும் உள்ளன.

இவ்விரு சன்னதிகளும் விஜயநகர அரசர் காலத்தில் கட்டி வழிபாட்டுக்கு அளிக்கப்பட்ட செய்தி தெரியவருகிறது. மகாமண்டபத்தில் உள்ள சோழர் கல்வெட்டு தஞ்சை மண்டலத்தை ஆண்ட இரண்டாம் இராசராச சோழனின் (கி.பி. 1146–1172) காலத்தைச் சார்ந்ததாகும். இம்மன்னனின் காலத்திலேயே இவ்வூரின் வடக்கே அமைந்த 'செங்கல்மேடு' என்றழைக்கப்படும் நஞ்சை சூழ்ந்த பெரிய

புஞ்சைத்திடல் பகுதியில் மேலும் ஒரு சிவன் கோயில் கட்டி வழிபாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அழிந்துபோன குடியிருப்புப் பகுதியில் தற்போது மூலவர் லிங்கம் மட்டும் காணப்படுகிறது. கோயில் இருந்து அழிந்த இடம் 'லிங்கத்து அடிமேடை' என்று மக்கள் கூறிவருகின்றனர். சமீபத்தில் பூமிக்கடியில் கிடைத்த ஒரு நீண்ட கல்லிலும் சோழர்காலக் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது.

கல்வெட்டில் ஊர் அமைதல்

திருவேள்விக்குடி அருள்மிகு மணவாளநாதர் திருக்கோயில் கல்வெட்டில்தான் 'முருகவேல்மங்கலம்' என்று இவ்வூரின் பெயர் காணப்படுகின்றது. அதுவே மருவி வழக்காற்றில் முருகமங்கலம் என அழைக்கப்படுகிறது.

செங்கல்மேட்டில் தற்போது கிடைத்த கல்வெட்டில் புதியதாக ஏற்பட்ட அவ்வூர் செம்பியன் திருநல்லூர் என்றும், இது திருக்குறுக்கை நாட்டிற்குட்பட்ட பகுதி என்றும் கூறப்பட்டுள்ளது. முருகமங்கலம், செம்பியன் திருநல்லூர் போன்ற ஊர்கள் இதன் கிழக்கே 4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வீரட்டேசுவரர் திருக்கோயில் அமைந்துள்ள ஊருக்குள் (அன்றைய வட்டம்) உட்பட்டிருந்ததும் தெரிகிறது. அதாவது சோழர் காலத்தில் (12–ஆம் நூற்றாண்டில்) இன்றைய மயிலாடுதுறை வட்டம் போல் திருக்குறுக்கை நாடு விளங்கியிருக்கிறது என்பதும் தெரிகிறது.

கல்வெட்டில் நிலம் தானம்

இக்கல்வெட்டில் இத்திருக்கோயிலில் அணையாவிளக்குகள் தினமும் தவறாமல் எரிப்பதற்கும், இறைவனுக்கு திருஅமுது படைப்பதற்கும் 5 வேலி நிலம் தானமாக அளிக்கப்பட்ட செய்தி தெரிகிறது. இதனை இவ்வூர் சபையார் கண்காணித்து வரவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) நவக்கிரகத்தலங்கள்

தமிழகத்தில் நவக்கிரக தலங்கள் ஒன்பது அமைந்துள்ளன. இத்தலங்களுள் 1. செவ்வாய் – வைத்தீஸ்வரன் கோயில், 2. புதன் – திருவெண்காடு, 3. கேது – கீழப்பெரும்பள்ளம் ஆகிய மூன்றும் நாகை மாவட்டத்தில் அமைந்துள்ளன. நாகைக்கு அருகில் உள்ள காரைக்கால் ஒட்டிய திருநள்ளாற்றில் சனீஸ்வரன் கோயில் உள்ளது, ஏனைய ஐந்து தலங்களும் தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளன.

திருவெண்காடு

இறைவன் பெயர் வடமொழியில் சுவேதாரண்யேசுவரர் என்று கூறப்படுகிறது. சுவேதாரண்யம், சுவேதவனம் என்றும் பெயருடைய தலம். இந்திரன் வெள்ளை யானையில் வந்து வழிபட்ட தலம். ஆச்சுதகளப்பாளர் மூலமாக மெய்கண்டார் அவதாரத்தை நாட்டுக்களித்து நலம் செய்தும், மூன்று தீர்த்தகுளங்கள் உள்ளதுமான பெருமைமிகு பதி, மிகப்பெரிய கோயில், சுற்று மதில்களுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இறைவன் – திருவெண்காடர், அகோரர், நடராசர், இறைவி– பிரம்மவித்யாநாயகி, துர்க்கை, காளி, சுவேதவனப் பெருமாள், பல்லவர்கால தனிச்சிற்பங்கள் உள்ளன. தலமரம் – ஆலமரம், அரசமரம், கொன்றை, வில்வம், தீர்த்தம்–சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள் வெளிப்பிரகாரத்தில் உள்ளன.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சியளிக்கிறது. கிழக்கு வாயிலில் பக்கத்தில் தேவஸ்தானம் நடத்தும் மெய்கண்டார் பாடசாலையுள்ளது. வழிபட்ட பிரமனுக்கு அம்பாள் வித்தையை உபதேசித்தாள். ஆதலின் அம்பாளுக்குப் பிரம்மவித்யாம்பிகை என்று பெயர் வந்தது. உள்பிரகாரத்தில் பிள்ளை இடுக்கி அம்பாள் என்ற பெயரில் நின்ற திருமேனியொன்றும் சுக்கிரவார அம்மன் சந்நிதியும் உள்ளன.

இத்தலத்துக்குரிய சிறப்பு மூர்த்தியாகிய அகோரமூர்த்தி நின்றமேனியராய். சூலத்தை இருகைகளிலும் சாய்த்துப் பிடித்து, எண்கரங்களுடையவராய்ச் சற்றுத் தலைசாய்த்து, முன்பின்னாகத்

திருவடிகளை வைத்து அகோரராக அற்புதமூர்த்தியாகக் காட்சி தருகின்றார். சலந்தரன் மகன் மருத்துவன். இவன் இறைவனை நோக்கித் தவம் செய்தான். இறைவன் காட்சி தந்து சூலத்தைத் தந்து அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தி அருள் செய்தார். ஆனால் மருத்துவனோ அதை தேவர்களை தவம் செய்யவொட்டாமல் துன்புறுத்தப் பயன்படுத்தினான். அறிந்த இறைவன் சினந்து நந்தியை அனுப்பினார். போர் தொடுக்கையில் மருத்துவன் மாயச் சூலத்தை அவர் மீது ஏவ, அச்சூலம் நந்தியின் உடலை ஒன்பது இடங்களில் துளைத்துவிட்டுப் போயிற்று. இதையறிந்த இறைவன் தாமே அகோரமூர்த்தியாக வடிவு கொண்டு வந்து அவனை அழித்தார் என்பது வரலாறு. அவ்வாறு அழித்த நாள் ஞாயிற்றுக் கிழமை பூரநட்சத்திரம், (மாசி மகத்து மறுநாள்) இதனால் இன்றும் இத்திருக்கோயிலில் ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 10 மணிக்கு மேல் (இரண்டாங்கால முடிவில்) அகோரமூர்த்திக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

இவ்வரலாற்றையொட்டிச் சுவாமி சந்நிதிக்கு எதிர் வெளியே உள்ள நந்தியின் உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம். கருவறை உட்புற, வெளிப்புறச் சுவர்களில் 70 –க்கு மேல் தலப்பதிகக் கல்வெட்டுகள் உள்ளன. சைவ எல்லப்ப நாவலர் இவ்வூர்க்கு தலபுராணம் பாடியுள்ளார். சிலப்பதிகாரத்தில் இத்தலத்தில் அமைந்த மூன்று தீர்த்த குளங்கள் குறிப்பிடப்படுகிறது. நான்கு பக்கமும் தேரோடும் பெரிய வீதிகள் உடைய ஊர். நவக்கிரகத் தலங்களுள் புதனுக்குரியது. பக்தர்களுக்கு முக்தியளிக்கும் ஏழு திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும். சங்ககாலம் தொடங்கி சுதந்திரமடைந்த பின்பு உள்ள காலம் வரை இக்கோயிலில் வரலாற்றுச் சான்றுகள் தொடர்ந்து காணப்படுகின்றன.எனவே ஆய்வாளர்கட்கும், பக்தர்கட்கும் ஏற்ற தனிச்சிறப்புத் தலமாகும்.

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (கேதுஸ்தலம்) கீழப்பெரும்பள்ளம்

தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளத்திற்குக் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் கீழப்பெரும்பள்ளம் அமைந்துள்ளது. மயிலாடுதுறை, சீர்காழி, கருவேந்திபுரம், தருமகுளம் ஆகிய இடங்களில் இருந்து பேருந்து சிற்றுந்துகளும், ஆட்டோக்களும் உள்ளன.

தல புராணம்

தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைய மந்திர மலையை மத்தாகவும், வாசுகி எனும் பாம்பைக் கயிறாகவும் பயன்படுத்தினர். வலி பொறுக்காத வாசுகி நஞ்சை கக்கியது. நஞ்சினைக் கண்டு அஞ்சிய தேவரும், அசுரரும் சிவபெருமானை வேண்டினர். சிவபெருமானும் அந்நஞ்சினை எடுத்து உண்டார். பார்வதி அந்நஞ்சு சிவனின் உள்ளே செல்லாதவாறு தொண்டையிலேயே தடுக்க, அந்நஞ்சு சிவபெருமானின் கண்டத்தில் தங்கியதால் நீலகண்டர் எனும் பெயர் பெற்றார்.

அமுதம் கிடைக்காத கோபத்தில் அசுரர் வாசுகியை வைக்கோற் பழுதையைப் போல் சுருட்டி எறிந்தனர். அது கடற்கரையினிடத்தில் இருந்த ஒரு மூங்கிற் காட்டில் வந்து விழுந்தது. உடல் நைந்து உயிர் போகும் நிலையில் இருந்த அப்பாம்பின் வாலில் இருந்து உயிர் தலைக்கேற அது பிழைத்துக் கொண்டது. சிவபெருமான் தன் நஞ்சினை உண்ணுமாறு ஆயிற்றே என உளம் வருந்திய வாசுகி அவரிடம் மன்னிப்புப் பெற வேண்டித் தவம் இருந்தது. சிவபெருமான் அதன் தவத்திற்கு இரங்கிக் காட்சி தந்தார். வாசுகி தன் பாவத்தைப் பொறுத்தருள வேண்டியதோடு, தான் தவஞ்செய்த மூங்கிற் காட்டில் கோயில் கொண்டு, அங்கு வந்து வழிபடுவோரின் கேது கிரக தொல்லைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென வேண்டிக் கொண்டது. அவ்வாறே சிவபெருமான் நாகநாதசுவாமி என்னும் பெயர் தாங்கி சௌந்தரநாயகி அம்மையுடன் இங்கு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார். வாசுகியின் வேண்டுகோளின்படி கேது கிரக தோஷங்களை நிவர்த்தி செய்வதாக தல வரலாறு கூறுகிறது. கோயில் இருக்குமிடம் நாகநாதன் கோயில் எனவும், வாசுகி தவம் செய்த இடம் மூங்கில் தோப்பு எனவும் இன்றளவும் பெயர் வழங்கி வருகின்றது.

சந்நிதிக்கு எதிரேயுள்ள நந்தியையும், பலிபீடத்தையும் வணங்கி மகாமண்டபத்தினுள் செல்லலாம். மகாமண்டபத்தையொட்டி அமைந்துள்ள கருவறையில் நாகநாதர் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். கருவறை வாயிலில் உள்ளார் சித்தி விநாயகர். அவரை வழிபட்டபின் அர்த்தமண்டபத்திலுள்ள உற்சவமூர்த்திகளான பஞ்சமூர்த்திகள், நடராசர் மற்றும் கேது ஆகியவைகளைக் காணலாம். திரும்பி மகாமண்டபத்திற்கு வரும்போது தெற்கு நோக்கியுள்ள சந்நிதியில் சௌந்தரநாயகியைத் தரிசிக்கலாம்.

திருப்பணி

பழமையான சோழர்காலத் துண்டுக் கல்வெட்டு ஒன்று வடக்கு மதில் சுவரின் கீழ் பகுதியில் உள்ளது. 14.05.1986–இல் இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு.என். விஜயபாலன் முன்னிலையில் நடைபெற்றதைத் தெரிவிக்கின்றது. அப்போது தக்கராக இருந்த திரு.ஆர்.கே. அரங்கநாதன் மிக முயன்று இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்துள்ளார்.

வைத்தீஸ்வரன் கோயில் (புள்ளிருக்கு வேளூர்)

தலமும் இருப்பிடமும்

தன்னை அடைந்தார்க்கு இன்பங்கள் தருவானாகிய இறைவன் தீராத நோய் தீர்த்தருளும் பொருட்டு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, ஸ்ரீவைத்தியநாதர் என்னும் திருப்பெயருடன் சிவலிங்கத்திருமேனி தாங்கி எழுந்தருளி இருக்கும் தலம் திருப்புள்ளிருக்குவேளூர் என்பதாகும். இது சோழநாட்டில் நாகை மாவட்டத்தில் உள்ள சீர்காழி தாலூக்காவில் உள்ளது. காவிரியின் வடரையிலுள்ள 63 தலங்களில் 16–ஆவது தலமாக உள்ளது. தென்னிந்திய இருப்புப் பாதையில் வைத்தீசுவரன் கோயில் என்னும் பெயருடன் ஒரு இரயில் நிலையமாகவும் அமைந்துள்ளது. தலயாத்திரை செய்வோர் தங்குவதற்கு வசதியாகப் பல சத்திரங்களும் மடங்களும் கட்டண விடுதிகளும் இருக்கின்றன. மயிலாடுதுறை யிலிருந்து சீர்காழி செல்லும் சாலையில் வடக்கே 20 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. நவக்கிரகத் தலங்களில் இது செவ்வாய் கிரகத்துக்கு உரியதாகும்.

தினமும் இரண்டு பறவைகள் கிழக்கே 12 கி.மீ. தூரத்திலுள்ள பெருந்தோட்டத்திலிருந்து மலர்கள் பறித்து வந்து சிவனைப் பூசித்தன என இலக்கியம் கூறுகிறது. இருக்குவேளிர் ஊர் என்பது சங்ககால வேளிர் இன மரபினர் வாழ்ந்த ஊர் எனும் சிறப்புத் தன்மையால் புள்ளிருக்குவேளூர் என்று பெயர் முன்னாளில் வழங்கி வந்துள்ளது. இன்றும் கோயிலுக்கு வேளூர் தேவஸ்தானம் என்றே பெயர் வழங்கப்படுகிறது. தற்போது இக்கோயில் இறைவன் பெயரால் வைத்தீஸ்வரன் கோயில் என்றழைக்கப்படுகிறது. இது தருமபுர

ஆதீனத்திற்குட்பட்ட திருக்கோயில்களில் பழமையும் பெருமையும் மிக்க தலமாக விளங்குகிறது. இவையன்றி வினை தீர்த்தான் கோயில், தையல்நாயகி தலம், வைத்தினாதன் கோயில் முதலான பற்பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்குகின்றன.

இறைவன்–வைத்தியநாதர், இறைவி–தையல்நாயகி, தலமரம்–வேம்பு, தீர்த்தம் சித்தாமிர்த குளம். இங்குள்ள முருகப் பெருமான் செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி மிகச் சிறப்பு வாய்ந்தது. திருஞானசம்பந்தர், அப்பர் தேவாரப் பாடல் பெற்றது. சித்தாமிர்த தீர்த்தம் என்பது சித்தர்கணம் இறைவர் திருமுடியில் அமிர்தத்தால் அபிஷேகித்தபோது அவ்வமிர்தம் வந்து இதில் கலந்தமையால் பெற்ற பெயர் ஆகும். இத்திருக்குளத்தில் தவளைகள் இருப்பதில்லை.

தலப்பெருமை

இறைவன் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் தீர்க்கத் திருவுளங்கொண்டு தையல்நாயகி அம்மையார் தைல பாத்திரமும், சஞ்சீவியும், வில்வமரத்து அடிமண்ணும் எடுத்துக்கொண்டு தம்முடன் வர வைத்தியராகி அருள் செய்திருக்கப் பெற்றதும், அறுசுவையோடு கூடிய உணவை அடியார்களுக்கு உண்பித்து மாகேசுவர பூசை செய்யப் பெறுவதும் பிறந்தாலும் இறந்தாலும் போகமோட்சங்களைக் கொடுப்பதுமாகிய பெருமையினை உடையது இத்தலம்.

நேந்திரப் பிடிசந்தனம்

ஸ்ரீசெல்வமுத்துக்குமாரர்க்கு அர்த்தயாம பூஜையில் சாத்தப்படுவது இது. பிறகு இதனை அணிபவர்களுக்கு வேண்டிய பலன்களைக் கொடுக்கவல்லதாகக் கருதப்படுகிறது.

சடாயுகுண்டம்

சீதாபிராட்டியை சிறையெடுத்துச் சென்ற இராவணனை வழிமறித்து, எதிர்த்துப் போராடி, இராவணனால் இறக்கைகள் வெட்டப்பட்டு இன்னுயிர் நீத்த சடாயுவின் வேண்டுகோள்படி இராமபிரான் இத்தலத்தில் (விபூதி குண்டத்தில்) சடாயுவின் உடலை வைத்துத் தகனஞ் செய்ததனால் இப்பெயர் பெற்றது. ஜடாயுவின் புடைப்புச் சிற்பமும், அதன் நினைவாக விபூதி தொட்டியுள்ள மேடையும்

கோயிலுக்குள் உள்ளது. வெளியே செவ்வாய் சன்னதிக்குப் பின்பாக இராமருக்கு தனிச் சன்னதியும் இக்கோயிலில் இடம்பெற்றுள்ளது புராண வரலாற்றை நமக்குத் தெரிவிப்பதாக உள்ளது.

திருச்சாந்துருண்டை

இது வைத்தியநாதரிடத்தில் நோய் நீங்கப் பெறுவான் வேண்டிப் பெறும் மாத்திரை. இதனை விரும்புவோர் சுக்கிலபட்சத்தில் நல்ல நாழிகையில் அங்கசந்தான தீர்த்தத்தில் நீராடி, நடுவிலுள்ள மிருத்திகையை எடுத்து, புதுப்பாத்திரத்தில் வைத்துக் கொண்டு ஆலயத்திற்கு வந்து விபூதி குண்டத்திலுள்ள விபூதியையும், சித்தாமிர்தத் தீர்த்த நீரையும், அதனுடன் கலந்து பஞ்சாட்சரம் செபித்துக் கொண்டே பிசைந்து, முத்துக்குமாரர் திருமுன்புள்ள குழியம்மியிலிட்டு அரைத்து, மிளகு அளவாக உருண்டைகள் செய்து, அம்மையார் திருவடியில் வைத்து அருச்சித்த பின்னர் முறைப்படி இறைவழிபாடு இயற்றி உருண்டையைச் சித்தாமிர்தத் தீர்த்தத்தோடு நியமமாகக் கலந்து உண்ணல் வேண்டும். அவ்வாறு உண்பவர்கள் தீராத வினைகளெல்லாம் தீர்ந்து முக்தியின்பத்தையடைவர் என்பது மக்களின் நம்பிக்கை.

தீர்த்தங்கள்

இத்தலத்தில் 1. சித்தாமிர்தத் தீர்த்தம், 2. கோதண்ட தீர்த்தம், 3. கௌதம தீர்த்தம், 4. வில்வ தீர்த்தம், 5. முனிவர் தீர்த்தம், 6. அங்கசந்தான தீர்த்தம், 7. ஆதிகாவிரி தீர்த்தம், 8. கபில தீர்த்தம், 9. சூரிய தீர்த்தம், 10. சூல தீர்த்தம், 11. சேடதீர்த்தம், 12. சோம தீர்த்தம், 13. தக்க தீர்த்தம், 14. பராசர தீர்த்தம், 15. பீம தீர்த்தம், 16. மிருதசஞ்சீவன தீர்த்தம், 17. வித்தியாதர தீர்த்தம் ஆகிய பதினெட்டு தீர்த்தங்கள் உள்ளன

தலவிருட்சம்

இத்தலம் 1) கிரேதாயுகத்தில் கதம்பவனம் என்றும், 2). திரேதா யுகத்தில் வில்வவனம் என்றும், 3). துவாபரயுகத்தில் வகுளவனம் என்றும், 4). கலியுகத்தில் நிம்பவனம் என்றும் பெயர் பெற்று விளங்குவதாகும். முதல் யுகத்திலுள்ள கடம்ப விருட்சமே மற்றைய மூன்று யுகத்திலும் முறையே வில்வம் முதலிய விருட்சங்களாகத் திரிந்தன என்று தல புராணம் கூறுகின்றது. இப்போது வேம்பு (நிம்ப

மரம்) தல விருட்சமாக உள்ளது. இது கீழைக்கோபுர வாயிலின் உட்புறம் இருக்கிறது. இதனை மக்கள் வேம்படிமால் என வழங்குகின்றார்கள். இதனடியில் ஆதிவைத்தியநாதர் எழுந்தருளியிருக்கின்றார்.

இக்கோயில் விளக்கு அழகுக்குப் பெயர் பெற்றது. 'வினை தீர்த்தான் கோயில் விளக்கழகு' என்பது பழமொழி. அர்த்தசாம பூஜையில் செல்லமுத்துக்குமார சுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு வழிபாடு நடைபெறும். இதற்குப் புழுகாப்பு என்று பெயர். இப்புழுகாப்பு தரிசனம் இங்குச் சிறப்புடையது. தமிழ் நில தெய்வமாகிய முருகப்பெருமானுக்கு ஆறு படைவீடுகளும், மேலும் தனி முருகப்பெருமான் தலங்கள் பலவும் உள்ளன. ஒவ்வொரு தலத்திலும் சிறப்பான பெருவிழாக்கள் நடக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மாதமும் கார்த்திகை விரத நாள் பெருவிழா இக்கோயிலில்தான் மிகச்சிறப்புடன் நடைபெறுகிறது. அப்போது முத்துக்குமார சுவாமிக்கு சந்தனக்குழம்பு நீராட்டு நடக்கும். பின்பு பக்தர்கட்கு சந்தனக்குழம்பு தீர்த்தம் வழங்கப்படும். எனவே திருக்கார்த்திகை விழா ஒவ்வொரு மாதமும் சிறப்பாக நடைபெறுவதால் முருகப்பெருமானின் ஆறுபடை வீடு – தலங்களுக்கு ஒப்பாக இத்தலமும் விளங்குகிறது.

கல்வெட்டுகள்

பழைமையான இக்கோயிலில் திருப்பணி செய்து வந்திருக்கிறார்கள். அதனாலேயே சில கல்வெட்டுகள் இடம் மாறியும் புதையுண்டும் பொடியுண்டும் போயினபோலும், இருக்கின்ற பல கல்லெழுத்துகளும் பிற்காலத்தன. மகாமண்டபத்து வடபக்கத்தின் உட்புறச்சுவரில் ஆங்காங்குச் சிறிது சிறிதாகக் காணப்பெறும் தொடர்ச்சியற்ற எழுத்துக்களின் குறிப்பால் கி.பி. 1120 முதல் 1136 வரை ஆண்ட விக்கிரமசோழன் காலத்தனவாக இருக்கலாம் என்று எண்ணப் பெறும். முதலிரண்டு பகுதிகளிற் காணப்படுகின்றன. மெய்க்கீர்த்திப் பகுதி சில இடத்திலுள்ளன.

அரசாங்கத்தால் படியெடுக்கப் பெற்றவை கல்வெட்டுகள் எட்டு. அவற்றில் தஞ்சை மன்னனாகிய அச்சுதப்ப நாயக்கன் காலத்தது ஒன்றும், துளஸா மன்னனுடையன இரண்டும், விக்கிரமசோழனது ஒன்றும், ஸ்ரீசக்கோலாதேவ மகாராசாவினது ஒன்றும், பெயரும் காலமும் தெரியாதன மூன்றும் ஆக எட்டுக் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது வீரபாண்டியனுடையதே ஆகும்.

விக்கிரம சோழன்

இவன் முதற்குலோத்துங்கன் மகன். இவன் இக்கோயிலுக்குச் செய்த பணி ஒன்றும் இதனால் விளங்கவில்லையாயினும், இவனைப் பற்றிய புகழாகத் 'திருவடி இரண்டு தன் முடியாகத் தென்னவர் சூட' முன்னும் மனுவாறு பெறுக, கலியாறு வறப்ப செங்கோல் திசைதோறும் செல்ல, வெண்குடை இந்நிலவளாகம் எங்கணும் தங்க வெண்ணிலாத் திகழ, ஒரு தனிமேருவில் புவியிற்பொன்னேமியளவும் தன்னேமி நடப்ப விளங்கும் ஜயமகளை இளங்கோப் பருவத்துச் சக்கரக் கோட்டத்து வீரத் தொழிலால் வந்து மணந்தான் என்று மெய்க்கீர்த்தியில் கூறப் பெற்றுள்ளது. இவன் காலம் கி.பி. 1117 ஆகும்.

வீரராசேந்திரப்பாண்டியன்

பாண்டியர்களில் இப்பெயர் கொண்டார் யார்? எக்காலத்திருந்தார்? என்பன அறியக்கூடவில்லை. இக்கல்வெட்டு திருவம்பலமுடையானான தொண்டைமானால் திருப்புள்ளிருக்கு வேளூர் நாயனாருக்கு இறையிலி நிலம் விடப்பெற்றுள்ளது என்பதனை அறிவிக்கிறது.

அச்சுதப்ப நாயக்கர்

இவருக்குப் புண்ணியமாக அழகப்பெருமான் பிள்ளை என்பவர் சுவாமி சிதம்பரராசர்க்கு மகாசிவராத்திரி அபிஷேகத்திற்கு ஈடாக மண்ணிப்பள்ளம் என்ற கிராமத்தில் நிலம் விட்டு இறையிலி செய்தார் (423–1918).

துளஸா மகாராசா

இவர் சகம் 1689–இல் தஞ்சையையாளுகின்ற காலத்தில் சீகாழிச் சீமையை அரசப்பிரதிநிதியாயிருந்து ஆண்டவர் ஸ்ரீமல்லர் ஸ்ரீகாடோராவ் அவர்கள். அப்போது தருமபுரத்தில் பத்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி அவர்கள். வேளூர் கட்டளை விசாரணையிலிருந்தவர் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள். அப்போது வேளூர்க் கோயிலில் இரண்டாம் பிரகாரத்து நாற்புறத்து மதிலும், திருமாளிகைப்பத்தி மண்டபங்களும் அம்மன் சந்நிதி, தட்டஞ் சுற்றி மண்டபமும் கட்டி நிறைவேற்றப் பெற்றன என்ற செய்தியையும், அடுத்த கல்வெட்டு சகம் 1692–இல் கி.பி. 1770–இல் சித்தாமிர்தத் தீர்த்தக்கரை நான்கு பக்கங்களும் நீராழி மண்டபமும் திருப்பணி செய்யப் பெற்றதை அறிவிக்கின்றது.

பெயர் இல்லாத கல்வெட்டு

வேளூர் தேவஸ்தானம் கிராமங்கட்குப் பாய்ச்சல் காலாக இருப்பது இடவனாறு. இந்த ஆறு பழவாற்றில் ஆதமங்கலத்திற்கு அருகில் பிரிகிறது. இதிலிருந்து புங்கனூர் சமீபத்தில் சட்டைநாதபுரம் வாய்க்கால் பிரிகிறது. இந்த வாய்க்கால் கண்மாய்க்கு நீளம் முப்பத்தைந்து அங்குலமும், அகலம் எட்டு அங்குலமாக வைத்துக் கட்டினார்கள் என்பதை அறிவிக்கிறது. இன்னும் பெரிதாக கால்வாய் வைத்து விட்டால் தேவஸ்தான நிலங்கள் பாய்ச்சல் கெடும். ஆதலால் இக்கல்வெட்டை மாற்றவும் புதுப்பிக்கவும் முடியாதபடி கலியுகத்துக் கண்கண்ட தெய்வமாகிய ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி கர்ப்பகிருக நிலைப்பாட்டில் செதுக்கி வைத்தனர். இங்கு அங்குலம் என்பது தச்சு முழம் (திருவாவடுதுறை கோயில் தூணில் உள்ளது) அளவைப் படியுள்ள அங்குலம் (419–1918).

கிராம அளவை செய்தபோது ஒரே அளவுள்ள கோலைப் பயன்படுத்தினமையால் இன்ன கிராமம் இத்தனையடியுள்ள கோலால் அளக்கப் பெற்றது என்பதனை அறிவிக்கின்றது இக்கல்வெட்டு.

தோட்டமானியம் அளந்த கோல் 18 அடி நீளம்
மருவத்தூர் அளந்த கோல் 16 அடி நீளம்
கொண்டத்தூர் அளந்த கோல் 15 அடி நீளம்
மாகாணம் கிராமம் அளந்த கோல் 14 அடி நீளம்

சக்கோலோதேவ மகாராசா

இவன் ஆசிரியவசவ கங்கணமதியாத மணவாளன் தந்தருருளிய சக்கோலோ எனப்படுவதால் இவன் மணவாளன் மகனாக இருக்கலாம். இவ்வரசன் இவ்வூருக்கு ஆறு ஆணைகளை விட்டான்.

கொடி மரத்தின் பீடத்திலுள்ள கல்வெட்டுகள்

சகம் 1802–இல் கி.பி.1880–இல் தருமபுரம் ஆதீனம் பதினாறாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருள் பெற்ற ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் அநுக்கிரகம் பெற்ற ஸ்ரீமத் சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணை செய்கின்றபோது சுவாமி அம்மன், துவஜஸ்தம்பங்கள் செப்பனிடப் பெற்று, குறடு கட்டி தங்கம், வெள்ளி பூசப் பெற்றன.

தீர்த்தவாரி மண்டபத்தின் வடபுறம், மேற்சுவரில் காணப்படுவது

ஸ்ரீசாலிவாகன சகாப்தம் 1914–க்குச் சரியான கர வருடம் ஆனி மாதம் 14 –ஆம் தேதி தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் அருள்பெற்ற கட்டளை விசாரணை ஸ்ரீமத் வைத்தியலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அதிகார நாளில் நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்கள் உதவியினால் கானாடுகாத்தான் கருது, துங்கப்பச் செட்டியாரவர்கள் குமாரர்களால் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோபுரங்கள் உள்பட திருப்பணி செய்து தீர்த்தவாரி மண்டபமும், அம்மன் சந்நிதி மண்டபமும் நூதனமாக கட்டி முடித்து மேற்படி தேதியில் மகா கும்பாபிஷேகமும் நிறைவேறியது. ஸ்ரீமுத்துக்குமார சுவாமிக்கு வெள்ளி ரதமும் செய்து வைக்கப் பெற்றது. வைத்தியநாதர் துணை.

தீர்த்தத்தின் வடகரையில் கிழக்கு மேற்குப் பக்கங்களில் உள்ளவை

கிழக்கில் –ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1689 கலியுக வருடம் 4868 இதன் மேற்செல்லா நின்ற சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 10–ஆம் தேதி போஸலே வங்கி சந்தார்களான ஸ்ரீதுளசாமகாராச சாயபு அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீமல்லாசிகாடோராயர் அவர்களுக்குச் சீர்காழிச் சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டார சந்நிதி ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பராமாசரிய சுவாமிகள் அனுக்கிரகத்தைப் பெற்ற ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் வைத்தியநாதசுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் இரண்டாம் பிராகாரம் நாலு புறத்து மதிலும் திரு மாளிகைப்பத்தியும் அம்மன் சந்நிதி தட்டம் சுற்றி மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி நிறைவேற்றி அந்தத் திருமாளிகைப் பத்தியின் மேலே நாலுபுறமும் வெளவால் நெற்றி கட்டி நிறைவேறினது.

இக்கோயில் விளக்கு அழகுக்குப் பெயர் பெற்றது. 'வினை தீர்த்தான் கோயில் விளக்கழகு' என்பது பழமொழி. அர்த்தசாம பூஜையில் செல்லமுத்துக்குமார சுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு வழிபாடு நடைபெறும். இதற்குப் புழுகாப்பு என்று பெயர். இப்புழுகாப்பு தரிசனம் இங்கு சிறப்புடையதாகும்.

(iv) அட்டவீரட்டத் தலங்கள்

சிவபெருமான் புராண காலத்தில் சமுதாயத்திற்கும் தனக்கும் தீங்கு விளைவித்த அசுரர்கள், அரக்கர்கள் போன்ற தீயவர்களைத் தாமே வீரபத்திரராகவும், பைரவராகவும் அவதாரம் எடுத்து அவர்களை அழித்தார். பின்பு அவரில் சிலர் தாழ்ந்து வேண்டிக்கெண்டபின் மன்னித்து உயிர்ப்பித்தார். சிவபெருமானின் வீரத்தின் பெருமைகள் வெளிப்பட்ட இத்தலங்கள் எட்டும் அட்ட வீரட்ட தலங்கள் என்று போற்றப்படுகின்றன. அவற்றில் ஐந்து திருத்தலங்கள் நாகை மாவட்டத்தில் அமைந்துள்ளன. அவை

1. திருக்குருக்கை – காமனை அழித்தது
2. பரசலூர் – மாமன் தக்கனை அழித்தது
3. திருக்கடவூர் – காலனை அழித்தது
4. வழுவூர் – யானையாக வந்த அசுரனின் தோலை உரித்து போர்த்தியது
5. விற்குடி – சலந்திரன் என்ற அரக்கனை அழித்தது ஆகியன.

திருக்கடவூர் (திருக்கடையூர்)

மயிலாடுதுறை – தரங்கம்பாடி பேருந்து சாலையில் உள்ளது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. திருக்கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமரந்திரத்தலம், பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என்பன வேறு பெயர்கள். அகஸ்தியர், புலஸ்தியர், வாசுகி, துர்க்கை வழிபட்ட தலம். பிரமனுக்கு உபதேசம் செய்த இடம், புராண காலத்தில் இங்கு தேவர்ளும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்றதால் திருக்கடையூர் என்று தற்போது அழைக்கப்படுகிறது. தனது பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனை எட்டி உதைத்து தள்ளிய இடமாதலின் திரு சேர்த்து திருக்கடவூர் என்று தேவாரத்தில் கூறப்படுகிறது. கல்வெட்டுகளில் கடவூர் ஸ்ரீகாலகாலதேவர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. குங்கிலியக்கலய நாயனார், காரி நாயனார் ஆகியோர் வாழ்ந்து, தொண்டாற்றி முக்தியடைந்த தலம். வரலாற்றுக் காலமாகிய – தஞ்சை மராட்டிய மன்னர் சரபோஜி காலத்தில் அபிராமி அம்மை தனது பக்தன் பட்டருக்காக அமாவாசை அன்று முழுநிலவைக் காட்டி தனது அருட்காட்சியையும் வழங்கியதால் புலவர் அபிராமபட்டர் என்று பாராட்டுப் பெற்றதும், அன்றே அபிராமி அந்தாதி எனும் பக்தி இலக்கியம் அருளப்பட்டதும் இத்தலத்தில்தான். இக்கோயிலில்

தினமும் 60, 80 வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கு சதய விழா, மணி விழா நடைபெறுகிறது. இறைவன் – அமிர்தகடேஸ்வரர், அமிர்த லிங்கேஸ்வரர். இறைவி – அபிராமி, பாலாம்பாள், தலமரம் – வில்வம், ஜாதி (பிஞ்சிலம்). தீர்த்தம் – அமிர்த தீர்த்தம், சிவகங்கை. மூவர் தேவாரப் பாடல் பெற்றது. இங்குள்ள காலனை அழித்த மூர்த்தியின் திருமேனியில் எமன் வீசிய பாசத்தின் தழும்பு உள்ளது.

திருக்கடவூரில் மேற்கு நோக்கிய முதல் கோபுரம் சுமார் 100 அடி உயரத்தில் அமைந்துள்ளது. நுழைவுவாயில் உள்ளே வலது பக்கம் 25 அடி உயரத்தில், பலகைக்கல்லில் வடிக்கப்பட்ட புடைப்புச் சிற்பமாக, ''பல்லவர்கால கொற்றவை'' சுவரில் பதிக்கப்பட்டுள்ளது, கீழைக் கோபுரம், மேலைக் கோபுரம் இருபக்க நுழைவுவாயிலிலும் காவல் தெய்வமான 'முனீஸ்வரன்' தனி சன்னதிகளில் அமர்ந்து சிவபெருமானுக்கு காவல் பணிபுரிந்து வருகின்றனர்.

மார்க்கண்டேயர் இறையருள் பெற வழிபட்ட 108 தலங்களுள் இது 108 வது தலமாகும். மார்க்கண்டேயர் கங்கை நீருடன் பிஞ்சிலப் புஷ்பங்களையும் கொண்டு வந்து அர்ச்சித்ததாக வரலாறு. இதனால் இத்தலத்திற்கு 'பிஞ்சிலாரண்யம்' என்றும் பெயர். திருக்கடவூரில் தேரோடும் வீதியில் பாழடைந்த நிலையில் உள்ள இல்லம் 'சிலம்பில்' வரும் நடனப்பேரரசி மாதவியினுடையதாகக் கூறப்படுகிறது. கோயிலின் திருச்சுற்று மேடையில் காட்சிதரும் அசுவினி தேவர்களின் சிற்பம் சோழர் கலைக்கு சிறந்த உதாரணமாகும். திருக்கடவூர் கோயிலின் மேலை மடவிளாகத்தில் அபிராமி அன்னைக்கு அந்தாதி நூல் தந்த அபிராமி பட்டர் வசித்த வீடு சமீப காலம் வரை இருந்தது.

திருப்பறியலூர் (கீழப் பரசலூர்)

மயிலாடுதுறை தரங்கம்பாடி சாலையில் செம்பொன்னார் கோயிலின் வலப்புறம் 2 கி.மீ. தொலைவில் வீரட்டேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. வீரபத்திரரை ஏவித் தக்கனை அழித்த தலம். தருமையாதீனத் திருக்கோயில். தக்கன் யாகம் செய்த தலமாதலின் தக்ஷபுரம் என்றும், தேவர்களுக்கு ஏற்பட்ட பாவத்தைத் தண்டனை மூலம் பறித்ததால் 'பறியலூர்' என்றும் பெயர்களுண்டு. கீழப்பரசலூர் என்று தற்போது வழங்குகின்றது.

இறைவன் – வீரட்டேஸ்வரர், தக்ஷபுரீஸ்வரர். இறைவி – இளங்கொம்பனையாள். தலமரம் – வில்வம். (பலா என்றும் குறிப்பிடப்படுகின்றது). தீர்த்தம் – உத்திரவேதி தீர்த்தம். சூலம், தண்டு, வாள், மணி, கபாலம் வாள் முதலியன ஏந்திய ஆறு திருக்கரங்களுடன்

இம்மூர்த்தி (உற்சவத் திருமேனி) காட்சி தருகின்றார். கீழே செப்புத் தட்டில் தக்கன் யாகம் செய்வது போலவும் சிற்பம் உள்ளது. இக்கோயிலில் நவக்கிரகங்கள் ஒன்பதும் இல்லை. சூரியன் மட்டுமே உள்ளார்.

சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலக் கல்வெட்டில் இத்தலம் 'ஐயங்கொண்ட சோழவளநாட்டு வீழைநாட்டு ராஜ நாராயண சதுர்வேதி மங்கலமான பறியலூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் 'திருவீரட்டான முடையார்' 'தக்ஷேஸ்வரமுடையார்' என்று குறிக்கப்பெற்றுள்ளார். இக்கோயில் மூலவர் கருவறையைச் சுற்றி ஒரு அடி நீளத்தில் புராணக்கதைகள், சோழ மன்னர்கள் ஆகியவர்களின் புடைப்புச் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன.

திருக்குறுக்கை (கொருக்கை)

மயிலாடுதுறை வட்டத்தில் வடக்கே 12 கி.மீ. தொலைவில் கொருக்கை உள்ளது, அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. சிவபெருமான் உமாதேவியோடு தியானத்தில் இருத்போது மலர்க்கணைகளால் காமேஸ்வரன் அவரது தியானத்தைக் கலைத்ததால் சிவன் கோபம் கொண்டு நெற்றிக்கண்ணால் காமனை அழித்த தலம் இது. ரதிதேவியின் வேண்டுகோளின்படி மீண்டும் உயிர் பெற்றார் என்பது தலபுராணம். சோழர் கால கட்டடக்கலையும் வரலாற்றை எடுத்துரைக்கும் கல்வெட்டுகளும் இக்கோயிலுக்கு மேலும் சிறப்பு செய்கின்றன. இங்குள்ள சூல தீர்த்தத்தின் பெருமையறியாது, 'தீர்க்கபாகு' என்னும் முனிவர் கங்கை நீரைப் பெற வேண்டித் தம் கைகளை நீட்டியபோது அக்கைகள் குறுகிவிட்டன. தன்னால் பிழை நேர்ந்தென்று தலையைப் பாறைமீது மோத, இறைவன் அவர் உடற்குறையைப் போக்கினார் என்பது தல வரலாற்றுச் செய்தி.

இறைவன்– வீரட்டேஸ்வரர், இறைவி–ஞானாம்பிகை. தலமரம்–கடுக்காய், தீர்த்தம்–சூல தீர்த்தம். அப்பரால் தேவாரப் பதிகம் பாடப்பெற்றது. காமதகனவிழா மாசிமகத்தன்று சிறப்பாக நடைபெறுகின்றது. காமனைத் தகனம் செய்த இடம் 'விபூதிக்குட்டை' எனப்படுகிறது. இங்கு மண்ணானது விபூதியாகவே உள்ளது. குறுங்கை விநாயகர், மூலவர் சதுர பீடத்தில் அமர்ந்த கோலத்தில் உள்ளார். பக்கத்தில் தீர்த்தபாகு முனிவர் உருவம் உள்ளது. அடுத்து நின்ற கோலத்தில் 'சோகஹரேஸ்வரர்' காட்சி தரும் சந்நிதியுள்ளது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ள தலபுராணம் உள்ளது. சோழ, விஜயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.

(v) சப்தவிடங்கத் தலங்கள்

சப்தம் என்றால் ஏழு என்றும், விடங்கம் என்றால் கல்லில் உளி கொண்டு செதுக்காமல் உருவானது என்றும், தலம் என்றால் சிறப்புடைய மூர்த்தி அமைந்த திருக்கோயில் என்றும் பொருள்படும். அதாவது தானே தோன்றியவர் எனும் பொருளில் தான்தோன்றீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். இவரையே சுயம்பு மூர்த்தி என்றும் குறிப்பிடுகின்றனர். இந்த ஏழு சப்தவிடங்கத் தலங்களில் தலைமையுடையது திருவாரூர் ஆகும். இரண்டாவது காரைக்கால் அருகில் உள்ள திருநள்ளாறு ஆகும். மற்ற ஐந்து தலங்களும் நாகை மாவட்டத்திலேயே அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். திருவாரூர் பகுதியில் அமைந்துள்ள தலத்தில் ஸ்ரீவன்மீகநாதர், நிலோற்பலாம்பாள் ஆகியோர் கம்பீரமாக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள். அதேபோல் திருக்காறாயில் என்னும் இடத்தில் அமைந்துள்ள கோயிலில் கண்ணாயிரநாதர், கயிலாயநாயகியம்மை ஆகியோரும், திருநள்ளாறு பகுதியில் உள்ள தலத்தில் ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர், போகமார்த்தபூன்முலையம்மை, திருக்கோளிலி (திருக்குவளை) ஊரில் அமைந்துள்ள தலத்தில் கோளிலிநாதர், வண்டமர்பூங்குழலியம்மை, திருவாய்மூரில் இருக்கும் தலத்தில் திருவாய்மூர்நாதர். பாலினுமந்நன்மொழியம்மை ஆகியோரும் பக்தர்களுக்கு காட்சி தருகிறார்கள்.

திருமறைக்காடு (வேதாரண்யம்) பகுதியில் உள்ள கோயிலில் மறைக்காட்டீசர், யாழைப்பழித்தமொழியம்மை. திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம் என்னும் இடத்தில் உள்ள ஆலயத்தில் ஸ்ரீகாயாரோகணேஸ்வரர், நீலாயதாட்சியம்மன் போன்ற திருநாமங்களில் கோயிலை நாடி வரும் பக்தர்களுக்கு அவர்களுடைய குறைகளை தீர்த்து வைத்து பெருமையுடன் விளங்குகிறார்கள். இந்த 7 கோயில்களும் சப்த விடங்க தலங்கள் என்றழைக்கப்படுகின்றன. மேற்கண்ட தலங்களில் விடங்கர் சிவலிங்கத்துடன் எழுந்தருளியிருப்பதால் அந்தப் பெயர் வந்ததாக கூறப்படுகிறது.

திருமாலின் திருமார்பில் வீற்றிருந்த தியாகராசப் பெருமானைத்தான் விடங்கர் என்று சொல்கிறோம். முசுகுந்த சக்கரவர்த்தி, வலன் என்னும் அரக்கனை அழித்ததால், 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று இந்திரன் கேட்டார்.

அதற்கு முசுகுந்தனும் திருமாலிடம் இருந்து பெற்ற சோமாஸ்கந்தரை பரிசாகத் தரும்படி வேண்டினார். இந்திரனுக்கு அதனைக் கொடுக்க மனமில்லாததால், தேவதச்சனைக் கொண்டு வேறொன்றை செய்து கொடுத்தபோது, 'இது அது அல்ல' என்று கூறி வாங்க மறுத்தான்.

இவ்வாறு 6 முறை அந்த உருவை செய்து கொடுத்தபோதும் முசுகுந்த சக்கரவர்த்தி ஏற்க மறுத்ததால் வேறு வழியின்றி இந்திரன் உண்மையான மூர்த்தியினைக் கொடுத்தான். திருமாலின் மார்பில் ஆடிய மூர்த்தி இவரே என்று பரம சந்தோஷத்துடன் முசுகுந்த சக்கரவர்த்தி அதனைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் ஒரு மூல மூர்த்தியை திருவாரூரிலும், அதேபோல உள்ள 6 மூர்த்திகளை மேற்கண்ட ஆறு தலங்களிலும் பிரதிஷ்டை செய்தார். அந்த தலங்களே சப்தவிடங்க தலங்கள் ஆகும். இக்கோயில்களில் மரகத லிங்கம் – சிறப்புத் தரிசனக் காட்சியும் உண்டு.

திருநள்ளாறு

காரைக்கால்– கும்பகோணம் சாலையில் காரைக்காலில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. சிவத்தலமாயினும் இங்குள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் பிரசித்திப் பெற்றது. நிடத நாட்டு மன்னனான நளன், விதர்ப்ப நாட்டு வீரசேனன் மகள் தமயந்தியைச் சுயம்வரத்தின் மூலமாக மணந்து கொண்டான். தேவர்களைப் புறக்கணித்து நளனை தமயந்தி மணந்ததால் சனிபகவான் நளன்மேல் கோபம் கொண்டு, காலில் நீர்பட்டும் படாமலும் கழுவிச் சென்ற குற்றங்கண்டு அவனை பற்றினார். இதனால் நளன் பட்ட துன்பங்கள் தீர்ந்து நாடாளத் தொடங்கியும் சனியின் வேகம் தணியாமையால் நாரதர் உபதேசப்படி தீர்த்த யாத்திரையை மேற்கொண்டான். திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலத்தில்) அவனைச் சந்தித்த பரத்வாஜ முனிவர், திருநள்ளாறு சென்று வழிபடுமாறு அறிவுரை கூறினார். அவ்வாறே நளன், திருநள்ளாறடைந்து, தீர்த்தம் உண்டாக்கி, நீராடி, திருநள்ளாற்று ஆலயத்துள் நுழைந்தான். அவனைப் பற்றியிருந்த 'சனி' உள்ளே நுழைய அஞ்சி, அங்கேயே தங்கிவிட்டார். இதனால் இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் சிறப்புப் பெற்று நவகிரகத்துள் சனிபகவானின் கோயிலாக விளங்குகிறது.

இத்தலம் சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இங்குள்ள தியாகராஜர் – நாகவிடங்கத் தியாகர் என்று அழைக்கப்படுகின்றார். நடனம் உன்மத்த நடனம். திருஞானசம்பந்தர் அனல் வாதத்தில் எழுதியிட்ட 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் பச்சைத் திருப்பதிகம் இத்தலத்திற்குரிய பாடலேயாகும்.

இறைவன் – தர்ப்பாரண்யயேசுவரர், திருநள்ளாற்றீஸ்வரர். இறைவி – பிராணாம்பிகை, பிராளேஸ்வரி, போகமார்த்த பூண் முலையாள். தலமரம் – தர்ப்பை . தீர்த்தம் – நளதீர்த்தம். தலவிநாயகர் – சொர்ணவிநாயகர். மூவர் தேவாரப் பாடலும் பெற்ற தலம். ஐந்து நிலைகளோடு கூடிய ராஜகோபுரம். மூலவர் தர்ப்பையில் முளைத்த சுயம்பு மூர்த்தி. சிவலிங்கத்தின் மீது முளைத்த தழும்பு உள்ளது. பக்கத்தில் உன்மத்த நடன தியாகேசர் தரிசனம், தேவி நீலோத்பலாம்பாள். சுப்பிரமணியக் கவிராயரால் இத்தலபுராணம் பாடப்பட்டுள்ளது. .

திருவாய்மூர்

நாகப்பட்டினம் திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் உள்ளது. திருக்குவளையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. லீலாஹாஸ்யபுரம் என்னும் பெயருடையது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. சூரியன் வழிபட்ட தலம். 'வாய்மூரில் இருப்போம் தொடர்ந்து வா' என்று அப்பர் பெருமானை இறைவன் உணர்த்தி அழைத்துச் சென்ற அரிய செய்தி உள்ளது.

இறைவன் – வாய்மூர்நாதர். இறைவி – க்ஷீரோபவசனி, பாலின் நன்மொழியாள். தலமரம் – பலா. தீர்த்தம் – சூரிய தீர்த்தம் எதிரில் அமைந்துள்ளது. சம்பந்தர், அப்பர் தேவாரப் பாடல் பெற்றது. மூன்று நிலைகளுடன் கூடிய ராஜகோபுரம் கிழக்கு நோக்கி காட்சியளிக் கின்றது. இத்தலத்தில் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன. சோழர்காலக் கல்வெட்டுகள் உள்ளன. அப்பருக்குத் தனிச் சன்னதி உள்ளது.

திருக்கோளிலி (திருக்குவளை)

திருவாரூர் எட்டுக்குடி சாலையில் திருவாரூரிலிருந்து 19 கி.மீ. தொலைவில் திருக்குவளை உள்ளது. திருக்குவளை என்பது மலரால் ஆகிய இயற்பெயர். திருக்கோளிலி என்பது தேவாரத்தில் வரும் பெயர். தேவாரக்காலத்தில் இங்கு நெல் மழை பொழிந்து,

மலைபோல் குவிந்தது நெல், என்பதை சுதைச் சிற்பத்தில் காட்டியுள்ளனர். திருக்குவளை தற்போது தாலுக்காவின் தலைமையிடமாகத் திகழ்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெல் மலையை எடுத்துச் செல்ல ஆள் வேண்டிப் பாடிய சிறப்புக்கு உரியதாய் விளங்குவது இத்தலம். திருவாரூக்கு அடுத்தபடியாக தியாகேசப் பெருமான் இத்தலத்தில் சிறந்து விளங்குகிறார். இந்த திருக்கோயில் ஸ்ரீதியாகராஜசுவாமி தேவஸ்தானம் என்று வழங்குகிறது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. பிரமன் வழிபட்ட தலம். அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் உள்ளது, பகாசூரனைக் கொன்றதனால் உண்டான பாவத்தை (பிரம்மகத்தி தோஷம்) பீமன் இங்குப் போக்கிக் கொண்டான் என்பது வரலாறு.

இறைவன் பிரமபுரீஸ்வரர், கோளிலிநாதர், கோளிலி நாதேஸ்வரர் வெண்மணலால் ஆன சிவமூர்த்தமாக காட்சி தருகிறார். இறைவி – வண்டமர் பூங்குழலி. தீர்த்தம் – பிரம்மதீர்த்தம் . தலமரம் – தேற்றாமரம். மூவர் தேவாரப் பாடல் பெற்றது. இத்தலத்திற்குப் பிரமதபோவனம், கதகாரண்யம் – தேற்றாமரவனம், புஷ்பவனம், தென்கயிலை எனப் பல பெயர்களுண்டு. நவக்கிரகங்கள் முதலியோர்க்கு உண்டாயக் குற்றங்களை நீக்கி அருள் புரிந்தமையால் கோளிலி என்று பெயர் பெற்றது. "கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமான்" என்பது ஞானசம்பந்தர் வாக்கு. இங்குள்ள தியாகராஜப் பெருமானின் பெயர் – ஊழிப்பரன், அவனிவிடங்கத்தியாகர், அம்பிகை–நீலோற்பலாம்பாள். விநாயகர் – தியாகவிநாயகர். முருகன் – சுந்தரவடிவேலர்.

ஞானசம்பந்தரின் திருப்பதிகத்தில் (திருக்குறுந்தொகை) கோள்களின் தீமையகலும் குறிப்பினையும், மார்க்கண்டேயன், சண்டீசர்க்கு அருள் செய்தது, பாண்டவர்கள் வழிபட்டது, பாணபத்திரர்க்கு, அருச்சுனனுக்கு, நமிநந்தியடிகளுக்கு, இராவணனுக்கு அருள் புரிந்தது, உபமன்யு முனிவர்க்கு பாற்கடல் ஈந்த வரலாறு போன்ற குறிப்புகள் உள்ளன. கோயிலின் மதிற்சுவரில் பஞ்ச பாண்டவர்கள் இத்தலத்து இறைவனை வழிபாடு செய்யும் காட்சி புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் அருகில் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலும் சிறப்புடன் காட்சி தருகிறது.

இக்கோயிலில் சோழர், பாண்டிய காலத்திய 19 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் 'திருக்கோளிலி உடைய நாயனார்'

என்றும், தியாகேசர், 'அவினிவிடங்கத் தியாகர்' என்றும் சிவபெருமான் குறிக்கப்பெறுகிறார். சோழரின் கலைக்கு இக்கோயிலும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)

பிற்காலச் சோழ மன்னர்களின் துறைமுகங்களில் ஒன்றாக விளங்கிய நகரம். நாகர்கள் என்ற வகுப்பினர்கள் குடியேறி வாழ்ந்ததால், இப்பகுதி நாகப்பட்டிணம் என்று பெயர் பெற்றது. ரோமானிய, சீன வாணிகம் பண்டைநாளில் இத்துறைமுகபட்டினம் வாயிலாக நடந்து வந்தது. நாகப்பட்டினம் என்பது சுருக்கமாக 'நாகை' என்று வழங்கலாயிற்று. புண்டரீக முனிவரை இறைவன் தன் மேனியில் ஆரோகணம் செய்து கொண்ட பெருமை பெற்ற பதி.

சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. அகத்தியருக்குத் திருமணக் காட்சியருளியதும், அதிபத்தநாயனார் அவதரித்ததுமாகிய சிறப்பு கொண்ட தலம். ஆதிபுராணம், சிவராசதானி, பார்ப்பதீச்சரம், அரவு நகரம் என்பன இதற்குரிய வேறு பெயர்கள். ஆதிசேஷன் பூசித்ததாக வரலாறு.

நாகைக்காரோணத் தலபுராணம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்கள். அதிபத்த நாயனாருக்கு இறைவன் அருள் செய்த விழா ஆவணியில் நடக்கிறது. அந்நாயனார் வாழ்ந்த இடம் – செம்படவர்சேரி – தற்போது நம்பியாங்குப்பம் என்று வழங்குகிறது.

பழமையான சிவன் கோயில் இதுவாகும். அம்மன் நீலாயதாட்சி என்று திருநாமம். எனவே காயாரோகணம் என்றாலும் நீலாயதாட்சி கோயில் என்றாலும் ஒன்றேயாகும். பெரிய தேர் இருந்து அழிந்துவிட்டது. பராந்தகச்சோழனின் கலையில் கோயில் காட்சி தருகிறது. இப்பகுதியில் பல சித்தர்கள் வசித்துள்ளனர். தமது தவத்தின் வலிமையால் காயமாகிய இந்த உடலோடு சிவலோகம் செல்வது உண்டு. இந்த நிலைமையே 'காயாரோகணம்' எனப்படுகிறது. இதுவே சுருங்கி கோயிலுக்கு பெயராக உள்ளது.

நாகையில் முதலாம் இராசராசன் கட்டிய புத்த விகாரம் ஒன்று இருந்துள்ளது. நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இத்தலத்தில் உள்ள சௌந்தரராசப் பெருமாள் கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம்

செய்யப்பட்டதாகும். முதலாம் இராசராசன் காலத்திய கல்வெட்டொன்று இக்கோயிலுக்கு உள்ளது. டச்சு கவர்னர் ஒருவர் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்த செய்தியைச் சாசனம் ஒன்றின் மூலம் அறிகின்றோம்.

திருமறைக்காடு (வேதாரண்யம்)

நாகப்பட்டினத்தில் இருந்து 56 கி.மீ. தொலைவில் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யம் அமைந்துள்ளது. இவ்வூரின் அருகே உள்ள கோடியக்கரையில் இருந்து இலங்கை மாநகர் கடல் வழியாக சுமார் 22 மைல் தூரமே உள்ளது. மக்கள் தொகை சுமார் 25000 எனலாம்.

ஊர்ப்பெயர்க் காரணம்

வேத காலத்திற்கு முன்பு 'சத்தகிரி' எனப் பெயர் பெற்றிருந்தது என்பது சத்திகிரீஸ்வரர், சத்திநாயகி, சத்தியநதி என இறைவன், இறைவி, தீர்த்தம் ஆகிய மூன்றும் உரைக்கப்பட்டன. மூர்த்தி, தீர்த்தம் இரண்டிற்கும் ஏற்பவே தலமும் 'சத்தகிரி' என வழங்கப்பட்டது. வேதங்கள் பூஜை செய்தமையான் வேதவனம், வேதாரண்யம் (வேதம் + வனம், வேதம் + ஆரண்யம்) எனப் பெயர் பெற்றதென்பது திருமறைக்காடு எனத் தேவாரப் பாடல்கள் குறிப்பிடும்.

மரை+காடு என்ற தமிழின் மொழிப் பெயர்ப்பே வடமொழியில் வேதாரண்யம் என அழைக்கப்படுகிறது. மரை என்றால் மான் என்றும், காடு என்றால் தோட்டம் என்றும் பொருள்படும். இன்றும் வேதாரண்யம், கோடியக்கரையை விலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயமாக அரசு அறிவித்து அப்பகுதிகளைப் பாதுகாத்து வருகிறது. இது பழந்தமிழர் இட்ட காரணப்பெயர். பிறகு இங்கு வந்தவர்கள் தமிழ்ப்பெயரை மொழி மாற்றி மரை என்றால் வேதம், காடு என்றால் ஆரண்யம் என்று அபத்தமாக மாற்றி விட்டனர். இதுவே தற்போதும் மக்களால் வழங்கப்படுகிறது.

சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. இங்கு அமைந்துள்ள வேதாரண்யேஸ்வரர் கோயில் பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பெரிய ஆலயம், மகா மண்டபம், நீண்ட பிரகாரங்கள், உயர்ந்த மதில் சுவர், ராஜ கோபுரம் அனைத்தும் இக்கோயிலுக்கு பெருமை சேர்க்கின்றன. இது அப்பர், சம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். கல்வெட்டுகளும், சிற்பங்களும் கோயிலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

இறைவன் மறைக்காட்டீசுவரர், வேதாரண்யேசுவரர், வேதவனேசர், வேதாரண்யநாதர், இறைவி வீணாவாதவிதூஷனி, யாழைப்பழித்த மொழியம்மை, தலமரம் வன்னி, இம்மரத்தடியில் விசுவாமித்திரர் தவஞ்செய்ததாக வரலாறு, தீர்த்தம் வேததீர்த்தம், எதிரில் உள்ளது. மூவர் தேவாரப் பாடல் பெற்ற தலம், இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியது. சேரமான் பெருமாள் நாயனாருடன் சுந்தரர் வந்து தரிசித்த தலம். விளக்கைத் தூண்டிய எலியை, மாவலியாகப் பிறக்குமாறு அருள்செய்த இறைவன் எழுந்தருளியுள்ள பதி, நசிகேது, சுவேதகேது ஆகியோர் இத்தலத்தில்தான் தவஞ்செய்தனர், ஞானசம்பந்தரும், அப்பரும் வேதங்களால் அடைக்கப்பட்ட கதவு திறக்கவும் அடைக்கவும் பாடப்பட்ட சிறப்புடைய தலம். இங்கு தூர்க்கையம்மன் சிறப்புடையது. புவனி விடங்கர், ஹம்ச நடனம், இங்குள்ள மரகதலிங்கம் சிறப்புடையது.

'வேதாரண்யம் விளக்கு அழகு' என்பது பழமொழி. அப்பர் சுவாமிகள் 'தூண்டு சுடரனைய சோதி கண்டாய்' என்று பாடுகிறார். தாயுமானவர் அவதரித்த தலம். சிவப்பிரகாச சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளுக்கு இத்தலத்தில்தான் அருளுபதேசம் செய்தார் என்பது வரலாறு.

இக்கோயிலில் 92 கல்வெட்டுகள் சோழர் காலத்தியவை, இவ்வூரை கல்வெட்டுகள், 'உம்பள நாட்டுக் குன்னூர் நாட்டுத் திருமறைக்காடு' என இயம்பும். இறைவனை 'வேதவனமுடையார்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது, யாழ்பாணத்து 'சின்னத்தம்பி நாவலர்' என்பவர் இத்தலத்துப் பெருமான் மீது 'மறைசை அந்தாதி' பாடியுள்ளார். இக்கோயில் திருச்சுற்றிலும், கருவறை வெளிச்சுற்றிலும், மண்டபத்தின் விதானத்திலும் சோழர்காலத் தொன்மையான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

சோழ மன்னர்கள் இங்கிருந்தே ஈழம் சென்று படையெடுத்தனர். அதன் காரணமாகவே இவ்வூர் வீதிகளின் பெயரும் சோழ மன்னர்கள் பெயர் தாங்கி நின்றன தசரத மகாராஜா வீதி, கரிகாலச் சோழன் வீதி என்பன. ராமன் சேது சென்றதும் இவ்வழியேதான் என்று ஒரு மரபு வழிக்கதை வழங்குகிறது. அதற்கு ஆதாரமாக இவ்வூரில் இன்று வழக்கில் கூறப்படும் 'சேது ரஸ்தா' (வீதிப் பெயர்) என்பதையும் இவ்வூர் அருகே உள்ள 'இராமர் பாதம்'

(கோடிக்கரைக்கு செல்லும் வழியில் உள்ளது) என்னும் இடத்தையும் காட்டும். இன்றும் இவ்வூரில் யாழ்ப்பாணத்தவர் வசிப்பதைக் காண முடிகிறது.

1930–இல் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது இவ்வூரின் வரலாற்றுச் சிறப்பாகும். அதுபோது எழுப்பப்பெற்ற சத்தியாகிரக ஸ்துாபி உப்பளத்தில் உள்ளது. சத்தியாகிரக தியாகி சர்தார் வேதரத்னம் பிள்ளையால் தொடங்கப் பெற்ற (1946) 'கஸ்தூரிபா கன்யாகுருகுலம்' பெண்கள் பள்ளி ஆதரவற்ற பெண்களின் புகலிடமாக இன்றும் அவர் வழியினரால் சிறப்புற நடத்தப் பெறுகிறது.

நாகை மாவட்டத்தில் நெய்தல் நிலமாக உள்ள ஒருசில பகுதிகளில் இதுவும் ஒன்று. மேட்டூர் கெமிக்கல் கம்பெனியாரும், விம்கோ கம்பெனியாரும் இவ்வூரின் தொழில்வளத்தைப் பெருக்குகின்றனர் எனலாம். மேட்டூர் கெமிக்கல் கம்பெனியார் வெள்ளை உப்பு செய்வதனை இங்கு மேற்கொண்டுள்ளனர். இவ்வூரின் அருகே உள்ள கோடியக்கரை கடலில் 10 கி.மீ. தூரத்தில் 'கெரசின்' எடுக்கப்படுகிறது. இங்குள்ள பறவைகள் சரணாலயம் இவ்வட்டத்திற்குள்ள தனிச் சிறப்பு. இங்குள்ள கோடியக்காடும் அவ்வாறேயாம்.

வேதைக்கும் கள்ளிக்கும் காதம்
கள்ளிக்கும் பூண்டிக்கும் காதம்
பூண்டிக்கும் நாகைக்கும் காதம்
நாகைக்கும் காரைக்கும் காதம்

என்ற வரிகள் இதன் அருகில் உள்ள ஊர்களுக்கும் இதற்கும் இடையே உள்ள தூரத்தை எடுத்தியம்புகிறது.

இன்று இவ்வட்டம் அறுபத்தி ஆறு பெருங்கிராமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் பல ஊர்கள் வரலாற்றுச் சிறப்புடையன. தாயுமான சுவாமிகளும், பரஞ்சோதி முனிவரும் பிறந்த ஊர். பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பெற்ற 'வேதாரண்ய தலபுராணச் சுருக்கமும்' (100 பாடல் உடையது என திரு. மாசிலாமணி தேசிகர் என்னும் இவ்வூர் பெரியவர் கூறினார். நூல் கிடைக்கவில்லை) 'அகோர தேவர் தலபுராணமும் (4000 பாடல்களை உடையது இந்நூலும் கிடைக்கவில்லை) வடமொழியில் இயற்றப்பெற்ற 'வேதாரண்ய மகாமியமும்', 'மரசை வெண்பா', 'மரசை யந்தாதி' என்பனவும் தேவாரத் திருப்புகழ் பாடல்களும் இவ்வூர் வரலாற்றை நன்கு விரித்துரைக்கும்.

(vi) வைணவத் தலங்கள்

அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயில்
திருஇந்தளூர்

மும்மூர்த்திகளுள் திருமால் காக்கும் கடவுளாக அருள்பாலித்து வருகிறார். திருமாலை முதன்மையாகக் கொண்டு வழிபாடு செய்பவர்கள் வைணவர்கள் எனப்படுகின்றனர். திருமாலின் பெருமைகளை பன்னிரு ஆழ்வார்கள் போற்றிப் பாடியுள்ளனர். இவை நான்காயிரம் திவ்வியப்பிரபந்தங்கள் (பாசுரங்கள்) என்றழைக்கப் படுகின்றன. திருமாலின் பத்து அவதாரங்கள் நாடு முழுவதும் பல வைணவச் சேத்திரங்களில் பிரதிபலிக்கின்றன. இதில் 108 தலங்களை சிறப்பு தலங்களாகத் தேர்ந்தெடுத்து பெருமாளின் திவ்ய தேசங்கள் என்று போற்றப்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் இந்த திவ்ய தேசங்களில் இருபது கோயில்கள் காட்சி தருகன்றன. இதில் நாங்கூர் 13 திவ்ய தேசங்களும் கருடசேவைப் பெருவிழாவும் உலகப்புகழ் பெற்றவையாகும்.

அமைவிடம்

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம் காவிரியின் வடகரையில் திருஇந்தளூர் அமைந்துள்ளது. பஞ்ச அரங்க வைணவத் திருத்தலங்களுள் ஐந்தாவது அரங்கமாகப் போற்றப்படுவது 'பரிமளரங்கம்' எனும் திருஇந்தளூர். மிக்க பெருமையுடைய இத்திருத்தலம் 108 வைணவ திவ்ய தேசங்களுள் 22 வது திவ்ய தேசமாய் போற்றப்படுகிறது. ஆலிநாடன் பாடுபுகழ் திவ்ய தேசம் என்று அடியார்களால் போற்றப்படும் வண்ணம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமைக்குரியது. வேதங்களுக்கு மணம் தந்து வாழ்வு தந்தமையால் இவ்வூர் 'பரிமள அரங்கம்' எனப் பெயர் பெற்றது.

ஊர்ப்பெயர்க் காரணம்

'இந்து' என்ற சொல் சந்திரனைக் குறிப்பதாகும். முன்னொரு காலத்தில் தஷ்ப்ரஜாபதி என்பவரால் சபிக்கப்பட்டதால் சந்திரன் கொடுமையான ஷயரோகத்திற்கு ஆளானான். பரிமளரங்கம் என்னும்

இவ்வூரில் பொங்கிப் பெருகி வளங்கொழிக்கும் பொன்னி நதியாம் காவிரியில், துலாமாத இறுதி நாளன்று புனித நீராடி இத்திருக்கோயில் முன்னே வலப்புறமாக அமைந்துள்ள திருக்குளத்தின் கரையில் பலகாலம் கடுந்தவமிருந்து அரங்கனின் அருள் வேண்டியும், தன்னைப் பற்றியுள்ள ஷயரோகம் நீங்க வேண்டும் என்றும், இத்தலத்து எம்பெருமானாகிய அரங்கனின் திருவடிக்கருகில் தான் எப்போதுமிருந்து வழிபடவேண்டும் என்றும் வேண்டினான். பெற்ற தாயினும் சாலப்பரிந்து ஆயின செய்யும் கருணையே வடிவான அரங்கனும் அருள்புரிந்தார். சந்திரன் தவமிருந்து வரம் பெற்றமையால் இவ்வூர் "திருஇந்தளூர்" என்றும், இத்திருக்குளம் "இந்துபுஷ்கரணி" என்றும் பெயர் பெற்றது.

இத்தகைய பெருமைகள் பல பெற்ற திருஇந்தளூர் அருள்மிகு பரிமள அரங்கநாதர் திருக்கோயிலின் ராஜகோபுரம், பெருமாள் சந்நிதி, தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி, இராமர் சந்நிதி, ஆஞ்சநேயர் சந்நிதி, கருடமண்டபம், ஏகாதசி மண்டபம், துவஜஸ்தம்பம், மதில் சுவர்கள் நான்கு கால் மண்டபம், மண்டப மேல்தளங்கள், குலசேகர வாசல் நூதன மணிக்கதவு, அனைத்து விமானங்கள் மற்றும் திருக்கோயில்களின் அனைத்து பாகங்களும் சிறப்புடையவை. இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப் படுகிறது. மூலவர் அரங்கனின் தலைபக்கமும் கால் பக்கமும் கங்கையும், காவிரியும் அமர்ந்து சேவை சாதிக்கின்றனர்.

2. வானமுட்டி பெருமாள் கோயில்

மயிலாடுதுறை வட்டம் மூவலூரில் இருந்து வடக்கே 2 கி.மீ. தூரத்தில் பழமையான பெருமாள் கோயில் உள்ளது. மூலவர் திருவுருவம் ஒரே அத்தி மரத்தால் ஆனது. எனவே மூலவருக்குதான் தைலக்காப்பு பூசப்படுகிறது. அபிஷேகம் இல்லை. இக்கோயிலில் சோழர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. காலம் 10–ஆம் நூற்றாண்டு. சென்னை திருவல்லிக்கேணி மூலவர் பார்த்தசாரதியைப்போல கம்பீரமாக சங்கு+சக்கரத்துடன் மூலவர் காட்சி தருகிறார். இக்கோயிலில் ஒரே கல்லில் வடிக்கப்பட்ட ஆலிலைக்கண்ணனின் சிற்பமும் சோழர் காலக் கலைக்கு எடுத்துக்காட்டாகும். மயிலாடுதுறையிலிருந்து சிற்றுந்து வசதியுள்ளது. இது சிறந்த வைணவத் தலமாக விளங்குகிறது.

3. திருவிக்கிரம நாராயண பெருமாள்கோயில்

சீர்காழி தாடலான் கோயில் எனும் திருவிக்கிரம நாராயணப் பெருமாள் கோயில் சீர்காழி நகரின் வடக்கேஅமைந்துள்ளது. திவ்யதேசத் தலங்களில் இது 24–ஆவது தலம் ஆகும். இங்கு ஸ்ரீ ராமருக்கு தனிச் சன்னதி உள்ளது. சீர்காழி அருகே அண்ணன் பெருமாள் கோயிலில் சுவாமி தரிசனம் செய்யலாம். அதுவும் நாங்கூர் 12 பெருமாள் கோயில்களுள் ஒன்றாகும். இங்கு வருடாந்திர கருடசேவை சிறப்புத் திருவிழாவாகும். திருக்கோயிலூருக்கு அடுத்த நிலையிலுள்ள புகழ்பெற்ற வாமன அவதார காட்சி தலங்களில் இது இரண்டாவது அடியெடுத்து வைத்த நிலையைக் குறிக்கும் திவ்யதேசமாகும்.

நாகை மாவட்டம் சீர்காழி அருகே தென்பாதியில் கோதண்டராம சுவாமி கோவில் உள்ளது. ஸ்ரீராமநவமியை முன்னிட்டு இங்கு திருவிழா சிறப்பாக நடக்கும். நாகை சவுந்தரராஜ பெருமாள் கோயில் ஒரு திவ்யதேசம் ஆகும். இங்கு ஒவ்வொரு ஆண்டும் 30–ஆம் தேதி பங்குனித் திருவிழா துவங்கும். முக்கிய நிகழ்ச்சியான தப்பத்திருவிழாஅன்று இரவு நேரம் மலர் அலங்காரம் மின் ஒளியில் கண்ணைக் கவரும்படி அமைக்கப்படுகிறது.

அனந்தமங்கலம்

இத்திருத்தலம் மயிலாடுதுறைக்கும், தரங்கம்பாடிக்கும் இடையில் திருக்கடையூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அனுமன் சிவாம்சத்தை தனக்குள் தேக்கி வைகுந்தனின் அவதாரமான ஸ்ரீராமனுக்கு கைங்கர்யம் செய்தவர். ஆஞ்சநேயர் என்றாலே சகலத்தையும் தருபவன் என்று பொருள்.

"இரக்கபிந்து, இரக்கராட்சசன் என்ற இரு அரக்கர்களும் கடலுக்கு அடியில் தீவிர தவம் மேற்கொண்டுள்ளனர். அவர்களின் தவம் பலித்து விட்டால் ராவணனைப் போல வரமும், உரமும் பெற்று இந்த உலகை அவர்கள் அழித்து விடுவார்கள். எனவே, அவர்களையும் தாங்களே வதம் செய்ய வேண்டும்" என ராமனை நாரதர் கேட்டுக் கொண்டார். ராமன் "மும்மூர்த்திகளின் ஆசிபெற்ற, சிரஞ்சீவியான அனுமனே அப்பணியை முடிக்கத் தகுந்தவன்" எனக் கூறினார். பலம் வாய்ந்த அரக்கர்களை அடக்கி வதைக்க அவருக்கு திருமால் தன்

சங்கையும், சக்கரத்தையும் தந்தார். பிரம்மா கபாலத்தையும், ருத்ரன் மழுவையும் அளித்தார். ராமன் வில்லையும், அம்புகளையும் கொடுத்தார். இந்திரன் வஜ்ராயுதத்தை அளித்தான். கருடாழ்வாரும் மிகப் பெரிய ஆயுதங்களான தன் சிறகுகளைக் கொடுத்தார்.

பத்து கரங்களிலும் ஆயுதங்களோடு நின்ற ஆஞ்சநேயரை பார்த்து சிவன் தன் மூன்றாவது கண்ணின் சக்தியை அளித்தார். மூன்று கண்கள், சங்கு, வஜ்ராயுதம், கபாலம், மழுவோடு இரக்கபிந்து, இரக்க ராட்சசன் என்ற இரு அரக்கர்களுடன் கடுமையாக போரிட்டார். அவர்களை வதம் செய்து அழித்த பின்பு ராமனைக் காண திரும்பினார். வரும் வழியில் ஒரு அழகான தலத்தைக் கண்டு சற்று நேரம் இளைப்பாற நினைத்து அங்கே அமர்ந்தார். அந்த சூழல் அவரை ஆனந்தப்படுத்தியது. அந்த ஆனந்தச் சூழலில் அமர்ந்ததால் அந்தத் தலத்திற்கு, 'அனந்தமங்கலம்' எனப் பெயர் வந்தது.

திருக்கோயில் கிழக்கு முகமாக உள்ளது. இக்கோயிலில் நாற்கரங்களும், நெற்றியில் கண்ணும் கொண்டு சதுர்புஜ, திரிநேத்திர ஆஞ்சநேயர் எனும் திருநாமத்தோடு மூலவராகவும் அருளாட்சி செய்கிறார் கோயிலின் மூலஸ்தானத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத வாசுதேவப் பெருமாள் சிரிப்போடு வீற்றிருக்கிறார். ராஜகோபால பெருமாள் இங்கு ருக்மணி, சத்யபாமாவுடன் உற்சவ மூர்த்தியாக சேவை சாதிக்கிறார். இத்திருக்கோயிலில் நாயக்கர்கால கல்வெட்டுகள் மூன்று உள்ளன.

ஆக்கூர் ஆதிநாராயண பெருமாள் திருக்கோயில்

மயிலாடுதுறையிலிருந்து திருக்கடையூர் செல்லும் சாலையில் செம்மனார் கோயிலை அடுத்து உள்ளது. மயிலாடுதுறைக்கு தெற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

சோதி வடிவாகிச் சுடராழிமேல் தூயின்று
பாதி வுருவாகிப் பாதகரைக் கொன்றழித்து
தேதி பலசொல்ல கீதைதனை தோற்றுவித்தூப்பின்
ஆதி நாராணனாய் ஆக்கூரில் தங்கினாரே! –தனிப்பாடல்

ஆக்கூரில் இரண்டு திருக்குளங்கள் ஒருங்கே அமையப்பட்டுள்ள இடத்தில், மா, பலா போன்ற கனிதரும் மரங்கள் சூழ்ந்த அமைதியான இயற்கைச் சூழ்நிலையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்

இக்கோயிலைப் பார்வையிட்ட வரலாற்று அறிஞர் திரு.தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், "இக்கோயிலின் மூலவர் தென்னகத்து வைணவத் தலங்களில் காணப்படும் மூலவரைவிட சிறப்பும், அழகும் வாய்ந்தவர்" என்று புகழ்ந்துள்ளார். இக்கோயிலில் மேற்குப்பக்கம் மூலவர் உண்ணாழியின் வெளிச்சுவரின் அடியில் இரண்டு சோழர்காலக் கல்வெட்டுகள் உள்ளன.

கோயிலின் அமைப்பும் வழிபாடும்

பெரிய பரப்பளவில் அமைந்த இக்கோயிலின் வெளிமதில்கள் உயரமாகவும் அகலமாகவும் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் பிரகாரம் அன்பர் பலரும் வழிபாடு செய்யும் வண்ணம் அகலமாக அமைக்கப் பட்டுள்ளது. ஆகம விதிப்படி அமைந்துள்ள விமானத்தில் கோபுர வாயிலின் முன்னால் கருடாழ்வார் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். நுழைவாயிலின் வடபுறத்தில் ராஜகோபாலப் பெருமாள் தென்திசை பார்த்தவண்ணம் தனி சன்னதியில் இடம் பெற்றுள்ளார். தெற்குப் பிரகாரத்தில் செங்கமலவல்லித் தாயார் அழகே உருவாக நின்ற கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். கருவறையில் மூலவராக ஆதிநாராயணர் இருதேவிகளுடன் அழகே உருவாக புன்முறுவல் பூத்த முகப்பொலிவுடன் அமர்ந்து காட்சி தருகிறார்.

தனிச்சிறப்பு

இக்கோயிலின் தெற்கே உள்ள அனந்தமங்கலம் ஆஞ்சநேயப் பெருமானை தரிசிக்கச் செல்லும் அன்பர்களில் பெரும்பாலோர் இக்கோயிலில் உறையும் ஆதிநாராயணரை தரிசித்து சென்றால் நன்மை பயக்கும் என்றெண்ணி தரிசிக்க வருவது தனிச்சிறப்பாகும்.

திருநாங்கூர்

நம்பெருமான்களும்–கருடசேவையும்

அமைவிடம்

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் சீர்காழிக்கு தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. சீர்காழி–கீழ்மூவர்கரை, மயிலாடுதுறை–நாங்கூர் வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளிலும் இவ்வூரை அடையலாம். வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்புகார், திருவெண்காடு போன்ற ஊர்களும் இவ்வூரின் அருகிலேயே உள்ளன.

சங்க இலக்கியங்களில்

சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை ஆகியவை நாங்கூரைப் பற்றி குறிப்புகள் தருகின்றன. பூம்புகாரை சோழர்களின் தலைநகராகவும், துறைமுகப் பட்டினமாகவும் கொண்டு ஆட்சி செய்த சோழ மன்னன் கரிகால்சோழனுக்கு பெண் கொடுத்து மண உறவு கொண்டவர்கள் நாங்கூர் வேளிர் ஆவர்.

தாய்லாந்து நாட்டு கல்வெட்டில்

தாய்லாந்து நாட்டில் தாகூவாபா என்ற இடத்தில் தமிழ் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் நாங்கூர் மணிக்கிராமம் என்ற ஊர் பெயர்கள் பதிக்கப்பட்டுள்ளன. தாய்லாந்து சென்று வந்துள்ள தமிழக ஆய்வாளர்கள் நாங்கூர் என்ற சொல் அக்கல்வெட்டில் இருப்பதை தெரிவித்துள்ளனர். எனினும் மணிக்கிராமம் என்ற சொல் தெளிவாக இருக்கிறது. இன்றும் நாங்கூர் அருகே மணிக்கிராமம் என்ற ஊர் உள்ளதால் நாங்கூர் பகுதியைச் சேர்ந்தவர் கொடுத்த கொடையையே இக்கடல் கடந்த தமிழ்க் கல்வெட்டு குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

சோழர் கல்வெட்டுகளில்

சோழர்காலக் கல்வெட்டுகளில் (கி.பி. 850–1250) இவ்வூர் விவசாய நிலங்கள் நிறைந்த சில ஊர் சபைகளின் தலைமையிடமாக 'நாடு' என்ற அமைப்பை பெற்ற நாங்கூர் நாடாக விளங்கியமை தெரிய வருகிறது. இந்நாடு அமைப்பில் திருவெண்காடு, பெருஞ்சிரைநல்லூர், குன்றம் என்ற குந்தவைச் சதுர்வேதி மங்கலம் (கீழையூர்), திருச்சாய்க்காடு (சாயாவனம்) ஆகிய ஊர்கள் அடங்கி இருந்தன. திருவெண்காடு சோழர் கல்வெட்டுகள், திருநாங்கூரிலிருந்து கிழக்கே 4 கி.மீ. தொலையில் உள்ள திருவெண்காட்டையும், நாங்கூர் என்று குறிப்பிடுவதிலிருந்து இது பரந்து விரிந்த ஒரு பெரிய ஊராக விளங்கி இருந்தது என்றும், இந்நாங்கூர் நாடு இராசேந்திரசிங்க வளநாட்டில் அடங்கியிருந்ததாகவும் கூறுகின்றன. சாயாவனத்தில்ள மூன்றாம் குலோத்துங்கன் காலத்து (கி.பி. 12,13–ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு "இராசேந்திரசிங்க வளநாட்டு, நாங்கூர் நாட்டு, காவிரிப்பூம்பட்டினத்து சாய்க்காடு" என்று கூறுவதால் நாங்கூரின் பரப்பளவு கிழக்கே காவிரிப்பூம்பட்டினம் வரையில் பரந்து விரிந்த பெரும் ஊராக அமைந்து விளங்கியமை தெரியவருகிறது.

''நாங்கூரான பாததூளிச் சதுர்வேதிமங்கலம்'' என்று இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது. பிராமண ஊராகப் பிரம்மதேயம் என்ற பெயரிலும் விளங்கியிருக்கிறது. திருமங்கையாழ்வார் பாசுரங்களில் அந்தணர்கள் சிறந்து விளங்கும் ஊராக நாங்கூரைப் பாடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டியர் கல்வெட்டுகளில்

பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் கல்வெட்டு இவ்வூரைத் திருநாங்கூர் என்றே குறிக்கிறது. 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டும் இவ்வூரை திருநாங்கூர் என்றே குறிக்கின்றது. எனவே சங்காலம் தொட்டு இன்று வரை இவ்வூரின் பெயர் நாங்கூர் என்றே விளங்கியிருக்கிறது.

ஊர் கருடசேவை சிறப்பு

சோழநாட்டு வைணவத் திருத்தலங்களில் சிறப்புடைய ஓர் ஊர் திருநாங்கூர். திருநாங்கூர் 11 கருடசேவைத் திருவிழா மிகச்சிறந்த திருவிழாவாகும். இதனால் சீர்காழி வட்டத்தில் உள்ள வைணவத் திருத்தலங்கள் திருநாங்கூர்த் திருப்பதிகள் என்றே பொதுப்படையாக அழைக்கப்படுகின்றன. திருநாங்கூரைத் தலமாகக் கொண்டு 11 திவ்ய தலங்கள், திருமாலின் வாகனமான கருடனை மையமாகக் கொண்டு, 'கருடசேவைத் திருவிழா' கொண்டாடுவது சிறப்பாகக் கருதத்தக்க ஒன்றாகும். இந்த 11 திருக்கோயில்களையும் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். வைணவத்தில் இவ்வூருக்கு எவ்வளவு சிறப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பது எண்ணிப் பார்க்கத்தக்க ஒன்றாகும்.

திருமங்கையாழ்வார் பாசுரங்களில் திருநாங்கூர்

திருமங்கையாழ்வார் தமது பாசுரங்களில் எம்பெருமான் புகழ் பற்றி மட்டுமல்லாது அனைத்து துறைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். அவர் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கை வளங்கள் மற்றும் அவர் தெரிவித்துள்ள செய்திகள் உண்மையானவை. ஆழ்வார் குறிப்பிட்டுள்ள காவிரியில் வெள்ளம், தடாகத்தைச் சுற்றி தென்னை மரங்கள் அவர் குறிப்பிட்ட பல மரங்கள் கொண்ட சோலைவனங்கள், வாய்க்கால்கள் தற்போதும் திருநாங்கூர் கிராமத்தில் உள்ளன. மணிகர்ணிகை ஆறு, குளங்கள் எல்லாம் நிறைந்துள்ளன.

நாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில் இவ்வூரின் மேற்கில் உள்ளது. இக்கோயிலில் 11 கருடசேவை திருவிழா நடைபெறும். இக்கோயில் மணிமாடக் கோயில் என கட்டட அமைப்பு குறிப்பிடப்படுகிறது. மூலவர் பத்ரிநாராயணப் பெருமாள் அருகில் ஸ்ரீதேவி, பூதேவி காட்சி தருகின்றனர். இக்கோயில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் புண்டரீகவல்லி தாயார் சன்னதி உள்ளது. கருவறைக்குச் செல்லும் நுழைவாயிலில் வலது, இடது புறங்களில் துவாரபாலகர், அர்த்தமண்டபத்தில் திருமங்கையாழ்வார் நந்தா விளக்குப் பெருமாள் நம்மாழ்வார், மணவாள மாமுனிகள், திருக்கோட்டியூர் நம்பிகள் ஆகிய சிற்பங்கள் உள்ளன.

கல்வெட்டுகள்

இக்கோயில் கல்வெட்டுகள் இந்தியக்கல்வெட்டு ஆண்டு அறிக்கை 1951–2பி, 153, 154இ,155 எண்களாக வெளிவந்துள்ளன. இரண்டு கல்வெட்டுகள் சோழர் பரகேசரி கல்வெட்டுகளாகும். மற்றொரு கல்வெட்டு தெலுங்கு எழுத்தில் உள்ளது. அது கி.பி. 16–17ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

பராந்தகன் கல்வெட்டுகள்

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் பரகேசரிவர்மன் என்று வருவதால் பராந்தகச் சோழனின் கல்வெட்டுகளாகக் கருதலாம். இவனது இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் இக்கோயில் திருமணிமாடக் கோயில் என்று குறிக்கப்படுகிறது. திருமங்கையாழ்வாரும் இக்கோயிலை மணிமாடக் கோவில் என்று குறிப்பிடுகின்றார். பெருமாளுக்கு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு 40 காசுக்கு சோமன் தத்தனிடமிருந்து நிலம் விலையாகப் பெற்று இக்கோயிலுக்கு தானமாக அளிக்கப்பட்ட செய்தி தெரியவருகிறது. மற்றொரு கல்வெட்டில் கோயில் நிவந்தங்களுக்கும் அர்த்தசாம பூசைக்கும் 40 காசுகளுக்கு சோமன் தத்தனிடமிருந்து நிலம் விலையாகப் பெற்று, இந்நிலம் கோயிலுக்கு தானமாக அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

நாயக்கர் காலக் கல்வெட்டு

தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில்

"காடுவெட்டியாரப்பா" என்ற பெயர் குறிக்கப்படுகிறது. இது நாயக்கர் காலத்து கல்வெட்டாகும். இக்கோயிலில் சித்திரைத் திங்களில் பத்து நாட்களுக்கு பிரம்மோற்சவம் நடைபெறும். தை அமாவாசை மறுதினம் 11 கருடசேவை உற்சவம் நடைபெறும்.

மேலும் திருநாங்கூரிலுள்ள குடமாடுங்கூத்தர் பெருமாள், பள்ளிகொண்ட பெருமாள், செம்பொன்னரங்கர் பெருமாள், வைகுந்தப் பெருமாள், வரதராஜபெருமாள், புருசோத்தம பெருமாள், அண்ணன்பெருமாள், கீழச்சாலை மாதவப்பெருமாள், திருக்காளம்பாடி கண்ணன், பார்த்தன் பள்ளி பார்த்தசாரதி பெருமாள் முதலிய ஒவ்வொரு தலங்கள் பற்றி தலா 10 பாசுரங்கள் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். முதல் பாடலில் எம்பெருமான் சிறப்பு பற்றியும், கடைசி 10–ஆவது பாடலில் திருமங்கையாழ்வார் தன் வரலாறு பற்றியும் குறித்துள்ளார். இப்பாசுரங்கள் மூலம் திருமங்கையாழ்வார் வரலாறு பற்றியும் மற்றும் ஊர்களின் இயற்கை வளம், சமூகப்பொருளதாரம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் உதவியாகத் திகழ்கின்றன.

பஞ்சநரசிம்ம தலங்கள்

திருவாலி

இல்லத்தில் லட்சுமி கடாட்சம் பெருகவும் வறுமைகள் நீங்கவும், தடை நீங்கி திருமணம் கைகூடவும் திருவாலியில் உறையும் ஸ்ரீலட்சுமி நரசிம்மரை வழிபடுகிறார்கள். பண்டைக்காலத்தில் ஆலிநாடு என்று வழங்கப்பட்ட பகுதி நீர்வளம் சூழ்ந்த பெருநிலமாக விளங்கியது.

திருநகரி

திருவாலியின் அருகிலேயே உள்ள தலம் இது. ஸ்ரீதேவராஜ பெருமாள் இங்கு திருமங்கையாழ்வாருக்கு கல்யாண கோலம் காட்டியவர் என்பதால் ஸ்ரீகல்யாண ரங்கநாதராக அருள்புரிகிறார். உற்சவர். இவரும் கல்யாண வரம் தருவதில் வள்ளலாக விளங்குகிறார். இங்கு திருமங்கை ஆழ்வாருக்குத் தனிச்சந்நிதி உண்டு.

நாகை மாவட்டம் சீர்காழியில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது திருநகரி. இங்கிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது திருநகரி திருக்கோயில். ஆழ்வார் பாசுரங்களில் சொல்லப்பட்ட வயலாலி மணவாளன் திருவாலியில் இல்லாமல், திருநகரியில் இருப்பதால் இரண்டும் ஒரே திவ்ய தேசமாகக் கருதப்படுகிறது.

திருமங்கையாழ்வார் ஆராதித்த ஐந்து நரசிம்ம மூர்த்திகளில் திருவாலியில் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் கோயில் கொண்டிருக்க, திருநகரி அருள்மிகு தேவராஜ பெருமாள் கோயிலில் ஸ்ரீஹிரண்ய நரசிம்மரும், ஸ்ரீயோக நரசிம்மரும் அருள்பாலிக்கின்றனர். ஸ்ரீவீரநரசிம்மரை மங்கைமடத்திலும் தரிசிக்கலாம்.

திருக்குறையலூர்

திருவாலி தலத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தத் தலம். எதிலும் குறையிலாத பூரணமான தலம் என்பதால் இப்படியொரு திருப்பெயராம் இந்த ஊருக்கு. இங்கு கோயில் கொண்டிருக்கும். ஸ்ரீ உக்கிர நரசிம்மர், நவக்கிரக தோஷம், நீங்கவும், தீவினைகள் நெருங்காமல் இருக்கவும் இவரை வழிபடுகிறார்கள் பக்தர்கள். இவருக்கு பானக நைவேத்தியம் செய்து 3 முறை வந்து வழிபட தோஷங்கள் விலகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

திருமங்கைமடம்

இந்தத் தலம், திருக்குறையலூரில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு அருளும் ஸ்ரீ வீரநரசிம்மரை வழிபட, பகைவர்களால் ஏற்படும் பகை அகலும். வாழ்க்கை சுபிட்சம் அடையும் என்கிறார்கள் பக்தர்கள். பிரதோஷம் மற்றும் அமாவாசை நாட்களில் மாலை வேளையில் பஞ்ச நரசிம்ம க்ஷேத்திரங்களுக்குச் சென்று வழிபடுவது நற்பலனை அளிக்க வல்லது.

ஞானமும் செல்வமும் வாரி வழங்கும் திருவாலி, திருநகரி உறையும் எம்பெருமானின்மீது காதலாகி கசிந்துருகினார் திருமங்கை ஆழ்வார். குலசேகர ஆழ்வாரோ, அந்த அருளாளனை பிள்ளையாக பாவித்து, "ஆலிநகர்க்கதிபதியே அயாத்திமனே தாலேலோ'' என்று தாலாட்டுப் பாடி சிறப்பிக்கிறார். இந்த அடியவர்களின் வழியொற்றி இன்றும் பக்தர்கள் திருவாலி, திருநகரி தலங்களை தரிசித்து வழிபட்டு நல்வரம் பெற்று மகிழ்ந்து செல்கின்றனர். சங்ககாலம் தொடங்கி சோழர்கள் காலம் வரை திருநடனமாடும் மங்கையர்கள் பயிற்சி பெற்று பல குடும்பங்களாக வாழ்ந்த இடமே மங்கையர் மடம் என்றழைக்கப் பட்டுள்ளது. இவர்களுக்கென்று தனியே நீராடும் திருக்குளமும், அதன்கரையில் அமைந்த தெருக்களில் வீடுகளும் சமீப காலம் வரை இருந்துள்ளன. திருமங்கையாழ்வார் மடம் அமைத்து உணவளித்த இடம் என்று சிலர் கூறுவர். ஆனால் இலையமுது கூடம் என்று வழங்கும் ஊரே உணவளித்த இடமாகக் கருதப்படுகிறது.

திருமங்கையாழ்வாருக்கு விரைவில் அருள்பாலிக்க வேண்டும் என பெருமாளை இடைவிடாது பிரார்த்தித்த லட்சுமி தேவி மாலவனின் அறிவுரைப்படி, திருவாலியில் தவம் செய்யும் பூர்ண மகரிஷியின் மகளாகப் பிறந்து வளர்ந்தாள். தக்க தருணத்தில் பெருமாளும் பூலோகம் வந்து அவளை மணந்து கொண்டார். இந்த புதுமணத் தம்பதிதான், திருவாலி அருகே தேவராஜபுரம் என்ற இடத்திற்கு வரும்போது திருமங்கை மன்னனிடம் மாட்டிக் கொண்டார்கள். தனது உடைமையைக் கொள்ளை கொள்ள வந்த ஆலிநாடனாம் திருமங்கை மன்னனின் மனதை, தாம் கவர்ந்ததுடன், எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தும் அருள்புரிந்தார் பெருமாள். பங்குனி உத்திரப் பெருவிழாவையொட்டி இங்கு நடைபெறும் வேடுபறி திருவிழா மிகவும் சிறப்பானது. அப்போது பெருமாள் பிராட்டியின் மணக்கோலத்தையும் திருமங்கை மன்னனுக்கு பெருமாள் மந்திரோபதேசம் செய்யும் வைபவத்தையும் காணக் கண்கோடி வேண்டும்.

சைவமும் வைணவமும் கைகோர்த்த பூமி . சீர்காழி

தமிழ்மொழியை தெய்வத் தமிழ் – வேதத்தமிழ் என்ற ஓங்கு புகழ்நிலையை எய்துவித்த பெருமை சைவ சமயக் குரவர்கள் நால்வரையும், பன்னிரு ஆழ்வார்களையுமே சாரும். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார் அவதாரம் செய்த தலமான ஆலி நாடு. சோழநாட்டு திவ்ய தேசங்களில் தனிச் சிறப்புடையது. திருமங்கை ஆழ்வார் ஆலி நாட்டின் குறுநில மன்னராகத் திகழ்ந்தவர். இவருடைய தேவியார் குமுதவல்லி நாச்சியார். சிவபெருமானின் நட்பு தொண்டராக சுந்தரமூர்த்தி சுவாமிகள் புகழ் பெற்றதைப் போல திருமாலின் வன்தொண்டராகப் பிரகாசித்தவர் திருமங்கையாழ்வார். திருமங்கை ஆழ்வார் – குமுதவல்லி நாச்சியார் விக்கிரகங்கள் அபூர்வ அழகுடையவை. இவை திருவாலியை அடுத்த திருநகரியில் அமைந்துள்ளன.

திவ்விய பிரபந்தத்தின் 4000 பாசுரங்களில் திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்களே அதிகம். நெஞ்சை உருக்கவல்லவை. அழகு தமிழில் – சிறந்த யாப்பில் அமைந்தவை.கொஞ்சு தமிழை, குலவு தமிழைப் பிரபந்தத்துக்கு அருளியவர் – திருமங்கை ஆழ்வார். பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற ஆறு பிரபந்தங்களை அவர் அருளிச் செய்துள்ளார். தேவாரப்

பாடல்களில் திருத்தாண்டகம் பாடி 'தாண்டக வேந்தர்' என்ற புகழைப் பெற்றவர் அப்பர் அடிகள். அதைப்போலவே பெருமாளின் பாசுரங்களில் தாண்டகம் பாடி பெருமை பெற்ற தாண்டக மன்னர்– திருமங்கை மன்னன். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைக் கவிதைகளைப் பொழிவதில் வல்லவர். ஆழ்வார்களில் அதிக எண்ணிக்கையில் கோயில்களுக்கு மங்களாசாசனம் செய்த அருளாளரும் இவரே.இவரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற வைணவத் திருத்தலங்கள் 86. இவருக்கு அடுத்தபடியாக 37 தலங்களை மங்களாசாசனம் செய்தவர் – நம்மாழ்வார்.

இவர் 'தக்கசீர் புகலிக்கு மன்தமிழ்' நாதராகப் பொலிந்த சைவ சமயக் குரவர் திருஞான சம்பந்தப் பெருமானுக்குச் சமகாலத்தவர். அவர் அவதரித்த சீர்காழியும் இவர் தோன்றிய ஆலிநாடும் அருகருகே உள்ளவை. ஆயினும் இவ்விருவருமே ஒருவருடைய அருமை பெருமையை இன்னொருவர் உணர்ந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணம் – சீர்காழியில் நடைபெற்றதாகக் கூறப்பெறும் சம்பவம்.

சீர்காழியில் காழியர் கோனாக சம்பந்தப் பெருமான் விளங்கி வந்த காலத்தில் பல தலங்களை மங்களாசாசனம் செய்து வந்த திருமங்கை ஆழ்வார் சீர்காழிக்குள் பிரவேசித்தபோது, திருமால் அடியவர்கள் ஆழ்வாரின் விருதுகளை முழக்கியப்படியே 'நானு கவிப் பெருமாள் வருகிறார் என்று பராக் கூறினார். சீர்காழிக்குள் இப்படி முழக்கமிடுவதைச் சைவ அடியார்கள் ஆட்சேபித்துத் தடுத்து நிறுத்தினார்கள். அத்தடையை மீறி சீர்காழியிலுள்ள தாடாளன் பெருமாள் கோயிலுக்குச் சென்று அப்பெருமானை மங்களாசாசனம் செய்து மகிழ்ந்தார் திருமங்கை ஆழ்வார்.

இதற்குள் இச்செய்தி, திருஞானசம்பந்தரின் திருச்செவிக்கு எட்டியது. திருமங்கை ஆழ்வாரைச் சந்திக்க திருவுளம்பற்றினார். அதற்கேற்ப ஆழ்வாரும் நேராக சம்பந்தப் பெருமானின் முன் வந்து தோன்றினார். 'நீர் ஒரு குறள் சொல்ல முடியுமா?' என்று சம்பந்தர் கேட்கவும் தாடாளப் பெருமாள் மீது பத்து அருமையான பாசுரங்களைப் பொழிந்தார். அதுவும் –'குறள்' என்ற வார்த்தையையே கவியின் முதலடியாகக் கொண்டு!

இரு அருளாளர்களும் சமயத்தால் வேறுபட்டிருப்பினும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த மதிப்பு கொண்டிருந்திருக்கிறார்கள். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும், தமிழில் செஞ்சொலால் தெய்வ நன்மாலை தொடுத்த ஆழ்வாரும் அந்தரங்க நண்பர்களாக விளங்கினார்கள்.

(vii) புகழ்பெற்ற அம்மன் தலங்கள்

தமிழகத்தில் சக்தி வழிபாடு சங்ககாலந்தொட்டே வழிபாட்டில் இருந்து வந்துள்ளது. புகழ்பெற்ற தனி அம்மன் தலங்கள் நாகை மாவட்டத்தில் அதிகம் உள்ளன. சக்தி வழிபாட்டில் கடைபிடிக்கும் நடைமுறைக்கு 'சாக்தம்' என்று வழங்கப்படுகிறது. நாகை மாவட்டத்தில்

1. நாகப்பட்டினம் – நெல்லுக்கடை மாரியம்மன்
2. தேவூர் – மகா மாரியம்மன்
3. உத்திரங்குடி கம்பகாமாட்சியம்மன்
4. திருச்சம்பள்ளி – ரேணுகாதேவியம்மன்
5. ஒழுகைமங்களம் – மகா மாரியம்மன்
6. மேலப்பாதி – அருள்மிகு திரௌபதி அம்மன்
7. கருவாழக்கரை – ஸ்ரீமாரியம்மன்
8. சேண்டிருப்பு – ஸ்ரீமுத்துமாரியம்மன்
9. கொள்ளிடம் – புலியீஸ்வரி அம்மன்
10. சேந்தங்குடி – படவேட்டம்மன்
11. மாதானம் – ஸ்ரீமாரியம்மன் கோயில்
12. பூம்புகார் – தீப்பாய்ந்தாள் அம்மன்
13. மயிலாடுதுறை – பிரசன்ன மாரியம்மன்
14. தரங்கம்பாடி – ஸ்ரீரேணுகா பரமேஸ்வரி அம்மன்
15. கூறைநாடு காவிரிகரை – தீப்பாய்ந்தாள் அம்மன்
16. மன்னன் பந்தல் பாலவெளி – காத்தாயி அம்மன்
17. நாஞ்சில் நாடு – முத்தாட்சி அம்மன்
18. திம்மாநாயக்கன் படித்துறை – சின்ன மாரியம்மன்
19. பட்டமங்களத்தெரு – சப்த கன்னியர் கோயில்
20. திருவாரூர் சாலை – வீர மாகாளியம்மன் கோயில்

இவ்வாறு இன்னும் பல புகழ்பெற்ற தனி அம்மன் தலங்கள் நாகை மாவட்டத்தில் ஆங்காங்கு காட்சி தருகின்றன. இத்தலங்களில்

ஆடிமாதம், தை மாதம், சிறப்பு பெருவிழாக்கள், அதிவிமரிசையாக நடைபெறுவது உண்டு. இக்காலங்களில் அம்மனுக்கு 1008 பால்குடங்களும், பூச்சொரிதல்களும், விழா முடிவில் தீமிதித் திருவிழாவும், அம்மன் திருவீதி உலாவும் மிகச்சிறப்பாக தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது. சில தலங்களில் தேர்த்திருவிழாவும், செடில் திருவிழாவும் வெளியூர் பக்தர்கள் புடைசூழ வந்திருந்து நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ரேணுகாதேவி எல்லையம்மன்

நாகை மாவட்டம் பூம்புகார் அருகே வானகிரி மீனவர் கிராமத்தில் உள்ளது. ரேணுகாதேவி எல்லையம்மன் கோயில். இங்கு ரேணுகா தேவி உடலில்லாமல் தலையுடன் காட்சியளிக்கிறார். இங்கு அம்மனுக்கு பொங்கலிட்டு அன்னதானம் செய்து, அம்மனை வணங்கினால் அனைத்து நோய்களும் தீர்ந்துவிடும் என்பது மக்களின் நம்பிக்கை. ரேணுகா தேவி எல்லையம்மன் கோயிலில் 14 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.15 லட்சம் செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது. இது புதுப்பித்து கட்டப்பட்ட கோயிலாகும். எல்லா இனத்தவரும் இங்கு வழிபாடு செய்து செல்வது வழக்கம். இதுபோல் தரங்கம்பாடியிலும் ஒரு அம்மன் கோயில் உள்ளது,

ஒட்டங்காடு மற்றும் விளநகர் மாரியம்மன் கோயில்

செம்பனார் கோயில் அடுத்த ஒட்டங்காடு மற்றும் விளநகர் ஆகிய இடங்களில் தருமபுரத்திற்குச் சொந்தமான மாரியம்மன் கோயில்கள் உள்ளன. ஒட்டங்காடு கோயிலில் சமீபத்தில் கும்பாபிஷேகம் நடந்தது. 2 கோயில்களிலும் காப்பு கட்டி, 9 நாட்கள் சுவாமி வீதியுலா நடந்தது. இதையடுத்து 2 கோயில்களிலும் தீமிதி விழாவும் நடப்பது வழக்கம்.

துர்க்காபரமேஸ்வரி கோயில்

பூம்புகார் அருகே உள்ள தருமகுளத்தில் புகழ் பெற்ற துர்க்கா பரமேஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடப்பது வழக்கம். இதற்காகக் காவிரியில் இருந்து ஏராளமான பக்தர்கள் புனிதநீர் எடுத்து வந்து, அம்மனுக்குச் சிறப்பு அபிஷேகமும், தீபாராதனையும் நடைபெறும். மாலையில் சந்தனகாப்பு அலங்காரமும் அதனைத் தொடர்ந்து வீதியுலாவும் நடைபெறுவது மரபாக உள்ளது.

பூம்புகார் ரெத்ன பூர்னேஸ்வரி அம்மன்

பூம்புகாரில் காவிரி ஆறு கடலோடு கலக்கும் சங்கமத்துறை உள்ளது. இவ்விடம் வானகிரிக்கும் பூம்புகாருக்கும் நடுவில் அமைந்துள்ளது. இங்கு காவிரியின் வடகரையில் ரெத்ன பூர்னேஸ்வரி அம்மன் கோயில் கோபுரத்துடன் காட்சி தருகிறது, ஆடி அமாவாசை, தை அமாவாசை விரத நாட்களில் பக்தர்கள் தமது முன்னோர் களுக்குத் திதி கொடுக்க கடலில் நீராடி விட்டு, காவிரியிலும் நீராடிவிட்டு வந்து இந்த அம்மனையும் வழிபாடு செய்துவிட்டு செல்வது மரபாக உள்ளது.

நாகை நீலா கீழவீதி அம்மன்

நாகை நகரில் நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் உள்ளது. இங்கு பிரம்மோற்சவ விழா தொடங்கினால், கோயிலில் உள்ள எல்லையம்மனுக்கும் பாலாபிஷேகம் முதலியன சிறப்பாக நடைபெறும். இதில் வியாபாரிகள், பொதுமக்கள் கூட்டம் அதிகம் இருக்கும்.

நாகை மாவட்டம் கொள்ளிடம் புலீஸ்வரி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரவிழா நடைபெறும். விழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கொள்ளிடம் ஆற்றுக் கரையிலிருந்து புனித நீராடி பால்காவடி, அலகுக் காவடி மற்றும் தீச்சட்டி ஏந்தி கொள்ளிடம் மெயின்ரோடு மூலமாக வந்து புலீஸ்வரி அம்மன் கோயிலை வந்தடைந்து நேர்த்திக் கடனைச் செலுத்துவார்கள்.

மாதானம்

மாரியம்மன் கோயிலில் நடைபெறும் தீமிதித் திருவிழா சீர்காழி வட்டத்தில் பெருவிழாவாகும். பிள்ளைப்பேறு வேண்டுதல் உடையவர்கட்கும் பிணிகள் தீர்க்கும் சக்தியுடைய அம்மன் இதுவாகும். சீர்காழி, சிதம்பரம் நகர்களில் இருந்து சிறப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன.

மேலமுத்து மாரியம்மன்

மயிலாடுதுறை அருகே பிரசித்தி பெற்ற திருவிழந்தூர் மேலமுத்து மாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் அமாவாசை தினத்தில் தீமிதித் திருவிழா நடப்பது வழக்கம். விழாவை ஒட்டி காவிரிக்கரையிலிருந்து சக்தி கரகம், அலகுக் காவடிகளுடன் பக்தர்கள் ஊர்வலமாக கோயிலுக்கு வருவர். தொடர்ந்து அம்மனுக்கு

சிறப்பு அபிஷேகங்கள் நடக்கும். பின்னர் தீமிதித் திருவிழா நடக்கும். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தீமிதித்து அம்மனின் திருவருள் பெற்றுச் செல்வார்கள்.

சின்ன மாரியம்மன் கோயில்

''திம்மாநாயக்கன் படித்துறை மாரியம்மன்'' என்று அழைக்கப்படும் சின்ன மாரியம்மன் கோயில் மயிலாடுதுறையில் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் பால் காவடி, பூச்சொரிதல், தீமிதி என சிறப்பு விழாக்கள் நடைபெறுவது வழக்கம். வாழை மரம், பனங்கொத்து, ஈச்சங்கொத்து, மாங்கொத்து, நெற்கதிர் கட்டுகள் எனப் பலவகை பந்தலில் சிறப்பாகக் காட்சியளிக்கும்.

காரைக்கால் – அம்பகரத்தூர் – காளி

வரலாற்றுப் புகழ்மிக்க காரைக்கால் அம்மையார் குடிகொண்டு இருக்கும் திருத்தலம் காரைக்கால், நளன் கலிதீர்த்து சனீஸ்வர பகவான் தனியே அமர்ந்து கோயில் கொண்ட திருத்தலம் திரு நள்ளாறு. சமயக்குரவர்களால் திருப்பதிகங்களும் பாடப்பெற்ற திருக்கொட்டாரம், அம்பல், கந்தன்குடி ஆகிய திவ்விய திருத்தலங்கள் சூழ தீய சக்திகளை அழித்து, கருணை மழை பொழிந்து அருள்பாலித்து அஷ்டபுஜபத்ரகாளி என்ற திருநாமம் தாங்கி அன்னை அமர்ந்திருக்கும் பதி அம்பகரத்தூர் தலமாகும். முன்னொரு காலத்தில் அம்பரன், அம்பன் என்ற இரு கொடிய அசுரச் சகோதரர்கள் தங்களின் தவவலிமையால் சிவபெருமானிடத்தில் அரிய சக்திகளை வரங்களாகப் பெற்றும் அவர்களின் வேண்டுதலுக்கிரங்கி ஈசன் பார்வதியையும், திருமாலையும் அம்பகரத்தூர் அனுப்ப பார்வதி தேவி கவர்ச்சிக் கன்னி உருவில் தோன்றி அசுரச் சகோதரர்களிடையே போட்டி ஏற்படுத்தி அம்பனை அம்பரனால் அழித்தாள். பின் காமநோக்குடன் நெருங்கிய அம்பரனை ஈஸ்வரி பத்ரகாளியாக விஸ்வரூபம் எடுத்து விரட்டினாள்.

இன்று அம்பகரத்தூர் என்றழைக்கப்படும் இத்தலத்தை அடைந்த அம்பரசன் பெரிய கிடா எருமை (மகிஷ) உரு கொண்டு காளியை எதிர்க்க; திருமால் கொடுத்த வாளால் மகிஷனின் தலையை வெட்டி சம்ஹாரம் செய்தாள் அன்னை பத்ரகாளி. அம்பரன் மீண்டும்

அம்பரனை தன் இடது பாதத்தால் மிதித்து திரிசூலத்தால் அவன் மார்பை பிளந்து அழித்தாள். அம்பரனை அழித்த இவ்விடம் அன்று முதல் அம்பகரத்தூர் என அழைக்கப்படுகிறது. பின் பக்தர்களின் வேண்டுதலின்படி பராசக்தி, பத்ரகாளி உருவிலேயே இத்தலத்தில் கோயில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

தீப்பாய்ந்தாள் அம்மன்

முற்காலத்தில் நன்னெறியில் வாழ்ந்து வந்த பத்தினிப் பெண்ணுக்குச் சோதனை வந்தது. தான் கற்புடையவள், நிரபராதி என்பதை நிரூபிக்க தீ மூட்டத்துள் புகுந்து தன் இன்னுயிர் நீத்துவிட்டாள். அவ்வாறு தெய்வ நிலையை அடைந்தவளை 'தீப்பாய்ந்தாள் அம்மன்' என்று வழிபடுகின்றனர். இவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்ந்து விளங்கிய பெண்ணின் ஆற்றலை அறிந்து அவளை உணர்ந்து அவளுக்கென்று பல இடங்களில் கோயில் பொதுமக்களாலே எழுப்பப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை–காவிரிக்கரை

பட்டுநூல், பட்டுத்துணி நெய்யும் இனத்தைச் சேர்ந்த கணவன் மனைவி இருவர் மயிலாடுதுறைக்கு வந்து செங்கமேட்டுத்தெருவில் தங்கி இல்லறம் நடத்தி வந்தனர். ஒருவருக்கொருவர் பேரன்பு கொண்டு வாழ்ந்தனர். தேகத்து இச்சையைக் கடந்தனர். தெய்வத்தின்மீது கிரியா சக்தி கொண்டு ஞானசக்தியோடு வழிபட்டனர். தந்தை தாய் என்ற பதவியை இறைவன் அவர்களுக்குக் கொடுக்க மறந்துவிட்டான். அவர்கள் கொண்ட அன்பிலே ஆண், பெண் என ஒருவராகி அந்த வையகத் தலைவனை வணங்கி வந்தார்கள்.

வந்தோரை வாழவைப்பது தமிழகம். ஞானிகளை வாழ வைப்பது சிவலோகம் என்று அழைக்கப்படும் மயிலாடுதுறையாகும். இதை கௌரி மாயூரம் என்று சொல்வதுண்டு. இப்படி அவர்கள் இல்லறம் நடத்தி இல்லற ஞானிகளாக இருந்து தவ தம்பதிகளாக வாழ்ந்து வரும்போது தீப்பாய்ந்தாள் அம்மனுடைய மணவாளனுக்கு அந்தகன் வரும் அந்தி நேரம் வந்தது. வந்த அது அம்மாவுடைய கணவரின் ஆத்மாவை அழைத்துக் கொண்டு சென்றது. எமனுக்கு அது தர்மமாகத் தெரிந்தது. சிவபெருமானுக்கும் அது தர்மமாகத் தெரிந்தது. ஆனால் தீப்பாய்ந்தாள் அம்மனுக்கு (மனைவிக்கு) அது

தர்மமாகத் தெரியவில்லை. அந்த தீப்பாய்ந்தாள் அம்மன் தீயில் பாய்வதற்கு முன்பு கணவன் சென்றதை, நினைத்து துன்பத்தின் உச்சிக்குச் சென்றுவிட்டாள்.

மயானத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கட்டையிலே தேகத்தை வைத்தார்கள். தீப்பாய்ந்தாள் பெண்ணும் வந்தாள். சிதைக்கு அக்னி மூட்டப்பட்டது. எரிந்துகொண்டிருக்கின்ற தன் கணவன் சிதையில், நெருப்பில் அந்த அம்மாள் அப்படியே பாய்ந்தாள். மண்ணுலகில் இருந்து விண்ணுலகிற்குச் சென்றாள்.

அங்கு இருந்தவர்கள் எல்லாம் அவளை நெருப்பிலிருந்து பிரிக்க எவ்வளவோ முயற்சி செய்தார்கள். எல்லாம் தோற்றுவிட்டது. தீக்குள் பாய்ந்துவிட்டாள். எனவே அம்மன் இந்தப்பெண்ணை தன் சொரூபத்தில் ஏற்றுக்கொண்டு எல்லாவற்றையும் முடித்தாள். தீயில் பாய்ந்த அந்தப் பட்டுநூல்கார மனைவி அம்மனாக ஏற்கப்பட்டாள்.

மறுநாள் காலை அந்தச் சாம்பலை எடுப்பதற்காக எல்லோரும் வந்தார்கள். அந்த இடத்தில் இரண்டு சிலைகள் இருந்தது. அது நாள் முதல் இங்கு தீப்பாய்ந்த அம்மனாக பக்தர்களுக்கு காட்சி தருகிறாள்.

(viii) முருகப்பெருமானின் தனித்தலங்கள்

தமிழர்களில் பெருமைக்குரிய கடவுளாக சங்ககாலத்திற்கு முன்பிருந்தே முருகப்பெருமான் வழிபாட்டில் இருந்துவருகிறார். சங்க இலக்கியங்கள் வேலனின் பெருமையை வெகுவாக விரித்துரைக் கின்றன. அவ்வகையில் நாகை மாவட்டத்திலும் தொன்மைக் கடவுளான முருகப்பெருமானுக்கு புராண காலந்தொட்டு தனித்தலங்கள் வழிபாட்டில் இருந்துவருகின்றன. குறிப்பாக

1. சிக்கல் –சிங்காரவேலன் கோயில்
2. எட்டுகுடி – சுப்பிரமணிசாமி திருக்கோயில்
3. எண்கண் –வடிவேலனார் திருக்கோயில்
4. திருவிடைக்கழி – சுப்பிரமணியர் திருக்கோயில்
5. பெரம்பூர் – பாலமுருகனார் திருக்கோயில்

போன்றன முருகப்பெருமானின் புகழ்பாடும் தனித்தலங்களாகக் காட்சி தருகின்றன. இதுவல்லாமல் மயிலாடுதுறை, செம்பனார் கோயில், வைத்தீஸ்வரன் கோயில் போன்ற இடங்களிலும் முருகப்பெருமானுக்கு தனிச்சன்னதிகள் அமைந்து சிறப்பாக காவடி ஆட்டம், சூரசம்ஹார விழா, வள்ளித் திருமண விழா போன்றன ஒவ்வொரு ஆண்டும் பல ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

சிக்கல்

சிக்கல் என்னும் முருகப்பெருமான் திருத்தலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவிலும், திருவாரூருக்கு கிழக்கே 18 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. வசிட்டர், காமதேனுவின் வெண்ணெய்யினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு, பூசை முடிவில் அதையெடுக்க முயன்றபோது முடியாமற் சிக்கிக் கொண்டமையின் 'சிக்கல்' என்று பெயர் பெற்றது என்பர். மல்லிகை வனம் என்பது இதன் வேறு பெயர்.

சிக்கல் என்றவுடன் நினைவுக்கு வருவது சிங்கார வேலவரும் சிக்கல் பட்டும்தான். காஞ்சிபுரம், தாராசுரம் பட்டுகளுக்கு நிகராக அன்று முதல் இன்று வரை புகழ் பெற்று இருப்பது சிக்கல் பட்டுதான்.

கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் கோச்செங்கட்சோழன் என்னும் சோழ மன்னன் சிவபெருமானுக்கு யானை ஏறமுடியாத மலைக்கோயில்கள் 78 கட்டியதாக வரலாறு. அவற்றில் இக்கோயிலும் ஒன்று. எண்டோளீசர்க்கு எழில் மாடம் எழுபதுடன் எட்டும் செய்து உலகாண்ட திருக்குளத்து வளர்ச் சோழன்' என்று திருமங்கை யாழ்வாரால் புகழப் பெற்ற கோச்செங்கட்சோழன் இத்திருப்பணிகளின் காரணமாக அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகும் பேறு பெற்றனர்.

கோச்செங்கணான் அமைத்த எழில் மாடக்கோயிலே சிக்கல் சிங்காரவேலன் ஆலயம், கோயிலுக்கு மேற்கில் காமதேனு பொழிந்த பாற்குளம் தீர்த்தம் உள்ளது. இதுபோன்று கயா தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், அம்மாகுளம், விருத்த காவேரி எனும் ஓடம்போக்கியாறு என பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. தல விருட்சம் மல்லிகை ஆகும்.

அருள்மிகு வெண்ணெய்ப் பெருமானை விசுவாமித்திரர், நாரதர், அகத்தியர், காத்தியாயனர் போன்ற முனிவர்கள் வழிபட்டுள்ளனர். திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்றோர் தேவாரப்பதிகங்களால் இறைவனை மகிழ்வித்துள்ளனர். முசுகுந்த சக்கரவர்த்தி இத்தலத்து இறைவனை வழிபட்டு திருப்பணி செய்துள்ளார்.

அருள்மிகு வெண்ணைப் பெருமானின் இடப்பாகம் அமரும் தேவி சக்தி இங்கு வேல் நெடுங்கண்ணி என்ற திருநாமத்துடன் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். சூரபதுமனை சம்ஹாரம் செய்ய முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்த அன்னை அருள்வடிவம் கொண்டவள். இத்திருக்கோவிலில் அடியார்களின் அன்பு தெய்வமாக முருகப்பெருமான் சிங்காரவேலவர் என்னும் திருநாமத்துடன் சிறப்புமிகு தெய்வமாக எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோயில் சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டது மட்டுமின்றி பாண்டிய அரசன் ஜடாவர்மன், விஜயநகரப் பேரரசன் வீரபிரதாப மகாராயர், சதாசிவ மகாராயர் போன்றவர்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான சரித்திரச் சான்றுகளாய் கல்வெட்டுகள் இன்றும் திருக்கோயிலில் உள்ளது. இத்திருக்கோயில் கடைசியாக கடந்த 1991 – ஆம் ஆண்டு திருப்பணி செய்யப்

பட்டுள்ளது. திருக்கோயில் திருப்பணிகளில் அரசர்களுக்கு அடுத்ததாக ஆத்திக்காடு தெக்கூர் திருகருமுத்து அழகப்பச் செட்டியார் அவர்களது பங்கு போற்றுதலுக்கு உரியது.

அமைப்புமுறை

ஏழுநிலை மாடக்கோபுரம் சிவாலயத்திற்கும், மூன்று நிலை மாடம் பெருமாள் ஆலயத்திற்குமாக திகழ்கின்றன. கோபுரத்திற்குள் நுழைந்தால் வசந்த மண்டபம் எதிர்ப்படுகிறது. கார்த்திகைத் திருநாட்களில் சிங்கார வேலவர் இங்கு எழுந்தருளுவார். இங்குள்ள நிலைக்கண்ணாடி முன்பு அவர் அசைந்தாடும் காட்சி காணக் கண்கோடி வேண்டும். கந்தனின்திருவிளையாடல்களை பல வண்ண ஓவியங்களில் தீட்டியிருக்கிறார்கள். ராமாயணத்தின் பல்வேறு காட்சிகளையும் சுதைச் சிற்ப வடிவில் படைத்துள்ளனர்.

மூலவரான நவநீதேஸ்வரன் சந்நிதி நோக்கி நகரும் போது அழகிய கலைத்திறனுள்ள சிற்பங்களைத் தூண்களில் காணமுடிகிறது. அந்த மாடக்கோயிலில் படிகளேறி மூலவரை அடைகிறோம். படிகளுக்குப் பக்கத்தில் சுந்தரகணபதியின் சந்நிதி உள்ளது. கட்டுமலையின் தேவகோட்டம் என்றழைக்கப்படும் படிகளைக் கடந்து சென்றால், நேரே சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. இங்குள்ள மரகத லிங்கம், மரகதவிடங்கர் என்று அழைக்கப்படுகிறது.

அழகுப் பிள்ளைக்கு வேல் வடித்துக் கொடுத்து வெற்றியைத் தந்தவளான வேல்நெடுங்கண்ணி தனிச் சந்நிதியில் கருணை பூத்தருளுகிறாள். வடமொழியில் சத்தியாயதாட்சி என்று பெயர். அபய, வரத, ஹஸ்தம் காட்டி, விழிக்கே அருளுண்டு என்பது போல வேல் போன்ற கூரிய விழிகளால் வினைகளை துடைத்தழிக்கிறாள்.

மாடக்கோயிலின் முழு பிரமாண்டத்தையும் பிரகார வலத்தின் போது காணலாம். கோயிலின் கோபுரம் முழுவதும் புராணக் காட்சிகளை விளக்கும், சுதைச் சிற்பங்கள் காட்சிதருகின்றன. மற்ற இடங்கள் பெரும்பாலும் கற்றளியாகத் திகழ்கிறது. காமதேனு ஈசனை வழிபடும் பக்திப் பிரவாகத்தையும், கைகுவித்து வணங்கும் ரிஷிகளின் முகத்தில் பொங்கும் ஆனந்தத்தையும் புடைப்புச் சிற்பத்தில் காணலாம். இதுவே தல வரலாற்றை விளக்கும் ஆதாரம். கோயிலை வலமாக வரும்போதே சிறுவழியாக கோலவாமனப் பெருமாள் கோயிலுக்குச்

செல்லலாம். கோமளவல்லித் தாயார் சேஷாசனத்தில் அமாந்திருக்கும் கோலம் யாவரையும் அருகில் அழைக்கும். அருளை வாரியிறைக்கும். வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார்.

ஐப்பசியில் சிங்காரவேலருக்குப் பத்து நாட்களுக்குப் பெருவிழா. இதில் ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா முடிந்து வேலர் அம்மையிடம் சூரனை சம்ஹாரம் செய்ய வேல் வாங்கி மலைக்குச் சென்ற பின், வேலர் திருமேனியில் சில மணிநேரம் வியர்வைத் துளிகள் காணப்படும். இது ஓர் அற்புதமான காட்சி. "சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்ஹாரம் " என்பது இப்பகுதியில் வழங்கும் பழமொழி. கல்வெட்டு இத்தலத்து இறைவனை "பால் வெண்ணெய் நாயனார்" என்று குறிப்பிடுகிறது. விழாக்கள் நடத்தவும், விளக்கெரிக்கவும் நிலங்களை நிவந்தமாக அளித்த செய்திகள் கல்வெட்டால் தெரிய வருகின்றன. 'சிக்கல் மகாத்மியம்' என்ற தல புராணமுள்ளது. கல்வெட்டுகளில் சித்தல் என்றே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவே மருவி சிக்கல் என்றாகிவிட்டது.

திருவிடைக்கழி அருள்மிகு பாலசுப்பிரமணியர் கோயில்

அமைப்பிடம்

தரங்கம்பாடி வட்டத்தில், பொறையாரில் இருந்து தில்லையாடி வழியாக திருக்கடையூர் செல்லும் வழித்தடத்தில் தில்லையாடிக்கு வடக்கே 2 கி.மீ. தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது. சோழவள நாட்டில் குமரக் கடவுள் வீற்றிருக்கும் திவ்வியத் தலங்கள் பல உள்ளன. அவற்றுள் காவிரி ஆற்றின் தென்கரையில் புராணகாலச் சிறப்புடைய திருக்கடவூருக்குத் தென்மேற்கில் மகிழாரண்யம் என்னும் திருப்பெயர் பூண்டதும், பன்னிரு திருமுறையில் 9–ஆம் திருமுறையாகிய திருவிசைப்பாவின் பதிகம் பெற்றதுமான பெருமை உடையது திருவிடைக்கழி என்னும் தலமாகும்.

இத்தலத்தை மகிழாரண்யம், மகிழ வனங்குடி, மகிழமரக்காடு, மகிழவனம், பிரமபுரம் என்ற பெயர்களாலும் அழைப்பர். இத்தலத்திற்கு தலவிருட்சம் மகிழமரமாகும். அந்த மகிழ மரமே இன்றும் தலவிருட்சமாக சிவபெருமானுக்கு நின்று நிலவுவதைக் காணலாம். மேலும் முருகக்கடவுள் திருக்குரா மரத்தடியில் யோக நிஷ்டையில் இருந்ததால் திருக்குராமரமும் தல விருட்சமாக இருந்து வருகிறது.

தொன்மை

தாருகாசுரன், சூரபதுமன் இவர்களைச் சம்ஹாரம் செய்து திருச்செந்தூரில் சுப்பிரமணியக் கடவுள் தங்கி இருக்கும் காலத்தில் மாயையால் மறைந்த சூரபத்மனது குமாரன் இரண்யாசுரன் கீழ்ச்சமுத்திரத்தில் சுறாமீனாக இருந்து ஜீவராசிகளை இம்சித்து வருகிறான் எனத் தெரியவர, முருகன் வைகாசி மாதம் சதய நட்சத்திரத்தில் இரண்யாசுரனை சம்ஹாரம் செய்தார் என்றும் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் இத்தலத்தில் இரணியாசுர சம்ஹார உற்சவம் பிமோற்சவமாக நடத்தப்பட்டு வந்திருக்கிறது. தரங்கம்பாடி சமுத்திரக்கரையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமாசிலாநாதசுவாமி ஆலயத்தில் திருவிடைக்கழி அம்மன், சுப்பிரமணிய சுவாமி விக்கிரஹங்கள் தனி ஆலயத்தில் இருப்பதை தற்பொழுதும் காணலாம். திருவிடைக்கழியில் இருந்து திருக்காமேசுவரி அம்மன் தரங்கம்பாடிக்குப் போனதால் திருவிடைக்கழியில் அம்மன் சன்னதி இல்லை. தரங்கம்பாடி ஸ்ரீமாசிலாநாத சுவாமி ஆலயத்தில் உள்ள திருவிடைக்கழி ஸ்ரீதிருக்காவேரி அம்மனுக்கு அகிலாண்டேசுவரி எனப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

அமைப்பும், சிறப்புகளும்

பிரதோஷ நாயகர், நடராஜர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், சண்டிகேஸ்வரர், அஸ்திரதேவர் ஆகிய எல்லா மூர்த்திகளும் வலக்கையில் வஜ்ரவேல் கொண்டு சுப்பிரமணிய சொரூபமாக விளங்குகின்றார்கள். நடராஜபெருமான் வலது கையில் வேலும், இடது கையில் வில்லும் கொண்டு இரணியாசுர சம்ஹார மூர்த்தியாக காட்சி தருகிறார்.

முருகனின் முன்னே ஸ்படிக லிங்கம் உள்ளது. கோயிலைச் சுற்றிப் பதினாறு விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. சிவசண்டேசுவரர், குகசண்டேசுவரர் சன்னதிகள் உண்டு. ஆனால் ஆதியில் சிவாலயமாக இருந்த இக்கோயிலில் நவக்கிரக சன்னதிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அர்த்தசாமத்தில் மட்டும் முருகப் பெருமான் குராமரத்தின் கீழிருந்து தவம் புரிந்த இடத்தில் உள்ள பலி பீடத்திற்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது.

சிவபெருமானின் திருவருளைப் பெற்ற பின்பு முருகப் பெருமானைப் பாடிப் பரவியர் இருவர். ஒருவர் நக்கீரர், திருமுருகாற்றுப்படை என்னும் சகல வேதசாரமான புகழ் மாலையை

முருகனுக்கு அளித்தார். மற்றொருவர் சேந்தனார். குராவடிக் குமரனைத் திருவிசைப்பா என்னும் திருப்பதிகத்தில் பதினாறு பாடல்கள் பாடி சிறப்பித்துள்ளார். சேந்தனாருக்குத் தைப்பூசம் அன்று இத்திருத்தலத்தில்தான் முக்தி கிடைத்தது. குராவடிக்குமரன் அருணகிரியார்க்கு இத்தலத்தில்தான் அறிவும், அறிதத்துவமும், அபரிமித வித்தைகளும் இமைப்பொழுதில் அனுக்கிரகித்தார் என்று தெரியவருகிறது.

கல்வெட்டுகள்

இடைச்சோழர் காலத்தில் இக்கோயில் கற்றளியாக மாற்றப்பட்டு, நாயக்கர் காலம் வரை வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் 'குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன்' என்ற சோழனது பள்ளிப்படை இவ்வூரின் அருகே அமைந்திருப்பதும், சேந்தனாரின் வரலாறும் தெரிய வருகிறது.

செம்பனார் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் இத்திருக்கோயிலுக்கு உள்ள நிர்வாகத் தொடர்பு தெரியவருகிறது. இக்கோயிலின் தலத்திற்கு கீழ்மேடையில் உள்ள விநாயகர் சிற்பத்தின் பின்புறம் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் திருச்சுற்று சுவரின் வெளிப்பக்கம் சோழர்காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் ஆரம்ப காலத்தில் சிவன் கோயிலாக விளங்கி வந்துள்ளது. 12–ஆம் நூற்றாண்டுக்குப் பின் உண்ணாழியில் சிவலிங்கத்தின் முன்பாகத் தனியே குமரக்கடவுளையும் நிறுவியுள்ளனர். அதன்பிறகு முருகக் கடவுளின் கோயிலாக வழிபாட்டில் வந்துவிட்டது. தற்போது மூலத்தானத்தில் சிவன், குமரன் இருவரும் காட்சி தருகின்றனர்.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பெரம்பூர்

அமைவிடம்

தேவார வைப்புத் தலங்களில் ஒன்றாய் விளங்கும் பிரம்பில் எனும் பெரம்பூர் நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடி வட்டத்தில் மங்கைநல்லூருக்குக் கிழக்கே 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. பிரம்பில் என அப்பர் அருளிய தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. இத்தலத்தை கள்ளப்

பெரம்பூர் எனச் செங்கல்வராயப் பிள்ளையும் மற்றும் சில ஆய்வாளரும் கூறுவர். முருகப்பெருமான் இத்தலத்தில் பிரதான நாயகராக விளங்குகிறார். பெரம்பூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருகோயில் என்றே ஆலயம் பெயர் வழங்குகிறது.

கோயிலமைப்பு

பெரம்பூர் பெரிய கிராமம். இங்குள்ள ஆலய கோபுரம் ஐந்து நிலைகளுடன் கூடியதாய் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோயில் வாயிலில் விநாயகர் இடும்பன் சந்நிதிகள் உள்ளன, வசந்த மண்டபத்தின் எதிரே கந்தபுஷ்கரனி தீர்த்தம் உள்ளன.

பிரதான ஆலயம் திருவிடைக்கழி போல முருகத்தலமாக விளங்குகிறது. சுவாமி, அம்பாள் கோயில்கள் வடமேற்கில் தனியே உள்ளன. கந்த சஷ்டி, ஆருத்ரா தரிசனம், சித்திரைப் பௌர்ணமி முதலிய விசேட நாட்களில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

முருகப்பெருமான்

ஆலய மூலத்தானத்தில் முருகப்பெருமான் ஆறு திருமுகங் களும் பன்னிரு கரங்களும் உடையவராய் மயில் மீது அமர்ந்து வள்ளி தெய்வானை சமேதராகக் காட்சி தருகிறார்.

இராஜகோபுரம், இரண்டு பிரகாரங்கள், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களுடன் ஆலயம் பெரியதாக உள்ளது. முதற் பிரகாரத்தில் வடமேற்குத் திசையில் சிவபிரான் பிரமபுரீசுரர் என்ற திருப்பெயரோடும், அம்பிகை ஆனந்தவல்லி என்ற திருநாமத்தோடும் விளங்குகின்றனர். சிவாலயம் சிறிய அமைப்பில் தனி ஆலயம் போல விளங்குகிறது. அகத்தியர் மற்றும் கோஷ்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, வடக்கே துர்க்கை ஆகியோரும் சண்டேசுரரும் எழுந்தருளியுள்ளனர். தட்சிணாமூர்த்தி குகதட்சிணா மூர்த்தி என வழங்கப்படுகிறார். மயில் வாகனம் உள்ளது. குகசண்டேசுரர் இக்கோயிலில் விளங்குகிறார்.

தலப்பெருமை

இத்தலம் வழுவூர் வீரட்டத்தோடு தொடர்புடையது. பெருஞ்சேரி தாருகாவனம் எனவும், வழுவூர் வீரட்டம் தாருகாவன

முனிவர்கள் ஏவிய யானையை உரித்த தலம் எனவும் வழங்கப்படுகிறது. இத்தலமும் இவற்றோடு தொடர்புடையதாய் உள்ளது. தாருகாவன மகரிஷிகளால் பிரதிட்டை செய்யப்பட்டு தஷ்ச யாகத்தில் சாபத்தை அடைந்த பிரமதேவனால் பூசிக்கப்பட்டுச் சிவ நிந்தை நீங்கிய தலம் எனக் கூறப்படுகிறது. பிரமனுக்கு அருள் செய்ததால் பிரம்ம மங்களபுரம் என்ற பெயர் இத்தலத்திற்கு உரிய பெயராயிற்று எனவும், அப்பெயரே மருவி பிரம்பூர் என வழங்கப்படுகிறது எனவும் கூறுவர்.

சூரபன்மன் மயில் உருவம் பெற்றபின் முருகப்பெருமானுக்கு வாகனமாகி அப்பெருமானைப் பூசித்து ஞானோபதேசம் பெற்றனன் என்பது இங்குள்ள ஆலயத்தின் தனிச் சிறப்புக்குரிய வரலாறாகும். மூலத்தானத்தில் ஆறுமுகக் கடவுளின் வாகனமாக விளங்கும் மயிலின் தலை இடப்புறம் அமைந்திருத்தலை இத்தலத்தில் காணலாம். பெரும்பாலான ஆலயங்களில் மயில் வாகனத்தின் தலை வலப்புறமே இருக்கும். இத்தலத்தில் இடப்புறம் உள்ளது. இத்தலம் அப்பர் தேவாரத்தில் வைப்புத்தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் சிதம்பரநாத முனிவர் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

நிர்வாகம்

தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறையினரின் பரிபாலனத்தில் ஆலயம் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலைத் திருப்பணி செய்தவர் மிளகுச் செட்டியார் எனவும், அவர் காலத்தில் இராஜகோபுரம் மூன்று நிலைகள் மட்டும் பூர்த்தியாகி அண்மைக் காலத்தில் இரண்டு நிலைகள் கட்டப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அவர் உருவம் இடது நந்திக்கருகில் உள்ளது. திருவாதிரை அன்று அவருக்குச் சிறப்பு வழிபாடு செய்விக்கப்படுகிறது.

பெரம்பூரில் தற்போதுள்ள கோயில் தனி முருகன் கோயில் என்று கருதப்பட்டாலும் திருவிடைக்கழி போல இக்கோயிலும் ஆரம்பத்தில் பெரிய சிவன் கோயிலாகவே விளங்கி வந்துள்ளதை அப்போது வழிபாட்டில் இருந்த 1) சண்டேசுவரர் 2) தென்முகக் கடவுள் 3) விநாயகர் 4) நான்முகன் போன்ற சோழர்காலச் சிற்பங்கள் கோயில் வடக்குத் திருச்சுற்றில் மரத்தடியில் வைக்கப்பட்டுள்ளதால்

அறியமுடிகிறது. சிவன் கோயிலை அழித்து கொள்ளை நடந்தபோது இதனை மாற்றி முருகன் கோயில் என்று அமைத்துவிட்டனர் என்பதும் தெரிகிறது.

இத்தலத்தில் பெரம்புச் செடிகள் தல விருட்சமாக உள்ளன. இக்கோயிலில் 17–ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் மூன்று காணப்படுகின்றன.இவ்வூரில் ஒரு வீட்டின் பின்புறம் கிடைத்த புதையலில் சோழர்கால செப்புத்திருமேனிகள் கிடைத்துள்ளன. அதில் மயில்மீது வலது காலை வைத்துக் காட்சி தரும் முருகன் சிற்பம் தனிச்சிறப்புடையது.

அருள்மிகு சுப்பிரமணியர் சுவாமி திருக்கோயில் எட்டுகுடி

அமைவிடம்

எட்டுகுடி நாகை மாவட்டத்தில் நாகப்பட்டினம் திருத்துறைப் பூண்டி சாலையில் சீராவட்டம் என்ற சிற்றூருக்கருகே உள்ள கோரக்கர் என்ற சித்தர் அடக்கம் பெற்ற பொய்கை நல்லூர் அண்மையில் உள்ளது. திருவாய்மூர் என்ற பாடல் பெற்ற திருத்தலத்தின் பாங்கில் அமைந்துள்ளது. ஆனந்தவல்லி உடனுறை சௌந்தரேசுவரர், தம் திருமகன் முருகப்பெருமானுடன் சோமாஸ் கந்தராக அருள்பாலிப்பதும் இத்தலமே.

திருக்கோயில் அமைப்பும் தெய்வீக அழகும்

அழகான திருக்கோயிலின் எதிரில் தீர்த்தக்குளம் சரவணப் பொய்கை அமைந்துள்ளது. இரண்டு திருவாயில்கள், வடப்புறம் உள்ள 'கந்தன் வளைவு' அடியவர்களை வரவேற்று திருமுருகன் தெய்வச் சந்நிதிக்கு அழைத்துக் செல்கின்றது. தென்பக்கத் திருவாயில் அம்மையப்பன் சௌந்திர நாயகர் திருமுன்பு அழைத்துச் செல்கின்றது.

உள்ளே சித்தி விநாயகர் சந்நிதியையும் வன்னிமரத்து மேடையையும் காணலாம். 1) திருச்சுற்றில் பிரதான விநாயகர், நவவீரர்கள், கூத்தாடும் கணபதி, சுரதேவர். 2) சீனிவாச சௌந்தரராஜ பெருமாள், ஆஞ்சநேயர், மனோன்மணி அம்மை, ஐயப்பன், மகாலட்சுமி, நவகிரகங்கள், தனியே வீற்றிருக்கும் சனிபகவான், பைரவர் ஆகியோரைத் திருச்சுற்று வழியே தரிசனம் செய்து கொண்டு அம்மையப்பன் சந்நிதிக்கு வரலாம்.

சித்திவிநாயகர் மருங்கில் வன்னி மரத்தடியே வான்மீகர் என்ற அருட்சித்தர் சமாதி எய்திய இடம் என்று கூறப்படுகிறது. சுரதேவர் என்ற மூர்த்தம் சில தலங்களிலேயே காணப்படும். அசுரர்களால் வந்த வெப்பு நோயை மும்மூர்த்தி வடிவாகச் சிவபிரான் வந்து அடக்கிய மூர்த்தம்.

முருகப் பெருமானின் வீரத்திருக்கோலம்

அருணகிரிநாதரும், திருப்புகழில் குறிப்பாக எடுத்துரைத் தருளுகின்றார். இதயமாகிய குகையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் இங்கு தேவர்களைக் காக்கும் குறிப்புடன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். அருகில் உள்ள கீழ்வேளூரில் தவக்கோலம் மேற்கொண்டு இறைவனையும், இறைவியையும் வழிபாடு செய்த அருளாற்றல் மிக்கஅண்ணல் அங்கு 'அஞ்சுவட்டத்தம்மன்' என்ற திருப்பெயருடன் ஆதிபராசக்தி அன்னை குமரன் தவக்கோலத்தைக் காத்து நிற்கும் அருந்திறல் உடையவன்.

எல்லாத் தலங்களிலும் தென்புறம் மயிலின் தலைப்பகுதி இருக்கும். இங்கு மட்டும் மயில் வலப்புரமாகத் தலைப்பகுதி தோன்ற நிற்கின்றது. திருச்செந்தூரிலும், கீழ்வேளூரிலும் முருகப் பெருமான் சிவபூசை செய்யும் திருக்கோலத்துடன் திகழ்தல் அறியத்தக்கது.

தெய்வச் சிற்பி செய்த திருவுருவ மாண்பு

1. தெய்வத்தன்மை வாய்ந்த சிற்பி ஒருவன் தன்னுடைய கற்பனையும், இறையருளும் தூண்ட ஆறெழுத்து மந்திரத்தை ஓதியவாறு பொருள்வைத்தசேரி (புறவச்சேரி) சிக்கல் என்ற தலத்தில் அழகிய ஆறுமுகவேலன் திருவுருவத்தை அமைத்தான். அத்திருவுருவத்தின் பேரழகும், அருளொளியும் கண்ட அக்கோயில் நிர்வாகத்தினர், வேறொரு காலத்திலும் இத்தகைய திருவுருவத்தை ஆக்கக்கூடாதென்று அச்சிற்பியிடம் உறுதி பெற்றுக் கொண்டதுடன், அவனது வலது கைப் பெருவிரலையும் வாங்கி விட்டனர்.

2. அவன் எட்டுக்குடி மருங்கே வரும் போது இலக்கண மெல்லாம் நிரம்பிய 'கல்' ஒன்றைக் கண்டு அதில் முருகப் பெருமானுடைய திருவுருவம் சமைக்க எண்ணி அப்பெருமானை உளமார வழிபட முருகனருளும் பெற்றான். முத்தரசன் என்ற அப்பகுதிக் குறுநில மன்னன் ஆணை பெற்றுத் திருவுருவம் அமைத்தபோது, வியர்வையும், செவ்வொளியும் அதில் வீசக்கண்டு அனைவரும் வியந்தனர். இருபுறமும் சங்கிலியிட்டுப் பிணைத்து

அவ்வுருவத்தை நிறைவு செய்தபோது அது உயிர் பெற்றெழவே, தன் சிற்றுளியை வீசி மயிற்கால்களில் சிறிது பங்கப்படுத்தினான். அதுவும் பறவாது நின்றது. அதனையே எட்டிப்பிடி எனக் கூற காலத்தால் மருவி எட்டிக்குடியாகி, அத்திருத்தலத்தில் மூலமூர்த்தியாக முருகனைப் பிரதிட்டை செய்தான்.

3. விரலில்லாமல் அருளோடு எட்டிகுடி முருகனைப் படைத்த சிற்பி கண் ஒளியை எக்காரணத்தாலோ இழந்தவர் கண், கட்டைவிரல் இன்றி எண்கண் முருகப்பெருமானை முருகனருளால் மகள் துணையோடு சிற்பமாக்கினான் . மகள் துணையோடு என்றும், அவ்வுருவத்தை அமைக்கும் போது, சிற்றுளி பட்டெழுந்த கற்றுகளால் இழந்த கண் ஒளியை பெற்றுக் களித்தான் என்றும், அதனாலேயே 'எண்கண்' என்ற தலப்பெயர் விளைந்ததென்றும் கூறப்படும் வரலாறும் உண்டு.

இவ்வாறு 1) சிக்கல், 2) எட்டிக்குடி, 3) எண்கண் ஆகிய மூன்று முருகத்தலத்து மூர்த்திகளையும் ஒரே சிற்பி வடித்தனன் என்பது தொன்றுதொட்டு வழங்கும் வரலாறு ஆகும். முத்தரசன் என்ற குறுநில மன்னனே எட்டிகுடி முருகனைப் பிரதிட்டை செய்து, திருக்கோயில் கட்டி வழிபடுமாறு செய்தான் என்பதும் செய்தியாகும்

எட்டிகுடியின் இலக்கிய வளம்

அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ்ப்பாக்கள் நான்கு சிதம்பரநாத முனிவர் செய்தருளிய ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழில் பாடல் ஒன்று, கோவை கவியரசு திரு. கு. நடேசக் கவுண்டர் பாடிய 'எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ்' பெயர் தெரியாத ஓர் அன்பர் பாடியுள்ள 'எட்டிகுடி கந்தர் வருகை' 'நவமணி மாலை' திரு. தியாகராஜ ஐயா பாடிய விருத்தங்கள் ஆறு "எட்டிக்குடி முருகன் கவசம்" திருமலைராயன் பட்டினம் அருட்கவி வை. நடராஜ உபாத்தியாயர் பாடிய 'எட்டிகுடி முருகன் நான்மணிமாலை' தருமையாதீனப் புலவர், தமிழாகரர் டாக்டர் சொ. சிங்காரவேலன் பாடிய 'எட்டிகுடி முருகன் அந்தாதி' ஆகியவை இத்தலத்து இறைவனைப் பாடியுள்ள சிற்றிலக்கியங்களும் தனிச்செய்யுட்களும் ஆகும்.

(ix) கிராம தேவதைகள்

நாகை மாவட்டத்தில் ஊர்கள்தோறும் கிராமதேவதைகள் முற்காலம்தொட்டு வழிபாட்டில் பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக எல்லா ஊர்களிலும் வினாயகர் கோயில், அம்மன் கோயில், அய்யனார் கோயில், முனியனார் கோயில் போன்றன அமைந்துள்ளன. இது அல்லாமல் கருப்புசாமி, மதுரைவீரனார், நொண்டி வீரனார், பேச்சியாயி அம்மன், செல்லி அம்மன், வடுவச்சி அம்மன், குளுந்தாளம்மன், அங்காளம்மன் போன்ற அம்மன் கோயில்களும் வழிபாட்டில் உள்ளன. இதுவல்லாமல் வழுவூரில் சோழர்காலக் கல்வெட்டுடன் கூடிய அய்யனார் கோயில் தனது பரிவார தேவதைகளுடன் அமைந்துள்ளது. மேலும் மயிலாடுதுறை, ஆக்கூர், திருக்கடையூர் போன்ற சிவத்தலங்களில் சோழர்கால சப்தகன்னியர் (தாய்மார் எழுவர்) சிற்பங்கள் ஒரே வரிசையில் அமர்ந்து காட்சி தருவது சிறப்பாகும்.

அருள்மிகு குமரன்கோயில்

செம்பொன்னார்கோயில் முதன்மைச் சாலையிலிருந்து பிரியும் பூம்புகார்ச் சாலையில் 5 நிமிட நடை தூரத்தில் அருள்மிகு ஆறுமுகன் வீற்றிருந்து அருள்புரியும் இக்கோயில் உள்ளது.

அருள்மிகு கண்டியங்குளத்து மாரியம்மன்

மேற்படி குமரன் கோயிலுக்கு சிறிது தூரம் முன்னாக இவ்வம்மன் அருள்பாலிக்கும் கோயில் சாலையை நோக்கி எழிலாக அமைந்துள்ளது.

அருள்மிகு பெருமாள் கோயில்

பூம்புகார் சாலையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கடந்து மேற்கே செல்லும் மகாராஜபுரம் அக்கிரகாரத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலிலிருக்கும் ஆஞ்சநேயர் பிரசித்தி பெற்றவராவர்.

அருள்மிகு உமாமகேசுரர் கோயில்

அருள்மிகு சொர்ணபுரீசர் கோயிலின் கிழக்கே தரங்கை சாலையில் வல்லம் கிராமத்திற்குப் பிரியும் சாலை ஓரத்தில் அமைந்துள்ளது.

அருள்மிகு காவிரியம்மன்

மேலமுக்கூட்டிலிருந்து கீழமுக்கூட்டிற்கு வரும் முதன்மைச் சாலையில் சிறிது தூரம் நடந்தால் தெற்கே செல்லும் ஒரு சந்தில் இவ்வம்மன் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார்.

அருள்மிகு செல்லப்பர்

இவர் நல்லாடை சாலையில் சம்பந்தம் மேல்நிலை பள்ளியைத் தாண்டி மேற்கில் பிரியும் சிறிய சாலை வழியில் கோயில் கொண்டமர்ந்து அருள்புரிகிறார்.

அருள்மிகு அவரைக்குளத்து மாரியம்மன்

அருள்மிகு செல்லப்பர் கோயிலிருந்து தெற்கு நோக்கி 10 நிமிட நடைதூரத்தில் இந்த அம்மன் கிழக்கு நோக்கி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்.

அருட்ஜோதி நிலையம்

வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் கருத்துக்களை பரப்புவதற்கென அமைக்கப்பட்ட இந்நிலையத்தை நல்லாடை சாலையில் அஞ்சலகத்தின் தெற்கே நடந்து கிழக்கே சென்றால் அடையலாம். இங்குச் சமரச சுத்த சன்மார்க்கச் சங்கத்தின் கிளைச் செயல்படுகிறது. இங்கு வாரம் தோறும் வியாழக்கிழமை மாலை திருவருட்பா ஓதப் பெற்று ஜோதி வழிபாடு நடைபெறுகிறது.

விநாயகர்

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 26–ஆம் தேதி முதல் 31–ஆம் தேதி வரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை விநாயகரின் மீது சூரிய ஒளி படுகிறது. இப்படி ஒரு அதிசயக் கோயிலான ஸ்ரீசாபம் தீர்த்த விநாயகர் கோயில் நாகை மேலவீதியில்தான் இருக்கிறது. இந்த விநாயகருக்கு இப்படியொரு பெயர்வரக் காரணமாக ஒரு கதையை சொல்கிறார்கள். கவுதம முனிவரின் சாபத்தால் இந்திரன் காக்கை வடிவமானான். இதனால் மனம் வருந்திய இந்திரன் தன் சுய உருவை அடைய என்ன செய்ய வேண்டும் என்று கவுதம முனிவரையே கேட்டான். நாகை நீலாயதாட்சி அம்மன் கோயிலிலுள்ள காயாரோகண பெருமானை வழிபடும்படி முனிவர் சொன்னார். இந்திரனும் சென்று ஈசனை வழிபட்டான். அப்போது அவன் முன்னால் எழுந்தருளிய காயாரோகணர் மேலவீதியிலுள்ள விநாயகரிடம் சென்று

முறையிடும்படிச் சொன்னாராம். உடனே காக்கை வடிவில் இருந்த இந்திரன், மேலவீதிக்கு சென்று விநாயகரை வழிபட்டு தன் சுய உருவத்தைப் பெற்றானாம். அதனால்தான் விநாயகருக்கு சாபம் தீர்த்த விநாயகர் என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ வெள்ளந்தாங்கி அய்யனார் கோயில்

ஒரு முறை காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து சோழநாட்டில் உள்ள அனைத்து ஊர்களையும் அழித்து வர அதில் ஒரு பெரிய மூட்டை மிதந்து வந்து தங்கி விடுகின்றது. அங்கு வாழ்ந்த சாலியர் இனமக்கள் அதனைப் புதையல் என நினைத்துப் பிரித்துப்பார்க்க அதில் ஸ்ரீவெள்ளந்தாங்கி அய்யனார் தம் தேவிகளான ஸ்ரீபூர்ணகலா ஸ்ரீபுஷ்கலாம்பிகாவுடன் இருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து, மயிலாடுதுறையின் மேற்கே கூறை நாட்டில் ஸ்ரீ அய்யனாரைத் திருக்கோயில் நிர்மாணம் செய்து குடமுழுக்கும் செய்து வழிபட்டனர். வெள்ளத்தில் வந்து தங்கிய அய்யனார் என்பதால் வெள்ளந்தாங்கி அய்யனார் என்று அழைக்கப்படுகின்றார். இத்தலத்தில் விநாயகர் வடக்கு திசை நோக்கி எழுந்தருளிஅருள் பாலிக்கின்றார்.

ஒரு சமயம் மதனகுரு சுவாமிகள் என்பார் கூறை நாட்டிற்கு வந்து சாலியர்களிடம் தங்குவதற்கு இடம் கேட்கின்றபோது சாலியர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருந்து கொண்டு இடம் தரமறுத்த காரணத்தால் 'சாலியர்கள் ஒற்றுமையின்றி இருப்பது' என்று சபித்துவிடுகிறார். எனவே அனைவரும் சாபவிமோசனம் வேண்டி அய்யனார் கோயிலில் சுவாமிகளுக்கு இடம் கொடுத்து வணங்கியதால் இடர் தீர்ந்ததாம்.

ஸ்ரீமதுரைவீரன் ஸ்ரீநொண்டி வீரன்

மதுரை மாநகரத்திலிருந்து வந்ததால் இவர் மதுரை வீரன் என்றுஅழைக்கப் படுகின்றார். ஒரு சமயம் மந்திரவாதி ஒருவர் பல்லக்கின் மூன்று பக்கத்தினை மனிதர்களும், ஒரு பக்கத்தை தேவதையும் தூக்கிக் கொண்டுவர கூறைநாட்டிற்கு வருகிறார். அங்கு வந்தவுடன் தேவதை அய்யனாரை வணங்க வருகின்றது. மந்திரவாதி தன் மந்திர சக்தியினால் தேவதை அய்யனார் கோயிலில் இருப்பதைக் கண்டு கோபம்கொண்டு அதன் காலினை வெட்டி விடுகின்றார்.

காலிழந்த தேவதை அய்யனாரிடம் சாப விமோசனம் வேண்டும் பொழுது, எல்லையை விட்டு அடுத்தஅடி வைக்கும் மந்திரவாதியின் சிரசினை கொய்து விடுகிறார் அய்யனார். தன்னை வணங்கிய காலிழந்த தேவதையை தனது அருகில் உள்ள மதுரைவீரன் கோயிலில் நொண்டி வீரனாக இருக்கும்படி பணிக்கிறார். அவரும் அங்கிருந்து நமக்கு காவல் தெய்வமாக உள்ளார்.

4. முனீஸ்வர சுவாமிகள்

மிகவும் பிரசித்தி பெற்ற மயிலாடுதுறை மயூரநாத சுவாமி எனும் பெரிய கோயிலின் முதல் கோபுர வாயிலின் வலது மாடத்தின் அடி அறையிலும், திருக்கடையூர் அமிர்தகடேசுவரர் திருக்கோயிலின் கிழக்கு மற்றும் மேலக்கோபுரம் இவற்றின் வாசல்களிலும் தனிச்சன்னதியில் முனீஸ்வர சுவாமிகள் கம்பீரமாக அமர்ந்து இறைவனின் வாயிற்காவல் தெய்வமாக காட்சி தருகின்றனர். இந்த காவல் முனீயீஸ்வரர்களை வெளிநாட்டுக்கு பயணம் செய்யும் இந்துக்கள், இசுலாமியர்கள், கிருத்தவர்கள் என்று எல்லா மதத்தினரும் வேண்டி விரும்பி வழிபாடு செய்து செல்வது மரபாக உள்ளது. வன்னியர் இன குடும்பங்களில் பலர் முனியீஸ்வரர்களை தமது குலதெய்வமாகவும் ஏற்று வழிபாடு செய்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

5. கிராம தேவதைகள்

திருமருகல் அருகே திருச்செங்காட்டாங்குடியில் சம்பந்த விநாயகர், அய்யனார் காளியம்மன், பிடாரி அம்மன், சீதளமாரியம்மன் கோயில்கள் பழமை வாய்ந்தவை.சீர்காழி அருகே நாங்கூரில் தனகணபதி, மன்மதசுவாமி கோயில்களும் பக்தர்களால் விழா எடுக்கப்பட்டு வழிபாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது.

மயிலாடுதுறை வட்டம் முருகமங்கலம் கிராமத்தின் வடக்கு எல்லையில் ஸ்ரீபிடாரி காளியம்மன் என்ற பெயரில் அருள்பாலித்து வருகிறார். தலவிருட்சம் வேப்ப மரம். அதனடியில் கோயில் உள்ளது. இது 17–ஆம் நூற்றாண்டு கோயிலாகும். உருத்திராபதியார், அய்யனார், மாரியம்மன் போன்ற கிராம தேவதைகளுக்கும் தனிக் கோயில்கள் உள்ளன. ஒவ்வோரு ஆண்டும் காவடி, பால்குடம், அழுது படையல் என்று சித்திரை மாதத்தில் ஊர் மக்களால் சிறப்பாகத் திருவிழா நடைபெறுகிறது.

5. நாகையும் பௌத்தமும்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. 16–ஆம் நூற்றாண்டு வரை நாகைப் பகுதி ஒரு தலைசிறந்த பௌத்த மையமாக விளங்கியுள்ளது. வட இந்தியாவில் நாளந்தாவைப் போலவும் தென் இந்தியாவில் காஞ்சிபுரத்தை போலவும் புத்த மதக் கொள்கைகளைப் பரப்புவதில் நாகையும் முதன்மை பெற்று விளங்கியுள்ளது. மௌரியப் பேரரசன் அசோகனின் கல்வெட்டுகள், தென்இந்தியாவில் புத்தமதம் பரவியிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாகக் கூறப்படும் இந்திரவிகாரை மகேந்திர தேரரால் கட்டப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தாலமி தமது குறிப்பில் நாகையில் புத்தமதம் இருந்ததனைக் குறிப்பிடுகிறார். பாலி இலக்கியங்கள் தென்இந்தியாவில் புத்தமத மையங்களாக காஞ்சிபுரம், உறையூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஊர்களைக் குறிப்பிடுகின்றன. "நற்றவர்க்கு இடமாகின்றது நாகையே" என பௌத்தர்கள் இந்நகரத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் நாகப்பட்டினம் ஒரு தலை சிறந்த வணிகத் தலமாகவும் விளங்கியிருந்த காரணத்தினால் புத்த மதத்தைத் தழுவியிருந்த கீழ்த்திசை நாடுகளுடன் வணிகத் தொடர்பு ஏற்பட்டு இம்மதம் வளர்வதற்கு வலிமை கூடியது. கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்தப் பள்ளியில் சீனர்கள் ஒரு கல்வெட்டு எழுதி வைத்தார்கள் என தாலோ–இ–சிலியோ என்ற சீன நூல் கூறுகிறது.

நாகைப் பகுதியில் பௌத்தப் பள்ளிகள்

மௌரியப் பேரரசன் அசோகன் எழுப்பித்த பதாதிட்ட விகாரை இங்கு இருந்ததாகக் கூறப்படுகிறது. கி.பி. 720–இல் பல்லவ மன்னன் இராசசிம்மன் காலத்தில் சீன அரசனின் வேண்டுகோளின்படி பௌத்த விகாரம் ஒன்று எழுப்பப்பட்டது. இது சீனா கோயில் என்றும் வழங்கப்பட்டது. இதுவே தற்போது **(Jesuit College)** வேதக் கல்லூரி யாகத் திகழும் கட்டடமாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள்

கருதுகின்றனர். மேலும் கி.பி.11–ஆம் நூற்றாண்டில் எழுப்பிக்கப்பட்ட இரு புத்த விகாரங்களிலிருந்தும் இச்சீனக்கோயில் முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியுள்ளது.

மாமன்னன் முதலாம் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் நாகப்பட்டினத்தில் "ஸ்ரீ சைலேந்திர சூடாமணி விகாரை" என்னும் பௌத்தப் பள்ளி ஒன்றினை எடுப்பிக்கப்பட்டதனைப் பெரிய லெய்டன் செப்பேடு தெரிவிக்கிறது. இப்பள்ளி ஸ்ரீ விசையம் மற்றும் கடாரம் ஆகிய இராஜ்யங்களை ஆண்ட ஸ்ரீ மாற விஜயதுங்கன் எனும் அரசனின் வேண்டுகோளின்படி அவனது தந்தையான சூடாமணி என்பவரின் பெயரில் எடுக்கப்பட்டதாக செப்பேடு கூறுகின்றது. இப்பள்ளிக்கு "இராசராசன் பெரும் பள்ளி" என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு இராசராசன் சத்திரிய சிம்ம வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து ஆனைமங்கலம் என்ற ஊரைக் கொடையாக அளித்ததனையும் செப்பேடு கூறுகின்றது. இப்பள்ளிக்கு அருகிலேயே மற்றொரு விகாரை எழுப்பி அதற்கு "இராசேந்திரப் பெரும் பள்ளி" என்ற பெயரைக் கடாரத்தரசன் சூட்டினான் என்பது செப்பேட்டின் மூலம் அறியமுடிகிறது. இராசராசனின் கொடையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் முதலாம் குலோத்துங்க சோழன் சின்ன லெய்டன் செப்பேட்டினை வெளியிட்டான். சூடாமணி விகாரம் நாகையில் கி.பி.1897 வரை இருந்துள்ளது.

கி.பி.15–ஆம்நூற்றாண்டு பர்மா தேசத்துக் கல்யாணி கல்வெட்டு பத்ரிகாராமம் எனும் பௌத்தப் பள்ளி நாகப்பட்டினத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. ஹம்சபதி தேசத்தை ஆண்ட ராமபதிராசன் அனுப்பிய பௌத்த பிட்சுகளும், சித்ரதுதன் எனும் தூதனும் இலங்கைக்குச் சென்று விட்டுக் கப்பலில் தம் நாடு திரும்பும் பொழுது கப்பல் புயலில் அகப்பட்டுப் போகவே தப்பித்து நாகப்பட்டினக் கடற்கரையை அடைந்து பிழைத்தார்கள் என்றும் இங்கிருந்த பத்ரிகாராமம் பள்ளியில் தங்கி அதற்கருகில் இருந்த சீன தேசக் குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த பள்ளியில் புத்த தேவரை வணங்கினார்கள் என்றும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

நாகப்பட்டினத்துக்கு வடக்கே ஒன்று அல்லது இரண்டு கல் தொலைவில் 'புதுவெளிக் கோபுரம்' என்றும் 'கருப்புக்கோயில்' என்றும் பெயருள்ள ஒரு கோபுரம் இருந்ததா கவும் இக்கோபுரம்

நாகப்பட்டினத்தின் ஓர் அடையாளமாகக் கடலில் தோன்றியது என்றும் அதனைத் தாம் 1867–இல் நேரில் கண்டதாகவும் சர்வால்டர் எலியட் எழுதியுள்ளார். இவ்விடத்தில் கிருஸ்துவ ஆலயம் அமைப்பதற்காகத் தோண்டிய பொழுது ஐந்து புத்த சிற்பங்கள் கிடைத்துள்ளன. இச்சிற்பங்களில் ஒன்றினைத்தான் அப்போதைய கவர்னர் நேப்பியர் பிரபுவிற்குப் பாதிரிமார்கள் பரிசளித்துள்ளனர்.

கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ சீனாவுக்குச் செல்லும் வழியில் நாகப்பட்டினம் வந்து தங்கியிருந்தபோது தான் கண்ட கிழக்கு ஸ்தூபியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஸ்தூபி செங்கல் மற்றும் மண் கொண்டு பல அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது என்றும் அந்த ஸ்தூபியில் ஒரு சீன கல்வெட்டு இந்த ஸ்தூபி கி.பி. 1267-இல் (8th Moon of the thid year hien chw 'en , ...) கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றது,

நாகப்பட்டினம் தற்போதுள்ள புத்த கோட்டம் எனும் பெயரிலுள்ள அக்ரஹாரம் அக்காலத்தில் பௌத்தக் கோயில் ஒன்று இருந்த இடமாக இருந்திருக்க வேண்டுமென்றும் பின்பு அது சிதைந்து அக்ரஹாரம் தோன்றியிருக்க வேண்டுமென்றும் டாக்டர். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

பௌத்த தலங்கள்

பூதமங்கலம்

ராஜமன்னார்குடிக்கு அருகே இரண்டு ஊர்கள் பூதமங்கலம் என்ற பெயரில் உள்ளன. ஒன்று இஸ்லாமிய குடியிருப்புகள் காணப்படும் பகுதியாகும்.

மற்றொன்று மன்னார்குடியிலிருந்து 6 மைல் தொலைவில் காவிரி ஆற்றின் கிளை நதியான வெண்ணாற்றங்கரையில் பள்ளிவிருத்தி எனும் கிராமத்திற்குஅருகே அமைந்துள்ளது. இது வெண்ணிக் கூற்றத்து வெண்ணி நகரைச் சேர்ந்த பூதமங்கலமாகும். இது 'பள்ளி விருத்தி பூதமங்கலம்' என்றே அழைக்கப்படுகிறது. மேலும் 'வினயவிசிச்சயம்' எனும் பௌத்த நூல் குறிப்பிடும் பூதமங்கலம் இப்பள்ளி விருத்தி பூதமங்கலமாகவே இருக்கலாம். இவ்வூரில் காணப்படும் இரண்டு மண்மேடுகளை அகழாய்வு செய்தால் பல புத்தமதச் சான்றுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

திருவிராமேச்சுரம் எனும் பாடல் பெற்ற கோயிலில் உள்ள சாசனம் "நென்மலிநாட்டு மேற் பூதமங்கலம்'' என்றும் அங்கிருந்த கோயிலை "ஊர்க்கட்டு பகவதேவர்'' என்றும் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பூதமங்கலம் மேற்பூதமங்கலம், கீழ்ப்பூதமங்கலம் என இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த செய்தி தெரிகிறது. 'பசுவதேவர் கோயில்' புத்தருக்கு உரியதாக இருக்கலாம். புத்தருக்குப் பகவன் என்ற பெயருமுண்டு.

காவிரிப்பூம்பட்டினம்

காவிரிப்பூம்பட்டினம் தொன்று தொட்டு பௌத்தர் செல்வாக்கு பெற்றிருந்த தலமாகத் திகழ்ந்துள்ளது. பாலி மொழியில் எழுதப் பெற்ற பௌத்த நூல்கள் இவ்வூரினைக் கவேரப்பட்டினம் எனக் குறிப்பிடு கின்றது. 'அகத்தி' அல்லது 'அகித்தி' என்ற பௌத்த முனிவர் இங்கு தங்கியிருந்தார் என புத்த ஜாதகக் கதையொன்று தெரிவிக்கின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மகேந்திர தேரர் இலங்கை செல்லும் வழியில் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கி அங்கு ஏழு புத்த விகாரை களைக் கட்டினாரென்றும், மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரம் நூல்களில் குறிப்பிடும் இந்திர விகாரை என்பவை இவர் கட்டியவைகளே என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்த விகாரைகளின் தலைவராக அறவன அடிகள் என்னும் தேரர் இருந்தார் எனத் தெரிகின்றது. 'உவவனம்' என்ற பூஞ்சோலையின் நடுவில் பளிங்கினால் அமைக்கப்பட்ட சிறு கோயிலில் இருந்த புத்தரது பாத பீடிகையை பௌத்தர்கள் வணங்கி வந்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தின் முதுகாட்டினை அடுத்து பௌத்தரால் போற்றப்பட்ட 'சக்கரவாளக் கோட்டம்' இருந்தது என்றும் இங்கு 'சம்பாபதி' எனும் பௌத்த தெய்வம் கோயில் கொண்டிருந்து என்றும் மணிமேகலை கூறுகிறது. பாலி மொழியில் எழுதப்பட்ட 'இரசவாகினி' எனும் பௌத்த நூலில் சோழ அரசன் ஒருவன் காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபெருமானுக்குக் கோயில் ஒன்று நிறுவினான் என்றும், அக்கோயிற் பணி நடைபெறும்போது சில பௌத்தத் துறவிகள் வந்து அதிசயங்கள் சிலவற்றைச் செய்து காட்டியதால் அரசன் அச்சிவன் கோயிலை பௌத்த கோயிலாக்கினான் என்று கூறுகின்றது.

புத்தமங்கலம்

பேராவூர் ஆதித்தியேசுவரர் கோயிலில் உள்ள ஒரு சாசனம் "ஜெயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துப் புத்தமங்கலம்" எனக் குறிப்பிடுகிறது. இவ்வூரின் பெயரே இது ஒரு பௌத்த தலம் எனத் தெளிவாகச் சுட்டுகின்றது. நன்னிலம் வட்டத்தில் திருப்பயத்தங் குடியிலுள்ள திருப்பயற்றுநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டில் இவை புத்தமங்கலமுடையான் . . . . எழுத்து'' என வருகின்றது. இக்கல்வெட்டு கூறும் அதிகாரி இவ்வூரினை சார்ந்தவனாக இருக்கலாம்.

போதிமங்கலம்

திருவிடைக்கழி எனும் ஊரிலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயில் சாசனம் ஒன்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றது. "சாக்கியர் தம் போதி மங்கை'' எனக் கூறப்படுவது இவ்வூராக இருக்கலாம். போதி மங்கலம் என்ற பெயரே இது பௌத்தர்களுடைய ஊர் என்பதைத் தெரிவிக்கின்றது, திருஞானசம்பந்தர் பௌத்தர்களுடன் இவ்வூரில் சமயவாதம் செய்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

புத்தகுடி

முதலாம் குலோத்துங்க சோழனது சிறிய லெய்டன் செப்பேடு "செயங்கொண்ட சோழ வளநாட்டு குறும்பூர் நாட்டு புத்தகுடி'' என்று குறிப்பிடுகின்றது. சோழநாட்டில் நாகப்பட்டினத்திற்கு அருகில் இருந்த ஊர் ஆகும். இவ்வூரின் பெயர் பௌத்தர்களின் குடியிருப்பு இங்கு இருந்ததனை நமக்கு உணர்த்துகின்றது.

சங்கமங்கலம்

ஜயசிம்ம குலகால வளநாட்டுத் தானவ நாட்டுச் சோழசிகாமணிபுரத்துக் கண்டியூரின் மேற்குப் பகுதியில் சங்கமங்கலம் என்னும் ஊர் இருந்ததாக ஒரு சாசனம் கூறுகிறது. சங்கம் என்பது பௌத்த பிச்சுகளின் சங்கமாகும்.

புத்தமங்கலம்

மயிலாடுதுறை வட்டத்தில் மணல்மேட்டுக்கு அருகில் ஒரு புத்தமங்கலம் என்ற ஊர் உள்ளது. இங்கும் ஒரு புத்தர் சிற்பம் இருந்துள்ளது. இப்பகுதியிலும் புத்தரின் வழிபாடு இருந்துள்ளது. இவ்வூரில்தான் பிரபல வரலாற்று நாவல் ஆசிரியர் அமரர் கல்கி பிறந்த ஊராகும்.

புத்தகளூர்

நன்னிலம் வட்டத்தில் புத்தகளூரில் இடிபாடுற்ற சிவன் கோயிலில் தஷிணாமூர்த்தி கற்சிலையின் பிற்புறத்தில் முதலாம் பராந்தகச்சோழனின் 10–ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் பாம்பூர் நாட்(டு) பிரம்மதேயம் புத்தகை(ளூர்) எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இவ்வூர் முதலில் பௌத்தத் தலமாக இருந்திருந்ததனால் புக்களூர் என வழங்கப் பட்டிருக்கவேண்டும். பின் பராந்தகச்சோழன் காலத்தில் பிரம்மதேயமாக வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு வாசகம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. கோப்பரகேஸரிவம்மற்க்கு
3. யாண்டு ய ஆவது பாம்பூர் நாட்
4. (டு) பிரம்மதேயம் புட்தகை (ஸூ)
5. ..... ஸ்ரீ கோயில் பரம
6. ஸுந்தர தேவர்க்கு கைக்கொண்ட
7. (இ)ரண்டு மா நிலம் நந்தா
8. விளக்கினுக்கு அரையன் எழுந்தருளுவித்து
9. ....

பௌத்த ஆச்சாரியர்கள்

புத்ததத்தர்

கி.பி. நான்காம் நூற்றாண்டில் புத்த தத்தர் தனது அபிதம்மாவதாரம் என்ற நூலில் காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசன் என்பவரால் எடுப்பிக்கப்பட்ட பௌத்தப் பள்ளியொன்று இருந்ததாகவும் இப்பள்ளியில் தங்கிக்கொண்டுதான் இந்நூலினை தாம் எழுதி முடித்ததாக கூறுகிறார். இவர் அபிதம்மாவதாரம், மதுராத்த விலாசின் (புத்தவம்சம் என்னும் நூலின் உரை) ஆகிய நூல்களை இயற்றியவர். கணதாசரை 'பூஜாவலி' எனும் சிங்கள நூல்' 'அமாத்தியர்' (அமைச்சர்) எனக் குறிப்பிடுகிறது. மேலும் புத்ததத்தர் பூதமங்கலத்தில் வேணுதாசன் என்பவர் கட்டியிருந்த விகாரையில் தங்கியிருந்த போது 'வினயவினிச்சயம்' என்னும் நூலை எழுதியதாகவும் அந்நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தநந்தி, சாரிபுத்தர்

இவர்கள் இருவரும் சோழ நாட்டில் போதிமங்கை எனும் ஊரில் இருந்தவர்களாவர். திருஞானசம்பந்தர் இவ்விருவருடனும் சமயவாதம் செய்து வெற்றி கண்டார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது. சம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவராதலால் இவ்விருவரும் அந்த நூற்றாண்டைச் சார்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்.

காசப தேரர்

இவர் சோழ காபர் என்றும் வழங்கப்படுகிறார். இவர் தமிழ் தேசத்துச் சோழநாட்டவர் என்று 'கந்தவம்சம்' மற்றும் 'சாசனவம்ச தீபம்' எனும் நூல்கள் கூறுகின்றன. இவர் 'மோகவிச்சேதனீ' என்ற நூலை இயற்றியவராவர். காவிரியாறு பாய்கிற சோழ நாட்டில் நாக நகரத்தில் (நாகப்பட்டினம்) இருந்த நாகாணன் விகாரையில் தங்கியிருந்ததாக இந்நூல்கள் கூறுகின்றது.

சீனபுத்த பிக்குகள்

ஊஹின் (Wu-Hing) மற்றும் ஷீஹங் (She-Hung) எனும் இரு சீன பிக்குகள் நாகப்பட்டினம் வந்துள்ளனர். பின் இங்கிருந்து இலங்கை சென்று புத்த புனிதப் பல்லை தரிசித்துள்ளனர். இவர்கள் யோக முறையினை கற்றறிந்ததுடன் சில பௌத்த நூல்களைச் சீன மொழியிலும் மொழி பெயர்த்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில்

புத்தர் சிற்பங்கள் உள்ள இடங்கள்

1. பெருஞ்சேரி – குத்தாலம் வட்டம்
2. குத்தாலம் ஒன்றிய அலுவலகம் அருகில் ரயிலடி அட்டகுளம் கரை
3. புஷ்பவனம் – வேதாரண்யம் வட்டம்
4. புத்தமங்கலம் – கீவளூர் வட்டம்
5. கிராந்தி – கீவளூர் வட்டம்
6. வேளாங்கண்ணி – கீவளூர் வட்டம்
7. காவிரிப்பூம்பட்டினம் – புத்த விகாரம்
8. எழுமகளூர் – குத்தாலம் வட்டம்

வேதாரண்யம் வட்டத்தில் இடும்பவனம் மற்றும் புஷ்பவனம் ஆகிய இடங்களில் கி.பி. 9,10–ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த புத்தரின் கற்சிற்பங்கள் கிடைத்துள்ளன.

பௌத்த செப்புத் திருமேனிகள்

நாகப்பட்டினத்தில் வெளிப்பாளையம் மற்றும் நாணயக்காரர்த் தெருவில் அகழ்ந்த பொழுது 350 புத்தரின் செப்புத் திருமேனிகள் ஒரு அரிய கலைப் பொக்கிஷமாக கிடைத்துள்ளது. இச்செப்புத் திருமேனிகள் முற்காலச் சோழர்காலம் முதல் விசயநகரக் காலம் வரை பல்வேறு கால கட்டங்களின் கலைப்பாணியினை வெளிப்படுத்தும் வண்ணம் திகழ்கின்றது. நாகை செப்புத் திருமேனிகளில் உஷ்ணீசம் பெரும்பாலும் தீச் சுவாலையாகக் காட்டப்பட்டுள்ளது. தலைமுடி பெரும்பாலும் சுருள்முடியாக இல்லாமல் பொட்டுப் பொட்டாக வடிக்கப்பட்டுள்ளது. நெற்றியில் வர்ணா (திலகம்) குறியீடு காணப்படுகிறது. நாகை புதுவெளிக் கோபுரத்திற்கு அருகில் உள்ள இலுப்பை மரத்துக்கடியில் 5 புத்தரின் செப்புத் திருமேனிகளும் கிடைத்துள்ளன. இவ்வைந்தில் ஒன்று குறிப்பிடத்தக்கதாகும். புத்தர் சடபங்கமாக பத்மபீடத்தில் மேல் நின்ற நிலையில் காணப்படுகிறார். வலக்கரம் அபய முத்திரையினையும், இடக்கரம் வரத முத்திரை யினையும் காட்டுகின்றது. உஷ்தீசம் தீச்சுவாலையாகக் காட்டப் பட்டுள்ளன. வஸ்திரம் கழுத்திலிருந்து கணுக்கால் வரை அலை அலையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ ஆகம பண்டிதரை உய்யக் கொ
ண்ட நாயகர்"

இச்செப்புத்திருமேனிதான் கி.பி.1868–இல் நாகப்பட்டினத் திற்கு வருகை புரிந்த அப்போதைய சென்னை மாநில கவர்னர் நேப்பியார் பிரபுவுக்கு பரிசாக அளிக்கப்பட்டது.

மற்றொரு புத்தர் செப்புத் திருமேனியின் பீடத்தில்

"உமையர் திருவாலியாழ்வார் நாயகர்"

இதில் புத்தர் 'நாயகர்' எனக் குறிப்பிடப்படுகிறது. 'திருவாலி' என்பது ஊரின் பெயராகும். இது திருநகரிக்கு அருகில் உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 13, 14 – ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியினைக் கொண்டு விளங்குகின்றது.

பெருஞ்சேரி

மயிலாடுதுறை திருவாரூர் இரயில்வேயில் உள்ள மங்கைநல்லூர் நிலையத்திற்கு வடக்கே 1 மைல் தூரத்தில் உள்ளது இவ்வூர். இங்கு 5'3" உயரமுள்ள புத்தரின் உருவச்சிலை அமர்ந்த

நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் பீடத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டில் நான்கு எழுத்து சிதைந்து காணப்படுகிறது. இச்சிற்பம் கம்பீரமாக உள்ளது. காலம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு.

நன்னிலம் வட்டத்தில் கோட்டப்பாடி மற்றும் ஏழையூரில் புத்தரின் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. ஏழையூர் புத்தர் தியான புத்தராக வடிக்கப்பட்டுள்ளார். இச்சிற்பத்தின் வடிவமைப்பு காஞ்சிபுரத்திலுள்ள கருக்கீழமர்ந்த அம்மன் சிலையினை ஒத்துள்ளது. அம்பகரத்தூர் ரயிலடிக்கு 3 மைல் தொலைவிலுள்ள கோட்டப்பாடி எனும் கிராமத்தில் சிறிய வடிவினாலான புத்தர் சிற்பமொன்று கிடைத்துள்ளது.

முடிவுரை

தென்னிந்தியாவில் இந்து மத எழுச்சியின் காரணமாக கி.பி. 3–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 12–ஆம் நூற்றாண்டு முடிய பௌத்த மதம் தன்னை நிலை நிறுத்திக்கொள்ளக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. வடஇந்தியாவிலிருந்துவந்த சமண மற்றும் ஆசீவக மதங்களும் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக விளங்கின. மாணிக்க வாசகருக்கும் இலங்கை பௌத்தர்களுக்கும் சிதம்பரத்தில் ஏற்பட்ட மத சர்ச்சை தென்னிந்தியாவில் ஒரு திருப்புமுனையினை ஏற்படுத்தியது. இதேபோல் திருஞானசம்பந்தர் தலைச்சேரியில் சாரிபுத்தர் மற்றும் புத்தநந்தி ஆகியோருடன் தீவிர மத எதிர்ப்பாளராகத் திகழ்ந்தார். இம்மாற்றங்களின் தாக்கம் நாகைப் பகுதியிலும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

திருமங்கை ஆழ்வார் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரையிலிருந்து தங்கத்தினாலான புத்தர் சிலையைத் திருடி, உருக்கி அதனைக் கொண்டு திருவரங்கம் கோயிலின் நான்காம் பிரகாரத்தினையும் பல வைணவ சந்நதிகளையும் கட்டினார் என வைணவ இலக்கியமான குருபரம்பரையின் மூலம் அறிகிறோம்.

"வெள்ளியார் பிண்டியார் போதியார் என்று இவர்
ஓதம் கள்ள நூல்"

எனத் திருமங்கை ஆழ்வார் சைவ, சமண, பௌத்த நூல்களைக் கள்ள நூல்கள், பொய்யானவை எனச் சாடுகின்றார். மேலும் சங்கராச்சாரியாரின் அத்வைதத் தத்துவமும் சங்கர மடங்களின் ஸ்தாபிதமும் காஞ்சியின் காமகோடி பீடம் நிறுவப்பட்டதும் தென்னிந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயின.

6. சமண சமயம்

சித்ரலேகைப் பெரும்பள்ளி ஆய்வு

நாகப்பட்டினத்திலிருந்து வடக்காலத்தூர் செல்லும் சாலையில் விக்கினபுரம் என்ற கிராமத்தினை ஒட்டிய பள்ளியின் தோப்பு என்ற ஓர் மேட்டுப் பகுதி அமைந்துள்ளது. அங்கு தியான நிலையில் அமர்ந்து கைகளை ஒன்றின் மீது ஒன்று வைத்தது போன்று கைகள் மட்டுமே ஓரளவு தெரியும் அளவிற்கு பீடத்துடன் உள்ள இச்சிற்பத்தின் மேல்பகுதி (முழுவதும் உடைக்கப்பட்டவை) முழுமையாக இல்லாத நிலையில் காணப்படுகிறது. இதன் அமைப்பைக் கொண்டு மகாவீரரின் சிற்பமாக இருக்கலாம் என்ற அனுமானத்தோடு இப்பகுதி சமணர்கள் தங்கிய பகுதி சித்திரலேகைப் பெரும்பள்ளி இதுவே என்றும் வரலாற்று ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

நாகை மாவட்டத்தில் சமணர்கள் வருகை இருந்ததற்கும், இது ஓர் கடற்கரைத் துறைமுக நகரம் என்பதற்கும் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அயல் நாட்டார் வருகையும் இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று. அத்தகு நாகைப்பகுதிக்கு வந்த சமணர்கள் இங்கிருந்து ஓடம்போக்கியாறு அதாவது ஓடம் மூலம் பள்ளியன் தோப்புத்திடலுக்கு வந்து அடைந்திருத்தல் வேண்டும். இப்பகுதி ஓர் உயர்ந்த சுமார் 1.50 மீ. அளவு உயரமான மண்மேடு ஆகும். இந்த பள்ளியன் தோப்பை மையமாகக் கொண்டால் கிழக்கே 7 கி.மீ. தொலைவில் நாகப்பட்டினம் பள்ளியன்தோப்பிலிருந்து நாகை கடல் பகுதி 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேற்கே வடக்காலத்தூர் என வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியானது 2 கி.மீ. தொலைவிலும், வடக்கே 6 கி.மீ. தெலைவில் சிக்கல், தெற்கே 4 கி.மீ. தெலைவில் செம்பியன் மாதேவி மங்கலம் போன்ற ஊர்களும் அமைந்துள்ளன.

வரலாற்று சிறப்புமிக்க ஊர்கள் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ளதாலும் நடுவில் உயர்ந்த புஞ்சை மண்மேடு திடல் காணப்படுவதாலும் இப்பகுதியின் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டது.

பள்ளியன் தோப்புத்திடல் இங்கு சுமார் 5 ஏக்கர் புஞ்சை நிலப்பரப்பு கொண்டுள்ளது. அமர்ந்த நிலையில் உள்ள மகாவீரரின் இடுப்பு மற்றும் கால் பகுதி மட்டும் அடி பீடத்துடன் கிடைக்கிறது. இது

கி.பி. 10–ஆம் நூற்றாண்டு என கருதலாம். மேற்பரப்பாய்வில் மாரியம்மன் கோயில், அய்யனார் கோயில், இரண்டு குளங்கள், மேட்டுப்பகுதிகள், திருக்குளம் போன்றவைகள் ஆய்வு செய்யப்பட்டன. உடைந்த செங்கற் துண்டுகள், முதுமக்கள் தாழிகள், உடைந்த ஓடுகள், மட்பாண்டங்களின் சில்லுகள் நிறைந்த அளவுக்கு சேகரிக்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட மட்கல ஓடுகளில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டிய நன்கு பளபளப்பான உலோக ஒலி எழுப்பக்கூடிய அளவிற்கு செய்யப்பட்டவைகளின் துண்டுகள் நிறைந்து காணப்படுகின்றன. அருகே சிவப்பு நிற மட்கல ஓடுகளும், உறைகிணற்றின் உடைந்த ஓடுகளும் காணப்பட்டன. இவற்றின் காலம் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு. ஆய்வில் இங்கு பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் வாழ் இடங்களாக இருக்கலாம் என்பதை இவற்றை கொண்டு அறியமுடிகிறது. இவ்வூருக்கு அருகிலே சிக்கல் மற்றும் அகரம் ஓரத்தூர் ஆகிய ஊர்களில் முதுமக்கள் தாழிகள் புதையுண்ட காடுகள் காணப்பட்டு ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளன. எனவே இம்மேடு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றுக் காலத்தின் தொடக்க கால மக்கள் வாழ்ந்த பகுதியாக இதனைக் கருதலாம்.

முற்காலத்தில் சமணர்கள் ஊரை விட்டுத் தனியே உள்ள மலைப்பகுதி, அதனடியில் அமைக்கப்பட்ட கற்படுக்கைகளில் வசித்து வந்தனர். மக்களுக்கு தர்ம சிந்தனையும், உயிர்க்கொல்லாமை, கல்வி, மருத்துவம் போன்றவற்றில் உதவிகள் செய்து வந்துள்ளனர். நாகை மாவட்டத்தில் மலைகள் ஏதுமில்லை. எனவே ஊரை விட்டு தனியே அமைந்த திடல் பகுதியில் வாழ்விடமும் திருக்குளமும் அமைத்துக் கொண்டு சமணத் துறவிகள் வாழ்ந்திருக்கலாம் என்றும் கருதலாம்.

இப்பகுதியில் முன்பு கிணறு தோண்டியபோது, முதுமக்கட் தாழியும், மனிதனின் மக்கிய எலும்புகளும் கிடைத்துள்ளன. ஒரு அரசமரத்தின் கீழே கி.பி. 15–ஆம் நூற்றாண்டு காலத்திய அம்மன் சிற்பம் சுடுமண்ணால் ஆனது வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய சுதையால் ஆன தனி மேடையும் உள்ளது. எனவே இப்பகுதியில் தொடர்ச்சியான வாழ்விடம் இருந்தது என்பதும் தெளிவாகிறது. இங்கு அகழாய்வு செய்தபின் கிடைக்கும் தடயங்களை ஆய்வு செய்த பின்னரே இப்பகுதியில் சித்திரலேகைப் பெரும்பள்ளி இருந்ததை உறுதி செய்ய இயலும்.

7. நில அகழாய்வுகள்

பண்டைக்கால மக்கள் இப்பூமியில் வாழ்ந்து விட்டுச் சென்ற பொருட்கள் – சான்றுகள் – எச்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களது வாழ்க்கை முறைகள் பற்றியும், அம்மக்கள் நாகரீகம் – பண்பாடு பற்றியும் எடுத்துக்கூறும் இயல் தொல்லியல் ஆகும்.

மனித நாகரிகத்தைக் கற்காலம், உலோகக் காலம், வரலாற்றுக் காலம் எனப் பிரிக்கலாம். கற்காலத்தில் கரடுமுரடான கற்கருவி களையும், பிந்தைய கற்காலத்தில் கூர்மையான சிறிய கருவிகளையும் பயன்படுத்தினர்.

பின்னர் புதிய கற்காலத்தில் மனித வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆற்றின் கரையில் நிலையாகத் தங்கி உணவு உற்பத்திச் செய்யத் தொடங்கினான். வீடுகள் கட்டிக் கொண்டான். கூட்டமாக வாழத் தொடங்கினான். கற்கருவிகளை நன்கு தேய்த்து பளபளப்பாக்கி உபயோகப்படுத்தினான். கைகளால் வனையப்பட்ட பானைகளை உபயோகித்தான்.

உலோகக் காலத்தில் செம்பு, வெண்கலம், இரும்பு போன்றவற்றால் தனக்குத் தேவையான கருவிகளைச் செய்து கொண்டான். மட்பாண்டங்கள் செய்தல், உலோகத்தால் பல்வேறு பொருட்கள் செய்தல், அணிகலன்கள் செய்தல், ஆடை நெய்தல் போன்ற பல்வேறு தொழில்களை அறிந்து கொண்டான். வாழ்வில் முன்னேற்றம் அடையத் தொடங்கினான்.

வரலாற்றுக் காலத்தில் மனிதன் மிக உயர்ந்த நிலையை அடைந்தான். அவனால் உருவாக்கப்பட்ட வீடுகள், அரண்மனைகள், கோயில்கள், கல்வெட்டுகள், காசுகள் போன்றவை அவர்களது சமயம், கலை, வாணிகம், பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

மனித நாகரிகத்தை – பண்பாட்டினை அறிந்து கொள்ள அவர்கள் விட்டுச் சென்ற சான்றுகளின் அடிப்படையில் முறையாக அறிவதே தொல்லியலின் நோக்கமாகும். அதற்கு அகழாய்வுகள் பெரிதும் உதவுகின்றன.

அகழாய்வு என்பது பூமியின் மேற்பரப்பிலிருந்து தொடர்ந்து கீழே கன்னிமண் வரை அகழ்ந்து ஆய்வு செய்வதே நோக்கமாகும். இவ்வாறு செய்யும்பொழுது பல்வேறு காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் மண் அடுக்குகளில் கிடைக்கும். இதனைக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்களின் நாகரீகம் – பண்பாடு எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி அறிய இயலும்.

நிலத்திற்கு அடியில் இயற்கையாக அமைந்த மண் அடுக்குகளைச் சிதைத்து அகழாய்வு செய்யப்படுவதால் அகழாய்வு மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டும்.

மண் அடுக்குகளை உரிய முறையில் ஆய்வு செய்து அதன் தோற்றத்தினை நிழற்படம் எடுத்தும் வரைபடம் தயாரித்தும் பாதுகாக்க வேண்டும். கிடைக்கும் வரலாற்றுப் பொருட்களை வேதியல் முறைப்படி பாதுகாக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றினை முழுமையாக அறிவதில் அகழாய்வு முக்கிய இடம் பெற்று விளங்குகின்றது.

நாகை மாவட்டத்தில் தமிழக அரசு தொல்லியல் துறை, நடுவண் அரசு தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம் ஆகிய ஆய்வுத்துறைகள் கடந்த 50 ஆண்டுகளாக நில அகழாய்வு மேற்கொண்டு பெருங்கற்காலம் தொடங்கி நாயக்க மன்னர்கள் காலம் வரையிலான பல்வேறு அரிய தொல்லியல் தடயங்களை நமக்கு வெளிக்கொணர்ந்துள்ளனர். இதனால் பழந்தமிழர்களின் வாழ்வியல், சமயம், அரசியல் கலை போன்றன வெளிநாட்டவர் வியக்கும் வண்ணம் போற்றப்படுகிறது.

1) பூம்புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் 2) கீழையூர் 3) வானகிரி 4) மேலையூர் 5) மணிக்கிராமம் 6) மேலப்பெரும்பள்ளம் 7) மாந்தன்காடு 8) சாய்காடு 9) தலைச்சங்காடு 10) நாகப்பட்டினம் 11) பல்லவனீச்வரம் 12) செம்பியன்கண்டியூர் போன்ற இடங்களில் அகழாய்வு நடத்தப்பட்டுள்ளன.

8. பூம்புகார் ஆழ்கடலாய்வு

கடற்கரை அருகில் அமைந்த நகரங்களும், துறைமுகப் பட்டினங்களும் இயற்கைச் சீற்றத்தினாலும், கடல் கோள்களாலும் அழிந்திருக்கின்றன. இவ்வாறு கடலில் மூழ்கிய நகரங்களின் பகுதிகளையும், எச்சங்களையும் கடலுக்கடியில் அகழாய்வு மூலம் வெளிப்படுத்தலாம். சங்ககாலச் சோழர்களின் தலைநகரம் மற்றும் துறைமுகப் பட்டினமான பூம்புகாரில் தமிழகத் தொல்லியல் துறையும் – தேசிய கடலாய்வு நிறுவனம் (National Inastitute of Oceanography – Goa) இணைந்து 1996 –1997–இல் பூம்புகார் பகுதியில் ஆழ்கடலாய்வு மேற்கொண்டன. கடலுக்கடியில் கட்டடப் பகுதிகளும், கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து ஈயக் கட்டிகளும் கிடைத்தன. பூம்புகார்ப் பகுதியில் அவ்வப்பொழுது, மீனவர்கள் மீன் பிடிக்கும் பொழுது சுடுமண் பொம்மைகள், புத்தர் சிற்பங்கள் கிடைத்துள்ளன. பூம்புகார் சிறந்த நகராகத் திகழ்ந்ததற்கு அவை அடையாளமாக விளங்குகின்றன. இதேபோன்று பல்லவ மன்னர்களின் துறைமுகப்பட்டினமாக மாமல்லபுரத்திலும் கடலாய்வு நடத்தப் பெற்றது. இதில் கடலுக்கடியில் மூழ்கிய கோயில்கள் போன்றவை காணப்பட்டன.

நான்கு ஆண்டுகளில் பிப்ரவரி மாதத்தில் பூம்புகார் கடல்பகுதியில் தேசிய கடலாய்வு நிறுவனத்தின் உதவியுடன் தமிழகத் தொல்லியல்துறை ஆய்வு செய்து பல அரிய தொல்லியல் தடயங்களை கண்டுபிடித்துள்ளது. ஒரு கடலாய்வு அகழ்வைப்பகமும் பூம்புகாரில் நாட்டிலேயே முதலாவதாக நிறுவப்பட்டுள்ளது. இங்கு நில அகழாய்வு மற்றும் கடல் ஆய்வில் கிடைத்த தொல்பொருட்கள் காட்சியில் இடம்பெற்றுள்ளன.

ஆழ்கடல் ஆய்வு செய்வது எளிதான காரியம் அல்ல. மிகுந்த பொருட்செலவு ஏற்படும். தனிப்பயிற்சி பெற்ற பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்களுடன் இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். நமது நாட்டில் பூம்புகார், மாமல்லபுரம், வடக்கே துவாரகா போன்ற பகுதிகளில் ஆழ்கடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. செப்பேடுகள் - நூலகங்கள்

நாகை மாவட்டத்தில் சோழர்காலச் செப்பேடுகள் 1. கழுக்காணிமுட்டம் (திருஇந்தளூர்) புதையலில் கிடைத்தது. 2. பெரிய லெய்டன் செப்பேடு (ஆனைமங்கலம் செப்பேடு) இவை இரண்டும் கிடைத்துள்ளன. முதலாம் இராசராச சோழன் காலத்தில் நாகப்பட்டினத்திற்கு வியாபாரத்திற்கு வந்த பௌத்தர்கள் தங்களுக்கு வழிபாடு செய்வதற்காக பௌத்தப்பள்ளி ஒன்றை கட்டித் தருமாறு வேண்டிக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று நாகப்பட்டினத்தில் பெரிய புத்த விகாரம் ஒன்றை எழுப்பினான். மேலும் இங்கு வழிபாடு செய்யும் பக்தர்களுக்குத் தடையின்றி உணவளிக்கவும் அருகில் உள்ள ஆனைமங்கலம் என்ற ஊரை இந்த பௌத்தப் பள்ளிக்கு தானமாக வழங்கினான். இதுவே ஆனைமங்கலச் செப்பேடு என்று வழங்கப்படுகிறது. இச்செப்பேடு சோழ மன்னர்களின் இலச்சினையோடு செய்யப்பட்டு ஒரே வளையத்தில் கோர்க்கப் பட்டுள்ளது. இச்செப்பேட்டின் வரலாற்றுப் பெருமையை உணர்ந்து ஆங்கிலேயர்கள் அப்போதே தமது நாட்டிற்கு எடுத்துச்சென்று பிரிட்டிஷ் அருங்காட்சியகமான லெய்டன் காட்சியகத்தில் வைத்துவிட்டனர். எனவே இச்செப்பேடு 'பெரிய லெய்டன் செப்பேடு' என்று வழங்கப்பட்டு வருகிறது.

நூலகங்கள்

நாகை மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகமும், தாலுக்காதோறும் பெரிய அளவில் வட்டார நூலகங்களும் தாலுகாதோறும் பஞ்சாயத்துகள் கட்டபட்டு பயன்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இம்மாவட்டத்தில் தொன்மையான நூலகங்கள்;

1. திருவாவடுதுறை சரஸ்வதி பண்டாரம் ஆதின நூலகம்
2. தருமபுரம் ஆதின மடத்தில் உள்ள நூலகம்
3. நடுக்கரை மேலப்பாதி – நூல் நிலையம் போன்றன பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் திருஇந்தளூர் (திருவிழுந்தூர்) கிராமம் அமைந்துள்ளது. இதன் உட்கிராமமாக உள்ளது கழுக்காணிமுட்டம் என்ற ஊராகும். இவ்வூர் மயிலாடுதுறை நகரிலிருந்து ஆனதாண்டவபுரம் செல்லும் சாலையில்

2 கி.மீ. தூரத்தில் வடகிழக்கில் அமைந்துள்ளது. இங்குள்ள கைலாசநாதர் கோயில் புதையலில் கிடைத்தது கழுக்காணிமுட்டம் செப்பேடுகளாகும். ஆனைமங்கலம் – கீவளூர் வட்டத்தில் பெரிய லெய்டன் செப்பேடு கிடைத்துள்ளது.

கழுக்காணிமுட்டத்தில் பிற்கால சோழர் காலத்தில் கட்டப்பட்ட இரண்டு சிவன் கோயில்கள் கல்வெட்டுகளுடன் உள்ளன. இதில் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் கிழக்கில் முன்மண்டபம் கட்டுவதற்கு தோண்டும்போது சுமார் 6 அடி ஆழத்தில் செப்புத்திருமேனிகள், பூஜைப் பொருட்கள், வாத்தியக் கருவிகள், திருமேனிகளின் அடிப்பீடங்கள் முதலியன கிடைத்தன. மேலும் வரலாற்றுக்கு முக்கியமான சோழர் காலத்தைச் சேர்ந்த செப்பேடுகளும் கிடைத்துள்ளது. இச்செப்பேடுகள் சுமார் 300 ஆண்டுகள் முன்பு பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. களிமண், மணல், நீலப்பாசி போன்றவை கெட்டியாகத் தொல்பொருட்களின்மீது படிந்து காணப்பட்டது. அவை வேதியியல் முறையில் தூய்மை செய்யப்பட்டன.

புதையலில் கிடைத்த பொருட்கள்

1. செப்புத்திருமேனிகள்

விநாயகர் முதல் காரைக்காலம்மையார் வரை 13 பஞ்சலோகத் திருமேனிகள் கிடைத்துள்ளன. இவற்றுடன் சதுர பீடம்–2, செவ்வக பீடம்–1 சேர்ந்து கூடுதல் 15 (திருமேனிகள்) உருப்படிகள் கிடைத்துள்ளன.

2. பூஜைப்பொருட்கள்

குத்துவிளக்கு, எக்காளம், தீர்த்தக் கெண்டி–2 உட்பட இதில் 8 உருப்படிகள் கிடைத்துள்ளன.

3. செப்பேடுகள்

சோழர்கால முத்திரையுடன், ஒரே வளையத்தில் 86 செப்பேடுகள் கோர்க்கப்பட்டு, இலச்சினையும் பதியப்பட்டு, ஏட்டின் இரு பக்கமும் வரலாற்றுச் செய்திகள் பொறிக்கப்பட்ட நிலையில் வளையம் உடையாமல், முத்திரை சேதம் இல்லாமல் பெரிய செப்பேடு கிடைத்துள்ளது சிறப்பாகும்.

இந்த செப்பேட்டினை முதலில் கழுக்காணிமுட்டம் சென்று கண்டறிந்து, தொல்லியல் துறைக்கு முதல் தகவல் அறிக்கை

அளித்தது தரங்கம்பாடி காப்பாட்சியரான இந்நூல் ஆசிரியர் திரு. கோ. முத்துசாமி ஆவார். இந்த செப்பேடு கோவை உலகத்தமிழ் மாநாட்டில் சிறப்பு அரங்கில் வரலாற்று அறிஞர்கட்கு காட்சி தந்தது.

1. சோழ மன்னரின் இலச்சினையுடன் முத்திரை

இதற்கு முன்பு விழுப்புரம் மாவட்டம், எசாலம் கிராமத்தில் முதலாம் இராசேந்திர சோழனின்செப்பேடு கிடைத்துள்ளது போலவே இந்த செப்பேடும் முத்திரையும் உள்ளது. ஆனால் எசாலம் செப்பேட்டின் முத்திரையின் சின்னங்கள் புடைப்பாக வெளியே தெரிகின்றன. இந்த செப்பேட்டின் முத்திரையில் சின்னங்கள் உட்குழிவாகத் தோண்டி நன்கு தெரியுமாறு காட்டப்பட்டுள்ளன. முத்திரையின் விட்டம் 11 செ.மீ. முழுவட்டம் 35 செ.மீ. கனம் 2 செ.மீ. ஆகும்.

முத்திரையில் இடமிருந்து வலமாக ஆரம்பித்து குத்துவிளக்கு, மண்டியிட்டு அமர்ந்த நிலையில் புலி, இரண்டு மீன்கள், நாணுடன் கூடிய வில் குத்துவிளக்கு ஆகிய அரச சின்னங்கள் வரிசையாக செதுக்கப்பட்டு உள்ளன. இவைகட்கு மேலே நடுவில் வெண்கொற்றக் குடையும் அதன் இருபுறம் சாமரமும் உள்ளன.

முத்திரையின் கீழ்ப்பகுதியில் ஸ்வஸ்திக சின்னம், மத்தளம், மலர்ந்த தாமரை போன்ற சின்னங்கள் காணப்படவில்லை. முத்திரையின் ஓரப்பகுதியில் சோழனின் பட்டப்பெயர் செதுக்கப் பட்டுள்ளது தெரிகிறது. அது கிரந்தத்தில் உள்ளது.

ஒரே வளையத்தில் 86 ஏடுகள் கோர்த்து அவை வெளியே எடுக்கமுடியாதபடி இலச்சினையுடன் கூடிய முத்திரை, செம்பு+பித்தளை சேர்த்து உருக்கி ஊற்றி வளையத்தின் இரு முனைகளும் இணைக்கப்பட்டுள்ளன. வளையத்தின் இடப்புறப் பகுதியில் 'இவ்வளையத்தில் கோத்த ஏடுகள் 86' என செதுக்கப் பட்டுள்ளது. தற்போது இதில் ஒரு ஏடு காணப்படவில்லை. புதையலுக்கு வரும் முன்பாகவே அதிலிருந்து ஒரு ஏடு உடைந்திருக்கலாம் என்று தெரிகிறது. எனவே இச்செப்பேட்டில் 85 ஏடுகள் மட்டுமே உள்ளன.

ஒவ்வொரு செப்பேடும் அகலம் 21 செ.மீ. நீளம் 44 செ.மீ. உடையதாக உள்ளன. ஏட்டின் இடது பக்கம் நடுவில் வளையத்தில் கோர்க்க ஒரு ஓட்டை (துளை) இடப்பட்டுள்ளது . ஏடுகளில் இரண்டு

பக்கமும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கமும் 20 முதல் 23 வரிகள் வரை காணப்படுகின்றன. வளையத்தின் விட்டம் 52 செ.மீ.

செப்பேட்டின் வரலாற்றுச் செய்திகள்

சோழமன்னர்களின் வம்ச வரலாறு, முன்னோர்களின் ஆட்சிமுறை, வெற்றிகள், நிலக்கொடைகள், திருக்கோயில்களின் திருவிழாக்கள், நிர்வாகம், சோழ இளவரசர்கள் உரிய பயிற்சி பெற்று அரண்மனைகளில் முடிசூட்டிக்கொள்ளும் விழா போன்ற பல வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. செப்பேட்டின் முதல் எட்டு ஏடுகள் கிரந்தத்தில் சோழ மன்னர்களின் 'பிரசஸ்திகள்' பொறிக்கப்பட்டுள்ளன. எட்டாவது ஏட்டின் பின்புறத்தில் இருந்து தமிழ்ப்பகுதி தொடங்குகிறது.

செப்பேட்டின் முத்திரையில் உள்ள சின்னங்கட்கு ஓரமாக சோழ வேந்தனின் பெயர் 'பரகேஸரிவர்மன்' என்ற பட்டப்பெயருடன் பொறிக்கப்பட்டுள்ளது. சோழர்கள் தந்தையும் மகனும் இராஜகேஸரி, பரகேஸரி என்ற பட்டங்களை மாறி மாறி சூட்டிக்கொண்டனர்.

1. "ஸ்வஸ்திஸ்ரீ கொநேரின்மை கொண்டாந் ராஜகெஸரி வளநாட்டு திருஇந்தளூர் நாட்டார்க்கும் பிரமதெய கிழவர்க்கும் தெவதானமருளிய கழுக்காணி முற்றத்து" என்றும்
2. "நமக்கு யாண்டு முப்பத்தஞ்சாவது நாள் நாற்பதிநால் முடிகொண்ட சோழபுரத்து ராஜாதிராஜ நிலம் நம் வீடு" என்றும் வரிகள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும்
3. காவிரியாறு பற்றிய குறிப்பு
4. அழகிய சோழச் சதுப்பேதிமங்கலம்
5. நிலக்கொடை வழங்கிய நிலங்கட்குரிய எல்லைகள் பற்றிய செய்திகளும்
6. சோழர்கால அரசு அதிகாரிகள் செயல்படும் விதம் பற்றிய செய்திகளும் வருகின்றன.

எனவே பரகேஸரி எனும் பட்டம் பெற்ற முதலாம் இராசேந்திர சோழனின் பேரனாகிய இரண்டாம் இராசேந்திரன் தனது தந்தையான இராசாதிராச சோழமன்னன் காலத்தில் இந்த செப்பேடு வழங்கப்பட்டது என்றும் இதன் காலம் 1018–1054 என்பதும் தெரியவருகிறது.

10. திருமடங்கள்

1. திருவாவடுதுறை ஆதீனம்: (திருமடாலயம் நிறுவியது கி.பி. 14–ஆம் நூற்றாண்டு)

திருக்கயிலாயத்தில் சீகண்ட பரமசிவத்திடம் நந்தியெம் பெருமான் உபதேசம் பெற்றார். நந்தியெம்பெருமானிடம் சனற்குமாரரும், சனற்குமாரரிடம் சத்தியஞான தரிசினிகளும், சத்திய ஞானதரிசினிகளிடம் பரஞ்சோதி முனிவரும், பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்ட தேவரும், மெய்கண்ட தேவர் வழி வழியாக வரும் ஆசாரிய மரபில் சித்தர் சிவப்பிரகாசரும் உபதேசம் பெற்றனர். இப்பரம்பரை உபதேசப் பரம்பரை எனப்படும். சித்தர் சிவப்பிரகாசரிடம் மூவலூரில் (மயிலாடுதுறைக்கு அருகில்) பிறந்த வைத்தியநாதன் என்பவர் அருளுபதேசம் பெற்றார். இவருக்கு நமசிவாய தேசிகர் என்னும் தீட்சாநாமம் சித்தர் சிவப்பிரகாசரால் சூட்டி அருளப்பட்டது. இவரே திருவாவடுதுறை ஆதீன மடாலயத்தைத் ஸ்தாபித்தவர் ஆவார். இவர் முதலாகத் தொடங்கிய பரம்பரை அபிடேகப் பரம்பரை எனப்படும். இத்திருமடம் 600 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது என்றாலும் இப்பரம்பரை திருக்கயிலாயத்திலிருந்து உபதேசம் பெற்றுத் தொடங்கி வருவதால் திருக்கயிலாய பரம்பரை என்று போற்றப்படுகின்றது.

சித்தர் சிவப்பிரகாசர்

ஆதீனக் குரு முதல்வர் அருள்மிகு நமசிவாயமூர்த்திகளுக்கு அருளுபதேசம் செய்த இவர்கள் ஆதீன மடாலய வடக்கு முகப்பில் மேற்றிசை தெற்கில் ஒரு சிறு கோயில் கட்டப்பட்டது, அதில் விநாயகரைப் பிரதிட்டை செய்து பூசித்து, தம் திருநாமத்தையே அவ்விநாயகருக்குத் திருநாமமாக இட்டு இன்றும் அப்பெயர் வழங்குமாறு செய்தருளினார்கள். திருவாவடுதுறையில் தமது ஞானோபதேச மரபு தழைக்க தமது நன்மாணாக்கர் பலருள்ளும் நமசிவாயருக்கு ஆச்சாரியராக எழுந்தருளச் செய்தும், 'நமது சைவ சித்தாந்த மரபு தழைக்க ஞானோபதேசம் செய்து வருமாறு ஆணை தந்தோம்' ஏன்று அருளி திருமறைக்காடு சென்று ஓர் தபோவனத்தில் அருட்பெருஞ்சித்தராய் அமர்ந்தருளினார்கள்.

ஆதீனக் குருமுதல்வர் அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

சுவாமிகள் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறையில் திருமடாலயம் நிறுவினார்கள். தமது ஆசாரியார் ஆணையின் வண்ணம் அருள்மிகு ஞானமா நடராசப் பெருமானையும் அருள்மிகு வைத்தியநாதப் பெருமானையும் சிவாகமம் தவறாமல் பூசனை புரிந்து வந்தார்கள். அருள்திரு நமசிவாயமூர்த்திகள் பெருமையைக் கேள்வியுற்ற சூரியனார் கோயில் ஆதீனம் குருமுதல்வர் அருள்திரு சிவாக்கிரயோகிகள் திருவாவடுதுறைக்கு எழுந்தருளி அருள்திரு நமசிவாயமூர்த்திகளோடு உரையாடி மகிழ்வார்கள். அன்றுமுதல் இன்றுவரை சூரியனார் கோயில் ஆதீனமும் திருவாவடுதுறை ஆதீனமும் நல்ல தொடர்புடன் விளங்குகிறது. இவ்வாதீன அடியவர்களாகிய தம்பிரான் சுவாமிகளே சூரியனார்கோயில் ஆதீனக் குரு மகாசன்னிதானமாக எழுந்தருளச் செய்யும் வழக்கமும் இருந்து வருகிறது. அருள்திரு நமசிவாய மூர்த்திகள் தம் குருவை நினைவு கூறும் வண்ணம் தம் அணுக்கத் தொண்டர் ஒருவருக்குச் சிவப்பிரகாச தேசிகர் ஏன்று பெயர் சூட்டினார்கள்.

சிதம்பரம் அருள்மிகு நடராசர் திருக்கோயில் பூசையை வேலூர் நாயக்கரின் அதிகாரி முட்டுப் பெற முனைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் அருள்திரு நமசிவாய மூர்த்திகளிடம் முறையிட தம்முடைய அணுக்கத் தொண்டரான சிவப்பிரகாசரை வேலூருக்கு அனுப்பி இலிங்கம நாயக்கரின் உதவியால் தடுத்து நிறுத்தி, சிதம்பரத்தில் வழக்கம்போல் அருள்மிகு நடராசப் பெருமான் பூசை வழிபாடுகள் செவ்வனே நடைபெறச் செய்தருளினார்கள்.

அருள்திரு நமசிவாயமூர்த்திகள் திருவாவடுதுறையில் தைத்திங்கள் அசுபதி திருநட்சத்திரத்தன்று சிவபிரானோடு இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவ பரிபூரண நிலையை அடைந்தருளினார்கள். ஆதீன மடாலயத்தில் அருள்திரு நமசிவாயமூர்த்திகள் திருக்கோயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய திருவுருவம் சின்முத்திரையுடன் அருட்காட்சித் தருகிறது. வெவ்வேறு காலங்களில் தோன்றிய அருளாளர்கள் அருள்திரு நமசிவாய மூர்த்திகளைப் போற்றிப் பண்டார சாத்திரங்கள் உட்பட 22 நூல்கள் அருளியுள்ளனர்.

அருள்திரு மறைஞான தேசிகர் (இரண்டாவது குரு மகாசன்னிதானம்), அருள்திரு அம்பலவாண தேசிகர் (மூன்றாவது குரு மகாசன்னிதானம்), அருள்திரு உருத்திரகோடி தேசிகர் (நான்காவது குரு மகாசன்னிதானம்) ஆவார்கள்.

மதுரையம்பதியில் அருள்திரு உருத்திரகோடி தேசிகர் கார்த்திகைத் திங்கள் அனுஷ திருநட்சத்திரத்தில் சிவபரிபூரணம் பெற்றார்கள். ஈசானத் தம்பிரான் சுவாமிகள் பெயரில் உள்ள கிளைமடங்கள் உள்ள தலங்கள் – 1) பாவநாசம், 2) திருப்புடைமருதூர், 3) செவ்வல், 4) திருநெல்வேலி, 5) முறப்பநாடு, 6) வள்ளியூர், 7) கன்னியாகுமரி, 8) சுசீந்திரம்.

அருள்திரு வேலப்ப தேசிகர் (ஐந்தாவது குரு மகாசன்னிதானம்) இவர்கள் சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு ஓர் உரை கண்டுள்ளார்கள். இவர்களுடைய சீடரான குமாரசாமித் தம்பிரான் என்பவர் மெய்கண்ட சாத்திரங்களுக்கு உரை எழுதியுள்ளார்கள் என்பர். எனினும் இவர்களது அடியார் கூட்டத்தில் ஒருவராகிய நமசிவாயத் தம்பிரான் சில சாத்திரங்களுக்கு உரை ஏழுதியுள்ளார். அவற்றுள் திருவருட்பயன், வினாவெண்பா என்னும் இரண்டு நூல்களும் இவ்வாதீனப் பதிப்பாக 1953–ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

அருள்திரு குமாரசாமி தேசிகர் (ஆறாவது குரு மகாசன்னிதானம்), அருள்திரு பிற்குமாரசாமி தேசிகர் (ஏழாவது குரு மகாசன்னிதானம்) ஆவார்கள்.

இந்தப் பரம்பரையில் தற்போது சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் 23–ஆவது குரு மகாசன்னிதானமாக அருளுகின்றனர். இவர்கள் 07.04.1983ல் ஞான பீடத்தில் எழுந்தருளினார்கள். இவர்கள் அருளாட்சியில் சைவமும் தமிழும் சிறந்தோங்கி வளர்ச்சி பெறுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்மந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் தருமையாதீனம்

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஸ்ரீவில்லிபுத்தூரில் சுப்ரமணியப் பிள்ளை என்பவருக்கும், மீனாட்சி அம்மையாருக்கும் ஆண் மகவாக சுமார் நானூற்று பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு திங்கட்கிழமையன்று திரு

அவதாரம் செய்தருளினார். பெற்றோர்கள் குழந்தைக்கு ஞான சம்பந்தன் என்று திருநாமம் சூட்டினார். குழந்தை ஞானசம்பந்தன் ஞானத்தோடு சம்பந்தம் கொண்ட காரணத்தினால் திருவருள் பொங்கி வழிந்தது. பதினாறு வயதிற்குள் தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் பேராற்றல் பெற்றுத் திகழ்ந்தது மற்றும் ஆகம சாத்திரங்கள் எல்லாம் கற்றுத் தெளிந்து சிவயோகம் பயின்றது. பெற்றோர்கள் மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளையும், மீனாட்சி அம்மையாரையும் வழிபடப் பேரார்வம் கொண்டிருந்தார்கள். அவ்வண்ணமே குழந்தை ஞானசம்பந்தரை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றார்கள்.

மதுரையில் சில நாட்கள் தங்கி ஆலவாயரையும், அன்னை அங்கையற்கண்ணியையும் சிரமேற்கொண்டு வணங்கினார்கள். மீண்டும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு புறப்படும்பொழுது தன் மகன் ஞான சம்பந்தனைப் பார்த்து 'வா ஊருக்குப் போகலாம்' என்றழைத்தார்கள். குழந்தை கருவிலே திருவுற்ற காரணத்தினால் 'என் அம்மா, அப்பா இந்தக் கோயிலுக்குள் இருக்கும்பொழுது இவர்களை விட்டு நான் எவ்வாறு பிரிந்து வருவேன் என்று வினவியது. குழந்தையின் இந்தச் சொற்கள் பெற்றோர்களுக்கு வியப்பைத் தந்தது. குழந்தை வழங்கிய அந்தச் சொற்களுக்குள் சோமசுந்தரக் கடவுளின் பேரருட்சக்தி வெளிப்பட்டது. பெற்றோர்கள் மனம் தெளிந்துக் குழந்தையை அங்கேயே விட்டுவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்றனர்.

ஞானசம்பந்த சுவாமிகள் இறைவன் கனவில் சொன்ன வண்ணமே பொய்கையிலிருந்து கொண்டு வந்த சிவலிங்கத்தை தன் இருப்பிடத்தில் வைத்து வணங்கி வருகையில் தனக்கு ஒரு ஞானாசிரியர் வேண்டும் என்று சிந்தித்தார். மீண்டும் சோமசுந்தரக் கடவுளிடம் சென்று அடியேன் உய்வதற்கு ஏதுவாகிய சிவஞான உபதேசம் செய்தருளும் ஒரு ஞானாசிரியரை அதாவது ஒரு சற்குருவைத் தந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

அன்று இரவு அவர் நித்திரையில் ஆழ்ந்திருக்கும் பொழுது சிவபெருமான் அவர் கனவில் தோன்றி 'என்னருள் ஞானசம்பந்தா திருவாரூருக்குச் செல், அங்கு நமது உபதேசப் பரம்பரையில் வந்த ஞானப் பிரகாச தேசிகரிடம் சிவஞானோபதேசம் பெற்று அதன் முறைப்படி எம்மை வணங்கி வழிபடுவாயாக' என்று அருளிச் செய்தார்.

அதே போன்று சிவபெருமான் ஞானப்பிரகாச தேசிகரின் கனவில் தோன்றி, 'வருகிற திங்கட்கிழமையன்று உன்னிடம் வரும் எம்முடைய ஞானசம்பந்தருக்குச் சிவஞான உபதேசமும், சிவலிங்க பூசையும் தெளிவாக எழுந்தருளச் செய்வாயாக' என்று ஆக்ஞையிட்டார்.

பிறகு மயிலாடுதுறை அருகில் உள்ள தருமபுரம் என்ற ஊருக்கு வந்து ஸ்ரீதருமபுரீஸ்வரரையும் அபயாம்பிகையையும் வணங்கினார். அக்கோயிலின் மேற்புரத்தில் ஒரு தோப்பு உள்ளது. அதற்கு கூவிளந்தோப்பு என்று பெயர். அங்கு ஒரு ஆசிரமம் நிறுவி தாம் கொண்டுவந்த சொக்கநாதப் பெருமானை அங்கு எழுந்தருள வைத்து தம் பூஜைகளைச் செய்து கொண்டிருந்தார். அகத்தியருடைய மாணாக்கர்களாகிய முனீந்திரர்கள் குரு ஞானசம்பந்தருடைய திருவருட் குணங்களைக் கண்டு தங்களுக்குரிய ஆசிரமங்களையும், சிவாலயத்தையும் சுவாமிகளிடம் ஒப்படைத்தார். இவைகளைப் பாதுகாத்து, ரசவாதம் முதலிய சித்துகளையும் உபதேசித்து, 'எங்களைப்போன்று இவைகளை நீங்களும், உங்களுக்குப் பின் வரும் சந்ததியினரும் பரம்பரைப் பரம்பரையாய் நிர்வாகம் செய்து வருவீர்களாக' என்று ஆசி வழங்கித் தங்கள் ஊருக்குச் சென்று விட்டனர்.

தாம் பரிபூரணமெய்தும் காலம் வருவதை சிவபெருமானின் திருவருள் மூலம் உணர்ந்தார். சிவபெருமான் திருவடியில் அமைதி கொள்ள திருவுளம் கொண்டு அதற்கான பணிகளை ஆற்றினார். தமது அடியார் ஆனந்த பரவசருக்கு ஞானோபதேசம் செய்து தன் தவத்தையும் தந்து, பீடாதிபதி உரிமையையும் வழங்கினார். தாம் வழிபட்ட சொக்கலிங்கப் பெருமான் பூசையையும் தந்தருளி, நீர் நமது பீடத்திலிருந்து கொண்டு ஞானோபதேசம் செய்து, சொக்கநாதரைப் பூசித்து, சிவாலயத்தையும் சைவ சமயத்தையும் நிர்வகித்து வருவீராக என்று அருளாசி வழங்கினார். குருஞான சம்மந்தப் பெருமான் பேரமைதி பூண்டு ஜீவ சமாதி ஆனார். இக்கோயில் தருமபுரத்தில் இன்றும் வழிபாட்டிலுள்ளது.

தருமபுரத்தில் ஆதீன திருமடமும், அதனை ஒட்டியே சிவன் கோயிலும், பதினாறு கரங்களுடன் காட்சி தரும் துர்காதேவி அம்மன் கோயிலும் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளன. தருமை ஆதீனத்தின் பரம்பரையில் தற்போது 26–ஆவது குருமகா சன்னிதானமாக சீர்வளர்சீர் சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாட்சி செய்து வருகின்றனர்.

11. சத்திரங்கள் – சாவடிகள்

நாகை மாவட்டத்தில் பல இடங்களில் சத்திரங்களும் சாவடிகளும் முற்காலம் தொட்டு இருந்து வந்துள்ளன. முற்காலத்தில் வடக்கே திருப்பதி, சிதம்பரம் போன்ற தலங்களுக்கும் தெற்கே திருவரங்கம், மதுரை, ராமேஸ்வரம், திருச்செந்தூர் போன்ற முக்கிய தலங்களுக்குச் செல்வோர் பெரும்பாலும் சாலை மார்க்கமாகவே சென்றார்கள். அக்காலத்தில் பேருந்தோ, இரயில் வசதிகளோ இல்லை. எனவே நடைப்பயணமாகவே செல்ல நேரிட்டது. வணிகர்களும், மாட்டு வண்டி மூலமாக தமது பயணத்தை மேற்கொண்டனர். இவ்வாறு செல்லும் பக்தர்கள் (ம) வணிகர்கள் இரவு நேரத்தில் தங்கி இளைப்பாறிச் செல்வதற்காக சாலையோரம் உள்ள ஊர்களில் அரசர்களாலும், ஊர் செல்வந்தர்களாலும் ஏற்படுத்தப்பட்டவைதான் சத்திரங்கள், சாவடிகள் என்று வழங்கப்படுகின்றன.

சாவடிகள் என்பன நிழல்தரும் மரங்கள் நிறைந்த திடல் பகுதியாகும். இங்கு கட்டடங்கள் இருக்காது. திடலை ஒட்டி நீர்நிலை இருக்கும். வழிபோக்கர்கள் இங்கு தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது.

சத்திரங்கள் என்பது ஊரை ஒட்டிய பகுதியில் ஓட்டு கட்டடமாக முன்பக்கம் பெரிய திண்ணைகளுடன் கட்டித் தரப்பட்டுள்ளன. இந்த சத்திரங்களில் இரவு வேளைகளில் தங்கும் வழிபோக்கர்களுக்கும், பக்தர்களுக்கும், வணிகர்களுக்கும் பாதுகாப்பும், உணவும் தரப்பட்டுள்ளது. இச்சத்திரங்களின் அருகில் குடிநீர் குளமும் இருந்துள்ளது. சத்திரத்தின் நிர்வாகத்திற்காக பல இடங்களில் செல்வந்தர்களால் நிலக்கொடையும் அளிக்கப்பட்டுள்ளது, நாகை மாவட்டத்தில்

1. மல்லியம் – மெயின்ரோடு சத்திரம்
2. தலைச்சங்காடு – வீரப்ப செட்டியார் தர்மசத்திரம் (கி.பி. 1845)
3. கொள்ளிடம் – ஆனைக்காரன் சத்திரம்
4. வேதாரணியம் – சேது சத்திரம்
5. நாகை – காத்தான் சத்திரம்
6. ஒழுகைமங்கலம் – தர்ம சத்திரம்

போன்ற சத்திரங்களும்

1. நடராசப் பிள்ளை – சாவடி
2. நாராயணன் நாயக்கன் – சாவடி
3. பட்டமங்கலம் – மேய்ச்சாவடி

போன்ற சாவடிகளும் முற்காலத்தில் இருந்துள்ளமை தற்போது வழங்கும் பெயர்களால் அறியமுடிகிறது.

கவிகாளமேகம்

சிலேடையாகவும், நையாண்டியாகவும் பாடுவதில் காளமேகப் புலவர் வல்லவர். இவர் ஒருசமயம் நாகப்பட்டினத்திற்கு விஜயம் செய்த காலத்தில் பேருந்தோ, ரயிலோ இல்லை. சாதாரண மக்கள் நாலைந்து பேராகப் போகும்போது கட்டை வண்டி கட்டிப் போவது வழக்கம். சிலசமயம் புலவர்களுக்கு அரண்மனை பல்லக்கு வரும். ஆனால் காளமேகம் நடந்தே நாகப்பட்டினம் சென்றார். நாகையின் எல்லையை அடையும்போது இருட்டிவிட்டது. அருகில் இருந்த "காத்தான் வருணகுல ஆதித்தன்" என்ற சத்திரத்தில் தங்க நினைத்தார். அந்த சத்திரம் வழிபோக்கர்களுக்காக மன்னரால் ஏற்படுத்தப்பட்டது. அங்கு மதியத்திற்கு மேல் இருட்டும்வரை சேரும் ஆள்களைக் கணக்கிட்டு படி வழங்கும் அதிகாரிகளிடம் சொல்லி அரிசி அளந்து வாங்கி சமைத்து வழிபோக்கர்களுக்கு வழங்குவது வழக்கம். அன்றைய நாளில் அரிசி ஆலைகள் இல்லை. ஆகவே ஆட்களைக் கொண்டுதான் நெல்லைக் குத்தி அரிசியைத் தீட்டியபிறகு சமையல் செய்ய வழங்குவார்கள். வழிபோக்கர்கள் பொறுமையுடன் காத்திருந்து சாப்பிட வேண்டிய நிர்பந்தம். காளமேகப் புலவர் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அக்கம்பக்கம் எல்லாம் அடங்கித் தூங்கும் வேளையில் ஆட்களை எழுப்பி அன்னமிட்டார்கள்.

இலையில் சாப்பாட்டை பார்த்த பிறகே காளமேகத்திற்குச் சாப்பிடப் போகிறோம் என்னும் நம்பிக்கை வந்ததாம். தனது கோபத்தை குறும்பான பாடலாக;

'கத்துகடல் சூழ்நாகை காத்தான்தன் சத்திரத்தில்,
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் – குத்தி
உலையில் இட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்'

என்ற பாடலை வெளிப்படுத்தினார். பசியிலும் கோபத்திலும் கூட சிலேடையுடன் வெளிப்பட்ட புலவரின் கவிநயம் பாராட்டும்படி உள்ளது

12. சித்தர்கள் - மகான்கள்

நாகை மாவட்டத்தில் சித்தர்களும் மகான்களும் தோன்றி தமது அருட்குணங்களால் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். சித்தர்கள் பதினெண் சித்தர்கள் என்று சிறப்பாக மக்களால் போற்றப்படுகின்றனர். இங்கு பேரும் புகழும் படைத்த பதினெட்டு சித்தர்களை இப்பட்டியலில் சேர்த்துள்ளனர். இது ஒரு சிலர் செய்த அறியாமையால் நேர்ந்த பிழையாகும். தமிழகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சித்தர்கள் 1. பழனி, 2. திருவண்ணாமலை, 3. திருவேற்காடு, 4. திருவெற்றியூர், 5. மயிலாடுதுறை, 6. நாகப்பட்டினம், 7. வேதாரணியம், 8. ராமேஸ்வரம், 9. சிதம்பரம், 10. திருவாரூர், 11. கருவூர் போன்ற திருத்தலங்களில் சித்தர்களும் மகான்களும் திருஅவதாரம் எடுத்து வந்து தமிழ்மொழிக்கும், தமிழ் சமுதாயத்திற்கும் அளப்பரிய நன்மைகளை செய்துள்ளார்கள் என்பதை நூல்கள் வழியில் அறிய முடிகிறது.

சித்தர்கள் என்பவர்கள், அவர்கள் இளம் வயது முதல் இல்வாழ்க்கையிலிருந்து விலகி நின்று அதற்குரிய பதினெட்டு வகையான படிமுறைகளை கற்று எல்லாவற்றிலும் தேர்ந்த பின்னரே சித்தர் என்ற நிலையை அடைய முடியும். கூடுவிட்டு கூடுபாயும், ரசவாதம், வான்வழி பயணம் போன்ற செயல்களிலும் வல்லவராக விளங்கி வந்துள்ளார்கள்.

மகான்கள் என்பவர்கள் அருளாளர்கள் ஆவார்கள். இவர்கள் சிறுவயது முதல் தியானம், யோகம், பக்தி போன்ற நெறி முறைகளை கடைப்பிடித்து வருபவர்கள். இதில் ஒரு சிலர் இல்லறத்தில் இருந்தபடியே உயர்நிலையை அடைந்துள்ளார்கள் மகான்கள், இறையருளால் பல அரிய செயல்களை சாதிக்கும் பெருமையுடையவர்கள் சித்தர்கள். மக்களை தேடி வருவதில்லை மகான்கள், மக்களை தேடி வந்து அருள்புரிந்துள்ளார்கள்.

நாகை மாவட்டத்தில்

1. குதம்பைச் சித்தர் – மயிலாடுதுறை
2. கோரக்கர் – மேலப்பொய்கைநல்லூர்
3. திருமூலர் – திருவாவடுதுறை

4. தன்வந்தரி – வைத்தீஸ்வரன் கோயில்
5. சீர்காழி – கதிர்காம சுவாமிகள்
6. பொறையார் – பாப்பையச் சித்தர்
7. திருவெண்காடு – பட்டினத்தார்

போன்றவர்களும்

1. சேத்திரபாலபுரம் – ஸ்ரீஉறிக்கட்டி சுவாமிகள்
2. தர்மபுரம் – ஸ்ரீகுருஞானசம்பந்தர்
3. திருவாடுதுறை – ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்
4. சீர்காழி – திருஞானசம்பந்தர்

போன்ற மகான்களும் இம்மாவட்டத்தில் தோன்றி சாதனைகள் பல நிகழ்த்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

சித்தர்கள் வாழும் ஞானபூமி

இத்திருவாவடுதுறை திருத்தலத்திற்கு நவகோடி சித்தபுரம் என்றொரு பெயரும் உண்டு. அகத்தியர், திருமூலர், போகர், திருமாளிகைத்தேவர், கருவூர்ச் சித்தர், கொங்கணச் சித்தர் முதலான மாபெரும் சித்தர்கள் இத்தலத்தில் கோமுத்திநாதரை வழிபட்டு பல அற்புதங்களைச் செய்தருளிய திருத்தலம் இது. இன்றும் சித்தர்கள் பலர் இத்தலத்தில் உலவி வருவதாக ஐதீகம்.

சிவபெருமானும் நவகோடி சித்தர்களை திருநோக்கம் செய்து, ''சித்தர்களே இத்திருக்கயிலை போல் பூலோகத்திலும் யாம் உமையோடு விரும்பித் தங்கியருளும் தலம் கோமுத்தித் தலமாகிய திருஆவடுதுறை ஆகும். இத்தலத்திற்கு வருக'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நவகோடி சித்தர்கள் திருவாவடுதுறைக்கு இறைவனின் அருளாணையின்படி வந்து அருள்மிகு ஆவடுதுறை அரனை முறைப்படித் தொழுது போற்ற, சிவபெருமானும் உமையன்னையோடு திருக்கயிலைக் காட்சியை அளித்தார்கள். அதனால் பெருமகிழ்வு எய்திய நவகோடி சித்தர்கள் இத்திருத்தலத்திலேயே போதி மரங்களின் நிழல்களில் தங்கி யோகிருந்தனர் என்று இவ்வூர் புராணமான 'துறைசைப் புராணம்' எடுத்துரைக்கிறது.

நவகோடி சித்தர்புரம் என்பதற்கேற்ப இத்தலத்தில் இன்றும் ஒன்பது சித்தர்களின் ஞானசமாதித் திருக்கோயில்கள் உள்ளன. இவர்களில் முதன்மையானவர் திருமூலர். இவர் இங்கு 3000 ஆண்டுகள் தவமிருந்து ஆண்டிற்கு ஒரு பாடலாக 3000 திருமந்திரப் பாடல்களை அருளி இத்திருக்கோயிலின் வாயு மூலையில் ஜீவசமாதியாக எழுந்தருளுகின்றார். திருமூலரின் திருமந்திரம் 10–ஆம் திருமுறையாக அறிஞர்களால் போற்றப்படுகிறது.

முதன்முதலாக அருள் சக்தி தேங்கியிருக்கும் இடத்தைக் கண்டறிந்தவர்கள் முனிவர்களாகும். பதஞ்சலி, வியாக்ரபாதர் இருவரும் தில்லைவனத்தில் நிகழும் ஆனந்த தாண்டவத்தை தரிசித்து உலக மக்கள் அனைவர்க்கும் அக்கூத்து பயன்படும்படி செய்தார். முனிவர்களால் தலங்கள் விளக்கம் பெற்றன. தலங்களால் முனிவர்கள் மெய்பொருள் பெற்றனர். சிறந்த தலங்களில் இன்றும் சித்தர்கள் தவம் செய்து கொண்டிருப்பதாக சமய நூல்கள் கூறுகின்றன.

நாகை மாவட்டத்தில் அழுகினி சித்தர் (நாகை), கோரக்கர் (பொய்கைநல்லூர்), தன்வந்திரி (வைத்தீஸ்வரன்கோவில்), திருமூலர் (திருவாவடுதுறை), குதம்பையார் (மயிலாடுதுறை), பாம்பாட்டிசித்தர் (திருக்கடையூர்), வால்மீகி (எட்டுக்குடி), பாப்பைய சித்தர் (பொறையார்) ஆகிய சித்தர்கள் சமாதியடைந்துள்ளனர். ஒவ்வொரு இடத்திலும் உள்ள கோவில்களில் அவர்களுக்கென்று தனி மண்டபம், தனி சன்னதி உள்ளன.

திருமூலர் வரலாறு

இத்திருக்கோயிலின் இரண்டு, மூன்று ஆவரணங்களின் சுற்றுச் சுவரை மையமாய் வைத்து ஏக தள விமானத்துடன் இவர் கோயில் காணப்படுகிறது. திருமூலரது திருவுருவம் யோக நிலையில் (கிழக்கு நோக்கி) அமைந்துள்ளது. திருமூலவருடைய சந்நிதி மண்டபத்தின் விமானத்தில், இவருடைய வரலாற்று நிகழ்ச்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவ்வாலயத்தின் வாயு மூலையில் அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற முறையில் மற்ற தலங்களில் காணப்படாத வகையில் தனிக் கோயிலாக அமைந்துள்ளமை சிறப்புடையது. இன்றும் இவரது சந்நிதியில் (ஐப்பசி–அசுவதி) திருநட்சத்திரத்தில் திருமந்திர பாராயணம் செய்து வருகின்றனர்.

திருநந்திதேவரிடம் உபதேசம் பெற்ற கந்தரநாதன் எனும் சிவயோகியார் திருக்கயிலையிலிருந்து புறப்பட்டுச் சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு சோழ நாட்டுக் காவிரி சூழ்ந்த திருவாவடுதுறையினை வந்தடைந்தார்.

குதம்பைச் சித்தர்

தஞ்சை மாவட்டத்தில் யாதவ குலத்தில் கோபாலன் என்பவரும் அவர் மனைவியும் சிறந்த தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அந்தக் காலத்தில் பெண்கள் காதில் குதம்பை என்ற பெயருடைய அணிகலனை அணிவது வழக்கம். அன்னை இவருக்கு அந்தக் குதம்பை என்ற பெண்கள் அணியும் அணிகலன்களை அணிவித்து, பெண்ணுக்குரிய ஆடைகளை உடுத்திப் பெண்ணாகவே பார்த்தாள்.

குழந்தை வளர்ந்து குழந்தைப் பருவத்தைத் தாண்டியது. அதனுள் ஆத்மஞானம் பெருகியது. ஆத்மப் பிரகாசம் வெளிப்பட்டது. தங்கள் குலத்தொழிலான பசுக்களைக் பாதுகாக்கும் பணியை குதம்பை செய்து வந்தார். ஊரில் உள்ளவர்களும், உறவினர்களும், ஏனைய மக்களும் அவரைக் குதம்பை என்றே அழைத்து வந்தார்கள்.

ஒரு நாள் காலை நேரத்தில் குதம்பை தியானத்தில் ஆழ்ந்திருந்தார். கடுந்தவம் புரிந்த ஒரு யோகி, ஒரு சித்த புருஷர் அவர் வீட்டிற்கு வந்தார். அவர் வந்ததும் குதம்பையின் தியானம் கலைந்தது. கண்விழித்துப் பார்த்தார். குதம்பை எழுந்து வந்து முனிவருக்கு மரியாதையைத் தந்து வணங்கினார். வந்த மாமுனி சற்றும் காலந்தாழ்த்தாது குதம்பைக்கு ஞானோபதேசம் செய்து, பிரம்ம இரகசியங்களைச் சொல்லிக் கொடுத்தார். வந்தவர் இவருக்கு குருவானார். குதம்பை சீடரானார். குருநாதர் குதம்பையின் உடலைத் தடவிக் கொடுத்து கபால ஜோதியைக் காட்டினார். பரஞ்சுடரைத் தரிசித்தவர் எவரோ அவருக்குச் சித்தர் என்று பெயர்.

கடந்த பிறவில் நீ கடுந்தவம் புரிந்து கொண்டு இருந்தாய். அந்தச் சமயத்தில் உன் தவம் ஈடேறுவதற்கு முன்பே ஒரு நாள் உன் உயிர் உன் உடலை விட்டுப் பிரிந்தது. அந்த விட்டகுறைதான் இப்பொழுது இங்கு நிகழ்ந்தது. காலப்போக்கில் எல்லா உண்மையும் உனக்குத் தெரிய வரும். சிவத்தின் திருவருள் முழுமையாக உனக்குக் கிடைக்கும் என்று ஆசி கூறி குதம்பையின் குரு, தோற்றத்திலிருந்து

மறைந்து சூக்குமமானார். குதம்பை சித்தரானார். குரு சென்ற திசையை நோக்கியே வணங்கி வந்தார். அதிதீவிர தவத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குதம்பைச் சித்தர் மயிலாடுதுறையில் அருள்மிகு அபாயாம்பிகை உடனுறை அருள்மிகு மயூரநாதர் திருக்கோயிலில் பல ஆண்டுகள் இருந்து தவம் புரிந்துள்ளார்.

கோயிலிலே இருக்கின்ற மூலவிக்ரகத்தைச் சுற்றி வரும்போது உள்ளே தட்சிணாமூர்த்தி சந்நிதி உள்ளது. அந்த சந்நிதானத்திற்கு அருகே குதம்பைச் சித்தர் சமாதி பெற்றார். அவர் சமாதியில் வெள்ளைப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். சமாதிக்கருகே குதம்பைச் சித்தரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நீண்ட தாடி, அழகான முடியைத் தலையில் அழகாகச் சுற்றி வைத்திருக்கிறார். பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

ஓம் ஸ்ரீ சீர்காழி சிற்றம்பலநாடிகள்

சிற்றம்பல நாடிகள் சீர்காழியில் வாழ்ந்தார். இவர் சீர்காழியில் கங்கை மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றார். அந்த ஞானப் பரம்பரைக்கு அவரே தலைவரானார். சிதம்பரம் தில்லை சிற்றம்பலவனாகிய நடராஜப் பெருமானின் திருவுருவத்தையே, திருவருளையே எந்நாளும் வேண்டி, விரும்பி, இரவு பகலற்ற நிலையில், மகா விழிப்பு நிலையில் நின்றிருந்த காரணத்தால் இவரது பெயர் சீர்காழி சிற்றம்பலநாடிகள் என்று அழைக்கப்பட்டது. இவரிடம் **63** சீடர்கள் இருந்தனர்.

மயிலாடுதுறைக்கு மேற்கே ரயிலடியிலிருந்து ஒரு கல் தொலைவில் சிற்றம்பலநாடிகளும் அவர் தம் திருக்கூட்டத்தினரும் தவம் புரிந்து வந்திருந்த காரணத்தால் அந்தப் பகுதி சித்தர்கள் காடு என்ற பெயர் பெற்றது.

சீகாழி சிற்றம்பலநாடிகள் ஆனந்த மூர்த்தி நடராஜப் பெருமானிடம் இரண்டறக் கலக்க எண்ணினார். அவ்வூர் அரசனை அழைத்துத் தானும் தனது மாணாக்கர்களும் சித்திரை மாதத்தில் வரும் திருவோண விண்மீனில் நிலைத்த சமாதியில் சாயுச்யமடையப் போவதாகவும் அங்கே சமாதியில் இறங்குவதற்கு 'ஆவன புரிக' என்று அரசனிடம் கட்டளையிட்டு அருளினார். **63** சமாதிகள் அழகாகக் கட்டப்பட்டு நிறைவுற்றது. சீகாழி சிற்றம்பல நாடிகள் அற்புத சித்தர். அருள் நிறைந்த தெய்வம் மூன்று வெண்பாக்களைப் பாடிக் கொண்டு,

தன்சமாதியைக் தானே சுற்றி வந்து சமாதிக்குள் இறங்கி, சிவ நிஷ்டை கூடி சிவ நிலை பெற்றமர்ந்தார். சற்குருவின் வழிப்படியே மற்ற மாணாக்கர்களும் செய்தனர். இதை செவிவுற்ற பல்லூர் மக்கள் அலைகடலெனத் திரண்டு அங்கே வந்து குவிந்தனர். அரசனும், அவனைச் சார்ந்த அமைச்சர்களும், பெருங்குடி மக்களும் அங்கு குழுமினர்.

64 பேரும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் ஜீவ சமாதி அடைந்தது சித்தர் காட்டைத் தவிர உலகின் வேறு எந்தப் பகுதியிலும் நடக்கவில்லை. இவர்கள் 64 பேரும் ஜீவ சமாதி அடைந்த பிறகு தான் அந்த இடத்திற்கு சித்தர்காடு என்ற பெயர் ஏற்பட்டது.

திருமாளிகைத் தேவர்

இவரது காலம் கி.பி. 8–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். இவர் சோழ நாட்டில் உள்ள திருவிடைமருதூர் தலத்தில் அவதரித்தவர் ஆவர். இவரது வம்சம் அரசர்களுக்கு குருவாக விளங்கியது. ஒரு நாள் தாம் பார்த்து வந்த அரசாங்க காரியத்தை விட்டுவிட்டு, பக்குவம் வந்தவராய்த் துறைசை (திருவாவடுதுறை) அடைந்து படாரசின் கீழ் தியானத்தில் அமர்ந்தார்.

போகரால் ஞான உபதேசம் செய்விக்கப் பெற்றார். சைவ சமயத்தை வளர்க்கும் பொருட்டு "அருட்டுறைமடம்" ஸ்தாபித்தார். தமது தவப்பயன் காரணமாகக் கண்டார் காமுறும் உடலழகையும் பெற்றார். இவரும் சிறந்த தவ ஞானியாகவும், புலவராகவும் விளங்கி சைவ சமயத் தொண்டாற்றி உள்ளார்.

நேசநாயனார்

இந்நாயனார் ஆந்திர மாநிலத்தில் உள்ள பல்லாரி மாவட்டத்தில் காம்பீலி வட்டம் காம்பீலி நகரத்தில் நெசவு செய்யும் குலத்தில் தோன்றியவர். இத்தொழில் செய்வார் சாலியர் என்றும் சாலியச் செட்டியார் என்றும் வழங்கப்படுகின்றனர். இறைவனிடத்தும், இறைவன் அடியார்களிடத்தும் நேசம் (அன்பு) உடையவராய் இருந்தமையால் இப்பெயர் இவருக்கு காரணப் பெயராயிற்று. மயிலாடுதுறை கூறை நாட்டில் இந்நாயனார் வசித்தார் என்றும் அங்குள்ள புனுகீசர் ஆலயத்தில் காம்பீலியிலிருந்து கொண்டு வந்த விநாயகரையும், தண்டாயுதபாணியையும் பிரதிட்டை செய்தார் என்றும் சொல்லப்படுகிறது. கூறை நாட்டில் வாழும் சாலியச் செட்டியார்கள் நேசநாயனாருக்காகவே தனிச்சந்நிதி அமைத்து ஆண்டுதோறும் பங்குனி ரோகிணியில் நேச நாயனார் குருபூஜை செய்கின்றனர்.

சோழர் காலத்திலே கட்டப்பட்ட இத்திருக்கோயில் 1883–ஆம் ஆண்டு ஜனவரியில் அருள்மிகு சாந்தநாயகி சமேத புனுகீஸ்வரருக்கு சிவநேச நாயனார் மரபுவழி வந்த கூறை நாடு, சாலிய மகா சமூகத்தினரால் திருக்குடமுழுக்கு செய்விக்கப்பட்டது என்று இவ்வாலயத்திலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

மயிலாடுதுறை அக்காலத்தில் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு பகுதியில் முதல் பகுதி கூறைநாடு என்ற பகுதியாகும். கூறை நாடு என்றால் திருமணத்திற்காக மணப்பெண்ணுக்கு கூறை சேலை நெய்து கொடுக்கின்ற சாலியர்கள் நிறைந்து இருந்ததால் இந்தப்பகுதி கூறை நாடு என்று அழைக்கப் பட்டது. நேசநாயனார் வந்த காலத்தில் கூறைநாட்டுப் பகுதி தனியூர் கிராமம் என்று அழைக்கப்பட்டது. மயிலாடுதுறை இரயில் நிலையத்திலிருந்து இப்பொழுதுள்ள காவல் நிலையம் வரை (சுந்தரம் டாக்கீஸ் வரை) எல்லையாகக் கொண்டிருந்தது. இப்பொழுது அது கூறை நாடு என்று வழங்கப்படுகிறது. தனியூர் கிராமத்திற்கு பிறகு பட்டமங்கலம் உள்வட்டம் இருந்தது.

நேசநாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும், சேக்கிழார் பெருமானாலும் பாராட்டப்பட்டவர். திருத்தொண்டர் தொகை என்ற நூலில் சுந்தரர் நேசநாயனாரைப் புகழ்ந்து பாடியுள்ளார். திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பாவிலும் நேசநாயனாரைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. நேசநாயனார் எப்பொழுதும் சிவாலயங்களில் உழவாரப் பணிசெய்து கொண்டே இருப்பார். நல்லாடை என்ற கிராமத்தில் உள்ள சிவன் கோயிலுக்கு சுவாமிகள் தொண்டு செய்து இருக்கிறார்.

மயிலாடுதுறையில் உள்ள புனுகீஸ்வரர் திருக்கோயிலில் சுவாமிகளுக்கு ஒரு சந்நிதானம் உள்ளது. அன்றைய ஆலய ஆணையராக இருந்த திரு. உத்தண்டராமப் பிள்ளை என்பவர் நேசநாயனாருக்கு நடராஜப் பெருமானுக்கு நேராக ஒரு சிலையைப் பிரதிஷ்டை செய்துள்ளார். இந்திரன் புனுகுபூனை வடிவம் கொண்டு இவ்வாலயத்தில் சிவபெருமானைப் பூஜித்த காரணத்தால் இந்த ஈஸ்வரனுக்குப் புனுகீஸ்வரர் என்ற திருநாமம் வந்தது.

தன் வாழ்விலே இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற உயர் தவத்தையே ஐந்தெழுத்துக்குள் அடக்கி, ஐந்தெழுத்தால் சிவபெருமானை தரிசித்து, ஆனந்த அமுதபால் பருகிப் பேரானந்தப் பேரின்பத்தில் சிவபெருமானோடு கலந்து இருக்கிறார்.

தன்வந்திரி பகவான்

தன்வந்திரி பகவான் என்ற சொல், அந்தச் சொல்லுக்குள் அடங்கியிருக்கும் பொருள், கடவுள் சக்தி பொருந்தியதாகும். விசித்திரங்கள் நிறைந்த சித்திரமாகும். உடல் உபாதைகளை நீக்குவதற்கும், மனித குலத்தை செம்மைப்படுத்துவதற்கும், அவனவன் வினைகளுக்கு ஏற்றவாறு மனிதனுக்கு வருகின்ற தர்மம் நிறைந்த நோய்களை குணப்படுத்துவதற்கும் ஆயுர்வேதம் என்ற புதிய மருத்துவத்தை மக்கள் குலத்திற்கு வழங்கினார்.

புராணத்தில் சூரிய பகவானின் பதினாறு சீடர்களில் ஒருவராக தன்வந்திரி பகவான் குறிப்பிடப்பட்டுள்ளார். பதிணென் சித்தர்களில் ஒருவராக தன்வந்திரி பகவான் வருகிறார். சாம்ராட் விக்கிரமாதித்தன் சபையில் நவரத்தினங்களில் ஒருவராக தன்வந்திரி விளங்கியிருக்கிறார். 'தன்வந்திரி வாகடம்' என்ற மருத்துவ நூலை இவர்தான் படைத்தார் என்று வரலாற்று வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர். இராமாயண காலத்திலும் ஒரு தன்வந்திரி வருகிறார். சந்திரகுப்தர் காலத்திலும் ஒரு தன்வந்திரி இருந்துள்ளதாக தமிழ்நாடு அரசு 9–ஆம் வகுப்பு சமூக அறிவியல் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. காசிராஜா திவோதாசனாகவும் ஒரு தன்வந்திரி வருகிறார்.

தன்வந்திரி பகவான் நாகை மாவட்டத்தில் வைத்தீஸ்வரன் கோயிலுக்குள் சமாதி கொண்டுள்ளார். அவருடைய சிலை அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மேலும் புதுப்பட்டினத்திலுள்ள சற்குரு ஞான சித்தர் ஆலயத்திலும் தன்வந்திரி பகவான் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் தன்வந்திரி பகவான் சிலை உள்ளது. இது பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று இங்குள்ள கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆயுர்வேத பக்குவம் காலம் காலமாக, வாழ்வதற்காக தன்வந்திரி பகவானால் வெளிப்படுத்தப்பட்டதாகும். பிரம்மதேவன் ஆயுர்வேதத்தை முதலில் சூரிய பகவானுக்கு உபதேசிக்கிறார். பிறகு பதினாறு பேருக்கு இந்த ஆயுர்வேதத்தைக் கற்றுக் கொடுக்கிறார். அந்த பதினாறு சீடர்களில் நமது தன்வந்திரி பகவான் முதலிடம் வகிக்கிறார்.

மகான் ஸ்ரீ உறிகட்டி சுவாமிகள்

மயிலாடுதுறை அருகே குத்தாலம் என்ற நகரின் பக்கத்தில் சேத்திரபாலபுரம் என்ற கிராமத்தில் உறிகட்டி சுவாமிகள் என்ற ஒரு மகான் இருந்தார். அந்த ஊர் கிராமத்துத் தலைவர் காவியாற்றங்கரையில் தன்னை தூய்மைப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த பொழுது, பேரொளிமிக்க மெய்ஞ்ஞானி ஒருவர் அந்த நாணல் காட்டிலே அழகாக அமர்ந்து ஆனந்த தவம் புரிந்து, மண்ணின் இருளகற்றி மாதேவருக்குத் தேவராய் எங்கும் உள்ளானைத் தாம் என்றெண்ணி தவம் புரிந்து வந்தார். கிராமத்தலைவர் அந்த மகானை சகல மரியாதையுடன் பணிந்து, வணங்கி தெய்வீகப் பேருணர்வோடு சேத்திரபாலபுரத்திற்கு அழைத்து வந்தார். மாரியம்மன் கோயிலிலே சுவாமிகள் அமர்ந்து தன் தவத்தைத் தொடர்ந்தார்.

'பகவதி பிச்சாந்தேகி' என்று ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பிச்சை பெற்று தன் ஆத்மாவிற்கு ஊதியம் கொடுத்து வந்தார். . சுவாமிகள் தன் பிச்சையை எடுத்துக் கொண்டு, கோயிலுக்கு வந்ததும் அதனை சாப்பிடுவார். மீதி உணவை உறியில் வைத்துக்கட்டித் தொங்க வைத்துவிடுவார். அவர் மீண்டும் என்று அந்தப் பானையை உறியில் இருந்து எடுத்துப் பார்க்கிறாரோ அது அப்போதைக்குச் சமைத்த உணவு போன்று சுடச்சுட இருக்கும். அந்த ஞான உணவை தான் மட்டும் உண்ணாமல் தன்னைப் பார்க்க வருபவர்களுக்கும் பிரசாதமாக வழங்குவார். மகான் பிச்சை எடுத்து வந்த உணவை உறியில் கட்டி வைத்ததினால் உறிகட்டி சுவாமிகள் என்று மக்களால் அழைக்கப்படுகிறார்.

கார்த்திகை தீப தினத்திலிருந்து மூன்றாம் நாள் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சுவாமிகள் மண்ணுலகை விட்டு புறப்பட்டுவிட்டார். சுவாமிகள் சேத்திரபாலபுரத்தில் 20 ஆண்டுகள் மக்களுக்கு அருள்பாலித்து வந்தார். சுவாமிகளின் திருமேனி பல்லாக்கு ஊர்வலம் முடிந்ததும் சமாதி அருகே கொண்டு வந்தார்கள். இது மாலையில் நடைபெற்றது. அன்று முதல் அணையா விளக்குகள் ஜீவசமாதியில் எரியத் தொடங்கின. இவ்வூரில் அம்மன் கோயில் அருகே ஊர்மக்கள் இந்த மகானுக்கும் ஒரு கோயில் எடுப்பித்து வழிபட்டு வருகின்றனர்.

சீர்காழி கதிர்காம சுவாமிகள்

சீர்காழி நகரத்திலிருந்து 1½ கி.மீ. தெற்கே உப்பணாற்றங் கரையின் வடபுறத்தில் அமைந்துள்ள இடத்தை கதிர்காம சுவாமிகள்

தனது பூத உடலை அடக்கி புனிதத் தலமாக ஆக்கியுள்ளார். அவரது பூர்வீக வரலாறு திட்டவட்டமாக தெரியாவிட்டாலும் நேபாள மந்திரியின் குமாரர் என்றும் 7–ஆவது வயதிலேயே வீட்டை விட்டு கிளம்பி காஷ்மீர், பர்மா, இமயமலை போன்ற ஊர்களில் பல வருடங்கள் கடுந்தவம் புரிந்துவிட்டு இறுதியாக இலங்கை கதிர்காமம் என்ற இடத்தில் உள்ள மலையில் தவமிருந்து ஞானம் பெற்று இந்தியா திரும்பினார். 1902–இல் சீர்காழி தென்பாதியில் ஜீவ சிந்தாமணி என்று கூறும் சிறு கீற்றுக்கொட்டகைப் போட்டுத் தங்கினார்.

நாயன்மார்களையும் சித்தர்களைப் பற்றியும் கூறிவருவார். தென்பாதியில் ஓர் பெரிய முருகன் கோயிலை 1925–இல் கட்டியுள்ளார். இரண்டாவது கும்பாபிஷேகம் 1973–இல் தான் நடைபெற்றது. இந்தக் கோவிலுக்கு பெருநிலக் கிழார்களை அறங்காவலர்களாக நியமித்தார். இன்றுவரை சிறப்பான நிர்வாகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சுவாமி அருள்வாக்கில் – தான் சம்பாதித்த சொத்து தர்ம சொத்து. தந்தை சம்பாதித்தது தர்ம சொத்து. மனைவியின் சொத்து அதர்மத்திலும் அதர்மம் என்பதேயாகும். வரதட்சணை கொடுமைகளைச் சொல்லி பல இளைஞர்களை மாற்றியுள்ளார். மார்கழி மாதம் குருபூஜை பிரசித்தி பெற்றது. இவர் அடிக்கடி ஜெய் சீத்தாராம் என்று சொல்வதுண்டு. நாடி பிடித்து பார்த்து உடல் நோயைக் கண்டுபிடிப்பதில் வல்லவராக திகழ்ந்தார். ஸத்குரு அவர்கள் 1962–ஆம் வருடம் நவம்பரில் சமாதி ஆனார். சமாதி நேரத்தையும் முன்பே குறிப்பால் உணர்த்தியிருந்தார்.

திருஞானசம்பந்தர் அருள் வரலாறு

“வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவோம்”

என்பது சம்பந்தரின் புகழ்பாடும் பாடல்.

திருஅவதாரம்

சோழவள நாட்டிலே, நாகை மாவட்டம், சீர்காழிப் பதியிலே, அந்தணர் மரபிலே, கவுணியர் குலத்திலே சிவபாத இருதயரும் பகவதி அம்மையாரும் வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத் துறை விளங்க இல்லறம் நடத்தி வந்தனர். அவ்விருவரது பெருந்தவத்தால் கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் அவ்விருவருக்கும் மகவாய்த் தோன்றினார். திருஞானசம்பந்தர் அவதரித்த நாளோ சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரைத் திருநாள்.

ஞானப்பால் உண்டமை

ஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்றாண்டு நிறையப் பெற்றார். நீராடச் சென்ற தந்தையாருடன் தாமும் திருக்குளம் சார்ந்தார். திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே அப்பா என்று அழைத்து அழுதருளினார்.

பிரம தீர்த்தத்தில் நீராடிய சிவபாத இருதயருக்கு ஞானசம்பந்தர் தமக்குப் பால் கொடுத்த பரம்பொருளை அடையாளங்களுடன் காட்டித் "தோடுடைய செவியன்" என்ற திருப்பதிகம் பாடினார்.

பொற்றாளம் பெறல்

சில நாள் கழித்துத் திருக்கோலக்காவிற்கு எழுந்தருளினார். கையினால் தாளம் இட்டு "மடையில் நாளை" என்ற திருப்பதிகம் பாடினார். பாட்டிற்கு உருகும். பரமன் கை நோவுமென்று ஐந்தெழுத்து வரையப் பெற்ற பொற்றாளம் அளித்தருளினார். மேலும் இவர் முத்துச்சிவிகை, முத்துக்குடை சின்னம், முத்துப்பந்தல் ஆகியவற்றையும் பெற்றார். இவர் பெருமை கேட்ட மக்கள் தங்கள் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டினர். முதலில் தமது தாய் பிறந்த ஊராகிய திருநனிப்பள்ளி சார்ந்தார். பிள்ளையார் பெருமையைக் கேள்வியுற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர், தமது மனைவியோடு சீர்காழிக்கு வந்து தரிசித்தார். அவரது பாடல்களுக்குத் தாம் யாழ் வாசித்தார். அதுமுதல் பிள்ளையாருடனிருந்து பிள்ளையார் பாடல்களையெல்லாம் யாழில் அமைத்து வாசித்து வரலானார்.

படிக்காசு பெறல்

பிறகு திருசெங்காட்டங்குடி, திருப்புகலூர் தரிசித்தார். திருநாவுக்கரசரைக் கண்டு அவர் வாயிலாக ஆரூரில் நிகழ்ந்த

ஆதிரைச் சிறப்பைக் கேட்டு ஆரூரானைத் தொழுதார். பிறகு அப்பரும், சம்பந்தரும் திருவிழிமிழலை சேர்ந்தனர். அவ்வூர் பெருமான் தோணியப்பரைப் போல் காட்சி தந்தனர். அதுகண்ட இருவரும் அவ்வூரிலேயே சிலநாள் தங்கினர். அப்பொழுது நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. பரமன் அளித்த படிக்காசு கொண்டு இருவரும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்குப் பறைசாற்றிச் சோறளித்தனர்.

பிற அற்புதங்கள்

பிறகு திருவாவடுதுறை சார்ந்தார். தந்தையார் வேள்வி செய்தற்குப் பொருள் வேண்டினார். ஆவடுதுறை அரனை "இடரினும் தளரினும்" என்ற பதிகத்தால் போற்றினார். பொற்கிழி பெற்றுச் சிவபாத இருதயரிடம் 'தீதுநீங்க நள்வேள்வி செய்க' எனக் கொடுத்தார். திருநீலகண்ட யாழ்பாணரின் தாய் பிறந்த ஊராகிய தருமபுரம் சென்று தரிசித்தார். "மாதர்மடப் பிடியும்" என்ற பதிகத்தால் பதிக இசை யாழிலடங்காமையை விளக்கியருளினார். திருமருகல் சேர்ந்தார். கணவனாக வர இருந்த வணிகன் விஷந்தீண்டி இறந்ததால் கதறி அழுத நங்கையின் துயரைத் துடைக்க எண்ணிச் "சடையாய் எனுமால்" என்ற திருப்பதிகம் பாடி வணிகனை உயிர்பெற்று எழச் செய்தார்.

பாண்டிநாட்டில் சைவம்

பாண்டி நாட்டில் நின்ற சீர் நெடுமாற பாண்டியன் சமணசமயம் சார்ந்து இருந்தமையை மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்ற இருவர் வாயிலாகத் தெரிந்து மதுரைக்குப் புறப்பட்டார். நாளும் கோளும் நலமில்லாதிருந்தும் உமையொருபாகன் உள்ளத்திருப்பதால் "அவை நல்ல நல்ல" என கோளறு பதிகம் பாடி பின்பு புறப்பட்டார். பாண்டியன் வெப்பு நோய் அகற்றினார். அனல் வாதத்தாலும், புனல் வாதத்தாலும் அமணர்களை வென்றார்.

பாண்டி மன்னனையும், பாண்டி நாட்டு மக்களையும் சைவம் தழுவச் செய்தார். பாண்டி நாட்டில் உள்ள தலங்களைத் தரிசித்தார். பிறகு பல தலங்களைத் தரிசித்துத் திருப்பூந்துருத்தி அடைந்தார். அப்பர் சுவாமிகள் இவரது சிவிகையைத் தாங்கியமையறிந்து உடனே கீழிறங்கி இருவரும் அளவளாவி இருந்தனர். திருஒத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி காய்க்கச் செய்தார்.

எலும்பைப் பெண்ணுருவாக்கல்

மயிலாப்பூர் சிவநேசர் மகள் பூம்பாவை பாம்பு தீண்டி இறக்க, அவளது எலும்பைக் குடத்தில் சேமித்து வைத்தார் சிவநேசர். அதனை

அறிந்த ஞானசம்பந்தர் திருக்கோயில் முன் அக்குடத்தைக் கொணர்வித்து "மட்டிட்ட புன்னை" என்ற பதிகம்பாடி எலும்பைப் பெண்ணாக்கி உயிர்ப்பித்தார்.

சோதியிற் கலத்தல்

பெற்றோர் விருப்பத்திற்கிணங்கவும், வேத நெறியில் நின்று நம்பியாண்டார் நம்பிகளின் திருமகளை மணமகளாக ஏற்று இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும் அந்தமில்சிவன் தாள் சேர்வன்" என்ற கருத்தமையக் "நல்லூர்ப் பெருமணம்" என்று பதிகம் பாடினார். பெருமானது அசரீரியின்படி மனைவியோடும் உடன் வந்தாரோடும் வைகாசி மூல நன்னாளில் அங்கு தோன்றிய சோதியில் மூழ்கி சிவன் திருவடியில் கலந்தார். இவர் அருளிய திருப்பதிகங்கள் 383, இவை முதல் மூன்று தேவாரத் திருமுறைகளாகத் தமிழ் மறைகளாகத் திகழ்கின்றன.

திருஞானசம்பந்தர் அவதரித்த இல்லம்

தமிழகம் முழுவதும் உள்ள பல தலங்களை தரிசித்து தேவாரப் பதியங்களைப் பாடி பற்பல அற்புதங்களை நிகழ்த்தியவர் திருஞானசம்பந்தர். இவர் சிவபாத ஹிருதயர்–பகவதி அம்மையார் தம்பதிகளுக்கு சீர்காழியில் மகனாகப் பிறந்தார். அவர் பிறந்த இல்லம் ஸ்ரீஞானசம்பந்தர் அவதார இல்லம் என்ற பெயரில் இன்றும் சீர்காழியில் உள்ளது. இதனைக் காஞ்சி சங்கரமடம் பாதுகாத்து வருவதோடு, சங்கரமடத்தின் கிளை அலுவலகமாகவும் செயல்பட்டு வருகிறது. தற்போது சங்கராச்சாரியார்கள் இந்த அவதார இல்லத்தை புதுப்பித்து ஆகம பாடசாலையும் தேவார வகுப்புகளும் நடைபெற ஏற்பாடு செய்துள்ளனர். 15 லட்சம் ரூபாய் செலவில் இந்த இல்லம் திருஞான சம்பந்தர் வாழ்க்கை சம்பவங்களை சித்தரிக்கும் சிற்பங்களோடு அழகுற அமைக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீன நூல் நிலையம் இங்கு செயல்படுவதோடு திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் பொறிக்கப்பட்ட செப்பு பட்டயங்கள் கொண்ட பெட்டகமும் வைக்கப்பட்டு தினசரி பூஜைகளும் நடந்து வருகிறது. இங்கு பயிலும் ஆகம பாடசாலையில் மாணவர்களுக்கு உணவும் உறைவிடமும் வழங்கப்பட்டு வருகிறது.

13. இயல் இசை நாடகம் - வளர்ச்சி

முத்தமிழ் வளர்ச்சி நிலையில் நாகை மாவட்டத்தின் பங்கு பெருமைபடத்தக்க வகையில் அமைந்துள்ளது. நாகை மாவட்டத்தில்

1. முன்சீப் மாயூரம் வேதநாயகம் – மயிலாடுதுறை
2. மறைமலை அடிகளார் (தனித் தமிழ் அறிஞர்)
3. நாவலர் கோபால கிருஷ்ண பாரதியார்
4. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
5. முத்துத்தாண்டவர்
6. மாரிமுத்தாப் பிள்ளை
7. அருணாசல கவிராயர்
8. சீர்காழி கோவிந்தராஜன் – இசை மேதை
9. தே. ராஜேந்திரன், மயிலாடுதுறை – திரைப்பட இயக்குநர்
10. காளி ரெத்தினம் – நாடகக் கலைஞர் } நாதஸ்வரக்
11. திருவாடுதுறை – ராஜரெத்தினம் } கலைஞர்கள்
12. வழுவூர் – ராமையாப்பிள்ளை
13. தேரழுந்தூர் திரு . சீனிவாசன் சகோதரர்கள்
14. டாக்டர் பத்மா சுப்பிரமணியம் – நாட்டிய பேரொளி
15. டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி – செம்மனார் கோயில்

போன்ற பல்துறை வித்தகர்கள் இம்மாவட்டத்தில் பிறந்து முத்தமிழையும் போற்றி வளர்த்து வந்தனர்.

கல்வி வளர்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்டம் சிறந்த நிலை வகித்து வந்துள்ளது. மறைமலையடிகள், திரு.வி.க., மாயூரம் வேதநாயகம் பிள்ளை, புத்தமங்கலம் கல்கி (கிருஷ்ணமூர்த்தி) வரலாற்று நாவல் ஆசிரியர், வடுவூர் துரைசாமி ஐயங்கார், தி. ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, குடந்தை சுந்தரேசனார், ஆகியோர் இம்மண்ணின் தன்னிகரற்ற இலக்கிய மைந்தர்களாவர்.

மறைமலையடிகள் (கி.பி.1876 – 1050) திருவள்ளுவர் ஆண்டினைக் கண்டு உலகிற்கு வழங்கினார். புலவர் சீ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை (கி.பி.1815 – 1876) நாகை புராணம் பாடினார். நாவலர் குலாம் காதிரு புலவர் (கி.பி.1833 – 1908) 24 நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் "பொருத்த இலக்கணம்", "நாகூர் ஆண்டவர் வரலாறு" ஆகியவை குறிப்பிடத்தக்கவை. திரு. இராசகோபாலன் பிள்ளை " எமவாதம்" என்ற நூலை எழுதினார்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826–1889)

மாயூரம் வேதநாயகம்பிள்ளை அருந்தமிழ்ப் புலவராகவும் அறங்கூறும் நீதிசபைத் தலைவராகவும் விளங்கியவர். எனவே முன்சீப் வேதநாயகம்பிள்ளை என்று மக்களால் அழைக்கப்பட்டார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சிறந்த நண்பர். வேதநாயகம்பிள்ளை எளிய இனிய செய்யுட்களால் 16 நூற்களை இயற்றியுள்ளார். தமிழில் வெளிவந்த முதல் நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்பது இவர் எழுதியதாகும். வேதநாயகம் பிள்ளையின் சர்வசமய சமரசக் கீர்த்தனைகளில் சில பல்வேறு இசையரங்குகளில் பாடப்பெற்று சிறப்படைந்துள்ளன. இவரது திருஉருவச்சிலை மயிலாடுதுறை செயின்ட்பால்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் எதிரில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறையில் இன்றைக்கும் பல்வேறு இசை கலைஞர்கள் புகழ்பெற்று விளங்கி வருகிறார்கள். திரைப்பட இசையமைப்பாளரும் இயக்குநருமான டி. ராஜேந்தர் மயிலாடு துறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்கள்

மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள திருவாவடுதுறையில் பிறந்தவர் திருவாவடுதுறை நாகரெத்தினம் பிள்ளை. வழுவூரில் பிறந்தவர் வழுவூர் ராமையாப்பிள்ளை. தமது திறமையால் தமிழகம் மட்டுமின்றி உலகம் வியக்கும் வண்ணம் நாதஸ்வர கலைஞர் களாகவும் இசைமேதைகளாகவும் தனிச்சிறப்புடன் விளங்கினர்.

முத்துத்தாண்டவர்

முத்தமிழ் வளர்க்கும் சோழவளநாட்டில் சிறந்த சிவத்தலங்கள் பல உள்ளன. அதில் சீர்காழி ஒரு தலைசிறந்த திருத்தலம். இந்த சிவாலயத்தில் வீற்றிருக்கும் திருநிலைநாயகி உடனுறையும் பிரமபுரநாதருக்கு இசைக்கருவிகள் வாசிக்கும் இசை வேளாளர்

குலத்தில் கி.பி.1560–இல் பிறந்தவர்தான் தாண்டவர். இசைக் கலையை இளமையில் கற்று நல்ல தேர்ச்சியுடையவரானார். ஆலயத்தில் மிருதங்கம் வாசித்து வந்தார்.

திடீரென்று தொழுநோய் அல்லது தீராத வயிற்று நோய் வந்து தாண்டவரை உருக்கிவிட்டது. இசைகருவிகள் வாசிக்க முடியா விட்டாலும் நாள்தோறும் கோயில் வழிபாடு செய்வதில் தவறாமல் இருந்தார். இன்னிசையில் சிறந்து விளங்கிய சிவபாக்கியம் என்ற பெண் பாடும் சிவநாம திருபாடல்களை கேட்கச் சென்றதை உறவினர்கள் தடுத்தும் கேட்காததால் அவரை ஒதுக்கிவிட்டனர். அதனால் உணவிற்கே துன்பப்பட்டு கோயிலில் கிடைக்கும் உணவு மட்டுமே ஆகாரமானது.

கொள்பசி தாங்க முடியாத மாலை நேரத்தில் கோயிலில் தேர் வைக்கக் கூடிய அறையில் மயங்கி படுத்துவிட்டார். கோயிலும் பூட்டப்பட்டு விட்டது. நள்ளிரவில் திடுக்கிட்டு எழுந்து பார்த்தால் பசி மிகவும் வாட்டியதாம். அதனால் அம்மையப்பரை வேண்டிக் கொண்டபொழுது, கோயில் குருக்களின் பத்து வயது சிறுமி தாண்டவனுக்கு உணவு கொடுத்ததாகவும், சிதம்பரம் தில்லை நடராசர் ஆலயத்திற்கு சென்று அங்கு கூடும் அன்பர்கள் கூட்டத்திலிருந்து எழும் சொல்லை முதல் அடியாகக் கொண்டு பாடுக என்று கூறி மறைந்துவிட்டதாம்.

வைகறை நேரத்தில் கோயிற் பணியாளர்கள் வந்து கோயிலை திறந்து அங்கே இருந்த தாண்டவன் முகம் முத்து போன்று மிக பொலிவோடு இருந்ததால் கோயில் பணியாளர்களும் ஊர்பெருமக்களும் இவரிடம் மரியாதைக் கொண்டு முத்துத்தாண்டவர் என்று அழைக்கத் தொடங்கினர். தில்லைக்குச் சென்று நடராசர் முன் நின்று திருநாமம் ஓதியவாறு நின்றார். அப்பொழுது அன்பர்களிடம் 'பூலோக கைலாய கிரி சிதம்பரம்' என்னும் தொடர் மொழி தோன்றியது. அதை முதலடியாகக் கொண்டு முதல் கீர்த்தனையாக பூலோக கைலாயகிரி சிதம்பரமலாற் புவனத்தில் வேறுமுண்டோ'' என்றும் இனிய கீர்த்தனையை பாவப்பிரியா ராகத்திலும் மிசிரசம்பை தாளத்திலும் பாடி முடித்தார். உடனே ஐந்து பொற்காசுகள் கிடைத்தன. அன்றிலிருந்து தினந்தோறும் அன்பர்கள் கூட்டத்தில் எழும் முதல் சொல்லை அடியாகக் கொண்டு கீர்த்தனைகளைப் பாடி பரிசு பெறுவது வழக்கமாகியது. வறுமை நீங்கியது.

ஒரு நாள் முத்துத்தாண்டவர் சீர்காழியிலிருந்து சிதம்பரத்தை நோக்கிச் சென்றபொழுது பாம்பு கடித்து விட்டது. ஆனால் மனபயங் கொள்ளாமல், "அருமருந்தொரு தனி மருந்திறு அம்பலத்தே கண்டேன்" என்று பாடிக்கொண்டே சென்றபொழுது விடம் நீங்கி விட்டதாம். தில்லை நடராசர் ஒருவனையே செந்தமிழ் கீர்த்தனைகளாற் பாடிப் பக்தி இன்னிசைத் தமிழ்க் கடலாடித் திளைத்த முத்துத்தாண்டவர் கி.பி. 1640–ஆம் ஆண்டுவாக்கில் ஆவணிப் பூச நன்னாளில் இறுதியாக கீர்த்தனைப் பாடி பேரொளியில் இரண்டறக் கலந்து மறைந்தார். இவர் நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாடினார் என்றாலும் அறுபது கீர்த்தனைகளும், இருப்பத்தைந்து பதங்களுமே நமக்களித்தார். தமிழ் தெலுங்கு வடமொழிகளில் கீர்த்தனைகள் பாடிய ஆசிரியர் யாவரினும் காலத்தால் முந்தியவர். இவர் பாடிய 60 கீர்த்தனைகள், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழிசை ஆறாம் தொகுதியாக வெளிவந்துள்ளது.

மாரிமுத்தா பிள்ளை

சீர்காழி அருகே உள்ள சிதம்பரத்திற்கு கிழக்கே தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் 1712–இல் பிறந்து திண்ணைப் பள்ளியில் பயின்று 12 வயதில் கவிபாடும் திறனடைந்து பல ஊர்களில் பற்பல பாடல்களைப் பாடி புகழ் பெற்றுள்ளார். திருமணமாகி மூன்று ஆண் குழந்தைகள் இருந்தன. கீர்த்தனைகள் பாடி வரும் பொழுது சமுதாயப் புலவர்களுடன் இராம நாடகக் கீர்த்தனைகள் பாடிப் புகழ் பெற்றார். இசையுலகில் வழங்கும் கீர்த்தனைப் பாடல்களில் இவருடைய பாடல்கள் பொருட்செறிவு மிக்கவை. இவர் பாடிய 25 கீர்த்தனைகள் மட்டுமே இன்று கிடைத்துள்ளன.

அருணாசலக் கவிராயர்

சீர்காழியை அடுத்துள்ள தரங்கம்பாடிக்கு முன்பாக உள்ள தில்லையாடி என்ற சிற்றூரில் பிறந்தவர் ஆவார். இவரது காலம் 1711 முதல் 1779 வரை ஆகும். பாடல்களை இசையுடன் பாடி மகிழ்விக்கும் திறன் சிறுவயதிலேயே இருந்தது. இவருக்கு ஆசிரியராகத் திகழ்ந்தவர் அம்பலவாணக் கவிராயர் என்னும் பண்டார சன்னிதிகளே. சிதம்பர தம்பிரான் தம்மால் இயற்றி முடிவு பெறாமல் வைத்திருந்த சீர்காழி பள்ளு பிரபந்தத்தை முடித்துவிட்டு, புதுவைச் செல்லச் சொல்லியிருந்தார். இவர் பாடிய பள்ளு பிரபந்தத்தைக் கண்டு வியந்த தம்பிரானின் அழைப்பை ஏற்று சீர்காழியிலேயே நிரந்தரமாக

தங்கிவிட்டார். அன்றிலிருந்து அவர் சீர்காழி அருணாசல கவிராயர் என அழைக்கப்பட்டார். தம்பிரானின் வேண்டுகோளின்படி பல தனிபாடல்கள், பிரபந்தங்கள், சீர்காழி தலபுராணம், சீர்காழி கோவை ஆகிய நூல்களை இயற்றியிருந்தார்.

இவர் இயற்றிய இராம நாடக கீர்த்தனை பின்னர் கிராம நாடகம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்த நாடகம் எளிய, இனிய தமிழ் சொற்களாய் இருந்ததால் சென்னை உட்பட பல ஊர்களில் மிகுந்த வரவேற்புப் பெற்றது. அதன்பிறகு இந்நூலை கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய திருவரங்கத்திலேயே இவரது ராமநாடகம் அரங்கேற அரங்கநாதரை 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா' என்னும் கீர்த்தனைப் பாடி திருமாலின் ராமாவதாரம், கிருஷ்ணவதாரம் காலத்தில் நிகழ்ந்த செயல்களை இதில் பொருத்தி, பாடிய நூல் அரங்கேற அனுமதி கிடைத்தது. இவருக்கு இராமாயண கவிஞர் என்ற பட்டமும் கிடைத்தது. இவர் 1779–ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இயற்கை எய்தினார்.

இம்மும்மூர்த்திகள்தான் கீர்த்தனைகளுக்கு முன்னோடிகள் என்றும், அவர்களுக்கு பின்னர் வந்தவரான தெலுங்கு கீர்த்தனைகள் பாடிய தியாகராய சுவாமிகள் பாடலில் முழுக்க, முழுக்க தமிழ் கீர்த்தனையின் தாக்கம் உள்ளது என்று தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதர் கீர்த்தனை ஆராய்ச்சி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சீர்காழியை சுற்றியுள்ள ஊர்களில் பிறந்து வளர்ந்த மும்மூர்த்திகளால் கீர்த்தனைகள் தோன்றியது என்பது தமிழிசை உலகிற்கே பெருமையாகும். தமிழ் இசைக் கவிஞர்களான சீர்காழி மூவர் என்றழைக்கப்படும் இவர்கட்கு புதிய பேருந்து நிலையத்தின் முன்பாக தமிழக அரசு மணிமண்டபம் கட்டித் தந்து சிறப்பித்துள்ளது.

சீர்காழி கோவிந்தராஜன்

1932–ஆம் ஆண்டு சிவசிதம்பரம் செட்டியார் அவையாம்பாள் அம்மாள் என்ற தம்பதியருக்கு மூன்றாவது மகனாக பிறந்தவர்தான் கலைமாமணி கோவிந்தராஜன் என்பவர். தற்பொழுது சீர்காழி அண்ணா தெருவில் அவரது பிறந்தவீடு உள்ளது. தனது 18–ஆவது வயதில் கோயம்புத்தூரில் இருந்த மாடர்ன் தியேட்டரில் பின்னணி பாடகராக சேர்ந்தார். இவர் அப்படி சேர்வதற்கு இவரது மாமா எஸ்.பி. கிருஷ்ணன்தான் முயற்சி செய்து அனுப்பி வைத்துள்ளார். அங்கே

'கோமதியின் காதலன்' என்ற படத்தில் முதன் முதலாகப் பாடினார். பிறகு பி.எஸ்.செட்டியார் அவர்களின் வழிகாட்டலால் அடையாறு சங்கீதக் கல்லூரியில் முறையான சங்கீதத்தை கற்றுக்கொண்டார். இவர் தனது குருவாக கல்லூரி முதல்வர் திரும்பாம்புரம் சாமினாத பிள்ளை புல்லாங்குழல் வித்வானை ஏற்றுக் கொண்டார். இவரது பாடல் அரங்கேறியபொழுது மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பரிசாகத் தம்புராவை கொடுத்து, இசைமணி என்ற பட்டத்தையும் கொடுத்தார். நாளுக்கு நாள் இவரது புகழ் சினிமாவிலும், பக்தி உலகிலும் பரவி வந்தாலும் சீர்காழி வரும்பொழுது இங்கு ஓர் இசைக் கல்லூரியைத் தொடங்குவேன் என்று அடிக்கடி கூறி வந்தார். ஆனால் அவரது ஆசை நிறைவேறாமலே 1986–ஆம் ஆண்டு மறைந்தார். சில காலத்திற்கு பிறகு தமிழக அரசு நாகை மாவட்டத்தின் சார்பாக சீர்காழியில் இசைக்கல்லூரியைத் தொடங்கி நடத்தி வருகிறது.

கோபாலகிஷ்ண பாரதியார் (1810–1881)

கோபாலகிருஷ்ண பாரதியார் நாகப்பட்டினத்தை அடுத்த நரிமணத்தில் 1810–ஆம் ஆண்டு இராமசாமி பாரதியாருக்கு மகனாகப் பிறந்தார். சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இருக்கும் 37 செய்யுட்கள் அடங்கிய நந்தனார் சரித்திரத்தை 'திருநாளைப் போவார் சரித்திரக் கீர்த்தனை' என்ற அழகிய இசை வடிவமாகச் செய்துள்ளார். சாதிகளற்ற சமுதாயத்தைக் காண வேண்டும் என்பது இவரது படைப்பின் கோட்பாடாகியது. இயற்பகை நாயனார் சரித்திரம். திருநீலகண்ட நாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம் முதலியன இவர் இயற்றியுள்ள பிற இசை நாடகங்களாகும்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815–76)

19–ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழறிஞர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. இவர் நமக்களித்துள்ள பாடல்கள் ஒன்பதினாயிரத்திற்கும் மேற்பட்டவை எனலாம். 'இத்தகைய பெருநூலும் எளிது உயர்த்திப் பயனுறுத்து இணையிலாதோன்' என்று அவருடைய மாணாக்கர் முனைவர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களால் போற்றப்பட்டவர். இவரின் தமிழ்ப்புலமை, தமிழ்த் தொண்டு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திருவாவடுதுறை ஆதீனம் 'மகாவித்துவான்' என்னும் விருது அளித்தது. இவரின் வருகை பல ஊர்களில் 'தமிழ் வருகை' என்று கருதப் பெற்று விழா எடுக்கப் பெற்றது.

14. உப்பு சத்யாகிரகம் - சுதந்திரப் போராட்டம்

சுதந்திரம் பெற்று தந்த வேதாரண்யம் உப்பும் வேதரத்தினமும்

மகாராஜாக்கள் காலத்தில் வேதாரண்யம் திருக்கோயில் கட்டும்போது திருநெல்வேலி பக்கத்திலிருந்து ஸ்தலத்தார் என்று பெயர் பெற்ற குடும்பத்தில் உதித்த அமரர் அப்பாக் குட்டி தங்கம்மாள் தம்பதியரை அழைத்து வந்தனர். இவர்களது இளைய மகனார்தான் உப்பு அறப்போர் தளபதி சர்தார் வேதரத்தினம் ஆவார். இவரது முன்னோர்தான் ஸ்ரீதாயுமானவர் சுவாமிகள் ஆவார். தமிழ் தவிர வடமொழி, கிரந்தம், இசை ஆகியவற்றில் புலமை இந்த குடும்பத்தாருக்கு உண்டு.

சிவாச்சாரியர்கள் வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் திருவிழா நிகழ்ச்சிகள் தயாரானதும் ஸ்தலத்தாரை அழைத்து பரிவட்டம் கட்டி, பூர்ண பலம் என்ற முழுத் தேங்காயை அளித்து முதல் மரியாதை தந்து பட்டோலையை வாசித்துக் காண்பிப்பார்கள், சர்தார் வேதரத்தினத்தின் தகப்பனார் திருக்கோயில் மேலதிகாரியாக பணியாற்றியவர். சர்தார் வேதரத்தினம் பிறக்க இருந்த சமயம் அதிர்வேட்டு முழங்காமலேயே பெரிய தேரோட்டம் நிகழ்ந்ததாம். பிறக்கும்போதே பூமியில் அமைதிக்கு வித்தூன்றிக் கொண்டு பிறந்த குழந்தை வேதரத்தினம் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்கிறார்கள்.

ஆரோக்கியமானவர்களுக்கு தினம் சுமார் 15 கிராம் உப்பு தேவை. வெள்ளையர் காலத்தில் கப்பல் சமமாக மிதக்க மணல் மூட்டை போட்டுக் கொண்டு வருவது வழக்கம். மணலுக்குப் பதில் உப்பு மூட்டைகளை கொண்டு வந்தால் என்ன அதை விற்றால் என்ன என நினைத்தது வெள்ளை அரசாங்கம். இந்தியாவிலேயே விளையும் உப்பு மலிவாக இருந்தது. எனவே வரிவிதிப்பிற்குள்ளானது இந்திய உப்பு. இதை எதிர்த்தார் காந்தியடிகள். தினசரி இரண்டு முறை கடல் பெருகி தாழ்வான கடற்கரைப் பகுதியில் நுழையும். சூரிய வெப்பத்தால் அது ஆவியாகி உப்பாக மாறும். இதை, படு உப்பு என்பார்கள். இதை யாரும் தொடக்கூடாது. சுங்க இலாக்காவிடமிருந்து உப்பு இலாக்கா இதற்காக துப்பாக்கியுடன் இரவு பகலாய் காவலர்களை நியமிக்கும்.

ஒரு மணங்கு உப்புக்கு வரி மட்டும் இரண்டு ரூபாய் இரண்டனா இரண்டு காசு. சுமார் 600 முதல் 1000 மடங்கு வரி. கொடிய வரி. சுதந்திரப் போராட்டங்களிலேயே தென்இந்தியாவில் பிரபலமானது உப்பு சத்தியாக்கிரக போராட்டம்தான். வேதாரண்யம் உப்பு உற்பத்தியில் தூத்துக்குடிக்கு அடுத்த நிலையில் உள்ள இடமாகும். ஆனால் இந்த இடம்தான் போராட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏனென்றால் இங்கு அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று தைரியமாக செய்ய இளைஞர் வேதரத்தினம் இருந்தார். 100 தொண்டர்கள் திருச்சியில் இருந்து 1930 தமிழ்புத்தாண்டு தினமான ஏப்ரல் 14–ந்தேதி புறப்பட்டார்கள். வழி நெடுக தேசபக்தி பாடல்கள் பாடிய வண்ணம் பயணம் மேற்கொண்டார்கள். திருச்சி ஸ்ரீரங்கம் வழியாக கல்லணை வந்தார்கள்.

வெள்ளைக் கலெக்டர் தார்ன் (முள்) துரை கடுமையான அடக்குமுறையை பாதயாத்திரையின் மீது ஏவி விட்டார். உணவு தரக்கூடாது. மாலைப் பிரார்த்தனைக் கூடத்திற்கு இடவசதி அளிக்கக்கூடாது. மீறினால் இவர்களைப் பிடித்து சிறையிடுவேன் தாக்குவேன் என்று அறிவித்திருந்தார். இதையும் மீறி ஒவ்வொரு ஊரிலும் பொது இடத்திலும் கூட்டம் நடந்தது. கூட்டம் ஆரம்பித்ததும் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அதற்கு ஏற்பாடு செய்தவர் யார் என்று கண்டறிந்து அவர்கள் துன்பத்திற்குள்ளானார்கள்.

வேதாரண்யம் வந்து இப்போது ராஜாஜி பூங்கா இருக்கும் இடத்தில் யாத்திரை குழுவினர் கூடினார்கள். ஏப்ரல் 29–ஆம் தேதி பூரண உபவாசம் இருந்து ஆண்டு பலம் பெற்றார்கள். முகாம் அன்று வழக்கத்தைவிட அதிகாலையில் எழுந்து ஏப்ரல் 30–ஆம் தேதி தலைவர் ராஜாஜி மட்டும் எங்கோ சென்றார். வேதாரண்யம் முழுவதும் போலீசு குவிக்கப்பட்டிருந்தது.

சர்தார் வேதரத்தினத்தின் நம்பிக்கையான ஊழியர்கள் இருவர் நாகநாத தேசிகர் மற்றும் மாரிமுத்து தேவர் மட்டும் தலைவர் ராஜாஜியை தாழங்காட்டின் வழியாக உப்புச் சட்டத்தை மீறுவதாய் அறிவிக்கப்பட்டிருந்த இடத்திற்கு விடிவதற்கு முன் வந்து விடியுமட்டும் அந்த குறிப்பிட்ட ஆறு மணி வரட்டும் என்று காத்திருந்தார்கள். மகத்தான அந்த குறித்த நேரம் வந்ததும் தானாகப் பட்டிருந்த அந்த படுஉப்பை கையினால் எடுத்து ராஜாஜி வந்தே மாதரம் என்று கையையும் குரலையும் உயர்த்திக் கூவினார்.

சர்தார் வேதரத்தினம், ராஜாஜி, மகாத்மா காந்தி ஆகியோர் படங்கள் சுதந்திர இந்தியாவில் அந்த நீதிமன்ற அறையை அலங்கரிக்கின்றன. தண்டனைப் பெற்று சிறைக்கு அழைத்துச் செல்லும் வரையில் அங்கிருந்த சிறிய அறையில் அடைக்கப்பட்டிருந்த ராஜாஜியின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் அந்த அறை நினைவுச் சின்னமாக இன்றும் இருக்கிறது.

வேதரத்தினத்தின் வாக்கு வேதவாக்கு

உப்பு சத்தியாகிரக போராட்டம் நடந்த காலத்தில் வேதரத்தினம் வாக்கை அப்பகுதி மக்கள் வேத வாக்காக கருதி செயல்பட்டார்கள். இதற்கு இரு உதாரணங்கள் கூறலாம். வெள்ளை அரசு போராட்டக்காரர்களுக்கு உதவக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்தது. சர்தாரின் பேச்சைக் கேட்ட மக்கள் போராட்டகாரர்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் உதவிகளைச் செய்தனர்.

போலீஸ்காரர் என்று அறியாமல் முக சவரம் துவக்கிவிட்ட சிறுவன் வைரப்பன் உண்மை தெரிந்ததும் பாதி வேலையிலேயே கத்தியை மடக்கி வைத்துவிட்டான். கோர்ட்டார் முன்னிலையில் மீதியை முடிக்கச் சொன்னபோது கனம் கோர்ட்டார் வேண்டுமானால் செய்து முடியுங்கள் நான் மாட்டேன் என்று சொல்லி தண்டனை பெற்றான்.

சிறையில் கொடுத்த வேலையை தாறுமாறாக செய்த போராட்ட வீரர்களுக்கு அவரவர் குலத்தொழிலையே கொடுப்பது என்று தீர்மானித்து, சிறைப்பட்டிருந்த அருணாச்சல தேசிகரை அழைத்து அவர் புரோகிதர் என்று தெரிந்து; ஏனய்யா இங்கு வந்தீர்? என்று கேட்டார்களாம். அவர் தயங்காமல் வெள்ளை அரசிற்கு கருமாதி செய்ய வந்தேன் என்றாராம். இவ்வாறு இந்திய நாட்டின் விடுதலையில் வேதாரண்யம் தனக்கென தனி வரலாறு பதித்துவிட்டது.

எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி

தென் இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் புரட்சியை முழு மூச்சாகக் கொண்டு செயல்பட்ட முழுநேர ஒரே புரட்சியாளர் எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி அவர்கள்தான்.

சுதேசி இயக்கத்தை பெரிதும் நசுக்க காரணமாக இருந்த திருநெல்வேலி கலெக்டர் ஆஷை 1911 ஜூன் 17–ஆம் தேதி, மணியாச்சி ரயில்வே சந்திப்பில் தனது கைத்துப்பாக்கியால் சுட்டுக்

கொன்றுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் எய்தி வரலாற்றில் இடம் பெற்ற வாஞ்சிநாதனுக்கு பயிற்சி அளித்த தீரர்தான் நீலகண்ட பிரம்மச்சாரி. 1889 டிசம்பர் 4–இல் எருக்கூர் கிராமத்தில் பிறந்து வளர்ந்து பள்ளிப் படிப்பை எருக்கூரிலும், சீர்காழியிலும் முடித்துவிட்டு, சென்னை சென்றவருக்கு அங்கே சுதேசி இயக்க செய்திகளை படித்தும், கூட்டங்களுக்கு சென்றும், மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஆகியோருடன் நட்பு கொண்டு தீவிரவாதியாக மாறி, தன் வாழ்நாள் முழுக்க பிரம்மச்சாரியாகவே இருப்பதாக உறுதி பூண்டார்.

'பாரதமாதா சங்கம்' என்று தொடங்கி நடத்தும்போது, அதில் வந்து சேர்ந்தவர்தான் வீரவாஞ்சிநாதன். ஊர் ஊராக சென்று ஆங்கிலேயர்களை எதிர்த்து பிரசாரம் செய்து வந்தார். பாண்டியில் 'சூர்யோதயம்' என்ற பத்திரிகையை நடத்தும்போதும் பிரிட்டிஷார் அதை தடைபடுத்தினர். இருந்தும் விடாமல் தனது பிரசார பணியை தீவிரமாக்கினார்.

இதில் முழுமையாக ஒன்றிபோன வாஞ்சிநாதன் அதிவேகம் கொண்டார். அப்பொழுது பாரிஸிலிருந்து மாறுவேடத்தில் பாண்டிக்கு வந்த இந்திய சுதந்திரப் போராட்ட தீவிரவாதியான வ.வே.சு. ஐயரின் பாதையால் மேற்கண்ட ஆஷை உடனடியாக சுட்டுவிட்டு தன்னையும் மாய்த்துக் கொண்டார். இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக ஆக்கப்பட்ட நீலகண்ட பிரம்மசாரிக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்து பெல்லாரி சிறையில் தள்ளப்பட்டார். அப்படி சிறையில் இருக்கும்போதுதான் ஜெர்மானிய 'எம்டன்' போர்க் கப்பல் ரங்கூனுக்கு வந்த செய்தி கிட்டியது. அது சென்னைக்கு வரலாம் நமக்கு உதவும் என்று 17.9.1914 அன்று சிறையிலிருந்து தப்பித்தார். ஆனால் மூன்றாம் நாள் சென்னையில் சக கைதியால் அடையாளங் காட்டப்பட்டு மீண்டும் ஆறு மாத கூடுதல் தண்டனையோடு சிறையிலடைக்கப்பட்டார்.

1919–இல் விடுதலையாகி சென்னை வந்த நீலகண்டர் வறுமையால் வாடி வதங்கினார். இந்த புரட்சி வீரரின் வறுமையைக் கண்டு மனம் வருந்திய பாரதி 'நீலா' இந்த மாதிரி பட்டினி நம் பாரத நாட்டைவிட்டே ஒழிய வழிசெய்ய வேண்டும் என்று "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று கோபத்தோடு பாடி வைத்தார்.

இப்படி இருந்தவருக்கு மீண்டும் வேகம் கிளம்பி சுதேசிய பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அதனால் அவரை கைது செய்ய முடிவு செய்தனர். அப்படி இவரை கண்காணித்து வந்த காவலரை தனது கைத்துப்பாக்கியால் சுடும்போது அது இயங்காததால் மீண்டும் கைது செய்யப்பட்டு 10 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று ரங்கூன் சிறையில் தண்டனையை கழித்தார்.

1930–இல் விடுதலையாகி ஹிந்து, சுதேசமித்திரன் இதழ்களில் அரசியல் கட்டுரை மூலம் தனது லட்சிய எண்ணங்களை புதுமையாக எழுதினார். மூன்று ஆண்டுகள் கழித்து தனது சிந்தனையையே மாற்றிக் கொண்டு, தனது இளமையான வாழ்வை நாட்டுக்காகவே அர்ப்பணித்த நீலகண்டர் 1933–இல் கர்நாடகாவில் உள்ள நந்திமலை சென்றடைந்து அங்கு ஸ்ரீசத்குரு ஓம்கார்நாத் என்ற பெயருடன் சாதுவாக உருவெடுத்து ஆன்மீக புருஷனாகவே மாறிவிட்டார்.

இந்தியாவின் இரும்பு மனிதர் வல்லபாய் பட்டேல், மகாதேவ தேசாய் ஆகியோர் நந்திமலைக்கு வந்து நீலகண்டரை தரிசித்து சென்றனர். இவரைப் பற்றிக் கேள்விப்பட்டகாந்தியடிகளும் பார்க்க எண்ணினார். ஆனால் அவரின் உடல்நிலை மலைமீது ஏறிவரும் அளவிற்கு சரியில்லை. இதைக் கேள்வியுற்ற நீலகண்டர் 1936 மே 30–இல் காந்தியடிகள் இருப்பிடம் வந்து சுமார் 2 மணி நேரம் உரையாடிவிட்டு சென்றுள்ளார்.

ஒரு பெரிய மகானாகவே காட்சியளித்து 1978 மார்ச் 4–இல் தனது 89–வது வயதில் இயற்கை எய்தினார். அவரது தமையனார் அருகில் இருந்து ஈமச் சடங்குகளை நிறைவேற்றினார். 1988–இல் அவரின் நூற்றாண்டு நிறைவு ஆனது.

தில்லையாடி வள்ளியம்மை

இந்த பெண்மணி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். இளம் வயதில் தென்னாப்பிரிக்காவுக்கு பெற்றோருடன் சென்றார். அங்கு மகாத்மா காந்தியடிகளைச் சந்தித்தார். விடுதலைப்போராட்டத்தில் ஆர்வம் கொண்டு தாயகம் திரும்பினார். சுதந்திரப் போராட்டத்தில் தீவிரம் காட்டினார். இடையில் நோய்வாய்ப்பட்டார். இவரைக் காண மகாத்மாகாந்தி தில்லையாடிக்கு வந்தார். தமிழக அரசு தில்லையாடியில் இவருக்கு உருவச்சிலையும், மணிமண்டபமும் கட்டியுள்ளது.

15. ஊர்ப்பெயர்கள் ஆய்வு

நாகை மாவட்டத்தில் வரலாற்றுச்சிறப்பும், இயற்கை அமைப்பும் உடைய பல ஊர்களின் பெயர்க்காரணம் இப்பகுதியில் ஆய்வு செய்து வழங்கப்படுகிறது.

ஓலை ஆவணங்களில் ஊர்ப் பெயர் வழக்குகள்

தரங்கம்பாடி

சுவடி ஆவணங்களில் தரங்கம்பாடி என்ற பெயரே பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வூரின் பழம்பெயர் சடங்கன்பாடி என்பதாகும். கி.பி.14–ஆம் நூற்றாண்டின் தரங்கம்பாடி மாசிலாநாதர் சிவன் கோயிற் கல்வெட்டில் இப்பெயர் குறிப்பிடப்படுகிறது. கி.பி. 16–ஆம் நூற்றாண்டிலும் இப்பெயரே வழக்கிலிருந்துள்ளது. அக்காலகட்டத்தில் போர்ச்சுக்கீசிய வணிகக் கும்பினியார் இவ்வூர்ப் பெயரை Trangambari என்றும், Trangambar என்றும் உச்சரித்துள்ளனர் என்பது அக்கால வரைபடங்களால் தெரிய வருகிறது. இவ்வழக்கே தமிழில் தரங்கம்பாடி எனத் திரிந்திருக்க வேண்டும். தரங்கம் என்பது கடல் அலையைக் குறிப்பதால் இப்பெயர் பொருத்தமானது என மக்களால் ஏற்கப்பட்டு வழக்கில் நிலைத்து விட்டது. இனி, 'தயங்கம்பாடி' என்ற பெயர் வழக்கு சில ஏடுகளில் (ஏடு.5) காணப்படுகிறது. இப்பெயரை நியாயப்படுத்தும் வகையில் சூரசம்ஹாரம் முடிந்த பின்னர் முருகன் தயங்கி நின்ற இடமாததால் தயக்கம்பாடி என்று இவ்வூர் பெயர் பெற்றதாக ஒரு புராணக் கதையும் உருவாக்கப்பட்டது.

பொறையார்

தரங்கம்பாடியை அடுத்துள்ள பொறையாறு பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பு உள்ளது. பொறை என்ற சொல் சிறு குன்று எனப் பொருள்படும். மணற்குன்றுகளைப் 'பொற்றை' என்ற சொல்லால் வழங்கியுள்ளனர். இப்பகுதியில் மணற்குன்றுகள் நிறைந்து காணப்படுகின்றன. உப்பாறு என்ற ஆறும் ஓடுகிறது. தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையின் தெற்கே இவ்வாறு கடலில் கலக்கிறது.

மணற்குன்றுகளும் ஆறும் உள்ள பகுதி என்ற பொருளிலேயே 'பொறையாறு' என்ற பெயர் தோன்றியிருக்க வேண்டும். கி.பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் பிறையாறு என்பதே இவ்வூரின் சரியான பெயர் எனக் கருதப்பட்டு, சிவபெருமான் தலையில் இடம்பெறும் பிறையும் ஆறும் இவ்வூர்ப் பெயருக்குக் காரணமாயின என்ற புராணக் கதையும் உருவாயிற்று. அதன் விளைவாகப் பிறையாறு என்ற வழக்கு ஆவணம் ஒன்றில் (ஏடு–12) காணப்படுகிறது. பிறைநிலா போல உப்பாறு இங்கு வளைந்து சென்று கடலில் கலக்கிறது. 'பிறை' சொல் வழக்காற்றில் 'பொறை' என்றாகி ஆறு சேர்ந்து பொறையார் என்று தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

தில்லையாடி

தில்லையாடி எனத் தற்போது வழங்கப்படும் ஊர் பொறையாற்றை அடுத்துள்ளது. இவ்வூர் கல்வெட்டுகளில் 'தில்லையாளி' என்று குறிப்பிடப்படுகிறது. தில்லையை (சிதம்பரத்தை) ஆள்பவன் என்ற பொருளில் நடராசப் பெருமானை இது குறித்திருக்க வேண்டும். ஓலைச்சுவடி ஆவணங்களில் (ஏடு–1) தில்லையாளி என்ற வடிவம் காணப்படுகிறது. டேனிஷ் காகித ஆவணங்களிலும் Tillay என்றே இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. எருக்கிட்டாஞ்சேரி என்று ஆவணங்களில் (ஏடு–101) குறிப்பிடப்படும் ஊரின் பழம்பெயர் 'எருக்காட்டுச்சேரி' என்பதாகும். மாணிக்கப் பங்குல், மாணிக்கப் பொங்கல் என்று பலவிதமாகக் குறிப்பிடப்படும் ஊர் (ஏடு–101, 104, 108) தற்போது மாணிக்கப்பங்கு என வழங்கப்படுகிறது. இது தேவதாசியர் களுக்கு வழங்கப்பட்ட ஊராக இருக்கவேண்டும்.

ஊர் பற்றிய விபரங்கள்

தரங்கம்பாடியிலிருந்த கோட்டை, ராசா தெரு, போன்றவை ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. தில்லையாளியிலிருந்து நீலச்சாயம் தயாரிக்கிர சாவடி ஏடு–45–இல் குறிப்பிடுகிறது. நீலச்சாயம் தோய்க்கப்பட்ட துணிகள் தரங்கம்பாடித் துறைமுகம் மூலமாக ஏற்றுமதியாகியுள்ளன. இலங்கைக்கு அரிசி ஏற்றுமதியாகியுள்ளது என்பதற்கும் ஆவணச் சான்றுகள் உள்ளன. சாத்தங்குடி சபாபதி செட்டியாருடன் வெளிப்பாளையம் பரங்கி சின்னசெட்டி என்பவர் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளார். அதன்படி, ஆற்றங்கரைப் பண்டசாலையில் அரிசி கொண்டு வந்து அளப்பதாகக்

குறிப்பிட்டுள்ளார். (ஏடு–21), ஆற்றங்கரைப் பண்டகசாலை என்பது தரங்கம்பாடி டேனிஷ் கோட்டைக்குத் தெற்கே உப்பனாற்றங்கரையில் அமைந்திருந்த பண்டக சாலையாகும். எருக்கட்டாஞ்சேரியில் இருந்த சவுக்காரக் கிடங்கு (துணி சோப் தயாரித்து சேமித்து வைக்கும் தொழிற்கூடம்) ஏடு 93–இல் குறிப்பிடப்படுகிறது. சாத்தங்குடியில் இருக்கும் 'ஸ்ரீ நவாபு சாலை' ஏடு–4–இல் குறிப்பிடப்படுகிறது. இவ்வேட்டின் ஆண்டு 1837 ஆகும். இது ஆற்காட்டு நவாபுக்குரிய அலுவலகக் கட்டிடத்தைக் குறிக்கக் கூடும்.

வெளிப்பாளையம் என்பது தரங்கம்பாடிக் கோட்டை மதிற் சுவருக்கு வெளியே, உப்பனாற்று அகழிக்கு வெளியே அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியாகும். இங்கு சேனைக் குடையார் (இலை வாணியர்) பிரிவினர் அதிகமாக வாழ்கின்றனர். இங்கு ஸ்ரீகற்பக கணபதி கோயில் அமைந்துள்ளது. இக்கணபதி, 'வீரகற்பக விநாயகர்' என்ற பெயரில் 'தரங்கை வீரவேலாயுத சுவாமி பிள்ளைத்தமிழ்' என்ற நூலின் காப்புச் செய்யுளில் போற்றப்படுகிறார். தரங்கம்பாடி மாசிலாநாதர் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.14–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று, பதினெண் விஷயத்தார் எனப்பட்ட துறைமுக வணிகர் குழுவினரும் கரையார் எனப்படும் மீகாமன் குழுவினரும் 'வீரகற்பகன் சந்தி' என்ற பெயரில் தினசரிப் பூசை நடத்த ஏற்பாடு செய்த விவரத்தைக் குறிப்பிடுகிறது. எனவே அக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் வீரகற்பகன் சந்தி – இவ்விநாயகருடன் தொடர்புடையதே எனத் தெரிகிறது. இத்தகைய பழமையான மரபுடைய கற்பக விநாயகருக்கு வழங்கப்பட்ட தர்மசாதனப் பட்டையமாக ஓர் ஓலை ஆவணம் (ஏடு–48) அமைந்துள்ளது.

1841–ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் ஆவணத்தில் (ஏடு–53) தரங்கம்பாடிச் சரகத்தின் வடஎல்லையாகக் கடற்கரையோரத்தில் அமைந்திருந்த டேனிஷ் நிர்வாகப் பகுதியின் எல்லை குறிப்பிடப் படுகிறது. இதன் வடக்கே பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினி ஆட்சிப்பகுதி தொடங்குகிறது. ஆனைக் கோயில் என்ற ஊரே எல்லைப் பகுதியாகும். 'பேரளம் தாலுக்கா திருக்கடவூர் மாகாணம் பிள்ளைப் பெருமாள் நல்லூர் வேப்பஞ்சேரி கிராமம் ஆனைக்கோயில் நடப்புக் கரைக்குக் கிழக்கு அம்பனாற்றுக்குத் தெற்கு' என இவ்விவரம் குறிப்பிடப்படுகிறது. ஆனைக் கோயிலில் திருக்கடவூர் காலகால சுவாமி கோயிலுக்குரிய அபிஷேகக் கட்டளை இலுப்பைத்

தோப்பு முதலிய மானிய நிலங்களும் மடமானியம் என்ற பெயருடைய நஞ்சை நிலமும் இருந்த செய்தி ஏடு–43–இல் குறிப்பிடப்படுகிறது. மடமானியம் என்பது திருக்கடவூர்க் கோயிலை நிர்வகித்து வரும் தருமபுரம் ஆதீனத்திற்கு நாயக்க மன்னர்கள் காலத்தில் மானியமாக வழங்கப்பட்ட நிலமாக இருக்க வேண்டும். மாணிக்கப்பங்கு ஊரில் கோயில் குருக்கள் ஒருவருக்கு உரியதாக இருந்த 'துரை கோட்டகம்' என்ற பெயருள்ள நிலம் ஏடு–52–இல் குறிப்பிடப்படுகிறது. டேனிஷ் துரை ஒருவரால் இந்நிலம் பெயர் பெற்றுள்ளது எனத் தெரிகிறது.

காட்டுச்சேரியிலிருக்கும் 'ராச சோளீஸ்வர சுவாமியார்' பற்றிய குறிப்பு ஏடு 15–இல் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சேர்ந்த இக்கோயில் பழுதுற்ற நிலையில் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

சாத்தங்குடியிலிருக்கும் 'சாலமன் தோட்டம்' ஏடு 22–இல் குறிப்பிடப்படுகிறது. சாலமன் தோட்டம் என்பது டேனிஷ் நிர்வாகக் காலத்தில் திராட்சைத் தோட்டம் இருந்த இடமாகும். சாலமன் என்ற பெயரே திராட்சை ரசம் தொடர்பானதாகும். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை தரங்கம்பாடி திராட்சை என்பது தமிழகம் முழுவதும் பெயர் பெற்ற திராட்சைப் பழ வகைகளுள் ஒன்றாகும். இத்திராட்சை வகை, சாலமன் தோட்டம் முதலிய இடங்களில் விளைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

டேனிஷ் நிர்வாகம் பற்றிய செய்திகள்

தரங்கம்பாடியிலிருந்த டேனிஷ் ஆளுநர், இராசா என்றும் மகாராசா என்றும் குறிப்பிடப்படுகிறார். கி.பி.1822–ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் ஆவணம் (ஏடு–64) 'மகாராச கொவறண்மெந்து' எனக் குறிப்பிடுகிறது. 'கவர்ன்மெண்ட்' எனத் தற்போது வழங்கப்படும் ஆங்கிலச் சொல்லே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அரசின் தலைமைச் செயலகம் (செக்ரடேரியட்) 'சக்கறத்தார் சாலை' எனக் குறிப்பிடப்படும் மரபும், 'மாஜிஸ்ட்ரேட்' என்ற பதவிப் பெயர் 'மத்திஷ்டர்' என்று குறிப்பிடப்படும் மரபும் டேனிஷ்–தமிழ்க் காகித ஆவணங்களில் காணப்படுகின்றன. இவை சக்கரவர்த்தி, மத்யஸ்தர் போன்ற வழக்குகளுக்கொப்ப அமைத்துக் கொண்ட பெயர்களாகலாம். பிரவர்த்திகர் (செயலர்) என்பது பார்வத்திக்காரன் (Providiteer) என்றும், குறிப்பிடப்படுகிறது. நிதித்துறை, கருவூலம், வருவாய்த்துறை

ஆகியவற்றின் தலைமை அலுவலர் பினான்ஸ்ருட் எனப்பட்டார். 'பினான்சுறோதுக் குபோது துரை' என்பவர் ஏடு–64–இல் குறிப்பிடப்படுகிறார். குபோது என்பது Keofoed என்ற டேனிஷ் குடும்பப் பெயரின் (Surname) தமிழ் உச்சரிப்பாகும். Cow foot (பசுக் காலடி) எனப் பொருள்படும் இப்பெயர், ஓர் ஓலைச்சுவடியில் முத்திரையாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

டேனிஷ் கிழக்கிந்திய கும்பினியார், தரங்கம்பாடிப் பகுதியை 1620 –ஆம் ஆண்டில் தஞ்சை ரகுநாத நாயக்கர் வசமிருந்தே பெற்றனர் என்பது வரலாறு. 1841–ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓலைச் சுவடி ஒன்று (ஏடு–53) வேப்பஞ்சேரி என்ற கிராமத்தை ஸ்ரீஸ்ரீ சிவந்த பாத நாயக்கர் என்பவரிடமிருந்து முன்னரே விலைக்கு பெற்றிருந்த பொறையாறு ஆறுமுகச் செட்டியார் என்பவர், அவ்வூரின் அரைப்பங்கு உரிமையைச் சாத்தங்குடி ஆ. சபாபதி செட்டியார் என்பவருக்கு ரூ. 3500–க்கு விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. இது "உடன்படிக்கை ஓலை'' எனக் குறிப்பிடப்படுகிறது.

தரங்கம்பாடியிலும் சுற்றுப்புறத்திலும் 'தோட்டம்' என்ற பின் ஒட்டுடன் வழங்கப்படும் சில இடங்கள் உள்ளன. இவையெல்லாம் டேனிஷ் அலுவலர்களும் துரைமார்களும் ஓய்வெடுக்கப் பயன்படுத்திய தோட்டம் சூழ்ந்த பண்ணை வீடுகளாகும். இத்தோட்டங்களைப் பராமரிப்பதற்குப் 'பார்க்கர்' என அழைக்கப்பட்ட பராமரிப்பாளர்கள் இருந்தனர். 1836–ஆம் ஆண்டுக்குரிய ஓர் ஆவணத்தில் (ஏடு–7) பார்க்கர் நாகலிங்கம் என்பவர் குறிப்பிடப் படுகிறார்.

இந்திய மண்ணில் நற்செய்தி கிறிஸ்தவம் முதன் முதலில் இங்குதான் வேரூன்றியது. மேலும் உலகின் பெரும்பகுதியில் நடைபெற்று வந்த கத்தோலிக்கரல்லாத பிற கிறிஸ்தவ சபைகளின் மறைப்பணிக்கு முன்னோடியாகவும், மூல எழுச்சிக் காரணியாகவும் தரங்கம்பாடி விளங்கியதை உலகு அறியும்.

1. டேன்ஸ்போர்க் (Dansborg)

அந்தக்காலத்தில் தரங்கம்பாடிக்கு வந்த மறைப்பணியாளர் களும், பிற ஐரோப்பிய பயணிகளும் கடல் வழியாகவே தரங்கம்பாடிக்குள் வரவேண்டியிருந்தது. அவர்களை கரம் உயர்த்தி வரவேற்று நின்றது டேனிசு கோட்டைதான். டேன்ஸ்போர்க் என்பது

டென்மார்கின் குடியேற்றப் பகுதிகளைப் பாதுகாக்க அமைக்கப் பட்டிருந்த கோட்டையாகும். கோட்டையின் கோபுர உச்சியில் பறந்து கொண்டிருந்த மிகப் பெரிய டென்மார்க் நாட்டின் கொடியை கடலின் வெகு தொலைவிலிருந்தே காண முடிந்தது. இந்தக் கோட்டையின் மதிற்சுவர்களில் அமைக்கப் பட்டிருந்த பீரங்கிகள் ஐரோப்பாவிலிருந்து வரும் கப்பல்களுக்காக ஆவலோடு காத்திருந்தன. ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட கப்பல்கள் வரும்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் பீரங்கிகள் முழங்கி வரவேற்றன. ஆனால், இன்று தரங்கம்பாடிக்குச் சாலை வழியாகவோ இருப்புப்பாதை வழியாகவோ வருகின்றவர்கள் தரங்கம்பாடியில் காணும் கடைசி இடமாக டேன்ஸ்போர்க் இருக்கின்றது.

நாகூர்

நாகப்பட்டினத்தில் இருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் நாகூர் அமைந்துள்ளது. நாகூர் ஆண்டவர் என அழைக்கப்படும் இறைநேசசெல்வர் ஹஸ்ரட் செய்யிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது பெருமகனார், இங்கு அடக்கமாகி உள்ளார். மத வேறுபாடு இன்றி, அனைத்து மக்களும் இங்கு வருகை தருகின்றனர். செப்டம்பர் திங்களில் சந்தனக்கூடு கந்தூரி திருவிழா மிகச் சிறப்பாக இங்கு கொண்டாடப்படுகிறது. நாகர்கள் வாழ்ந்த ஊர் நாகூர் என்றழைக்கப்படுவதாக தெரிகிறது. நாகர் + ஊர் = நாகூர் ஆகியது.

வேளாங்கண்ணி

வேளாண்கொடியிலிருந்து பூக்கும் மலர்களை தொடுத்து மாலை கட்டி அணிவித்தல் மரபு. எனவே கண்ணி மாலை என்னும் பொருளில் வேளாங்கண்ணி எனப்படுகிறது.

பூம்புகார்

பூம்+புகும் +ஆறு என்பதே பூம்புகார் என்று ஆயிற்று. சங்க காலச் சொல்லாகும். அதாவது காவிரி ஆறு தனது வற்றாத நீர் வளத்தை சோழ மண்டல உழவர்கள் பயன்படுத்தி எஞ்சியதை கடலுள் புகுந்து சேர்க்கும் இடம் என்று பொருள். காவிரி ஆறு கடைசியாக கடலில் சென்று கலக்கும் துறை உள்ள ஊர் என்ற பெயரில் பூம்புகார் என்று வழங்கப்படுகிறது.

திருமுல்லைவாயில்

முல்லை + வாசல் என்பது கடற்கரைக்கு முன்பாக உள்ள கழனி தோட்டங்கள் (காடுகள்) நிறைந்த பகுதி என்று பொருள். திரு அடைமொழி சேர்ந்து திருமுல்லைவாயில் என்று அழைக்கப்படுகிறது

கீழப்பெரும்பள்ளம்

காவிரி ஆற்றுப் படுகை அமைந்த நீர் தேங்கிய பெரிய நிலப்பரப்பு – பெரும் பள்ளம் என்றாகிவிட்டது. அது இரண்டாக பிரிந்து கிழக்கே இருந்தது கீழப் பெரும் பள்ளம் என்றும், மேற்கே உள்ளது மேலப் பெரும்பள்ளம் என்றும் வழங்கப்படுகிறது.

திருவெண்காடு

வெண்+காடு என்றால் ஆலமரம், அரசமரம் நிறைந்த பகுதி என்று பொருள். திரு அடைமொழி சேர்ந்து திருவெண்காடு ஆகியது. இதுவே வடமொழியில் சுவேத வனம் என்று கூறப்பட்டது. வடமொழிப் பெயர் சுவேதவனம் (சுவேதம் – வெண்மை வனம் – காடு) வேறுபெயர்கள் முத்திநகர், தமோநாசபுரம், பாபநாசபுரம், முருகன்பூண்டி, சித்திநகர், பாதாலகைலாயம், ஞானவனம், சிவானந்தக்காடு, கணபதிநகரம், ஆதிசிதம்பரம், திருஉமையூர், மாலுார், தலநாயகம், பெரியமயானம் என்பனவாம்.

வைத்தீஸ்வரன்கோயில்

புள்ளிருக்குவேளுர் என்று தேவாரங்களில் குறிப்பிடப்படும், வேளிர்கள் வாழ்ந்த ஊர். இங்கு ஜடாயு பறவை (புள்) வாழ்ந்ததால் புள்ளிருக்கு வேளுர் என்று அழைக்கப்பட்டது. புள் – ஜடாயு, இருக்கு – வேதம், வேள் – முருகன் ஆகிய மூவரும் வழிபட்டுச் சிறப்படைந்தமையால் இப்பெயர் பெற்றது என்பர். இக்காரணத்தினாலேயே இவ்வூர் சடாயுபுரி, வேதபுரி, கந்தபுரி எனவும் வழங்கப்படும். மேலும் சூரியன் வழிபட்டமையால் பாரிதிபுரி எனவும், அங்காரகன் வழிபட்டமையால் அங்காரபுரம் எனவும், அம்பிகை வழிபட்டதால் அம்பிகாபுரம் எனவும் வழங்கப்படுகிறது.அதுவே இறைவன் பெயரால் வைத்தீஸ்வரன் கோயில் என்றும் அழைக்கப் படுகிறது.

திருநாங்கூர்

சீர்காழியிலிருந்து தென்கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் திருநாங்கூர் அமைந்துள்ளது. திருவாலி, திருநகரி, நான்கு + செழிப்பு + குளிர்ச்சி என்று பொருள்படும். மண்ணின் வளமையால் திரு அடைமொழி சேர்ந்து திருநாங்கூர் என அழைக்கப்படுகின்றன. அல்லது நான்கு வகை வேளிர் இன மக்கள் கூடி வாழ்ந்த ஊர் நான்கு+வேளிர்+ஊர்=என்ற பொருளில் நாங்கூர் எனப்பட்டது என்றும் கூறலாம்.

திருக்கடையூர்

கடவூர் என்பது தேவாரப் பெயர். காலனை எட்டி உதைத்து தள்ளிய ஊர். திரு அடைமொழி சேர்த்து திருக்கடவூர் என்று பெயர் வழங்குகிறது. ஆனால் புராண காலத்தில் இப்பகுதியில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்த கதையால் திரு எனும் அடைமொழியும் சேர்ந்து, திரு+கடை+ஊர்= என்று தற்போது மக்களால் திருக்கடையூர் என்று வழங்கப்பட்டு வருகிறது.

கோடியக்கரை

நாகப்பட்டினத்திலிருந்து 60 கி.மீ. தொலைவில் 'பாயிண்ட் காலிமர்' என்றழைக்கப்படும் கோடியக்கரை அமைந்துள்ளது. இங்கு வனத்துறையின் கட்டுப்பாட்டில் வன விலங்குகள் சரணாலயமும், பறவைகள் சரணாலயமும் அமைந்துள்ளன. கீழ்கடற்கரையின் கோடியில் அமைந்துள்ளதால் கோடியக்கரை என்று அழைக்கப்படுகிறது.

சீர்காழி

சீர்காழிக்கு மொத்தம் பன்னிரண்டு வேறு பெயர்கள் உள்ளன. காளி தேவியினால் பூசிக்கப்பட்டத் தலமாதலின் ஸ்ரீகாளிபுரம் எனப்பட்டு அதுவே நாளடைவில் சீர்காழி ஆயிற்று என்பர். பழங்காலத்தில் கழுமலம் என்ற பெயரே வழங்கியது. காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்திருப்பதால், சோழர்களின் பட்டத்து யானையை இங்கே கட்டி வைத்திருப்பது வழக்கமெனவும், அதன் காரணமாகவே கழுமலம் என்ற பெயர் உண்டாயிற்று என்பர். இவையன்றிச் சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாசாரியபுரம், பராசரஷேத்திரம், புனர்ஜன்மபுரம், கிரிபுரம், உமாபதிபுரம், ஜீவன்முத்தி புரம், நீலகண்டவெற்பு, மாலைமாற்றுப்பதி, ஏழுகூற்றிருக்கைப்பதி, இலிங்காடவி, குய்யகாசி, மூலாதாரஷேத்திரம் என்னும் பெயர்களும் உள்ளன.

சீர்காழியைப் பற்றி 71 தேவாரப் பதிகங்கள் மூவரால் அருளப் பெற்றவை உள்ளன. மேலும் பட்டினத்தடிகளின் திருக்கழுமல மும்மணிக் கோவையும், வடுகநாத தேசிகரின் காழியந்தாதியும் அருணாசலக் கவிராயரின் சீர்காழித் தலபுராணமும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சீர்காழிக் கோவையும், சீர்காழியைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாய் உள்ளன. திருஞானசம்பந்தர், காழிச் சிற்றம்பல நாடிகள், சீகாழிக் கண்ணுடைய வள்ளலார் முதலியோர் அவதரித்த சிறப்புடைய ஊராகும். இவ்வட்டத்தின் மொத்த ஊர்கள் 101.

சட்டநாதபுரம்

சீர்காழி தலத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் இறைவனின் திருநாமங்களுள் ஒன்று சட்டநாதர் என்பதாகும். எனவே இறைவனின் திருப்பெயரால் ஊருக்கு தெற்கே அமைக்கப்பட்ட குடியிருப்பு பகுதிக்கு சட்டநாதபுரம் என்று பெயர் வழங்கப்படுகிறது.

கொண்டத்தூர்

இது கொண்ட + ஆத்தூர் என்று பார்க்க வேண்டும். ஆத்தூர் என்பது வழிப்பாதையில் அமைந்த ஊர். நீர்நிலை அல்லது ஆற்றங்கரையில் அமைந்த ஊர் என்று பொருள் கொள்ளலாம்.

ஆலவேலி

ஆலம் – என்றால் தண்ணீர், வேலி – பாதுகாப்பு அரண். அதாவது நான்கு பக்கமும் நீர் நிலைகளால் சூழ்ந்துள்ள ஊர். நீர் வளமும் அதனால் நில வளமும் அமைந்த செழிப்பான நன்செய் கிராமம் என்று பெயர்.

செம்பதனிருப்பு

இன்று இவ்வூர் செம்பிருப்பு என்று மக்களால் மருவி வழங்கப்படுகிறது. ஊரின் பழைய பெயர் செம்பியச்சோழன் இருப்பு என்பதாகும். செம்பியன் சோழனின் பட்டப்பெயர்களுள் ஒன்று. இருப்பு – சோழர் காலத்தில் விவசாயம் செய்யும் குடும்பத்தினரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய குடியிருப்பு ஊர்.

நெப்பத்தூர்

இப்பகுதியில் உள் திருக்கோயில்களில் நந்தாவிளக்கு எரிப்பதற்கு தேவையான நெய் அளப்பதற்கு மானியமாக விடப்பட்ட ஊர் ஆகும். நெய்+பற்றூர் என்பதே நாளடைவில் மருவி நெப்பத்தூர் என்று ஆகி உள்ளது.

திருவாலி

திரு+ஆலி என்று பிரித்தால் திரு என்பது மதிப்பு சொல், ஆலி என்பது நீர்நிலைகள் நிறைந்துள்ள ஊர். வளமான நன்செய் கிராமம் ஆகும். இதுவே நாளடைவில் மருவி திருவாலி என்று வழங்கி வருகிறது.

பெருந்தோட்டம்

தோட்டம் என்றால், பூச்செடிகள், காய்கறி செடிகள் வைத்து பயிரிட்டு மக்களுக்காக வழங்குவது. பெருந்தோட்டம் என்றால்

திருக்கோயில்களுக்கு தேவையான மலர் கூடைகள் அனுப்புவதற்கு மன்னர்களால் வழங்கப்பட்ட நிலம் என்று பொருள் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அக்காலத்தில் பெருமளவு பூக்கள் இவ்வூரில் இருந்தே சென்றுள்ளன என்பது தெரிய வருகிறது.

விளந்திட சமுத்திரம்

சமுத்திரம் என்றால் கடல். விளந்திட என்றால் – நிலப்பகுதியில் உள்ள பெரும்பள்ளம் என்று பொருள். எனவே உள்நாட்டில் கடல்போல் அமைந்துள்ள பெரும் ஏரிக்கரையில் அமைந்த ஊர் என்று பொருள். அதாவது பெரும் நீர்ப்பரப்பு சூழ அமைந்த பள்ளத்தூர் என்று பொருள் அமைகிறது.

வள்ளுவக்குடி

வள்ளுவர் என்பவர் எதிர்காலம் பற்றி கணித்துக்கூறும் தொழிலைப் பரம்பரையாகக் கூறி வருபவர். இவர்களில் நிபுணர்கள் அரச சபையிலும் இடம்பெற்றனர். திருவள்ளுவர் இக்குடியில் அவதரித்த பேராசான். தெய்வப்புலவர் என்றும் அழைக்கப்படுகிறார். அரசர் கணியர்க்கு வழங்கிய ஊர் வள்ளுவக்குடி என்று வழங்கப் படுகிறது.

சிக்கல்

சித்தல் என்பது கல்வெட்டில் வரும் பெயராகும். சீந்தல் என்பது ஒரு வகை மூலிகைக்கொடி ஆகும். இப்பகுதியில் அந்த இயற்கை வளம் முன்னாளில் காணப்பட்டது. அதன் பெயரால் சீத்தல்–சித்தல் என்று ஆகி காலப்போக்கில் அதுவே மருவி தற்போது சிக்கல் என்று பெயர் வழங்கப்படுகிறது.

மயிலாடுதுறை வட்டம்

இவ்வட்டத்தின் வடமொழி பெயர் மாயூரம் என்பதாகும். பழைய தேவாரப் பெயர் மயிலாடுதுறை ஆகும். மயிலாடுதுறையில் மயூரநாதர் கோயில் அமைந்துள்ளது. அன்னை பராசக்தி, மயில் வடிவில் இங்கு நடனம் ஆடியதால் மயிலாடுதுறை எனப் பெயர் பெற்றது. இயற்கையிலேயே காவிரிக் கரையில் மயில்கள் ஆடும் துறை இருந்தமையால் பெற்ற பெயர் என்பதே பொருந்தும். காசிக்கு சமமான தலங்களில் மயிலாடுதுறையும் ஒன்று.

முடிகண்ட நல்லூர்

சோழ அரசர்களின் வெற்றியின் சிறப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஊர். அதாவது பாண்டியர்களை வென்று அவர்களின் தலைமேல் சூடும் கிரீடத்தையும் கைப்பற்றி சோழநாட்டுடன் பாண்டிய நாட்டையும் சேர்த்து, சோழப் பேரரசாக முடிசூடியதன் நினைவாக ஏற்பட்ட ஊர் – முடிகண்டநல்லூர் என்று வழங்கப்படுகிறது.

பட்டவர்த்தி

பெருமாள் கோயிலில் பணிபுரியும் பட்டர்களுக்கு வழங்கப்பட்ட ஊர். பட்டர் + விருத்தி என்பதே மருவி பட்டவர்த்தி என்று வழங்குகிறது.

வில்லியநல்லூர்

சோழ மன்னர்களின் பட்டப்பெயரால் அமைந்த ஊர்களில் இதுவும் ஒன்று. வில்லவன் + அரையன் + நல்லூர் என்று இதனைப் பார்க்க வேண்டும். மயிலாடுதுறை வட்டத்தில் இப்பெயரில் இரண்டு ஊர்கள் உள்ளன. வன்னியர்கள் அதிகம் வாழும் ஊராகும். வில்லவன், அரையர் என்பன பட்டப்பெயர்கள். நல்லூர் நன்செய் நலன் கொழிக்கும் கிராமம். இதுவே தற்போது வில்லியநல்லூர் என்று வழங்குகிறது.

அருண்மொழிதேவன்

தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவர் மாமன்னன் முதலாம் இராசராசசோழன், இவ்வரசனுக்கு இருபதுக்கும் மேற்பட்ட சிறப்பு பட்டப்பெயர்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் 'அருண்மொழி' என்பது. எனவே அந்த அரசனது பட்டப்பெயரால் அமைந்தது அருண்மொழிதேவன் என்ற இவ்வூர் என்பதை அறியலாம்.

ஆணைமேலகரம்

தற்போது வருவாய் ஏடுகளில் இப்பெயர் உள்ளது. மல்லியம் – என்று தற்போது இவ்வூர் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது ஆணை + மேல்+ அகரம் என்று பார்க்க வேண்டும். சோழ மன்னனது அரச ஆணைப் பெறப்பட்டு பிராமணர்கட்கு வழங்கப்பட்ட ஊர் என்று பொருள். அகரம் என்றால் பிராமணர்கட்கு வரி நீக்கி தானமாக வழங்கப்பட்ட ஊராகும்.

மூவலூர்

மூன்று+வேளிர்+ஊர் என்று பார்க்க வேண்டும். மூன்று வகையான வேளாண் இன மக்கள் சேர்ந்து வாழ்ந்த ஊர் என்ற பொருளில் இவ்வூர் மூவலூர் என்று வழங்கப்படுகிறது.

தேரழந்தூர்

திருஅழுந்தை ஊர் என்று கல்வெட்டில் காணப்படுகிறது. திரு–என்றால் ஸ்ரீதேவி. அழுந்தை என்றால் திருமால் மார்பில் உறைபவள் என்று பொருள். இங்கு மூன்று பெருமாள் கோயில்கள் உள்ளன. ஊருக்கே பெருமாள் கோயில் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. திருஅழுந்தை நாடு – என்பது சோழர் காலத்தில் ஒரு வட்டம் ஆகும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த ஊர். இன்று வழக்காற்றில் தேரழந்தூர் என்று மருவி வழங்கப்படுகிறது.

மன்னம்பந்தல்

மன்னன்+பந்தல் என்று பார்க்க வேண்டும். மன்னன் – சோழ அரசன், பந்தல் – தற்காலிகமாக தங்கும் இடம். சோழ மன்னர்கள் 1) சிதம்பரம் 2) காவிரிப்பூம்பட்டினம் 3) திருக்கடையூர் போன்ற முக்கியத் திருத்தலங்கட்கு வருடத்திற்கு ஒரு முறை விஜயம் செய்து வழிபாடு ஆற்றிச் செல்வது மரபு. அவ்வகையில் இவ்வூரில் தனது சுற்றம் பாதுகாப்பு வீரர்கள் புடைசூழ சில நாட்கள் தங்கிச் செல்வதுண்டு. மூன்றாம் குலோத்துங்க சோழன் இவ்வூரில் ஒரு சிவன் கோயிலையும் கட்டியுள்ளான். பராமரிப்பின்றி அக்கற்றளி இடிந்துவிட்டது. அதில் அம்மன்னனது உருவச்சிலையும் இடம் பெற்றிருந்தது. இக்கோயிலில் இருந்த ஆலமர்ச்செல்வர் (தெட்சிணாமூர்த்தியே) தற்போது ஏ.வி.சி திடலில் தனிச்சன்னதியில் காட்சிதருகிறார்.

பந்தல் – என்றால் தற்காலிக உறைவிடம் என்று பொருள். கூழம்பந்தல் – என்றால் – யானைப்படைகள் தங்கிச் சென்ற ஊர் என்று பெயர். சங்கரன்பந்தல் என்றால் சிவபெருமான் எழுந்தருளி வந்து தங்கியிருந்து காட்சி கொடுத்துவிட்டு புறப்படும் இடம் என்று பொருள் படுகிறது.

அருவாப்பாடி

அருவாய்ப் + பாடி என்று பார்க்கவேண்டும். அருவாய்ப்பர் என்றால் திண்மையும் நுட்பமும் உடையவர் என்று பொருள். பாடி – படை வீரர்களின் ஒரு குழு நிரந்தரமாகத் தங்கியுள்ள இடமாகும். அதாவது சோழ மன்னர் காலத்தில் நுண்பிரிவு படையினர் தங்கியிருந்த ஊர் ஆகும்.

அனந்தமங்கலம்

அனந்தன் என்றால் ஆதிசேடனாகிய பாம்பைக் குறிக்கும். ஆதிசேடன், அனுமன் இத்தலத்து பெருமாள் ராஜகோபாலனை வணங்கியதால் அனந்தமங்கலம் எனக் கூறப்படுகிறது.

கீழ்வேளூர்

திருக்குவளை அருகே உள்ள கருங்கண்ணி–திருநெல்லிகாவல் சாலையில் உள்ள திருவாய்மூர் போன்ற ஊர்கள் பழம் பெருமை மிக்கவை ஆகும். உழவுத் தொழிலை மேம்படச் செய்தவர்கள் வேளிர் எனப்பட்டனர். இவர் கூடி வாழ்ந்த ஊர் வேளிர்+ஊர்=வேளூர் என்று அழைக்கப்பட்டன. கிழக்கே அமைந்த வேளூர்–கீழ் வேளூர் என்றும், அதுவே தற்போது கீவளூர் என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கொளம்பியம்

பசுவாக உருக்கொண்டு வந்த இறைவி திருவாவடுதுறையில் உள்ள இறைவனை வழிபடும் பொருட்டு, பல இடங்களிலும் மேய்ந்து வருங்கால், பூமியினடியில் மறைந்திருந்த இறைவனின் மேல் பசுவின் காற்குளம்பு பட்டதால் ஏற்பட்ட பெயர் என்பர். (தலப்புராண வரலாறு) இத்தழும்பு இறைவன் திருமேனியில் இன்றும் உள்ளதென்பர். எனவே இவ்வூர் திருக்கோளம்பியம் என வழங்கப்படுகிறது.

கள்ளிமேடு

கள்ளிச் செடிகள் முளைத்து மேடாக இருந்த பகுதியில் எழுந்த ஊராதலால் பெற்ற பெயர்.

புஷ்பவனம்

இவ்வூரில் விளைந்த பல்வகையான பூக்களை இவ்வூரின் அருகில் இருக்கும் வேதாரண்யம் கோயில் இறைவனுக்காக கொள்ளப் பட்டமையினால் இப்பெயர் பெற்றது. சுருங்கக் கூறின் வேதாரண்யம் கோயில் இறைவனுக்கு வேண்டிய பூக்களுக்காக – இவ்வூர், மலர்வனமாக வளர்க்கப்படுவதால் இப்பெயர் பெற்றது.

எட்டுக்குடி

இத்தலத்தின் பெயர்க்காரணங்கள் பலவாக வழங்கப் படுகின்றன. எட்டி மரங்கள் செறிந்த கானகமாக இருந்ததால் 'எட்டிக்குடி' ஆயிற்று. தேவர்கள் கூடி வடமொழியில் 'இஷ்டி' எனப்படும் வேள்வி செய்த இடமாதலின் 'இஷ்டிகுடி' எனப்பட்டதென்றும், அதுவே 'எட்டுகுடி' எனப்பட்டதென்றும், அதுவே 'எட்டிக்குடி'என மருவிற்று என்றும் கூறப்படுகிறது. செவிவழிச் செய்தியாகத் தொடக்கத்தில் இவ்வூரில் எட்டுக்குடிகளே வாழ்ந்தனர் என்றும் அதனாலேயே 'எட்டுக்குடி'யாயிற்று என்றும் கருத்து

நிலவுகின்றது. எட்டி எனப்படும் காஞ்சிரங்கொடி இக்கோயில் தலவிருட்சமாதலால் இப்பெயர் பெற்றது. எட்டு வகை இனத்தவர்கள் வாழ்ந்த ஊர், எனவே எட்டுக்குடி ஆயிற்று எனவும் கூறுகின்றனர்.

கரவீரம்

பொன்னிறமான பூக்களைத் தரும் மரத்தின் பெயர். பொன்னலரி எனவும் குறிப்பிடுவர். இவ்வூர்க் கோயிலில் இம்மரமே தலவிருட்சமாதலின் இவ்வூர் இப்பெயர் பெற்றது. இன்றைய பெயர் கரையபுரம்.

குத்தாலம்

இவ்வூரில் குறுகிய ஆல் நிறைய இருந்தமையால் பெற்றது எனக் கூறுவர். ஆனால் இன்று பெரும்பான்மையோர் வழங்கும் காரணம் இவ்வூர்க் கோயில் தலவிருட்சமாகிய உத்தாலம் என்னும் மரத்தின் காரணமாகவே இவ்வூருக்கு இப்பெயர் வந்தது என்பர். உத்தாலம் – என்பதே நாளடைவில் குத்தாலம் ஆயிற்று என்பர். ஆனால் ஆலம் என்றால் நீர், காவிரி ஆறு குத்திட்டு வளைந்து செல்வதால் குத்தாலம் ஆயிற்று. அதாவது ஆற்றிடைகுறை ஊராகும். தேவாரத்தில் 'திருத்துருத்தி' என்று கூறப்பட்டுள்ளது.

துளசேந்திரபுரம்

துளசி+ சேந்திரர்+புரம் என்று பார்க்க வேண்டும். துளசி – என்பது நல்ல மூலிகைச் செடி. பெருமாள் கோயில்களில் இறைவனுக்கு துளசி மாலை சூடுவது மரபு. எனவே துளசிச் செடிகள் பயிரிடவும், பாதுகாத்தல், பறித்து கூடைகளில் எடுத்து வந்து கோயில்கட்கு அளித்தல் போன்ற காரியங்கள் தடையின்றி நடைபெற சோழ மன்னர்களால் தானமாக வழங்கப்பட்ட ஊராகும்.

பண்டாரவாடை

பண்டாரம் + வாடை என்று கருத வேண்டும். இங்கு பண்டாரம் என்றால் இல்லற வாழ்வு துறந்த ஞானியர் என்று பொருள். அல்லது இறைசிந்தனையுடன், எளிய வாழ்வு, பக்திநெறி, தமிழ் வளர்த்தல் போன்ற பண்புகளுடன் திருமடங்களின் பொறுப்பை வகிப்பவர்க்கும் பண்டாரம் என்று பெயர். இவ்வாறு பக்தியையும், தமிழ் மொழியையும் வளர்ப்பதற்குக் கொடையாக வழங்கப்பட்ட ஊர் வாடை எனப்பட்டது. சிலர் தற்போது பண்டார வடை என்றும் கூறுகின்றனர். தற்காலத்தில் பெரியோர் 'மடத்துக் கிராமம்' என்று சொல்வது இதுவேயாகும்.

செம்பியன் கோமல்

கோவல் என்று வழங்கியிருக்கவேண்டும். கோவல் என்றால் ஊரைச் சுற்றி பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட அகழி அல்லது மதிற் சுவர் ஆகும். எனவே பாதுகாப்பு அரண்மிக்க ஊர் என்ற பொருளில் கோவல் என்று அமைந்தது மருவி இன்று கோமல் என்று வழங்குகிறது. சோழ மன்னர்களின் பட்டப்பெயரும் சேர்ந்து செம்பியன் கோமல் என்று வழங்கப்படுகிறது.

மாந்தை

மா என்றால் பெரியது. தை என்றால் தாழ்வானது என்று பொருள். அதாவது பெரும்பள்ளம் என்ற பெயரே தூய தமிழில் மாந்தை என்று வழங்கிவருகிறது. இது ஒரு பழந்தமிழில் அமைந்த ஊராகும்.

திருப்புன்கூர்

புன்க மரத்தைத் (புன்கு) தலவிருட்சமாக கொண்டதால் பெற்ற பெயர். அதாவது திரு–அடைமொழி, புன்–என்பது புங்கம் எனும் புன்னை மரத்தைக் குறிக்கும். ஊர்–மக்கள் வாழ்விடம். எனவே திருப்புன்கூர் ஆகியது

திருமருகல்

மருகல் என்பது கல் வாழை என்று பொருள்படும். திரு–மதிப்புச் சொல். அக்கல்வாழை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டதால் பெற்ற பெயர்.

செண்பகராயநல்லூர்

கரிகாற்சோழனின் இலங்கைப் படைத்தலைவன் செண்பகராயனின் நினைவாக இவ்வூருக்கு இப்பெயர் வந்ததென்று கூறுவர். இவ்வழியேதான் கரிகாற்சோழன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றான் என்றும்; இன்று 'தலைக்காடு' என்று வழங்கும் ஊரிலிருந்து வேதாரண்யம் வரை ராஜபாட்டையாக (பெருவழி) இருந்தது என்றும் கூறுவர். மேலும் இவ்வூருக்கு அருகில் உள்ள கரியாப்பட்டிணம் என்னும் ஊர்ப் பெயரைக் 'கரிகாலன் பட்டிணம்' என்பதன் திரிபு என்றும் கூறுவர். ஆனால் இவ்வூரின் கல்வெட்டுப் பெயர் 'கல்யாணபுரங் கொண்ட சோழப் பட்டிணம்' என்பதாகும். இதன் திரிபாகவே கரியாப்பட்டிணம் என்று வழங்கப் பட்டிருக்கலாம். எனினும் இப்பெயரும் இவ்வூரைச் சுற்றியுள்ள சில

ஊர்களும் (தலைக்காடு. தென்னாடர், பல்லவன் கோயில் ஆகியவை) வரலாற்றுத் தொடர்பு உடையவை என்பதில் ஐயமில்லை. எனினும் இவை விரிவான ஆய்விற்கு உடையவை ஆகும்.

அகத்தியன்பள்ளி

இமயமலையில் இறைவனின் திருமணம் நடைபெற, திருமணத்திற்கு உலகின் எல்லா இடத்திலிருந்தும் மக்கள் வரவே, கயிலாயம் அதிக பளுவினால் பூமிக்குள் சென்றதாகவும், வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்வதால் அதை சரிசெய்யும் பொருட்டு இறைவன் அகத்திய மாமுனிவரைத் தென்திசைச் செல்லும்படி பணித்ததாகவும்; அகத்தியர் 'எனக்கு மட்டும் திருமணக் கோலம் காண வாய்ப்பு இல்லையே' எனக் கேட்க, இறைவன் தென்திசையில் நீ விரும்பிய இடத்தில் 'யாம் எம் மணக்கோலம் காட்டுவோம்' என அகத்தியருக்கு மணக்கோலம் காட்டிய இடம் வேதாரண்யம் எனவும், அகத்தியர் தென்திசையில் தங்கி இறைவனை வழிபட்ட இடமே அகத்தியன் பள்ளி ஆனது எனவும் தல வரலாறு கூறுகிறது.

கிடாத்தலைமேடு

தூர்க்கை எருமைத்தலை அரக்கனை (மகிஷாசூரன்) வதம் செய்த போது, அவ்வரக்கனின் தலை வந்து விழுந்த இடமாதலால் இப்பெயர் பெற்றதென்பர். ஆனால் கடாரம் வரை சென்று வென்று வந்தத் தலைவனுக்கு அளிக்கப்பட்ட ஊர் எனவும் கூறப்படுகிறது.

திருவாளப்புத்தூர்

திருவாளொளிபுத்தூர் என்பதே பெயர் வடிவம் எனவும் அதுவே சிதைந்து திருவாளப்புத்தூர் ஆயிற்று எனவும் கூறுவர். பாண்டவர்கள் வனவாசக் காலத்தின்போது, அர்ச்சுணன் தன்னுடைய ஒளி பொருந்திய வாளாயுதங்களை எல்லாம் இங்குள்ள புற்றுள்ளே ஒளித்து வைத்தமையால் பெற்ற பெயர் என்பர். முற்காலத்தில் இவ்வூர் சமணர்கள் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டும் எனவும் கருதப்படுகிறது.

விழுந்தமாவடி

விழுந்து எழுந்த மாவடி அல்லது மாவடு என்பதே வழக்கில் விழுந்த மாவடி என்றாயிற்று என்பர். பாண்டவர்கள் வனவாசத்தின்போது ஒரு மாமரத்தின் கீழ் முனிவர் ஒருவர் தவம் செய்துக் கொண்டிருந்தாராம். மரத்தில் ஒரே ஒரு மாங்கனி இருந்தது.

திரௌபதி கேட்டதால் அர்ச்சுனன் பறித்துத் தர; முனிவ்ரின் சாபத்திற்கு பயந்து அனைவரும் கண்ணனை வேண்ட; கீழே விழுந்த மாங்கனி மீண்டும் உயரே சென்று மரத்தில் பொருந்தியதாம். இவ்வாறு மாங்கனி விழுந்து எழுந்தமையால் விழுந்த எழுந்த மாவடி அல்லது மாவடு எனப் பெயர் பெற்றது.

மாதிரி மங்கலம்

'மதுரை கொண்ட சதுர்வேதி மங்கலம்' என்னும் கல்வெட்டுப் பெயரே, வழக்கில் சில மாற்றங்களைப் பெற்று, திரிந்து மாதிரிமங்கலம் என வழங்குகிறது எனத் தோன்றுகிறது. மா+தீரர்+மங்கலம், மா–பெரிய, தீரர்–சிறப்பு மிக்க வேளிர், மங்கலம்–சமயம் வளர்த்த ஊர் என்று பொருள்படுகிறது. இதுவே நாளடைவில் மாதிரி மங்கலம் என்று வழங்கப்படுகிறது.

அதிராம்பட்டிணம்

அதிவீரராமபாண்டியனுடைய பெயரினை உடையது என்பர். அதிரை என்று சுருக்கமாக வழங்கப்படும்.

அம்பர் மாகாளம்

அம்பன் அம்பாசூரன் என்ற இரு அரக்கர்களைக் கொன்று பாவம் போக காளிபூசித்ததால் பெற்ற பெயர் என்பர். கோயில் மாகாளம் என்பது வேறு பெயர். மாகாளன் என்ற முனிவர் வழிபட்டதால் பெற்ற பெயர் எனவும் உரைப்பர், கல்வெட்டு 'உய்யக்கொண்ட வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் திருமாகானம்' எனவும் 'பூபாலகுலவல்லி வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் திருமாகானம்' என்னவும் குறிப்பிடுகிறது.

ஆயக்காரன்புலம்

ஆயக்காரர்கள் (வரிவசூலிப்பவர்) வாழ்ந்த இடமாதலால் பெற்ற பெயர் என்பர். ஆயர்கள் எனும் கால்நடை மேய்ப்போருக்கு வழங்கப்பட்ட ஊர் எனும் பொருளில் வழங்கப்படுகிறது. அதாவது மந்தைவெளி என்பதே இங்கு ஆயக்காரன்புலம் என வழங்கப் படுகிறது.

எழுமகளூர்

ஏழு+மகளிர்+ஊர் என்பதே இவ்வாறு சுருக்கம் பெற்றுள்ளது. வடமொழியில் சப்தமாதர் என்றும், தமிழில் தாய்மார் எழுவர் என்றும் கூறுவர். இது கிராம தேவதை வழிபாடு கூறுவது. பிடாரி கோயில், கன்னியர் கோயில் என்றும் கூறுவர். வடக்கு திசை நோக்கிய காவல் தெய்வம் குழு உள்ள ஊர் என்று இதற்கு பொருள் உண்டு.

உச்சிக்கட்டளை

வேதாரண்யம் கோயில் உச்சிக்கட்டளை வழிபாட்டின் பொருட்டு மானியமாக வழங்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

குண்டையூர்

ரிஷபம் பூஜை செய்தால் குண்டையூர் (ரிஷபம்) எனப்பட்டது. அதாவது திமில் எனும் கொண்டை காளைக்கு உண்டு. அதனால் கொண்டையூர் என்பது மருவி குண்டையூர் என ஆகியிருக்கலாம்.

குறிச்சி–கொள்ளிடக்கரை அரண்மனை

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இக்குறிஞ்சி நிலத்து மக்கள் வாழ்ந்த பகுதி குறிச்சி ஆயிற்று. பின்னாளில் இவ்வினப் பாகுபாடு இன்றி பல இனத்தவர்களும் சேர்ந்து வசிக்கும் பகுதிகள் சிற்றூர்கள் குறிச்சி எனப்பட்டன. ஆனால் குறிச்சி என்பது சிற்றரசர்கள் வாழ்வதற்கு ஏற்றபடி எழிலான அரண்மனை அமைந்ததாகும்.

சித்தன்வாழூர்

சித்தர்கள் வாழ்ந்த இடம் என்பதால் பெற்ற பெயர். அகத்தியர் இங்கு தங்கியிருந்தார் என்பர். அவரால் உருவாக்கப்பட்ட தி அகத்திய நதி எனப்படும். சித்தர்காடு என்பதும் இப்பொருளுடையதேயாகும்.

செம்பனார்கோயில்

செம்பொன்பள்ளி என்பதே இவ்வாறு மாறியது. இந்திரபுரி, ஸ்கந்தபுரி என்பன வேறு பெயர்கள். சமணர்கள் வாழ்ந்த பகுதி. செம்பொன்மேனியர்–சிவபெருமான் கோயில் கொண்டுள்ள இடம்.

கருவந்திபுரம் (கருவி)

கரிகால் சோழவேந்தன் நாதபுரம் என்பது இதன் தொன்மையான முழுப்பெயர். நாளடைவில் கரிகால் வேந்து நாதபுரம் ஆகி, சுருங்கி கருவேந்துபுரம் என்று ஆனது. பிறகு கருவந்திபுரம் ஆனது. தற்போது மிகவும் சுருக்கி கருவி என்றே வழங்குகின்றனர்.

செம்பியன்மாதேவி

சோழமாதேவியான செம்பியன் மாதேவியார் பெயரால் ஏற்பட்டது. இவ்வம்மையார் இவ்வூர்க் கோயிலைக் கற்றளி ஆக்கி உள்ளார். இவருக்கு தனிச்சன்னதியும், உருவச்சிலையும் உள்ளது. இது கல்வெட்டில் செம்பியன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கப் பெற்றுள்ளது.

திருக்கடைமுடி

இன்று இவ்வூர் கீழையூர் என்று வழங்கப் பெறுகிறது. மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்தது. காவிரியாற்றின் கடைமுடியில் இவ்வூர் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றதென்பர். பாடல் பெற்ற திருத்தலம்.

திருக்கருப்பறியலூர் (இருள் அகற்றும் ஊர்) தலைஞாயிறு

திரு–மதிப்புச்சொல், கரு–தலை, பறியல்–பரித்தது, ஊர்–நிகழிடம். பிறவிப் பிணி நீக்குதலால் பெற்ற பெயர். கன்மம் கொடுத்தலால் கன்மநாசபுரம் எனவும், சூரியன் வழிபட்டதால் தலைஞாயிறு எனவும், முல்லை தலவிருட்சம் ஆதலால் யூதிகாவனம் எனவும் வழங்கப்படும்.

திருக்காட்டுப்பள்ளி

இது மேலைத்திருக்காட்டுப்பள்ளி என்று வழங்கப்படும். இப்பெயருடன் காவிரிப்பூம்பட்டினத்தின் அருகே ஒரு ஊர் இருப்பதால் அதிலிருந்து இதனைப் பிரித்தறிய, இதனை மேலைத் திருக்காட்டுப்பள்ளி எனவும், மற்றதை கீழைத்திருக்காட்டுப்பள்ளி எனவும் வழங்குவர். காவிரியிலிருந்து பிரியும் குடமுருட்டி ஆற்றின் கரையில் அவ்வூர் உள்ளது.

திருச்சாய்க்காடு

தற்போது சாயாவனம் எனப்படுகிறது. ஆதிசேடனது நாகமணி ஒளி வீசியதால் பெற்ற பெயர். ராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டிணத்துத் திருச்சாய்க்காடு என்பது கல்வெட்டுப் பெயர். சாய்–கோரை. கோரைக் காடு ஆதலால் பெற்ற பெயர் ஆகும்.

திருச்செங்காட்டங்குடி

விநாயகர் கஜமுகாசூரனைக் கொன்றபோது இரத்தம் பெருகிப் பரவியதால் செங்காடு, செங்காட்டங்குடி எனப்பட்டது. 'கரியமாணிக்க வளநாட்டு மருகல் நாட்டுத் திருச்செங்காட்டங்குடி' என்பது கல்வெட்டுப் பெயர். திரு+செங்காடு+குடி என்பது ஊர் அமைப்பு. பரஞ்சோதியாருக்கு செங்காடன் என்ற குடி மரபு பெயர் உண்டேன்பர். எனவே இப்பெயர் வழங்கப்படுகிறது.

திருத்தேவூர்

தேவர்கள் பூசித்தமையான் பெற்ற பெயர் என்பர். அருள்மொழி தேவ வளநாட்டுத் தேவூர் நாட்டுத் தேவூர் என்பது கல்வெட்டுப் பெயர்.

திருநல்லம்

மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்தது. கோனேரிராசன் கோனேரின்மை கொண்டான் என்ற மன்னன் பெயரால் கோனேரிராசபுரம் என்றும் வழங்குகிறது. கோயிலில் ஓவியங்கள், கல்வெட்டுகள் மற்றும் சிற்பங்களின் சிறப்புடையது. இவ்வூர்க் கல்வெட்டுகளில் இக்கோயிலைக் கண்டராதித்தச் சோழன் மனைவியார் செம்பியன் மாதேவியார் கருங்கற் பணியாகக் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலில் இவ்விருவர் உருவச்சிலைகளும் உள்ளன. திரு–அடைமொழி, நல்லம் என்பது நன்செய் நிலம் செழிப்புடைய ஊர் என்ற பொருளில் உள்ளது.

திருப்புகலூர்

ஆன்மாக்கள் இறைவனிடம் புகலடைந்தமையால் பெற்ற பெயர் எனக் கூறுவர். சரண்யாபுரம் எனவும் கூறுவர். 'பனையூர் நாட்டுப் பிரம்மதேயமான திருப்புகலூர்' என்பது கல்வெட்டுப் பெயர். திரு+புகல்+ஊர் திரு–அடைமொழி, புகல்–விரும்பி உறையும் இடம், ஊர்– மக்கள் வாழ்விடம்.

திருமெய்ஞானம்

இவ்வூர்த் திருக்கடவூர் மயானம் என்றும் அழைக்கப்பெறும். சிவபெருமான் காலனை கோபத்தால் அழித்து நீராக்கிப் பின் மீண்டும் உயிர்ப்பித்த இடமாதலின் மயானம் என்றும், திருக்கடவூரின் அருகே உள்ளதால் திருக்கடவூர் மயானம் என்று பெயர் பெற்றது என்பர். காலப்போக்கில் – பேச்சு வழக்கில் திருமெய்ஞ்ஞானம் என்று திரிந்து வழங்கியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. தேவாரத்தில் கடவூர் – மயானம் என்றே வருகிறது.

திருவல்லம்

வல்லாளன் வழிபட்டமையால் பெற்ற பெயர். இறைவன் வல்லநாதர் ஆகையால் பெற்ற பெயருமாம். தீக்காளி வல்லம் எனவும் அழைக்கப்படுகிறது.

திருவன்னியூர்

இன்றைய பெயர் பொன்னூர். அன்னி என்னும் குறுநிலத் தலைவன் வாழ்ந்த ஊர் ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர். விகுசாரண்யம், பாஸ்கர சேத்திரம் என்பன வேறு பெயர்கள். வன்னி – நெருப்பு அக்னி தேவன் வழிபட்டமையால் பெற்ற பெயர் எனவும் உரைப்பர். தமனியப்பதி எனவும் வழங்கப்படும்.

திருவாலங்காடு

ஆலங்காட்டால் பெற்ற பெயர். 'வடகரை மணவிற் கோட்டத்து மேல்மாலை பழையனூர் நாட்டுத் திருவலங்காடு' என்பது கல்வெட்டுப் பெயர். திரு–அடைமொழி, ஆலமரங்கள் நிறைந்த வாழ்விடம்.

தென் திருமுல்லைவாயில்

முல்லை தலவிருட்சம் ஆனதால் பெற்ற பெயர். சென்னை அருகே வடதிருமுல்லை வாயில் என்று ஒன்று உள்ளது. எனவே இவ்வூர் தென் திருமுல்லைவாயில் என்று அழைக்கப்படுகிறது.

நெய்விளக்கு

வேதாரண்யம் கோயில் விளக்கு எரிப்பதற்கென்று இவ்வூரில் இலுப்பை மரங்கள் வளர்க்கப்பட்டு மானியமாக விடப்பட்டமையின் பெற்ற பெயர் ஆகும்.

பஞ்சநதிக்குளம்

பஞ்சபாண்டவர்கள் வசித்தமையால் பெற்ற பெயர் என்பர். ஐந்து சிறுகுளங்கள் உள்ளமையாலும் பெற்ற பெயர் ஆகும். புனிதமான ஐந்து நதிகளின் தீர்த்தம் சேர்ந்த திருக்குளங்கள் உள்ள ஊராகும்.

மாதேவப்பட்டிணம்

மகாதேவப்பட்டிணம் என்பதே மாதேவப்பட்டினம் எனப்படுகிறது. தஞ்சை மராட்டியர் துளசாஜி வழியில் வந்த அரசன் ஒருவரால் கோயிலும் அரண்மனையும் கட்டி வாழ்ந்தமையால் பெற்ற பெயர் ஆகும்.

வழுவூர்

வழு–யானை, கூர்–இரு கூராக கிழித்துப் போர்த்திய தலம். வழுவூர் அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. சிவன், கஜமுகாசுரன் எனும் அரக்கனை (யானையை) கிழித்து போர்த்திய தலம். கல்வெட்டில் வழுகூர் என்று பெயர் கூறப்பட்டுள்ளது.

திருவேள்விக்குடி

சிவபெருமானது திருமணம் நடைபெற்போது வேள்வி நடந்தமையால் பெற்ற பெயர். அம்பிகைக்கு கங்கணதாரணம் செய்த தலமாதலின் 'கௌது காவந்தன சேத்திரம்' என வடமொழியில் குறிப்பர். சோழ அரசன் தனது நோய் தீர இக்கோயிலுக்கு வந்து வேள்வி செய்வது புடைப்புச் சிற்பமாகவும் உள்ளது.

16. முக்கியமான சுற்றுலாத் தலங்கள்

வரலாறு படைத்த தரங்கம்பாடி

சங்க இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு முதலியன இவ்வூரை பொறையாறு என்று குறிப்பிடுகின்றன. பொறையாற்றுப் பெரியன்கிழான் என்பவன் இப்பகுதியை ஆண்டதாக செய்தி கூறுகின்றது. சங்க காலத்திலேய இவ்வூர் ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியது என்பதை புறம் 391–ஆவது பாடல்வழி அறிந்து கொள்ளலாம்.

இவ்வூரில் மணிவர்ணீச்சுரர், மாசிலாநாதர் என்ற சிவன் கோவில்கள் உள்ளன. கி.பி.6–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் நாவுக்கரசர். இவர் தரங்கை கடலோரம் கோயில் கொண்டுள்ள மாசிலாநாதரை 'அளப்பூர் அம்மானே' என ஊர்த்தொகை பாசுரத்தில் பாடியுள்ளார்.

கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் தற்போது வழங்கி வரும் தரங்கம்பாடி, சடங்கன்பாடி என்ற பெயர் வழங்கி இருந்ததை தரங்கம்பாடி மாசிலாநாதர் கோயில் குலசேகரபாண்டியன் கல்வெட்டால் அறியலாம். சடங்கன் என்பது சிவபெருமானின் திருப்பெயர்களில் ஒன்றாகும். வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம் கோயிலில் எழுந்தருளியிருந்த இறைவன் பெயரால் இவ்வூர் சடங்கன்பாடி என்று பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தரங்கம்பாடி கோட்டை மதிலுக்கு உட்புறம் அமைந்துள்ள கட்டடங்களும் வீதிகளும் டேனிஷ் கட்டட கலைப்பாணி அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. இராணி வீதி, இராஜா வீதி, அட்மிரல் வீதி, பர்கன் தெரு முதலியன அக்காலத்திலேயே சூட்டப்பட்ட பெயர்களாகும்.

தரங்கம்பாடி வருவோர் ஒரு பிரமாண்ட நுழைவாயிலைக் கடந்து தான் உள்ளே வரவேண்டும். ஏழாம் கிருஷ்டியானின் ஆட்சி காலத்தில் கி.பி.1792–ஆம் ஆண்டு இம்முகப்பு வாசல் கட்டப்பட்ட தாகும். இவ்வாயில் பெரிய கதவுகளோடு இன்றும் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இது மத்திய அரசின் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

புதிய ஜெருசலேம் தேவாலய வளாகத்தில் பாரர்குருண்வர், ஜே.பி.பாப்ரி சியஸ், (1740–42) ரோப்பர் பொன்நோகின் கல்லறை உள்ளன. தேவாலயத்திற்கு முன்புறம் அமைந்துள்ள கட்டடமும் புகழ்பெற்ற நினைவுச்சின்னமாக விளங்குகிறது. இக்கட்டடம் 1700 முதல் 1825 வரை டேனிஷ் திருச்சபைக்கு சொந்தமாக இருந்தது. இறுதியாக இக்கட்டடம் லுத்தரன் திருச்சபைக்கு மாற்றினர். இவர்கள் இதை சீகன்பால்கு ஆன்மீகத் திருச்சபையாக மாற்றியுள்ளனர்.

கி.பி. 1784–ஆம் ஆண்டு டேனிஷ் அரசு கோட்டைக்கு முன்புறம் ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கியது. இந்த வீடே கவர்னரின் வீடாக 1845 வரை இருந்து வந்தது. தற்போது இக்கட்டடம் புதுப்பிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை வசம் உள்ளது. டேனிஷ் ஆட்சிக்காலத்தில் இறந்துவிட்ட வீரர்கள், நிர்வாகிகள், படை அதிகாரிகள், படைத் தலைவர்கள் முதலியோரை அடக்கம் செய்த டேனிஷ் கல்லறைகள் காணக்கூடிய முக்கிய இடமாகும்.

இன்று தரங்கம்பாடிக்கு டேனிஷ் கோட்டை கம்பீரமாக நின்று பெருமை சேர்க்கின்றது. இக்கோட்டையின் வாயில் வடக்கு நோக்கி உள்ளது. கோட்டையின் உள்ளே நுழைந்தவுடன் கிழக்கு நோக்கி 3 அறைகள் உள்ளன. கீழ்தளத்தில் மேற்கு நோக்கி மூன்று பெரிய அறைகளும் வடக்கு நோக்கி 4 அறைகளும் உள்ளன. இவைகள் சரக்குகளை பாதுகாத்து வைக்கும் கிடங்குகளாக இருந்தன. கோட்டையின் மைய மண்டபத்தின் முன்பகுதியில் சலவைக்கல் பதிக்கப்பட்டு, அதில் இக்கோட்டையைக் கட்டிய விபரம் 1620 டேனிஷ் கப்பல்படை தளபதி ஓவ்கிட்டி என்ற விபரத்தைத் தெரிவிக்கின்றது.

1845–ஆம் ஆண்டு பிப்ரவரி 22–ஆம் நாள் இந்தியாவிலுள்ள டேனிஷ் சொத்துக்கள் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு மாற்றம் செய்ய ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி அனைத்து பொது கட்டிடங்களும், அரசு சொத்துக்களும் 12,50,000/– க்கு பேசி கம்பெனி ரூபாய்க்கு பிரிட்டிஷாரிடம் விற்பனை செய்யப்பட்டது.

தரங்கம்பாடி கோட்டையின் உள்ளே தரங்கம்பாடியின் வரலாறு, வெளிநாட்டு வாணிபதொடர்பு மற்றும் டேனிஷ் கால தொல்பொருட்கள் காட்சியகமாக வைக்கப்பட்டுள்ளன. இது டேனிஷ் வரலாற்றை படிக்கும் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பெரும்பங்கு வகிக்கின்றது. வெளிநாட்டினரும் இந்த அருங்காட்சியகத்தை கண்டுகளிக்க தினசரி வந்தவண்ணம் உள்ளனர்.

தரங்கம்பாடி கடற்கரையில் அமைந்துள்ள டேன்ஸ்பர்க் கோட்டை 1977–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப் பட்டது. 1979–ஆம் ஆண்டில் இக்கோட்டையில் அகழ்வைப்பகம் (காட்சிக்கூடம்) ஒன்று அமைப்பதற்கான முயற்சி தொடங்கிற்று. தரங்கம்பாடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து டேனிஷ் நிர்வாகக் காலத்தில் வெளியிடப்பட்ட இந்தோ–டேனிஷ் காசுகள், 18,19–ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த காகிதத்திலும் ஓலைச்சுவடி களிலும் அமைந்த ஆவணங்கள், தரங்கம்பாடித் துறைமுகத்தில் இயங்கிய கப்பல்களின் பாகங்கள் ஆகிய அரும்பொருள்கள் சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டன.

ஓலை ஆவணங்கள்

1979–ஆம் ஆண்டுகளில் தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகத்திற்காகச் சாத்தங்குடி, காட்டுச்சேரி ஆகிய ஊர்களில் கிராம முன்சீப் அல்லது பட்டாமணியம் போன்ற செல்வாக்கு மிக்க பதவி வகித்த குடும்பங்களைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி செட்டியார், திரு. இராஜகோபால் செட்டியார் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஓலை ஆவணங்கள் சராசரியாக 40 செ.மீ. நீளம், 3 செ.மீ. அகலம் உடைய தனித்தனி ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன. இவை, கடன் கொடுத்தல், வாங்குதல், பண்ணைக் கூலி ஒப்பந்தம், பொருள்களை விற்றல், வாங்குதல் போன்ற தனிப்பட்ட மனிதர்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்களாகும். அரசியல் வரலாற்று முதன்மையேதும் இவற்றில் இல்லை. ஆயினும், கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த சமுதாய நடைமுறைகள், பத்திரப் பதிவு மொழிநடை, சொல்வழக்குகள் போன்றவற்றை ஆய்வு செய்ய இவை பயன்படும். இச்சுவடிகள் அனைத்திலும் ஆண்டு பற்றிய விவரம் தமிழ் எண்களில் தரப்பட்டுள்ளது. எனினும் கிறிஸ்துவ சகாப்த ஆண்டே குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய நிர்வாகத்தின் தாக்கத்தால் நிகழ்ந்ததென்பது தெளிவாகும். ஓலைச்சுவடியில் பத்திரம் எழுதுவதற்குரிய மொழி நடையில், உரிய தொழில்நுட்பச் சொற்களைப் பயன்படுத்தி எழுதும் ஆற்றலும் அனுபவமும் படைத்தோரே இவ் ஆவணங்களை எழுதியுள்ளனர். ஒவ்வோர் ஏட்டிலும் 'நெட்டெழுத்து உள்பட' இன்னார் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது என்று விபரம் காணப்படுகிறது.

19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் ஆளுகைக்குள் வந்துவிட்டது. உலகளவில் இங்கிலாந்துக்குச் சமமான ஒரு பேரரசாக உருவாக முடியும் என்ற கனவு பிரான்சு நாட்டுக்கு மட்டுமே இருந்தது. நெப்போலியன் என்ற மாவீரனின் தலைமையில் பிரான்சு நாடு ஆற்றல் வாய்ந்த அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. தமிழகத்தில் தரங்கம்பாடியை அடுத்துத் தெற்கில் 14 கி.மீ. தொலைவிலிருந்த காரைக்கால், பிரெஞ்சு அரசின் ஆளுகையிலிருந்தது. எனவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி, தரங்கம்பாடியிலிருந்த டேனிஷ் ஆளுநரின் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கிற்று. ஆங்கிலேயரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டே டேனிஷ் ஆளுநர்கள் செயல்பட வேண்டிய நிலையிலிருந்தனர். 1815–இல் நெப்போலியன் வீழ்த்தப்பட்ட பின்னர் ஆங்கிலேயரின் கண்காணிப்பு சற்று குறைந்தது என்றாலும், தரங்கம்பாடியையும் சுற்றுப்புறச் சிற்றூர்களையும் மட்டும் நிர்வகிப்பதில் லாபம் ஏதும் இல்லை என்பதை டேனிஷ் ஆளுநர்கள் புரிந்து கொண்டனர். 1845–இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி தரங்கம்பாடியை டேனிஷ்காரர்களிடமிருந்து முழுமையாக விலைக்கு வாங்கித் தனது ஆட்சிப்பகுதிக்குள் இணைத்துக் கொண்டது என்றாலும், 1815–ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலேய நிர்வாக நடைமுறைகள் தரங்கம்பாடியில் பின்பற்றப்படத் தொடங்கின. ஆவணங்களில் இதன் பிரதிபலிப்பு உள்ளது.

பழையார்

நாகை மாவட்டத்தில் வங்காள விரிகுடா கடலில் கொள்ளிடம் ஆறு கலக்கும் இடத்தில் இருக்கும் இயற்கை மீன்பிடி துறைமுகம் பழையாறு. சாதாரணமாக இருந்த இந்த துறைமுகத்தை 1986–ஆம் ஆண்டு சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் நவீன துறைமுகமாக அரசு உருவாக்கியது.

தெற்கே சந்திரபாடி முதல் வடக்கே கொடியம்பாளையம் வரையிலான அனைத்து மீனவ கிராமங்களுக்கும் பழையாறு துறைமுகம்தான் பாதுகாப்பான இடம். மற்ற இடங்களில் அலைகள் அதிகமாக இருப்பதால் அவை படகுகளைச் சேதப்படுத்தி விடுவதால் இங்கு கொண்டுவந்துதான் படகுகளை நிறுத்துவார்கள். ஒரே நேரத்தில் 500–க்கும் மேற்பட்ட படகுகளை இங்கு நிறுத்தி வைக்க

முடியும். தினந்தோறும் 5 ஆயிரம் பேர் நேரடியாக மீன்பிடித் தொழிலிலும், 5 ஆயிரம் பேர் அதை சார்ந்த தொழிலிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடலூர். நாகப்பட்டினம் துறைமுகங்களில் இருபுறமும் கருங்கல் சுவர் எழுப்பி பாதுகாத்து வருகிறார்கள். மீன் பொருட்கள் விற்பனையாகும் ஒரு பெரிய படகுத்துறையாகவும், நாகையின் சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாகவும் பழையார் உள்ளது.

நாகையின் வரலாற்றுக் கருவூலம்

தமிழ்நாடு அரசின் அருங்காட்சியகத்துறை மாவட்டங்கள் தோறும் அருங்காட்சியகங்கள் அமைத்து வருகிறது. புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சி, வேலூர், ஈரோடு,ஊட்டி, கடலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கிருட்டிணகிரி, பழனி, சிவகங்கை, திருவாரூர் ஆகிய மாவட்ட அருங்காட்சியகங்கள் பல்நோக்கு அருங்காட்சியகங்களாகச் செயல்பட்டு வருகின்றன. அவ்வரிசையில் நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் பதினாறாவது ஆகும்.

மாவட்டத்தின் கலை, பண்பாடு, அறிவியல், இயற்கைவளம் தொடர்பான பொருட்களைச் சேகரித்துப் பேணி, காட்சியிலமைத்து பார்வையாளர்களுக்கு அறிவூட்டும் ஒரு சார்புக் கல்வி நிறுவனமே அருங்காட்சியகம். இதனோடு நின்று விடாமல் பல்வேறு நிகழ்ச்சிகள் வழி கல்வித் தொண்டாற்றுவதே அருங்காட்சியகத்தின் நோக்கமாகும்.

மாவட்ட அருங்காட்சியகம் நாகப்பட்டினத்தில் 35 முதல் வரிசைக் கடற்கரைச் சாலையிலுள்ள கட்டடத்தின் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஓர் பல்நோக்கு அருங்காட்சியக மாகையால் மாவட்டத்தின் முக்கிய இடங்கள், தொடர்பான புகைப்படங்கள், தொல்லியல், மானிடவியல், கலை, நாணயவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், வேதியியல் தொடர்பான காட்சிப் பொருட்கள், புகைப்படங்கள் தொல்பொருள் பிரிவின் கீழ் படிமங்கள், உலோகப் பொருட்கள், கற்சிற்பங்கள், மரச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இது தவிர மரசிற்பங்கள் தனி பிரிவாக இடம் பெற்று உள்ளது. நாகப்பட்டினத்தில் வெளிநாட்டு நாணயமாக உரோமப் பொன் நாணயங்கள் கிடைத்துள்ளன. மராத்தியர் காலத்தில் பணம், சக்கரம்,

வராகன் முதலியன வெளிவந்து நாகப்பட்டினத்தில் புழக்கத்தில் இருந்தன. டச்சுக்காரர்கள் பழவேற்காட்டிலும் நாகப்பட்டினத்திலும் நாணயங்களை அச்சிட்டனர். நாகையில் நாணயசாலை அமைந்த இடம்தான் இன்றும் நாணயக்காரத் தெரு என்று அழைக்கப்படுகிறது. இங்கு பொன், வெள்ளி, செம்பு, ஈயக்காசுகள் அச்சாகி உள்ளன.

பூம்புகாரின் பழங்காலப் பெருமை

கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகள் முன்பாகவே தமிழகத்தை ஆட்சி புரிந்த சேரர், சோழர், பாண்டியர், அதியர் போன்ற மரபு மன்னர்கள் வரிசையில் தலையாய இடம் பெற்ற சோழர்களின் தலைநகரமாக விளங்கியதே பூம்புகார் எனும் காவிரிப்பூம் பட்டினமாகும். புகார் என்பது ஆறு கடலில் சங்கமமாகும் இடத்தைக் குறிப்பதாகும். காவிரிப்பூம்பட்டினம் எனும் இக்கடற்துறைநகரம் காகத்தி, சம்பாபதி, பலர்புகழ்மூதூர், மண்ணகத்துவான்பதி, சோழபட்டினம் சபேரிஸ்எம்போரியம், கோலப்பட்டினம் என்ற பல பெயர்களால் பழம்பெரும் நூல்களிலும், கல்வெட்டுகளிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

தமிழ் நூல்களான அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, பதிற்றுப்பற்று, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர்புராணம், நந்திக்கலம்பகம் ஆகியவற்றிலும், பிராகிருத நூல்களான மிளிந்தபண, புத்த ஜாதகக் கதைகள், அபிதம்மாவதாரம், புத்த வம்மசாத்தா என்பனவற்றிலும், அயல்நாட்டு நூல்களான பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய், தாலமி எழுதிய பூமிநூல், பிளினி எழுதிய நூல் ஆகியவற்றிலும், வட இந்தியாவில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பார்ஹீதி எனும் இடத்தில் பொறிக்கப்பெற்ற பிராமி கல்வெட்டிலும் பூம்புகாரை அடுத்துள்ள சாயாவனத்து கல்வெட்டுகளிலும் இந்நகரம் பற்றிய பல தொன்மையான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவை சங்க மன்னர்கள் ஆட்சி செய்த போது எழில் வாய்ந்த சிற்பத்தூண்கள் கொண்டு பௌத்தஸ்தூபம் ஒன்றினை கட்டுவித்தனர். அதற்குரிய தூண் ஒன்றினை பூம்புகாரில் (காகத்தி) வாழ்ந்த கோமா என்ற பிக்குணி (பௌத்த பெண் துறவி) தானமாக அளித்தாள். அதனை அத்தூணில் உள்ள கல்வெட்டு, 'காகந்தியா சோமாய

பிச்சுனியாதானம்' என்று கூறுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பௌத்தம் தழைத்த பெருநகரமாகவும் பூம்புகார் திகழ்ந்திருக்கிறது.

தொடித்தோட் செம்பியன் காலத்தில் இந்திரவிழா சிறப்பாக நடந்தது. பின்பு வந்த பிற்காலச் சோழர்கள் காலத்திலும் இந்திரவிழா சிறப்புற நடந்ததை திருவெண்காட்டில் உள்ள கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன. சங்ககால சோழர்களுக்குப் பின்பு களப்பிரர் ஆட்சிக் காலத்திலும் பூம்புகார் நகரம் முக்கியத்துவம் பெற்று திகழ்ந்தது. கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் பல்லவர்களாலும் இந்நகரம் பாங்குற போற்றப் பெற்றது. அப்பரும், திருஞான சம்மந்தரும் இந்நகரைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளனர்.

கி.பி. 850–இல் பிற்காலச் சோழர்கள் தழைத்தபோது பூம்புகார் நகரம் மீண்டும் பொலிவு பெற்றது. காவிரிபூம்பட்டினத்து சாயாவனம் கோயிலிலுள்ள இராஜராஜசோழனது கல்வெட்டில் இவ்வூர் ''இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டு காவிரிப்பூம்பட்டினம்'' என்று குறிக்கப்பெற்றுள்ளது. விக்கிரம சோழனது கல்வெட்டு 'புகார் நகரம்'' என்று கூறுகின்றது. பின்னர் வந்த கோப்பெருஞ்சிங்கனும் இந்நகரைப் போற்றியுள்ளான்.

கோடியக்கரை சரணாலயம்

கடற்கரை மாவட்டமான நாகையின் கடைக்கோடியில் இருக்கும் சொர்க்கம் கோடியகரையும், கோடியகாடும். ஒரு காலத்தில் ஒரு புறம் நெல் விவசாயம்; மறுபுறம் உப்பு வளம்கொழிந்த கோடிய காடு. அதில் வண்ணச்சிறகுகளை விரித்து பறந்த பறவைகள், டால்பின்களும், சுறாக்களும், இறால்களும் துள்ளிக் குதித்த கடற்கரை, சோழன் கட்டிய கலங்கரை விளக்கம், வெள்ளைக்காரன் கட்டிய வெங்கரை விளக்கும் ஒளி வீசிய காலம் முடிந்துபோன காலம். இப்போது இவற்றுக்கு நேர்மாறாக பொலிவிழந்திருக்கின்றது. வேதாரண்யத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த கோடியக்காடு ஒரு காலத்தில் வேடந்தாங்கலுக்கு அடுத்த பறவைகள் சரணாலயமாக புகழ்பெற்று விளங்கியது. பரந்து விரிந்த கடற்கரை காடுகள் மேலைநாடுகளில் உள்ளதை போல இங்கு இயற்கையாகவே அமைந்து புகழ்பெற்ற சதுப்புநில காடுகளில் இதுவும் ஒன்று.

கோடியக்கரை பகுதியில் அரிதாகக் காணப்படும் வெளி மான்களின் பாதுகாப்பிற்காக 1967–ஆம் ஆண்டு இது சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. இந்த சரணாலயத்தில் 2000க்கும் மேற்பட்ட வெளி மான்களும், புள்ளிமான்களும் உள்ளன. வெளிமான்கள், திருகு கொம்பு மான்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பல்வேறு வகையான விலங்கினங்கள் இங்கு வாழ்கின்றன. ரஷ்யா, சைபீரியா, டெக்ரான், ஈரான், இலங்கை, ஆஸ்திரேலியா, இமயமலை ஆகிய பகுதியிலிருந்து பறவைகள் இங்கு வந்து செல்கின்றன. பூநாரை, செங்கால்நாரை, நத்தைகொத்தி நாரை, கருங்கழுத்து நாரை, கூழைக்கடா, கரண்டி மூக்கு நாரை, ஊசி வால் குருவி, நீர் காகம், சாம்பல் நாரை, கரிச்சான் குருவி, மீன்கொத்தி, தேன்சிட்டு ஆகிய பல்வேறு பறவை இனங்கள் இங்கு வருகை தருகின்றன.

அக்டோபர் முதல் மார்ச் வரை பறவைகள் வருகைதரும் பருவகாலம் ஆகும். தொன்மையான சோழர்கால கலங்கரை விளக்கம் செங்கல் சுதையால் ஆனது. ராமர் பாதம், மூலிகைப் பண்ணை ஆகியவையும் இங்கு அமைந்துள்ளன. சோழர் காலத்தில் தமிழகத்தில் கட்டப்பட்ட முதல் கலங்கரை விளக்கம் இது. இரவில் பெருந்தீபம் ஏற்றியும், மரக்கட்டைகள் போட்டு எரித்தும் வெளிச்சம் காட்டியுள்ளனர் என்பதும் தெரிகிறது. கடல் அலைகளின் தாக்கத்தால் இதுவும் அழியும் நிலையில் உள்ளது.

பழைய தகவல்களின் அடிப்படையில் சில வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வருகிறார்கள். ஆனால் இங்கு அவர்களுக்கு தேவையான தங்குமிட வசதியோ வாகன வசதியோ பாதுகாப்போ இல்லாததால் வந்த வழியே திரும்பி போய்விடுகிறார்கள்.

இதுமட்டுமல்லாது 500 ஏக்கர் பரப்பளவில் உள்ள வனவிலங்கு சரணாலயத்தில் முன்பு நூற்றுக்கணக்கான விலங்கு வகைகள் இருந்தது. இப்போது மானும். நரியும் குதிரையும் மட்டுமே காணப்படுகிறது.

17. மும்மதங்களின் சங்கமம்

கிருஸ்தவம்

வங்க கடலோரம் தாய்

இந்தியாவின் கீழ்த்திசை முழுவதையும் தன் அலை கைகளால் தழுவிக் கொண்டிருக்கும் வங்க கடலின் விரல் புள்ளியாய் இருப்பது வேளாங்கன்னி. வேளாள மரபினர் வாழ்ந்து வந்த குக்கிராமம். பகல் முழுவதும் விவசாய பணிகள். மாலையில் கடல்காற்று வீசும் சுகம். இரவில் தூக்கம் என்று வாழ்ந்த மக்கள் அப்போது அறிந்திருக்கவில்லை இந்த குக்கிராமம் உலகம் போற்றும் ஒரு புனித தலமாக மாறுமென்று.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வேளாங்கன்னி அண்ணாப்பிள்ளை வீதியில் ஒரு குளமும் அதன் கரையில் ஒரு பெரிய ஆலமரமும் இருந்தது. இந்த ஊர் வழியாக செல்லும் பயணிகளுக்கு அதுதான் ஒரு ஓய்வு விடுதியை போல குளத்து நீரைக் குடித்து விட்டு ஒரு குட்டி தூக்கம் போட்டு விட்டு செல்வார்கள். அப்படிதான் சிறுவன் ஒருவனும் நாகையில் உள்ள பண்ணையார் ஒருவருக்கு இந்த வழியாக பாலெடுத்து செல்வது வழக்கம். ஆனால் அந்த மரத்தடியில் அவன் ஒதுங்குவதில்லை. வழக்கம்போல் ஒரு நாள் செல்லும்போது ஏனோ அவனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. சூரியனின் உக்கிரம் அவனைத் தாக்க குளத்து மரத்தடியில் தூங்கிவிட்டான்.

சிறிது நேரத்தில் அவனுக்கு தூக்கம் கலைந்தபோது அவன் கண்ட காட்சி அவனை ஆச்சரியமும் திகிலும் அடைய செய்தது. ஏதும் பேச இயலாதவனாக திகைத்தான். விண்ணில் இருந்து இறங்கிய தேவமங்கை ஒருத்தி தனது கையில் ஒரு அழகான ஆண்குழந்தையுடன் நின்று கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் பிரகாசமாக சுழன்று கொண்டிருந்தது.

தெய்வ உருவாகக் காட்சியளித்த அந்த தாய் சிறுவனிடம் என் மகனுக்கு பால் தருவாயா? என்று அன்பு பொங்க கேட்டாள். அந்த சிறுவனோ தயக்கம் ஏதும் காட்டாமல் அப்படியே பால்செம்பை மாதா கையில் கொடுத்தான். அதை மாதா தன் மகனுக்கு ஊட்டி மகிழ்ந்தாள்.

பால் குடித்தவுடன் அந்த காட்சி மறைந்துவிட்டது. இந்த நிகழ்ச்சியை அந்த சிறுவன் பண்ணையாரிடம் சொன்னபோது சிறுவன் கூறியதை கதை என்று எண்ணினார். ஆனால் சிறுவன் கொண்டு வந்த பால் செம்பை திறக்கும்பொழுது குறைந்திருந்த பால் பொங்கி நிரம்பியதோடு மட்டுமல்லாமல் வழியவும் தொடங்கியது. பெரும் வியப்பில் ஆழ்ந்த பண்ணையாரும் மற்றவர்களும் அன்னை காட்சி கொடுத்த இடத்தை நேரில் கண்டு அன்னையின் மீது விசுவாசம் கொண்டனர். மாதா காட்சி கொடுத்த அந்த குளம் இன்றும் மாதாகுளம் என்றே அழைக்கப்படுகிறது.

16–ஆம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் வேளாங்கண்ணியில் ஏழை விதவை ஒருத்திக்கு மகன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பிறவி சப்பாணி. நடுத்திட்டு எனப்படும் இடத்தில் இருந்த ஆலமர நிழலில் தினமும் அமர்ந்து மோர் விற்பது அவன் வழக்கம். ஒருநாள் சூரியனைப் போன்ற ஒளிமயமான பெண்ணொருத்தி கணக்கற்ற விண்மீன்களின் ஒளியையும் அழகையும் மிஞ்சக்கூடிய அழகும் ஒளியும் கொண்ட குழந்தையொன்றை ஏந்தி அச்சிறுவன் முன் தோன்றினாள். அது கனவா நனவா என்று அச்சிறுவன் உணரும் முன்பே மோர் கொடு என்று அந்த பேரழகி கேட்க ஆனந்த வெள்ளத்தில் மிதந்தவன் மோர் கொடுத்தான். 'இந்த இடத்தில் ஆலயம் ஒன்று எழுப்ப நாகையிலுள்ள கிறிஸ்தவ செல்வந்தருக்கு அறிவிப்பாயாக' என்று தொடர்ந்து அந்த விண்ணெழிலாள் பணித்தாள். தன்னால் எப்படி அவ்வளவு தூரம் சென்றுவர இயலும் என்று தயங்கிய நிலையில் அச்சிறுவன் அந்த தாயின் முகம் நோக்க எழுந்திரு என்று கட்டளையிட்டாள் அந்த பெண்மணி. அந்த தெய்வீகச் சொல்லில் விசுவாசம் உண்டாக எழுந்தான் சிறுவன். ஆம். குணம் பெற்றான்.

நடக்கும் வரம் பெற்ற சிறுவன் நடக்கவில்லை, விரைந்தான் நாகை நோக்கி. வேளாங்கன்னியில் கோயில் ஒன்று எழுப்ப தன் கனவில் அதே தாயினால் முன்பே உரைக்கப்பட்டிருந்த நாகை பெரியவர் சப்பாணி குணம் பெற்றதைக் கண்டு பேரானந்தம் கொண்டார். அன்னையின் ஆணைப்படி நடுத்திட்டு என்னும் இடத்தில் ஒரு சிறுகுடிசைக் கோயில் ஒன்றை எழுப்பினார். இந்த நிகழ்ச்சியின்பொருட்டு அந்த தாய் 'ஆரோக்யமாதா' என்று அழைக்கப்படுகிறாள்.

17–ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய வியாபாரக் கப்பல் ஒன்று சீனாவிலுள்ள மக்காவ் என்ற துறைமுகத்திலிருந்து இலங்கையிலுள்ள கொழும்பிற்கு பயணம் செல்லும்பொழுது ஒரு நாள் பயங்கரப் புயலில் சிக்குண்டு பெரும் துன்பத்திற்குள்ளானது. சமுத்திரத்தின் நட்சத்திரமும், பயணிகளின் பாதுகாவலியுமான தேவதாயின் அடைக்கலத்தை நாடி வேண்டி நின்றனர். 'ஆபத்தின்றி எங்கு கரை சேர்கின்றோமோ அங்கு உம் பெயரால் ஆலயம் ஒன்று எழுப்புவதாக வாக்களிக்கின்றோம் என்று அந்த மாலுமிகள் வேண்டிக் கொண்டனர். அவர்கள் கூக்குரல் உடன் கேட்கப்பட்டது. மாதா பிறந்த நாளான செப்டம்பர் 8–ஆம் நாள் அவர்கள் பத்திரமாக வேளாங்கன்னியில் கரைசேர்ந்தனர். குடிசையாய் அங்கிருந்த கோயிலை கற்களால் கட்டி முடித்தனர். அவர்களது அடுத்த வருகையின்போது கோயில் மேலும் நன்றாய் புதுப்பிக்கப்பட்டது. தம்முடன் கொண்டு வந்த விவிலிய விளக்கப்படங்கள் கொண்ட சீன தேசத்து பீங்கான் ஓடுகளை பீடத்தின் மீது பதித்தனர். அதே பீங்கான் ஓடுகளை அன்னையின் பீடத்தில் இன்றும் காணலாம். செப்டம்பர் 8–ஆம் நாள் அந்த மாலுமிகள் பத்திரமாக கரை சேர்ந்ததனால் மாதா பிறந்த அந்த நாள் 'ஆரோக்கியமாதா' திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இதுவே இப்பேராலயத்தின் ஆண்டு விழா. அதற்கு முன்னதாக ஆகஸ்ட் திங்கள் 29–ஆம் நாள் கொடி ஏற்றப்படும். அந்த பத்து நாட்களிலும் ஏறக்குறைய 20 லட்சம் முதல் 25 லட்சம் மக்கள் திரண்டு வருகிறார்கள்.

வேளாங்கண்ணி திருத்தல வரலாறு கி.பி. 16–ஆம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகிறது. 1771–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வேளாங்கண்ணி தனி 'பங்காக' உயர்த்தப்பட்டது. நாம் இப்பொழுது காணும் அன்னையின் பேராலயம் 1920–லும் 1933–லும் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டு எழில்மிகு கம்பீரமான தோற்றத்தை அடைந்தது.

பாப்பரசர் 23–ஆம் அருளப்பரால், இவ்வாலயம் 1962–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3–ஆம் நாள் "பசிலிக்கா'வா திருநிலைப்படுத்தப்பட்டது. அன்னையின் காட்சி, எண்ணற்ற புதுமைகள், அன்னையின் திருச்சுருபம், திருத்தல ஆலயத்தின் எழில்மிகு அமைப்பு தோற்றம் இவைகள் "பாசிலிக்கா'வாக உயர்த்தப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தன.

1975–ஆம் ஆண்டு திருத்தலப் பேராலயம் விரிவாக்கப்பட்டு மாடியுடன் கூடிய ஆலயம் எழுப்பப்பட்டது. 1985–ஆம் ஆண்டு மாதா குளத்தருகில் இப்பொழுதுள்ள சிற்றாலயம் கட்டப்பட்டது. வேளாங்கண்ணி வரும் அன்னையின் பக்தர்களுக்கு பல்வேறு வசதிகளை வேறொங்கும் இல்லாத அளவுக்கு திருத்தல பங்கு நிர்வாகம் செய்து கொடுத்துள்ளது.

1991–ஆம் ஆண்டு மாதா என்ற தங்கும் இல்லமும் 95–ஆம் ஆண்டு குழந்தையேசு இல்லமும் கட்டப்பட்டது. இதுதவிர முதியோர் இல்லம், கன்னியர் இல்லம், பள்ளிகள், தியான இல்லங்கள் கட்டப்பட்டன. இதுதவிர சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையிலும் அடைக்கல இல்லம் உருவாக்கப்பட்டு தென்னை நார்களாலான மிதியடிகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப் படுகிறது. தமிழக அரசின் சிறுதொழில் மையத்தில் ஒரு அங்கமாக சிறு தொழில் மையம் அமைக்கப்பட்டு அதில் பெண்களுக்கு சிறுதொழில் பயிற்சி அளித்து, அவர்களது உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்றுக் கொடுக்கிறது நிர்வாகம். மதம், ஆன்மீகம் இந்த பணியோடு சமுதாய பணிகளையும் அன்னையின் திருத்தலம் குறைவின்றி ஆற்றி வருகிறது.

தமிழ் வளர்த்த திருச்சபை

கி.பி. 1620 நவம்பர் 20–ஆம் நாள் தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்க மன்னருக்கும் டென்மார்க் நாட்டு மன்னர் நான்காம் கிறிஸ்டியன் என்பவருக்கும் ஏற்பட்ட உட்ன்படிக்கைபடி தரங்கம்பாடி டேனிஷ் காலனியானது. முதல் புராட்டஸ்டன்ட் (English Paint) சமயத் தொண்டர்களான சீகன்பால்க் மற்றும் பிளிச்சோ 1705–ஆம் ஆண்டு நவம்பர் 29–இல் டென்மார்க் மன்னன் நான்காம் கிறிஸ்டியன் ஆணையுடன் பிரின்சுய் சோபியா கப்பலில் புறப்பட்டு 1706–ஆம் ஆண்டு ஜூலை 9–இல் தரங்கம்பாடியில் கரையிறங்கினார்கள். கடைச்சங்க காலத்தில் சமண முனிவர்கள் தமிழகத்தில் நடத்திய தமிழ்ப்பள்ளிகளுக்குப் பிறகு கிட்டதட்ட 1500 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு முதல் முறையாக 1707–ஆம் ஆண்டு இலவசப் பள்ளியை திறந்தார். பின்பு சீகன்பால்க் கடுதாசிப் பட்டறை என்னுமிடத்தில் இந்தியாவிலேயே கி.பி. 1712–இல் முதல் அச்சகத்தை நிறுவினார். தரங்கம்பாடியில்தான் முதன்முதலில் தமிழில் அச்சு நூல் சீகன் பால்கு பாதிரியாரால் 1713–இல் வெளியிடப்பட்டது. பைபிளின் ஒரு பகுதியான "புதிய ஏற்பாடு" – என்பதே அந்நூல். 1717–இல் புதிய

எருசலேம் ஆலயத்தை கட்டத் தொடங்கி 1718 அக்டோபர் 11–ஆம் நாள் திருநிலைப்படுத்தினார். அனாதை இல்லங்கள் பலவும் உண்டாக்கினார். அவர் மரணமடைந்தவுடன் 1719 பிப்ரவரி 11–ஆம் நாள் புதிய எருசலேம் ஆலய கோவிலின் பீடத்தருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

பல மொழிகளிலிருந்து (பைபிள்) திருமறைத் திருமொழிகள் உச்சரிக்கப்பட்டு புதிய பேராயர் திருநிலைப்படுத்துவார். இந்தியாவிலுள்ள ஜெர்மன், சுவீடன் டென்மார்க் நாட்டுப் பிரதிநிதிகள் கட்டாயமாக இவ்விழாவில் கலந்து கொள்வது மரபு. தவிர பல நாடுகளிலிருந்து சிறப்பு பிரதிநிதிகளும் ஆயர்களும் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்வார்கள்.

வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா பேராலயம்

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி ஆரோக்ய மாதா பேராலயத்தில் ஈஸ்டர் சண்டே சிறப்பு வழிபாடு நடந்தது. ஏசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாளை கிறிஸ்தவர்கள் புனித வெள்ளியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். வேளாங்கண்ணி திருத்தல கலையரங்கில் புனித வெள்ளி நிகழ்ச்சியில் திருச்சிலுவைகளை சுமந்த வண்ணம் பக்தர்கள் முக்தி செய்யும் நிகழ்ச்சியும், திவ்விய நற்கருணை, சிலுவை பாதையில் மறையுரை நிகழ்ச்சி ஆகியவை நடக்கின்றன. பின்னர் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு மரித்த சம்பவத்தை நினைவு கூறும் வகையில் திருச்சடங்குகள் நடைபெறும். அன்றைய தினம் இரவு பேராலயத் திருத்தல கலையரங்கில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியான ஈஸ்டர் திருநாள் கொண்டாடும் பாஸ்கா திரிவிழிப்பு இரவு என அழைக்கப்படும் இந்நிகழ்ச்சியில் புது நெருப்பு, தீர்த்தம் மந்திரித்தல், இறைவாழ்த்து வழிபாடு போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பேராலயத்தில் வழக்கம்போல் திருப்பலிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்களில் பல இடங்களில் கிருஸ்தவ தேவாலயங்கள் புகழுடன் விளங்குகின்றன. புனித வெள்ளியை முன்னிட்டு நாகை மாவட்டம் மயிலாடுதுறை புனித சேவியர் ஆலயத்தில் கிருஸ்துமஸ் முன்தினம் நள்ளிரவு நடைபெறும் பிரார்த்தனையில் பெண்கள்உட்பட ஏராளமானவர்கள் கலந்து சிறப்பிப்பது வழக்கமாக தற்போதும் உள்ளது.

இஸ்லாம்

நாகூர் ஆண்டவர் தர்கா

நாகையை அடுத்துள்ள புகழ்பெற்ற நாகூர் தர்காவின் அடையாளச் சின்னங்களுள் ஒன்றான உப்புக்கிணறு புணரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நாகூர் தர்காவில் உப்புக்கிணறு தேங்காய் உடைக்கும் மண்டபம் ஆகியவை முக்கிய அடையாளச் சின்னங்களுள் சில. நாகூர் ஆண்டவருக்கு நேர்த்திக் கடன் செலுத்தும் பக்தர்கள் உப்புக்கிணற்றில் உப்புக் கொட்டுவதும், தேங்காய் உடைக்கும் மண்டபத்தில் தேங்காயை உடைத்து நேர்த்திக் கடன் நிறைவேற்றுவதும் வழக்கம். சிதிலமடைந்து, பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் இல்லாமலிருந்த உப்புக் கிணறு மற்றும் தேங்காய் உடைக்கும் மண்டபம் ஆகியன தமிழக தர்காக்கள் ஒருங்கிணைப்புப் பேரவையின் மாநிலத்தலைவர் ஏச்.பம்.சச்சா முபாரக் பொருளுதவியில் சீரமைத்து பொலிவுப்படுத்தப்பட்டு புனரமைக்கப்பட்ட உப்புக்கிணறு தேங்காய் உடைக்கும் மண்டபம் ஆகியவற்றை பக்தர்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்தியாவில் உள்ள பிரசித்திபெற்ற தர்காக்களில் ஒன்றாக விளங்குகிறது நாகையை அடுத்த நாகூர் ஆண்டவர் தர்கா. இந்த தர்காவில் நாகூர் ஆண்டவர் என போற்றி அழைக்கப்பட்ட செய்யது அப்துல் காதிர் நாயகம் மறைந்த நினைவு நாளை யொட்டி கந்தூரி விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டிற்கான (452–ஆம் ஆண்டு) கந்தூரி விழா தர்காவில் உள்ள சாகிபு மினரா, தலைமாட்டு மினரா, முதுபக் மினரா, ஒட்டுமினரா, பெரிய மினரா ஆகிய 5 மினராக்களில் கொடிகள் ஏற்றப்பட்டு பெரும் விமர்சையாக தொடங்கி கொண்டாடப்படுகிறது.

சமய நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் நாகூர் தர்கா கந்தூரி விழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். இதனால் நாகூர் நகரமே விழாக்கோலம் பூண்டு விளங்கும் கொடியேற்றம் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஜூன் மாதம் 7–ஆம் தேதி வரை கந்தூரி விழா நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

கொடி ஊர்வலம்

கொடியேற்றத்திற்கு முன்னதாக சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்ட கொடிகள் ரதங்களில் வைக்கப்பட்டு நாகை

மீராப்பள்ளி ரதக்குடி முகப்பிலிருந்து கொடி ஊர்வலம் புறப்பட்டு ஐந்து கொடிகள் முறையே பெரிய ரதம், சின்ன ரதம், டீஸ்டா கப்பல், செட்டி பல்லக்கு, முகம்மது கவுல் கப்பல் ஆகியவற்றில் எடுத்து செல்லப்பட்டன. மேலும் மினரா, சிறிய கப்பல், நகராமேடை, சாம்பிராணி செட்டி, பிறை, ரயில், என்ஜின், படகு, ஈச்சமரம் போன்ற அலங்கார வடிவங்கள் கொடி ஊர்வலமாக நாகை புதுப்பள்ளி ரோடு, சாலாப்பள்ளி தெரு, நூல்கடை தெரு, கத்திகலப்பை தெரு, வெங்காயக் கடைத்தெரு, பெரியகடைத்தெரு, அண்ணாசிலை, மருத்துவமனை சாலை வழியாக அணிவகுத்து செல்லும்.

குட்டிக்கப்பல் போன்ற ரதங்களை சிறுவர்களும், இளைஞர்களும் உற்சாகமாக ஊர்வலத்தில் இழுத்து செல்வர். கொடி ஊர்வலத்தின் போது சாலையின் இருபுறங்களிலும் மக்கள் திரளாக நின்று பெரிய ரதத்தின் மீது பூக்களை வீசி கொண்டாடி மகிழ்வர். பக்தர்களுக்கு அலங்கார ரதங்களிலிருந்து எலுமிச்சை பழம் மற்றும் இனிப்புகள் பிரசாதமாக வழங்கப்படும்.

இந்து சமயம்

நாகை மாவட்டத்தில் திருவெண்காடு, சீர்காழி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், வேதாரண்யம், திருக்கடவூர் ஆகிய இடங்களில் உள்ள சிவத்தலங்கள், வைணவத்தலங்கள், அம்மன் தலங்கள் பற்றி இந்நூலின் முற்பகுதியில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

எனவே நாகை மாவட்டம் இந்துக்கள், இஸ்வாமியர்கள், கிருஸ்தவர்கள் என எல்லா இன மக்களும் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழும் மும்மதங்களும் சங்கமிக்கும் மாவட்டமாகவே திகழ்கிறது. பக்தி மேம்பாடு, மத நல்லிணக்கம், திருவிழாக்கள், சமுதாய ஒற்றுமை இப்படி பெருமையுடன் விளங்கும் நாகை மாவட்டம் தமிழ்நாட்டிற்கும், பாரத நாட்டிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

துணைநின்ற நூற் பட்டியல்

1. திருமுறைத்தலங்கள் – 2001
   ஆசிரியர் புலவர் பு. மா. ஜயசெந்தில்நாதன், எம்.ஏ.,
   ஸ்ரீசங்கரமடம் – காஞ்சிபுரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
2. 108 திவ்ய தேசங்கள் – மாலைமலர், பொங்கல் மலர் –2012.
3. தலவரலாறு நூல்கள், தருமபுரம் ஆதீனம் வெளியீடுகள்
   ஆசிரியர் வி. சா. குருசாமி தேசிகர்
4. தினமலர் – பக்தி மலர்கள்
5. தினகரன் – ஆன்மீக மலர்கள்
6. தினமணி – வெள்ளிமணி
7. தினத்தந்தி – அருள் தரும் ஆன்மீகம்
8. சக்தி விகடன்
9. குமுதம் பக்தி மலர்
10. ஆன்மீகப்பலன்
11. பூம்புகார் – தொல்லியல் துறை வெளியீடு
12. காவிரிப்பூம்பட்டினம் – மாதவி மன்றம் வெளியீடு,
    தி. வை. சதாசிவ பண்டாரத்தார், புலவர் நா. தியாகராசன்
13. பூம்புகார் அகழ்வைப்பகம் – தொல்லியல் துறை வெளியீடு
    ஆசிரியர் கோ. முத்துசாமி, கல்வெட்டாய்வாளர்
14. தரங்கம்பாடி அகழ்வைப்பகம் – தொல்லியல் துறை
    ஆசிரியர் கோ. முத்துசாமி, காப்பாட்சியர்
15. Dr. R, Nagasamy, Former Directer, Tharangambadi
16. திருவாய்மூர் திருக்கோயில் வரலாறு, தேவஸ்தான வெளியீடு
17. பூம்புகார் அகழாய்வும்–கடலாய்வும்,
    நடன. காசிநாதன்,மேனாள் இயக்குநர்
18. கோ. முத்துசாமி, காப்பாட்சியர், தரங்கம்பாடியில் பல இடங்களுக்கு முகாம் சென்ற போதும்; கள ஆய்வுகள் மேற்கொண்டபோதும் நேரிடையாகச் சேகரிக்கப்பட்ட செய்திக்கட்டுரைகள், நிழற்படங்கள்
19. நன்றிக்குரியவர்கள் திருக்கோயில்கட்கு சென்றபோது உதவி செய்த செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள், ஆதீனம், திருமடங்களின் மேலாளர்கள் மற்றும் உள்ளூர் வரலாற்று ஆர்வலர்கள்.

20. மயிலாடுதுறை – மகான்கள், ஆசிரியர் சுவாமி ஓங்காரனந்தா அவர்கள்
21. தரங்கம்பாடி–ஓலைஆவணங்கள், திரு. எஸ். ராமச்சந்திரன், முதல் காப்பாட்சியர், டேனிஷ் அகழ்வைப்பகம், தரங்கம்பாடி.


நூல் நன்கு அமைய நிழற்படங்கள், சிறப்புச் செய்திகள் தந்து உதவியவர்கள்


திருவாளர்கள்

1. புலவர் நா. தியாகராஜன், மாதவி மன்றம், மேலப்பெரும்பள்ளம்
2. மா. சந்திரமூர்த்தி, மேனாள் இயக்குநர், சென்னை
3. கி. ஸ்ரீதரன், மேனாள் இயக்குநர், சென்னை
4. அ, தங்கராஜ், பதிவுரு எழுத்தர், டேனிஷ் கோட்டை, தரங்கப்பாடி
5. புலவர் வை. சண்முகநாதன், உதவி தலைமை ஆசிரியர், குத்தாலம்
6. கே. ராமச்சந்திரன் – மண்டல துணை வட்டாட்சியர், வேதாரண்யம்
7. மீ. சௌரிராஜன், மேலாளர், அருள்மிகு தியாகராசர் சிவன் கோயில், திருக்குவளை.
8. எஸ். செல்வராஜ், மேனாள் உதவி இயக்குநர், தொல்லியல் துறை, தஞ்சை
9. மகாலெட்சுமி அம்மையார், திருப்பணிச் செம்மல், சென்னை–17.
10. சுல்தான் – டேனிஷ் ஷாப், தரங்கம்பாடி, வர்த்தகர் சங்கம், சிறப்பு ஆலோசகர்
11. மாலா அம்மையார், வட்டாட்சியர், மயிலாடுதுறை
12. முனைவர். எழில் ஆதிரை, வரலாற்றுத்துறை தலைவர், ஏ.டி.எம். மகளிர் கலைக்கல்லூரி
13. ஆ. கலியபெருமாள் – மேஸ்திரி, தொல்லியல் துறை
14. ஆர். மலர்விழி கலியபெருமாள், கல்வித்துறை (ஓய்வு), மயிலாடுதுறை
15. வரலாற்று ஆர்வலர் குழு – நாகை மாவட்டம்
16. பி. கருணாநிதி, பதிவுரு எழுத்தர், திருச்சி
17. சொ. சந்திரவாணன், உதவி இயக்குநர், (ஓய்வு) மதுரை மகால்


◉◉◉

நிழற்படங்கள்



கடலூர் மாவட்டம்
கடலூர்
சிதம்பரம்
மயிலாடுதுறை
தஞ்சாவூர்
அரியலூர்
சீர்காழி
காரைக்கால்
புதுச்சேரி
திருவாரூர்
நாகப்பட்டினம்
வேளாங்கண்ணி
வங்காள விரிகுடா
வேளாங்கண்ணி தேவாலயம்
நாகப்பட்டினத்திலிருந்து
கி.மீ
காவிரி முனை




கொள்ளிடம் ஆறு–நாகை மாவட்டம்,
வடக்கு எல்லை




லிங்கத்திருமேனி சிற்பங்கள்
முற்சோழர் கலை, ரெட்டிகடலங்குடி




அம்மன் சன்னதி – ஓங்காளீஸ்வரர்
கோயில்,பிற்சோழர் கலை, குத்தாலம்




ஜெயின் கோயில்,
மயிலாடுதுறை




டேனிஷ் கோ.ட்டை, தரங்கம்பாடி
டேனிஷ் கட்டடக்கலை–1620




சூளாமணி பந்ம விகாரம்,
நாகப்பட்டினம்




சோழர் முத்திரையுடன் –
கழுக்காணிமுட்டம்
புதையலில் கிடைத்த செப்பேடுகள்



முதலாம் இராசராச சோழனின்
ஆனைமங்கலம் செப்பேடுகள்
(பெரிய லெய்டன் செப்பேடு)




முதுமக்கட்தாழி, உத்திரங்குடி,
திருக்குவளை




காவிரி ஆறு அருகில் பண்டைய
நீர்த்தேக்கம், சுடுமண் பெரிய குழாய்,
நாஞ்சில் நாடு, மயிலாடுதுறை,
சங்ககாலம்




சோழப்பேரரசி செம்பியன் மாதேவி
பெயர் செதுக்கப்பட்ட
மரத்தால் ஆன மரக்கால்




பெருங்கற்காலம் – முதுமக்கட்தாழி
பனங்காட்டாங்குடி, சீர்காழி வட்டம்




அருள்மிகு சொன்னவாறு அறிவார்
திருக்கோயில்,அம்மன் சன்னதி,
திருக்குளம், குத்தாலம்,
கி.பி. 10–ஆம் நூற்றாண்டு



சோழமன்னன் சிவபெருமானை
வழிபாடு செய்யும் காட்சி –
வரகடை சிவன் கோயில்,
மயிலாடுதுறை



அருள்மிகு மணவாளேஸ்வரசுவாமி
திருக்கோயில், மகாமண்டப
தெற்குசுவர்–கோட்ட சிற்பங்கள்
திருவேள்விக்குடி, சோழர் கலை,
கி.பி. 10–ஆம் நூற்றாண்டு




உறைகிணறு, சங்ககாலம்,
மேலப்பெரும்பள்ளம்




கண்ணப்ப நாயனார்,
முற்சோழர்கலை
செப்பு படிமம்,.
திருவெண்காடு




பாவை விளக்கு ஏந்தும்
தம்பதியர் படிமம்
நாயக்கர்கலை,நெல்லுக்கடை
மாரியம்மன் கோயில்
நாகப்பட்டினம்



சிவபெருமான்–உமாதேவியார்,
மூலவர் சன்னதி மேல்தளம்,
ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் கோயில்,
சீர்காழி




நடனமாடும் கணபதி,
தேவகோட்ட சிற்பம்,
சோழர்கலை, திருவாய்மூர்,
10–ஆம் நூற்றாண்டு




சௌந்தர்ராஜபெருமாள் .
திருக்கோயில் கோபுரம்,
நாகப்பட்டினம்




ஆடவல்ல பெருமானின்
கீழிருந்து பஞ்சமுக
வாத்தியம் இசைக்கும்
பூதகணம், மாமாகுடி



பராந்தக சோழனின்
கல்வெட்டு




நாயக்கர்கால சத்திரம்
கல்வெட்டு
தலச்சங்காடு, பூம்புகார்




மலைமகள் – கற்சிற்பம்
பல்லவர் கலை,
திருவேள்விக்குடி



மராட்டிய மன்னர் ஓவியம்
திருவாவடுதுறை – திருமடம்



சோழர் கலங்கரை விளக்கம்,
கோடியக்கரை,
நாகப்பட்டினம்



வாயிற்காப்பு சுதைச்சிற்பம்,
சங்ககாலம் சம்பாபதி அம்மன்
கோயில், சாய்காடு



சோழப்பேரரசி செம்பியன் மாதேவியார்.
சிவனை வணங்கும் சிற்பம்,
செம்பியன்மாதேவி சிவன் கோயில்
சோழர் காலம், 9–ஆம் நூற்றாண்டு




முதலாம் இராசராசன் சிவனை
வணங்கும் சிற்பம்,
துறைகாட்டும் வள்ளலார் கோயில்,
விளநகர்




தாய் தெய்வம், சுடுமண் சிற்பம்
பூம்புகார் கடலில் கிடைத்தது
காலம் கி.மு. 350




அகத்தியர், கோட்ட சிற்பம்
பராந்தக சோழன் கலை,
நற்றுணை ஈசுவரர்
கோயில், புஞ்சை,




திருஞானசம்பந்தர் திருமண காட்சி,
ஆச்சாள்புரம், சீர்காழி



ஆலமர்ச்செல்வன்,
சனகாதி முனிவர்களுடன்
சோழர் கலை, திருமுல்லைவாயில்



பிச்சைபுகும் பெருமான்,
பூதகணங்களுடன்
புடைப்புச்சிற்பம், சோழர் கலை,
உத்திராபதீஸ்வரர் திருக்கோயில்,
திருசெங்காட்டங்குடி



திருஞான சம்பந்தர் பல்லக்கில்
அமர்ந்திருத்தல், அப்பர் பெருமான்
சிவிகையைத் தாங்கி நிற்றல்
சுதைச்சிற்பம், சீர்காழி




மூன்றாம் குலோத்துங்கசோழன்
சிவபெருமானை வணங்கும்
சிற்பம், வடவாரண்யேஸ்வரர் கோயில்
திருவாலங்காடு



காவிரி அம்மன் சிற்பம்
திருவாவடுதுறை




தமிழில் முதல் நாவல் ஆசிரியர்
முன்சீப் மாயுரம் வேதநாயகம்பிள்ளை



யோகி திருமூலரின் ஓவியம்,
மண்டப மேல் விதானம்,
திருவாவடுதுறை



தென்னிந்திய திருச்சபை தேவாலயம்,
17–ஆம் நூற்றாண்டு. தரங்கம்பாடி




காவிரி ஆற்றின் கடைமடை,
கழார் முன்துறை, நீர்த்தேக்கம்,
பூம்புகார்




தலச்சங்காடு, அகழாய்வுப்பணி,
காப்பாட்சியர் ஆய்வு செய்தல்




புத்த விகாரம் – சங்ககாலம் –
கட்டடப்பகுதி பல்லவனீச்சுரம்,
பூம்புகார்




ஸ்ரீவிக்கிரம நாராயண
பெருமாள்கோயில்
முன்மண்டபம், சீர்காழி




விஜயகோதண்டராமர் மூலவர்
திருக்காட்சி,மகேந்திரபள்ளி,
சீர்காழி வட்டம்,
கி.பி. 17–ஆம் நூற்றாண்டு




மன்றில் அமைந்துள்ளது –
சோழர்கால சுமைதாங்கி,
பாப்பா கோயில், நாகை வட்டம்




சித்திரலேகைப் பெரும்பள்ளியைக்
குறிப்பிடும்
சோழர்காலக் கல்வெட்டு




பண்டைய படகுத்துறை
மணிக்கிராமம்,
கிழார்வெளி அகழாய்வு




வாதாபி கணபதிக்கு தனி சன்னதி,
உத்திராபதீஸ்வரர் கோயில்,
திருச்செங்காட்டங்குடி




சௌரிராசப் பெருமாள் சன்னதி,
வாயிற்காவலர் சிற்பங்களுடன்,
திருக்கண்ணபுரம்



சிவன் கோயில் விமானம்,
முற்சோழர் கலை,
செம்பியன் மாதேவி



நற்றுணையீசுவரர் கோயில்,
மூலவர் விமானம்,பராந்தக
சோழர் கலை, புஞ்சை



காக்கை வாகனத்தில்
சனீஸ்வரன் சிற்பம்,
அகத்தீஸ்வரர் கோயில்,
சீயாத்தமங்கை, பிற்கால சோழர் கலை




காளை வாகனத்தில்
அமர்ந்திருக்கும் தென்முகக்கடவுள்,
திருவாய்மூர்நாதர் கோயில்,
கி.பி. 10–ஆம் நூற்றாண்டு



நடுகல், நவகண்ட வீரனின் சிற்பம்,
பிற்சோழர்கலை, தனிசன்னதி,
மூவலூர்




திருமால், திருமகள்–
பல்லவர்கலை, மூவலூர்




செங்கல்லில் அன்னப்பறவை,
சங்ககாலம், பூம்புகார்




சூரியன், சண்டேசுவரர்,
அய்யனார் கோயில்
பாலூர், காலம் 18–ஆம் நூ.ஆ.




மூத்ததேவி சிற்பம் – மாந்தன்,மாந்தி,
சேவற்கொடியுடன்
சங்காரண்யேஸ்வரர் கோயில்
முற்கால சோழர் கலைப்பாணி,
தலைச்சங்காடு



திருவலம்புரநாதர் சிவன் கோயில்,
சோழர் கலை, மேலப்பெரும்பள்ளம்



தனி அம்மன் செப்புத்திருமேனி,
முற்சோழர்கலை, பூம்புகார்



வள்ளியை மணம்புரிய
வந்த வேடன் முருகப்பெருமான்
செப்புத்திருமேனி
முற்சோழர்கலை, சாய்காடு




வில்லேந்திய வேலவர்,
செப்புத்திருமேனி, புதையலில்
கிடைத்தது, பெரம்பூர்,
கி.பி. 10–ஆம் நூ.ஆ.



காரைக்காலம்மையார்
செப்புத்திருமேனி,
சோழர் கலை, கழுக்காணிமுட்டம்
புதையலில் கிடைத்தது



பிச்சைபுகும் பெருமான்,
செப்புத்திருமேனி,
சோழர் கலை,
மேலப்பெரும்பள்ளம்




அணைத்தெழுந்த நாயகர்,
செப்புத்திருமேனி,
முற்சோழர் கலை,
திருவாவடுதுறை



உமாதேவியுடன் இடபவாகனர்
செப்புப்படிமம், முற்சோழர்கலை,
தஞ்சை கலைக்கூடம்
10–ஆம் நூ.ஆ.




மத்தளப்பெருமான்,
தூண் சிற்பம்
பூலோகநாத சுவாமி கோயில்,
திருமங்கலம்




நெடுவாள்கள்,
முற்காலத்தில் வீரர்கள்
பயன்படுத்தியவை
புதையலில் கிடைத்தவை
வேதாரண்யம்



உலோகத்தாலான நந்திதேவர்,
திருக்கோயில் மணி,
திருவெண்காடு,
தஞ்சை கலைக்கூடம்




கஜசம்ஹாரமூர்த்தி,
பாலாங்குராம்பிகை
செப்புத்திருமேனி
வீரட்டேசுவரர் கோயில், வழுவூர்




சிவன் சிம்ம வாகனத்திலும்,
அம்மன் யானை வாகனத்திலும்
எழுந்தருளும் ஓவியக்காட்சி
கோனேரிராசபுரம், 18–ஆம் நூ.ஆ.



நல்அரவான் – சுதை சிற்பம்
17–ஆம் நூ.ஆ. காட்டுச்சேரி



முன்கோபுரம், சிவன் கோயில்
மூவலூர்



திருஞானசம்பந்தர் ஓவியம்,
சிவன் கோயில், சீர்காழி



பார்த்தலோமியஸ் சீகன் பால்கு
தமிழ்ப்பாதிரியார், தரங்கம்பாடி